

# கந்தன் குறள்

## கந்தபுராணசாரம்

## உற்பத்திக் காண்டம்

சி. யமுனாநந்தா

## சமர்ப்பணம்

எனது அப்பா செல்லையா சிவநாதன்

அம்மா பராசக்தி சிவநாதன்

# முகவுரை

கந்தபுராணம் வேதமெய்ப்பொருளாகும். உலகில் வேதநெறி தழைப்பதற்காக சிவபெருமானின் அருளால் திருமால் வேதவியாசகராக அவதரித்து மாந்நதர்களுக்கு வேத நெறியினை தனது சீடர்கள் மூலம் வடமொழியில் உபதேசித்தார். இவ்வாறு அமைந்த புராணங்கள் 16 இல் 10 சிவபுராணங்களாகும். இதில் முதன்மையான புராணமாக கந்தபுராணம் திகழ்கின்றது. கந்தபுராணத்தினை முருகன் திருவருளினால் கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் தமிழில் அருளினார். வேத உண்மைகளை இக்காலத்தில் உணர்த்துவதற்காக கந்தபுராணசாகரம் கந்தன் குறளாக மிளிர்கின்றது. வியாசமுனி, குடமுனி, யமுனி என யான் சிவநெறி தழைக்க வேண்டுகின்றேன்.

**சி.யமுனாநந்தா**

# கந்தன் குறள்

## கந்தபுராணசாரம்

**உற்பத்தி காண்டம் – 1**

**01.**

### விநாயகர் காப்பு

1. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.
**செம்முகன் மைந்தன் துதி**

2. உச்சியின் மகுடம் மின்ன வொளிர்தர நுதலி னோடை
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.
**நுதளொரில் கணபதி துணை**

### சுப்பிரமணியர் காப்பு

3. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.
**சேவலும் மயிலும் போற்றி**

### நூற் பயன்

4. இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவி
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.
**கந்தவேள் இனிது**

### வாழ்த்து

5. வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.
**சைவநீதி உலகு**

## 02. கடவுள் வாழ்த்து

### சிவபெருமான்

6. திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றி
ஒருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.
**அருவுரு ஒரு பதம்**

7. ஊனாகி யூனு ளுயிராயுயிர் தோறு மாகி
ஆனான் சிவன்மற் றவனீள்கழற் கன்பு செய்வாம்.
**சிவன் கழல் துதி**

### வேறு

8. பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.
**அரனடி சென்னி**

9. பூமலர் மிசைவரு புனித னாதியோர்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.
**பூங்கழல்கள் துதி**

10. பங்கயன் முகுந்தனாம் பரமென் றுன்னியே
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.
**புங்கவன் துதி**

11. காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.
**திருநடம் துதி**

### சிவசத்தி

12. செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.
**இறைவி மலரடி துதி**

## விநாயகக் கடவுள்

13. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.
**பண்ணவன் மலரடி துதி**

## வைரவக் கடவுள்

14. பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.
**வடுகண் துதி**

15. வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.
**கஞ்சுகக் கடவுள் கழல் துதி**

## வீரபத்திரக் கடவுள்

16. அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.
**சேவகன் சரணம் போற்றி**

## சுப்பிரமணியக் கடவுள்

17. இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடை
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.
**எஃக வேல் போற்றி**

18. சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.
**சீரலை வாய் சேய் போற்றி**

19. காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
ஆவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.
**ஆவினன்குடி போற்றி**

20. நீரகத் தேதனை நினையு மன்பினோர்
ஏரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.
**ஏரகத் தறுமுகன் அடிதுதி**

21. ஒன்றுதொ றாடலை யொருவி யாவிமெய்
குன்றுதொ றா டிய குமரற் போற்றுவாம்.
**ஒன்றுதொறு குன்றுதொறு ஆடல் அருள் போற்றி**

22. எழமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.
**பழமுதிர்சோலை பகவன் போற்றி**

23. ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
ஆறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.
**ஆறுமாமுகப்பிரான் போற்றி**

## திருநந்திதேவர்

24. ஐயிரு புராணநூ லமலற் கோதியும்
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.
**நந்தி கழல்கள் போற்றி**

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

25. பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.
**தண்டமிழ் விரகன் தாள்கள் போற்றி**

## திருநாவுக்கரசு சுவாமிகள்

26. பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.
**துய்யசொல் போற்றி**

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்

27. வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவண்
அறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.
**பாடல் அறை போற்றி**

### மாணிக்கவாசக சுவாமிகள்

28. கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மென
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.
**கந்தம் படும் உயிர் கணம் அருள்**

### திருத்தொண்டர்கள்

29. அண்டரு நான்முகத் தயனும் யாவரும்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.
**அண்டர் தொண்டர் பதமலர் பணி**

### சரசுவதி

30. தாவறு முலகெலாந் தந்த நான்முக
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.
**பூவடி துதி**

## 03. அவையடக்கம்

31. இறைநில மெழுதுமு னிளைய பாலகன்
சிறியதோ ரறிவினேன் செப்ப நின்றதே.
**சிறிய அறிவு செப்பல்**

### வேறு

32. ஆன சொற்றமிழ் வல்ல வறிஞர்முன்
மீனி மைப்ப விரும்பிய போலுமால்.
**சொற்றமிழ் சில்**

33. முன்சொல் கின்ற முனிவட நூறெரீஇ
புன்சொ லேனு மிகழார் புலமையோர்.
**இகழில்**

34. சிந்து மென்பு சிரம்பிறை தாங்கினோன்
கந்த னுக்குரைத் தேனிக் கதையினை.
**கந்தன் உரை**

35. வெற்றெனத் தொடுத் தீர்த்து வெளிற்றுரை
கற்று ணர்ந்த கலைஞரல் லோர்களே.
**கற்றுணர்வர் கலைஞர்**

36. குற்ற மேதெரி வார்குறு மாமுனி
முற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே.
**முற்றுநாடி குற்றமில்**

**வேறு**

37. குறைபல மாமதி கொளினு மன்னதால்
அறுமுகன் கதையிதென் றறிஞர் கொள்வரே.
**அறுமுகன் கதை**

38. நாதனா ரருள்பெறு நந்தி தந்திட
சூதனோ தியதுமூ வாறு தொல்கதை.
**மூவாறு தொல்கதை நாதன் அருள்**

39. சொல்லிய புராணமாந் தொகையு ளீசனை
இல்லது முகமனா லெடுத்துக் கூறுமே.
**ஈசன் இல்லது முகமன்**

40. பிறையணி சடைமுடிப் பிரான்றன் காதைகள்
அறிஞர்க ணாடியே யவற்றைக் காண்கவே.
**பிரான்றன் காதைகள் காண்**

41. புவியின ரேனையர் புராணந் தேரினும்
எவரெவ ராக்கமு மினிது போலுமால்.
**சிவகதை இனிது**

42. மங்கையோர் பங்குடை வான நாயகற்கு
தங்கதி லொருசில வடைவிற் கூறுகேன்.
**எஃகவேற் புங்கவன் சீர் புகழ்**

43. புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடா
துதியுறு புலமைசேர் சூதற் கல்லதே.
**மயிலூர் பரன் துதி**

44. காந்தமா கியபெருங் கடலுட் கந்தவேள்
மாய்ந்திட வடர்த்தது மற்றுங் கூறுகேன்.
**கந்தவேள் காந்தம்**

### வேறு

45. ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன
ஓது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்.
**கற்பங்கள் எண்ணில காந்த உண்மை உரை**

46. முன்பு சூதன் மொழிவட நூற்கதை
நன்பு லத்தவை காட்டு நயப்பரோ.
**நன்புல அவை நயப்பு**

47. தோற்ற மீறின்றித் தோற்றிய சூர்ப்பகை
போற்று கந்த புராணம தென்பதே.
**தோற்றமீன்றிய கந்தன் காதை**

48. பகுதி கொண்டிடு பாக்களி னத்தினுண்
தகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்.
**தகுதி சாற்று**

49. செந்த மிழ்க்கு வரம்பெனச் செப்பிய
தந்தி டென்னத் தமிய னியம்புகேன்.
**செந்தமிழ் கந்தன் எந்தை வியம்பு**

50. வெம்பு சூர்முதல் வீட்டிய வேற்படை
கம்பர் காஞ்சியிற் கட்டுரைத் தேனியான்.
**காஞ்சியில் கட்டுரை**

## 04. ஆற்றுப்படலம்

51. செக்கரஞ் சடைமுடிச் சிவனுக் கன்பராய்
மிக்கதோ ரணியிய லதுவி ளம்புகேன்.
**அணி இயல் விளம்பல்**

52. சுந்தர மாயவன் றுயிலு மாழிபோல்
வந்தன வுவரியின் வண்ண மென்னவே.
**உலரிவண்ண மாயவன் னுயிலுமாழி**

53. பார்த்தென துலகடும் பரிதி யென்னொடும்
ஆர்த்தென வேதடித் தசனி கான்றவே.
**பரிதி ஆர்த்து அசனி கான்றல்**

54. சுந்தர வயிரவத் தோன்றன் மீமிசை
நந்தியம் பெருவரை மீது நண்ணிய.
**சுந்தர வைரவர் பெருவரை நண்ணல்**

**வேறு**

55. வாரை கான்றநித் திலமென வாலிகண் மயங்க
வீரை கான்றிடு தன்மைய தாமென மேகம்.
**நித்தில ஆவி வீரை கான்றல்**

56. பூட்டு கார்முகந் தன்னொடுந் தோன்றிய புயல்வாய்
காட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.
**கார்முகம் புயல்வாய் தனிச்செயல்.**

57. கல்லென் பேரிசைப் புனன்மழை பொழிதலாற் கான
செல்லுங் காலையி லங்கண்வீற் றிருப்பரோ தீயோர்.
**தீயோர் இல்**

58. தேக்கு தெண்டிரைப் புணரிநீர் வெம்மையைச் சிந்தி
போக்கின் மேயின தேசிகர்ப் பொருவின புயல்கள்.
**புயல்கள் தேசிகர் பொருவின்**

59. கழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாக் கவிஞர்
வழிந்த பாலெனத் திசைதொறு மிழிந்தன மன்னோ.
**கழிந்த பற்றுடை இழிந்தன**

60. சீல மேதகு பகீரதன் வேண்டலுஞ் சிவன்றன்
பாலி யாறெனும் பெயர்கொடு நடந்தது படிமேல்.
**நந்திவீழ் விரிநீர் பாலி ஆறு**

61. வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்கும்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ.
**பகர்வதற்கு எளிதில் பாலி**

62. எய்யும் வெஞ்சிலைப் புளிஞரை எயிற்றியர் தொகையை
வெய்ய சூர்ப்படை வான்சிறை கவர்ந்துமீண் டதுபோல்.
**புளிஞரை எயிற்றியர் பாலி கவர்ந்தது**

63. காக பந்தரிற் கருமுகிற் காளிமங் கஞலும்
மேக ராசிகள் குணகடல் மீதுசெல் வனபோல்.
**காகபந்தரில் குழவொடு போகன்**

64. குவட்டு மால்கரிக் குருகுதே ரரிபுலிக் குவையுண்டு
தெவிட்டி வந்தது பாலையுட் கொண்டிடு செருக்கால்.
**பாலையில் பாலி**

65. காலை வெம்பகல் கதிரவன் குடதிசைக் கரக்கும்
பாலை காண்கிலா வாரியின் பெருமையார் பகர்வார்.
**பாலை காண்கில் வாரி**

66. குல்லை மாலதி கொன்றைகா யாமலர்க் குருந்து
தொல்லை மாநதி யான்வழித் தோன்றிய தொடர்பால்.
**மாநதி ஆன் வழி**

67. சுளையு டைப்பல வாசினி பூகமாந் துடவை
அளவின் மிக்குறு பாணிபெற் றதற்கவை யரிதோ.
**மிக்குறுபாணி பாலி**

68. இலைவி ரித்துவெண் சோறுகால் கைதையு மெழுதும்
தலைவி ரித்துழி யுடனெளித் தன்னதோர் தகைத்தால்.
**விரித்து நெளித்து கடல்புகு பாலி**

69. கொங்கு லாமலர்க் கொன்றைகூ விளைகுர வுழிஞை
எங்க ணாயகன் றன்னையு மொத்ததவ் விருநீர்.
**அஇருநீர் எங்க ணாயகன்**

70. கொலைகொள் வேன்மற வீரர்த மிருக்கையிற் குறுகா
உலக மேழையு முற்பக லயின்றமா லொக்கும்.
**மாலொக்கும் பாலி**

71. தேன்கு லாவிய மலர்மிசைப் பொலிதரு செயலால்
வான்கு லாமுல களிப்பவ னிகர்க்குமால் வாரி.
**வான்குலாம் வாரி பாலி**

72. மீது போந்திரி சங்கைவிண் ணிடையின்மீ னோடும்
காதி காதல னிகர்க்குமாற் கன்னிமா நீத்தம்.
**கன்னி மா நீத்தம் பாலி**

73. தெழித்த மால்கரி யினங்கட மெயிற்றினாற் சிதைய
சுழித்த நீர்க்கங்கை யமுனையைக் கலந்தெனத் தோன்றும்.
**பாலி சுழித்த நீர்க்கங்கை யமுனை**

74. சங்க மார்த்திடத் திரையெழ நதியுறுந் தகைமை
பொங்கும் வாய்விடா விரவியை விளிப்பது போலும்.
**திரையெழு நதி**

75. வேத மேமுதல் யாவையு முணர்கினு மேலாம்
சீத நீரெலாந் தெளிதலின் றாயது சிறிதும்.
**சீதநீர் தெளிதல் வேதம் மேலது உணர்தல்**

76. செம்பொன் மால்வரை யல்லன கிரிகளுந் திசையும்
கம்பை மாநதி யொத்தது கரைபொரு பாலி.
**கம்பை மாநதி போல் பாலி**

77. உதிரு கின்றசிற் றுண்டிகொண் டொலிபுனற் சடைமேல்
எதிர்பு குந்திடப் போவது பாலியா மியாறு.
**ஏடெதிர் அஃதே மீனெதிர் பாலி**

**வேறு**

78. மாசறத் துளங்கு துப்பு மரகதத் திடைவந் தென்னப்
பேசிடிற் சிறுமை யெல்லாம் பெருமையா லடங்கு மன்றே.
**சிறுமை பெருமையுள்**

79. வளவயன் மருத வைப்பின் வாவியங் கமலம் யாவும்
களைதலைப் புரிந்து பற்றிப் பெயர்ந்தெனக் காட்டிற் தன்றே.
**வெவ்வழல் களைதல்**

80. திரைகட னீத்தங் கொண்மூ வினத்தொடு சேண்போய் நோக்கி
இருபுடை யலைத்து வெளவி யேகிய தெறிநீர்ப் பாலி.
**திரைகடனீத்தம் வெளவி எறிநீர் பாலி**

81. பாரிடை யினைய பண்பிற் படர்ந்திடு பாலி யந்தத்
தாருவின் கிளைக ளென்னத் தனித்தனி பிரிந்த தன்றே.
**தாருவின் கிளை பாலி**

82. கால்கிளர் கின்ற நீத்தங் கவிரிதழ்க் கலசக் கொங்கை
மால்கிளர் கணிகை மாதர் மனமெனப் போயிற் றாமால்.
**கலசகொங்கை கணிகை மாதர் நிதம்ப அல்குல் பரவை**

83. பாம்பளை புகுவ தேபோற் பாய்தரு பரவைத் தெண்ணீர்
ஏம்பலோ டார்க்கு மோதை யுலகெலா மிறுக்கு மாதோ.
**ஏம்பலோடு உலகு இறுக்கும்**

84. பணையொலி யிரலை யோதை பம்பையின் முழக்க மங்கண்
இணையொலி காட்டிற் றோவென் றெண்ணுவார் விண்ணுளோரும்.
**பணையொலி இணையொலி**

85. இயல்புகுங் களிநல் யானை யினந்தெரிந் தெய்து மாபோல்
வயல்புகுங் களிப்பு நீங்கா மாக்களின் மயங்கு மாதோ.
**இனம் தெரிந்து மயங்கு**

86. எங்கணு நிறைந்து வேறோ ரிடம்பிறி தின்மை யாக
அங்கண்மா ஞாலஞ் சூழு மளக்கரை நிகர்த்த தாமே.
**ஞாலம் சூழும் அளக்கரை பாலி**

87. மாறடு மள்ள ருய்ப்ப மருதத்தி னிறைந்து விஞ்சி
தேறிய வுணர்வி லாதோர் செல்வுழிச் செல்வ ரன்றே.
**மாறடு செல்வுழி இல்**

88. வாளெனச் சிலைய தென்ன வால்வளை யென்னத் தெய்வ
நாளெனப் பிறழுமீன்க ணடவின நார மெங்கும்.
**நாரமெங்கும் நடவின மீன்கள்**

89. மாண்டகு பொய்கை தோறும் வயறொறு மெற்று மெல்லாம்
ஈண்டிய வெறுக்கை வீசும் இடைப்படு வள்ள லொத்தார்.
**பொய்கை வள்ளல் பாலி**

## 05. திருநாட்டுப்படலம்

90. அவ்வியல் பெற்றிடு மாற்றன் மள்ளர்கண்
செவ்விக ணாடியே யினைய செய்குவார்.
**மெய்வளம் இணைய செய்தல்**

91. சேட்டிளந் திமிலுடைக் செங்க ணேற்றொடுங்
பூட்டுறு பொலன்மணி யாரம் போலவே.
**காசணி பொலன் மணியாரம்**

92. காற்றினு மனத்தினுங் கடுமை சான்றன
பாற்றின மருளவிண் படர்ந்து பாயுமால்.
**காற்றினு மனத்தினும் கடுமை வினைஞர்**

93. சால்வளை தரவுழும் வயலிற் றங்கிய
கோல்வளை மகளிர்பாற் கூட்ட மொத்ததே.
**சால்வளை கோல்வளை**

94. உலத்தொடு முறழ்புயத் துழவர் பொன்விளை
நிலத்திடைப் பிறந்தமின் னிகர்க்கும் நீர்மைய.
**நீர்மைய பிறந்த மின்னிகர்**

95. நாறுசெய் குநர்சிலர் நார நீர்வயல்
ஆறுசெய் குநர்சில ரளப்பின் மள்ளரே.
**நாறு ஊறு சேறு ஆறு**

96. குச்செனப் பரிமிசைக் குலாய கொய்யுளை
நச்சின மகளிரை நினைந்து நைந்துளார்.
**நச்சின மகளிரை நைதல்**

97. வாக்குறு தேறலை வள்ள மீமிசை
மேக்குறு காதலின் மிசைதன் மேயினார்.
**தேறல் மிசை**

98. வாடுகின் றார்சிலர் மயங்கி நெஞ்சொடு
ஆடுகின் றார்சிலர் நறவ மார்ந்துளார்.
**நறவு மயக்கம்**

99. அந்தரப் புள்ளொடு மளிக டம்மொடும்
தந்திரக் கிளைஞர்போற் றாமு மேயினார்.
**அந்தரப்புள் தந்திரம்**

100. விள்ளுறு நாணினர் விரகத் தீயினர்
கள்ளினு முளதுகொல் கருத்த ழிப்பதே.
**கருத்தழிப்பது விரகத்தீ**

101. பளிக்கறை யன்னதோர் படுகர்ப் பாங்கினும்
களிப்பவர் தமக்குமோர் கதியுண் டாகுமோ.
**களிப்பர் கதி நெறியில்**

102. இன்னன பற்பல வியற்றி யீண்டினர்
துன்னின ரவரொடுந் துவன்றிச் சூழ்ந்துளார்.
**ஈண்டினர் துவன்றினர்**

103. மள்ளர்தம் வினைபுரி மழலைத் தீஞ்சொலார்
வெள்ளிய குமுதமென் மலரின் மேவுமே.
**தீஞ்சொலார் குமுதம்**

104. நட்டதோர் குழுவினை நடாத தோர்குழு
கட்டனர் வேற்றுமை யுணருங் காட்சியார்.
**வேற்றுமை கட்டனர்**

105. ஏயின செயலெலா மியற்றி வேறுவே
தாயென வளர்த்தனர் சாலி யீட்டமே.
**சாலியீட்டம் இயற்றினர்**

106. மன்சுடர் கெழுமிய வயிர வான்கணை
பொன்சுட ரிளங்கதிர் புறத்துக் கான்றவே.
**இளங்கதிர் பொன்சுடர்**

107. பச்சிளங் காம்புடைப் பணையின் மீமிசை
குச்சுறு சாலிமென் கதிர்கு லாவுமால்.
**குச்சுறுசாலி மென்கதிர்**

108. சுற்றுறு பஃறலைச் சுடிகை மாசுணம்
நெற்றுறு பசுங்கதிர் நிமிர்தல் மிக்கவே.
**பஃறலைச்சுடிகை மாசுணம் பசுங்கதிர்**

109. மையுறு கணிகையர் மகிழ்நர் வந்துழி
மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்தவே.
**மெய்யுறு பரிவு விளைச்சல்**

110. மாலுறு பொன்னகர் மருவு மன்னற்கு
கோலிநின் றரிந்தனர் குழாங்கொண் மள்ளரே.
**சாலி கோலி அரிந்தனர்**

111. அரிந்திடு சுமைகளா லவனிப் பேருடல்
விரிந்திடு கதிர்சுலா மேரு வாயவே.
**கதிர்சுலாம் மேரு அன்ன**

112. ஏற்றொடு பகட்டின மிசைத்துப் போருரு
போற்றினர் மீமிசை பொலிகென் றோதுவார்.
**தெய்வதம் போற்றி**

113. தொங்கலம் பூமுடித் தொழுவர் போரினை
எங்கணு நெற்குவை யியற்று வாரரோ.
**நெற்குவை இயற்றல்**

114. களப்படு கைவலோர் கால்க ளான்முகந்து
களித்தனர் வேண்டிய தனைய நாட்டுளோர்.
**களப்படு முகந்து களித்தனர்.**

115. சொற்குவை வழிபடப் புகழிற் றோன்றுதம்
பொற்குவை யரிந்தனர் பொதிவித் தென்னவே.
**சொற்குவை நெற்குவை பொற்குவை**

116. தலத்திடை வேறிடத் தொதுங்குந் தண்ணிய
நிலத்திடை யொருசிறை விளையு நீரவே.
**நிலத்திடை விளையு நீர்**

117. பிறப்பதும் வளர்வதும் பின்னர் மூப்புவந்து
அறுப்பதுந் தொகுப்பது முலப்பின் றாதவே.
**பிறப்பு வளர்ப்பு பருவஞ்செய் உலப்பு இல்**

118. முழவொலி விண்ணவர் முதல்வற் காக்குறும்
உழவொலி யல்கலு முலப்பு றாதவே.
**முழவொலி விழவொலி மழவொலி உழவொலி அல்கல்**

119. காலுற நிமிர்ந்திடு காமர் சோலையும்
சாலைக ளிவையெனச் சாற்ற நின்றவே.
**காமர்சோலை ஆயுதசாலை**

120. நெறியிடை யொழுகலா விழுதை நீரரை
அறைபடு மாலைக ளிடையிட் டாட்டலே.
**நெறியில் ஆலையில் கன்னல்**

121. ஏறுகாட் டியதிற லிளைஞ ரெந்திரம்
ஊறுகாட் டினர்க்கலால் உலோப ரீவரோ.
**ஏறு கூறு சாறு ஊறு ஈதல் காட்டியே**

122. மட்டுறு கழையினும் வலிதிற் கொண்டபின்
அட்டதோர் புகைமுகி லளாவிற் றொக்குமே.
**கழை வலிதில் அட்டது புகை**

123. கூடின தேனிசை யிளமென் கோகிலம்
நாடின பாதவம் புகழ்வ நாரையே.
**இளமென் கோகிலம் மழவொலி**

124. காசொடு நித்திலப் பொதியுங் காட்டியே
வீசுதல் கருதியே விளித்தல் போன்றவே.
**நித்திலம் பொதி வீசுதல்**

125. சித்திரக் கதலிமா வருக்கைத் தீங்கனி
முத்திறத் தவர்கொடை மொழிய நின்றவே.
**கொடை தீங்கனி**

126. வீசுகால் பொரவசை விசும்பிற் றாழைகள்
மாசுறா வகைதுடைத் திடுதல் மானுமே.
**மாசுறா துடைத்திடுதல்**

127. வாசநீள் பொதும்பரின் மைந்தர் மாதர்கள்
ஆசைமிக் கழுங்குவ பிரிந்த அன்றிலே.
**அழுங்குவ ஆசைமிக்கு**

128. கானுலா நந்தன வனமுங் காரென
ஊனுலாங் குரம்பையு ளுயிருற் றென்னவே.
**ஊனுலாங்குரம் பையுளுயிர் உற்று**

129. அசும்புறு மகன்புன லறாத சூழலின்
தசும்பெலாம் வெள்ளிய தாக்குந் தாழையே.
**புனல் வெள்ளிய தாக்கும் தாழை**

130. உற்றிட வரிதவ னுழவர் நீத்ததார்
எற்றிடுந் தேம்பழ மிழுக்குந் தேன்களே.
**தேள்கள் இழுக்கும் உற்றிட அரிது**

131. கானிமிர் கந்திகள் கான்ற பாளைமேன்
வானுறு தாரகை வழுக்கிற் றொக்குமால்.
**கந்திகள் கான்ற பாளை**

132. மாகுல வல்லியின் மஞ்ஞை யாடல்போல்
ஆகுலம் பிறரஞுங்கொள மகிழ்வி னாடுவார்.
**கோகில மஞ்ஞைய பாகுல ஆடல்**

**வேறு**

133. ஊச லுற்றவர் குழைக்குடைந் திடுதலா லுவரை
ஏச லொப்பன கோகிலப் பறவைக ளிசைத்தல்.
**ஊசல் ஏசல் கோகிலப்பறவை இசை**

134. கூர்ப்புக் கொண்டகட் கொடிச்சியர் குளிர்புனங் காப்போர்
பார்ப்புக் கொண்டுகொண் டெழுவன தோலடிப் பறவை.
**கட் கொடிச்சியர் புனம் காவல்**

**வேறு**

135. கடற்பரு கியமுகில் பெய்யுங் காட்சிபோல்
குடத்திழி பாலினாற் குறையைத் தீர்க்குமே.
**குறைதீர் பால்**

136. பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலில்
கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே.
**குவளைச்சுடர் யண் அளி பதுமக் கோயில்**

137. கலனிடைத் தருவதுங் கானத் துள்ளதும்
நிலனிடைப் பொருள்பகர் வழக்க நீத்ததே.
**கலனிடை கானத்தது பொருப்பிடை நிலன்**

138. யாழ்க்கையர் பொருநருக் கிறைவ ரேழிசை
பூட்கைக ளுதவுவார் பொதுவி றோறுமே.
**யாழ்க்கையர் ஏழிசை வாழ்க்கையர்**

139. கஞ்சிதேய்ப் புண்டகில் கமழும் பூந்துகில்
குஞ்சிதேய்ப் புண்டன குமரர் கூட்டமே.
**அகில்கமழ் பூந்துகில் மருங்குலார் தேய் குமரர்**

140. அன்றிலம் பெடைகளை யணுகி யன்னைகேள்
ஒன்றுநீ யிரங்கலென் றுரைக்கின் றார்சிலர்.
**இரங்கலற்கு**

141. ஆடியல் கருங்கணுஞ் சிவப்புற் றங்கமும்
ஊடிய மகளிரு முலப்பின் றாயினார்.
**ஆடியல் கருங்கண் உலப்பில**

142. அகனமர் கணிகைய ரடிகள் சூடியே
தகைமைசெய் காளையர் தொகுதி சான்றதே.
**காளையர் கணிகையர் அடி சூடி**

143. வாளைக ளிகல்புரி வயலும் வாவியும்
காளையர் குஞ்சியுங் கரமு நாறுமால்.
**வயலும் வாவியும் வேளையர் காளையர்**

144. சேவக மணைவன கரிகள் சேனைகள்
பாவக மணைவன பாட லாடலே.
**பாவகம் அணைபாடல் ஆடல்**

145. ஆடக மாமதி லம்பொற் கோபுரம்
நாடுள பதிதொறு நண்ணி யோங்குமே.
**பதிதொறும் ஓங்கல்**

146. தெண்டிரை யுலகினிற் சீர்பெற் றோங்கிய
தண்டமிழ் வளநகர்த் தன்மை கூறுவாம்.
**உலகில் சீர்பெற்றோங்கி தண்டமிழ்**

## 06. திருநகரப்படலம்

147. மாவுல கெங்கு மலர்த்தட மாகத்
தேவினை யொத்தது சீர்பெறு காஞ்சி.
**மாவுலகு மலர்த்தடாக தேவு காஞ்சி**

148. பூக்கம லத்துறை புங்கவன் மாயோன்
ஆங்கவர் மேவு மரும்பத மாமே.
**புங்கவன் மாயோன் பதம்**

149. இன்னிய றேர்தரு மிந்திரன் முதலா
பொன்னக ரென்று புகன்றிட லாமால்.
**பொன்னகர் காஞ்சி**

150. கின்னரர் சித்தர் கெழீஇயத னால
அன்னவர் தம்பதி யாகிய தன்றே.
**அன்னவர் பதி காஞ்சி**

151. எண்டிசை காவலர் யாவரு மீண்ட
அண்டமு மாகிய தப்பதி யென்பார்.
**அண்டமாகிய பதி காஞ்சி**

152. இப்படி யாவரு மெய்திய திறனால்
செப்பரி தாற்பிற சீர்கெழு காஞ்சி.
**செப்பு அரிது சீர்கெழு காஞ்சி**

153. மறைமுத லோர்தனி மாவி னிழற்கீழ்
நிறுவிய தொன்னக ரோநிக ராமே.
**மறைமுதலோர் தனமாநிழல் காஞ்சி**

154. மேயதொல் லூழியில் வேலைக ளேழும்
மாயைகள் சுற்றிய மன்னுயி ரொக்கும்.
**மாயைகள் சுற்றிய மன்னுயிர் ஒக்கும் தொல்லூழி வேலைகள் ஏழும்**

**வேறு**

155. பாழி மால்வரை யெறிதிரை வையகம் பலவும்
ஆழி நீத்தம தொத்தது மதிற்புறத் தகழி.
**புள்ளினம் அண்டங்கள் அன்ன சுருங்கும் ஆழி நீர்தமது ஒத்தது புறவாழி**

156. மண்ட லப்பொறை யாற்றுவான் பற்பல வகுத்து
பண்டு செய்தென வோங்கிய நெடுமதிற் பரப்பு.
**அண்டகோளகை தாங்கும் அவர் தலம் அன்னது நெடுமதில்**

157. சென்று மூவெயி லழலெழ நகைத்தவன் செழும்பொன்
நின்ற தென்னவும் பாதலம் புகுந்துமேல் நீண்ட.
**வில்நில் எயில்**

158. மேக நாட்டிற்கும் விஞ்சையர் நாட்டிற்கும் விண்ணோர்
போக நாட்டிய பொன்மதில் ஆனதப் புரிசை.
**நணுகப் பொன்மதில்**

159. முதிரை வண்ணமா நவமணிக் குவையும்வான் முளைக்கும்
நிதிய மேயகூ டொத்தது நெடியமா மதிலே.
**வான்முளை கதிர் முதிரை வண்ணம்**

160. நிறையும் வார்கடல் சுற்றிய நேமியும் நேமிக்
மறுகெ லாந்திகழ் மாளிகைப் பத்திசூழ் மதிலே.
**வார்கடல் அண்டம் அன்ன மதில்**

161. தடுக்கு மாற்றலர் நால்வகைப் படையொடுஞ் சாய
படுக்குங் கன்மழை சொரிந்திடும் விற்படை பயிலும்.
**மாற்றலர் சாய கனமழை**

162. உருக்குஞ் செம்பினை வங்கத்தை யிழுதொடு மோச்சும்
நெருக்குந் தாழ்ந்திடும் உலகளந் தோனென நிமிரும்.
**செறுநரை நெருக்கும்**

163. பீடு தங்கிய பணைமுர சியம்பிடும் பிடிக்கும்
ஓடும் மீளுமக் கதிரையுந் தடுப்பபோல் உந்தும்.
**பணை முரசு இயம்பல்**

164. சூலம் வீசிடுந் தோமரம் வீசிடுஞ் சுடர்வேல்
சீலம் வீசிய பாரிட மாமெனத் திரியும்.
**சூலம் தோமரம் சுடர்வேல் வீசி சீலம் வீசிடும்**

165. திகழும் வெங்கன லுமிழ்ந்திடு மொன்னலர் செலுத்தும்
புகழும் நீரவன் றம்மதின் மேலுறும் பொறிகள்.
**வெங்கனலுமிழ்ந்திடும் பகழிமாரியை விழுங்கிடும் பொறிகள்**

166. பூணி னேர்தரும் பொன்னவாம் புரிசைமேற் புனைந்த
காண வேபல வெகினமாய்த் தேடல்போற் கவினும்.
**பூணினோர் தரும் பொன்புரிசை**

167. ஈர்த்த மாமதி சசியென்ப துலுகுளோ ரிட்ட
போர்த்த வெண்ணிலாக் கஞ்சுகம் பீறியபோலாம்.
**ஈர்த்தமாமதி போர்த்த**

168. காட்சி மேயவக் கடிமதிற் கதலிகை காணூர்
தாட்சி செய்யினு மனையர்பா லணுகுமோ தவறு.
**மதியோர் தாட்சி செய்யினு மனையர் பால் தவறு அணுகுமோ**

169. புடைப ரப்பிய புரிசையி னாற்றிசைப் புறத்தும்
அடைத லுற்றிடு திசைமுகம் பொருவின அவையே.
**திசைமுகம் பொருவினை அவை**

170. என்று மாமதிக் கடவுளும் பிறருமீ ரியல்பாம்
சென்று சென்றுபோ யப்புறத் தேகினர் திரிவார்.
**ஏகினர் திரிவார் ஈரியல் பாங்குன்றம்**

171. தீபு ரத்திடை மடுத்தவ னாணையாற் சிறந்த
கோபு ரத்திடைக் கொழுந்துபோ லோங்கிய கொடிகள்.
**கோபுரக் கொடிகள்**

172. மாட மாளிகை மண்டபங் கோபுர மறுகில்
ஊடு போகலா தலமரும் பறவைக ளொப்ப.
**கோடி கோடி கொடிகள் ஊடு போகலாது**

173. சிகர மால்வரை யன்னமா ளிகைதொறுஞ் சிவணும்
அகல்வி சும்பிடைக் கதிர்களின் புறமறைத் தனைய.
**விசும்பிடைக் கதிர்கள் புற மறைத்தனைய சிகரம்**

174. செம்பொ னிற்புரி நிலையுடைத் திகிரியந் தேர்கள்
பம்ப ரத்துருத் திரிப்புறக் கறங்கிய படிய.
**திகிரியந் தேர்கள் கறங்கிய படிகள்**

175. பளிங்கி னாற்செய்த தெற்றியின் றலைமிசைப் பனிதோய்
குளங்கொ டாமரை மலர்ப்பொகுட் டாயின குறிக்கின்.
**பளிங்கு தெற்றியின்றலை தாமரைக் குளம் அன்ன**

176. ஓவி யத்தியன் மரகதத் தலத்தின தும்பர்
மூவ கைக்கதிர் வியலிடந் தெரிப்பதம் மூதூர்.
**மூவகைக் கதிர்வியல் மூதுர்**

177. கன்னல் வேளெனும் மைந்தரும் மாதருங் கலந்து
அன்னம் மாமதி முகிலிடை நுழைந்துபோ யனைய.
**அன்னம் மாமதிமுகில் அனைய நித்தில மாளிகை**

178. தண்ட மாகியே புவியுறு பணியெலாந் தழுவி
கொண்ட சீற்றத்தின் நாவெறிந் தன்னபூங் கொடிகள்.
**புவியுறு பணியெலாந் தழுவிய போல் சூளிகையில்
பூங்கொடிகள்**

179. தேனை வென்றசொல் லாரொடு மைந்தருந் திளைக்கும்
வான நின்றிடு தெய்வத மானமே மானும்.
**தேனை வென்ற சொல்லார் இளைஞர் தினை தெய்வத மானம்**

180. தேவர் தானவர் முனிவரர் சித்தரோ டியக்கர்
மேவு கின்றன தனித்தனி யிருக்கைகண் மிகுமால்.
**மேவுமிகு தனித்தனி யிருக்கைகள்**

181. தூங்கு குண்டிகை யருகுறக் காலெதிர் தூண்டி
பாங்கர் மாதவம் புரிகுநர் சாலைகள் பலவால்.
**தூங்கு குண்டிகை மாதவம்**

182. பாடு நான்மறை யந்தணர் வேள்விகள் பயில
நீடு கின்றதோ வென்றுநான் முகத்தனும் நினைய.
**வேள்வி பயில நீடும்**

183. நான்ம றைக்குலத் தந்தணர் நவையறு காட்சி
வான்ம றைத்திடு மாளிகை வீதியும் மலிந்த.
**வான் மறைத்திடு மாளிகை பல வீதிகள்**

184. ஏவு பல்படை வலியினர் வெஞ்சம மிகந்தோர்
தேவு நீணகர் நிலைமையே போல்வன தெரியின்.
**தேவு நீணகர் அன்ன காஞ்சி**

185. அணியி னோங்கலும் பன்மணிக் குவால்களு மார்வம்
வணிக ராவணத் தெற்றிகள் வயின்றொறும் வயங்கும்.
**தெற்றிகள் வயங்கும்**

186. கங்கை மாமகள் தொல்பெருங் குலத்தர்கா சினியின்
துங்க வீதியு மேனையர் மறுகொடுந் தொகுமே.
**கங்கை அயன் பதம் துங்க வீதியில்**

187. கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறுந்தொறு மறாவால்.
**அண்டர் கூட்டம் ஆலயந் தொறும் தொறும்**

188. ஆதி நான்முகன் எகினத்தி னடிகளு மமலன்
வீதி வீதிக டொறுந்தொறுங் காண்வர விளங்கும்.
**அமலன் பாதியாளன் விளங்கும்**

189. மாவி னோதையுங் களிற்றின தோதையும் மருங்கின்
தேவ துந்துபி யோதையு மிறுத்தில தெருவு.
**ஓதை இறுத்தில தெருவு**

190. நாட்டி யச்செயல் யாவையுஞ் சிவனது நடனம்
கூட்டம் யாவையு மன்னவன் றொண்டுசெய் கூட்டம்.
**நாட்டியம் பாட்டு கேட்டு கூட்டம் சிவனது**

191. பாலு றுந்ததி யிழுதுதே னிருக்கைகள் பலவும்
சாலை யாயின வரம்பிலா அடிசிலஞ் சாலை.
**பாலுறும் ததி இழுது தேன் வரம்பில அடிசிலஞ் சாலை**

192. அளவில் பற்பகல் தம்மினும் நீங்கியோ ரடுத்த
எளிதி னுங்கிட வழங்குமால் ஓதன விருக்கை.
**நீங்கியோ ரடுத்த எதிர் தழீஇ தன்னயம் ஓதன இருக்கை**

**வேறு**

193. மாட மாளிகை வாயி றொறுந்தொறும்
நாடி நோக்கி நயந்திடப் பட்டதே.
**மாளிகை வாயில் தொறும் தொறும் நின்றுநின்று**
**நயந்திடப்பட்டது**

194. எல்லை தீர்ந்த விரவிக டூண்டிய
பல்வ கைச்சுடர்ப் பண்ணுறு தேர்களே.
**எல்லை தீர்ந்த இரவிகள் தூண்டிய சில்லி யாழித்திகிரி**
**பல்வகைச் சுடர்ப் பண்ணுறு தேர்கள்.**

195. வெள்ளை யாதி வியன்கவி யாவையும்
வள்ளி யோர்களும் மன்றுதொ றீண்டுவார்.
**வியன்கவி மன்று**

196. இகலும் வேழத் தெயிற்றினை யேய்ந்திடும்
முகிலும் வேற்றுமை யின்றி முயங்குமே.
**அகில் முகில் முயங்கும்**

197. பண்ணி னோசையும் பானலை வென்றிடும்
விண்ணு ளோர்க்கும் விருந்தென வாயவே.
**பண் கண் தண் விண் விருந்து**

198. அணிகு லாவு மரம்பையர் காளையர்
மணிகொள் காஞ்சி மதனர சாயதே.
**மணிகொள் காஞ்சி**

199. கூற்றிற் செல்லுங் கொலைக்கரித் தானமும்
ஆற்றிற் செல்லுமவ் வாவணந் தோறுமே.
**ஆவினம் யானை அளவில் காஞ்சி**

**வேறு**

200. பண்ணுளர் நரம்பியல் பாணிக் கேற்றிட
விண்ணுள ராடலும் வெறுப்ப மேவுமே.
**பண் ஆடல்**

201. அரிவையர் மைந்தர்க ளணிந்து நீத்ததே
பொருவரு நகர்வளம் புகலற் பாலதோ.
**பெருவருநகர் காஞ்சி**

**வேறு**

202. மாறாய்ச் சிறார்க ளெறிந்தாடிய மான்ம தத்தால்
வேறாய்ப் புவியோ ருணர்வாமென மேய வீதி.
**புவியோர் உணர்வு ஆறெ மேய**

203. தண்டாமரை யேந்திய வானவன் றன்னை யொத்தான்
உண்டாடிய தேன்களை யொத்தனர் ஓங்கல் மைந்தர்.
**தேன்களை ஒத்த மைந்தர்**

204. ஏமங் குலவு முரசங்க ளிரட்ட வாச
மாமங் கலமே யுலப்பின்றி மலிந்த தன்றே.
**மாமங்கல நகர்**

205. மாகந் திகழு மகிலாவிகொள் மாட மீதிற்
மேகஞ் சிதறும் பெயலென்ன விளங்கும் வீதி.
**மாகம் திகழ் அகில மாடம்**

206. வன்மா முலையேந் தியமங்கையர் மைந்த ரானோர்
பொன்மா முகிலாய்ப் பனிநீரிற் பொழியு மன்றே.
**பொன்மா முகிலாய் பனிநீர் பொழிதல்**

207. தாராற் பொலிபொற் புயவீரர் தவாது செல்லும்
காரார்ப்பும் வேலைக் கடலார்ப்புங் கடுத்த வன்றே.
**ஏரார்ப்பு அன்ன காரார்ப்பும் கடலார்ப்பு**

208. வானோக்கி நிற்கு முலகென்னவு மன்ன வன்செம்
ஏனோர்க்கும் நாடும் நகராகி யிருந்த தவ்வூர்.
**வானோக்கி நிற்குமுலகு**

209. கோடு நெறியு மிகலும்மனக் கோட்ட மாய
வீடந் நகரே யெனிலென்னின் விளம்ப வற்றோ.
**கோடுநெறி நீங்க வீடந்நகர் காஞ்சி**

**வேறு**

210. ஏமமே தருவாச் சினைகளு மனைத்தா விலைதளிர் செய்யபூந் துகிரா
பூமியெண் காஞ்சி மாபுர மெனும்பேர் புனைந்ததப் பொருவிலா நகரம்.
**எமமே காஞ்சி தரு காஞ்சி மாபுரம்**

211. சுருதியா னுறங்கு மிராத்தொறு முடிவிற் றுஞ்சிய வூழிக டோறும்
பிரளய சித்தென் றொருதிரு நாமம் பெற்றதக் காஞ்சியம் பேரூர்.
**சுருதியானுறங்கு ஊழிகடோறும் பிரளய சித்து காஞ்சி**

212. கயிலையி லரனை யம்மைபூங் காவிற் கண்களை மூடலு முலகில்
செயன்முறை தழுவக் குழைந்தருள் செய்யச் சிவபுர மானதச் சீரூர்.
**சிவபுரம் சீரூர் காஞ்சி**

213. விண்ணுறை மகவான் கரிபுரி தவத்தால் வெற்பதாய்த் தன்னை முன்றாங்கு
கண்ணன்வந் திடலால் விண்டுமா புரமாங் கட்டுரை பெற்றதக் காஞ்சி.
**விண்டு மாபுரம் காஞ்சி**

214. கார்த்திரு மேனித் தண்டுழாய் மௌலிக் கண்ணனுங் கமலமே லயனும்
சீர்த்திரி மூர்த்தி வாசமா கியபேர் சிறந்ததக் கச்சிமா நகரம்.
**சீர்த்திரி மூர்த்தி வாசம்**

215. தரணிகண் முழுதும் புரிதரும் விரிஞ்சன் றன்மனம் புனிதமாம் பொருட்டால்
வரமிகு பிரம புரமென வொருபேர் மன்னிய தன்னதோர் நகரம்.
**பிரமாபுரம் காஞ்சி**

216. வீடுறு முத்தி போகமென் றவற்றில் வெஃகிய வெஃகியாங் கென்றும்
நாடினர் செயலால் தபோமய மெனும்பேர் நணியது கச்சிமா நகரம்.
**வெஃகிய வெஃகியாங்கு தபோமய காஞ்சி**

217. சகங்களோர் மூன்றி லறம்பெரி துளதித் தரணியித் தரணிமா நகர்க்குள்
பகர்ந்திடுஞ் சகல சித்தியென் றொருபேர் படைத்தது கச்சியம் பதியே.
**சகலசித்தி கச்சி**

218. உன்னருங் கயிலை நாயக னுமையை யொருபக னீலியென் றுரைப்ப
கன்னிகாத் திடலாற் கன்னிகாப் பென்னுங் கவின்பெய ருடையது கச்சி.
**நீலி கன்னி காப்பு கச்சி**

219. அரியதோர் கயிலைக் கணங்களி லொருவ னானதுண் டீரன்மா லதிபால்
புரிதரு செயலாற் காஞ்சிதுண்டீர புரமெனப் புகலநின் றதுவே.
**காஞ்சி துண்டீபுரம்**

220. தன்னையே யருச்சித் திடமலர்க் கேகித் தடந்தனிற் கராவின் வாய்ப் பட்டுத்
தன்னையீந் திடலால் தண்டக புரமாந் தனிப்பெயர் பெற்றதத் தனியூர்.
**தண்டகபுரம் காஞ்சி**

221. அழகிய வயோத்தி மதுரையே மாயை யவந்திகை காசிநற் காஞ்சி
மொழிதரு நகரந் நகரெனி லதற்கு மூவுல கத்துநே ருளதோ.
**காஞ்சி மொழி தருநகரம்**

222. பங்கமில் வசிட்டன் பசுப்பொழி பாலி படர்ந்திடு முத்தரஞ் சேயை
கங்கைகா ளிந்தி யிடைப்படுந் தலத்தின் முற்படுங் காஞ்சிமா நகரம்.
**பசுப்பொழி பாலி காஞ்சி**

223. தொல்லையோர் பிரமன் றுஞ்சிய காலைத் தோன்றிய நீத்தமே லரிபோல்
நல்லுமை குறிக்கொண் முதல்வனை வணங்கி நயந்தவ னிருந்ததந் நகரம்.
**ஊழியில் காஞ்சி**

224. சமையமா றினையுந் தாயென வளர்த்துச் சராசர வணுக்களுய்ந் திடுவான்
இமையவர் தமக்குந் திசைமயக்கறாத வியல்புடைத் தந்நக ரென்றும்.
**சர அசர அணுக்குள் உய்ந்திடும் காட்சி**

225. பாவமோர் கோடி புரியினு மொன்றாம் பரிவினிற் றருமமொன் றியற்றின்
மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி வியனகரப் பெருமையார் விரிப்பார்.
**தவஞ்செய் திருத்தலம் காஞ்சி**

226. கங்கைதன் சிறுவ னருள்பெறு வேதாக் கண்படை கொண்ட கா லையினும்
மங்கையோர் பங்கன் படைத்ததே யன்றி மலரயன் படைத்ததன் றதுவே.
**கங்கை மங்கையோர் பங்கன் படைத்த காஞ்சி**

227. அரியபல் லிசையும் மறைபுனல் கங்கை யருஞ்சிலை யிலிங்கமங் குறைவோர்
பரனடி வணக்க மாவது காஞ்சிப் பதிக்கலால் எந்நகர்க் குளதே.
**சிவபரனடி காஞ்சிப்பதி**

228. கணமுகில் செக்கர் போர்த்தெனுங் கரிய கஞ்சுகச் செந்நிறக் கடவுள்
இணையில்சீர்க் காளி முதலினோ ரென்று மினிதுகாத் திடுவநந் நகரம்.
**இணையில் இனிது காவல் காஞ்சி**

229. அறுசம யத்திற் கடந்தசை வத்தின் அன்றிவீ டிலதெனத் தெளிந்து
முறைபுரி சிலைமேன் மோதினோன் முதலோர் முத்திபெற் றுடையதம் மூதூர்.
**சைவத்தில் முத்தி மூதூர் காஞ்சி**

230. ஈசன தருளாற் கயிலையை நீங்கி யிமையமா மயிலறம் புரிவான்
ஆசிலா வருள்பெற் றின்னுநோற் றிடலா லனையகாஞ் சிக்கு நே ரதுவே.
**ஈசன் மயிலறம் காஞ்சி**

231. ஆருயிர் முழுதும் வீடுபெற் றுய்வான் அறம்புரி சாலைய தணித்தா
காரண மான பரசிவ னனந்த கலையொடு நிலையதக் காஞ்சி.
**அனந்த கலையொடு நிலை காஞ்சி**

232. இன்னமு முமையாள் நோற்றிடு மாங்கே யிறப்பினும் பிறப்பினும் நிலையாய்
உன்னினும் முத்தி வழங்குகாஞ் சியைப்போ லுலகில்வே றொருநக ருளதோ.
**முத்தி வழங்கு காஞ்சி**

233. கண்ணுதற் பரனுந் தண்டுழாய் மவுலிக் கடவுளுங் கமலமே லயனும்
அண்ணலங் கரிகால் வளவனும் பிறரு மரசுசெய் தளித்ததந் நகரம்.
**கண்ணுதற்பரன் அரசு காஞ்சி**

234. வேலைசூ ழுலகி னெங்கணு மிருபால் வீட்டினை வெஃகினோர்க் குதவும்
நாலெழு தான முன்னவந் நகர்போனாம்புகழ் நகரமற் றெவனோ.
**வெஃகினோர்க்கு வீடு காஞ்சி**

235. கச்சபா லயமே கம்பமே மயானங் கவின்கொள்கா ரோணமா காளம்
வச்சிர னகரம் பிரமமாற் பேறு மறைசையாஞ் சிவாலய மிருபான்.
**மயானங் கவின்காயரோ கணம்**

236. கரிகிரி யட்ட புயந்திரு வெஃகாக் கருதுமூ ரகஞ்சகா ளாங்கஞ்
பரசிவன் சத்தி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பதப்
பதியே.
**பரசிவன் சத்தி குமரர்மால் பதி காஞ்சி**

237. ஒன்றுதீ விளக்க மீரிட மொருமூன் றுற்றிடு தெற்றிநான் கரணம்
நின்றமர்ந் தொழுகு நெறியில்அற் புதமாய் நிகரிலா துறையுமந்
நகரம்.
**ஒழுகும் நெறியில் அற்புதம்**

238. சிறந்திடு மதியு மிரவியு மாழ்கச் செகமெலாந் தனதொளி பரப்பி
இறந்திடு முயிர்கள் பிறந்திடா விடமொன் றெம்பிரா னிருந்தவீ
ரிடமே.
**பிறப்பிறப்பில் இல்இல் காஞ்சி**

239. தோற்றுயிர்க் குணவு நல்குமோர் தெற்றி சொற்றவை
யுதவுமோர் தெற்றி
மேற்றிசைப் பவள சயிலமும் வடபால் வேங்கட வெற்புநான் கரணே.
**உணவு நல்கு சொற்றவை உதவுசொல் அளிக்கும் தெற்றி**

240. மறைகளி னுருவாய்ப் பொன்மலர் தனிமா மலரொடு காயிலா
தென்றும்
நறுநிழல் பிரியா திருந்ததோர் காஞ்சி நன்னகர் தன்னில்ஐந்
தருவே.
**ஐந்தரு நன்னகர் காஞ்சி**

241. உம்பரூண் பகிருஞ் சாதக மணிக ளுதவிடு மன்னநூ லுரைத்துக்
கம்பைநற் பம்பை மஞ்சனீர் பிச்சி கலிச்சிபொன் மண்ணி
வெஃகாவே.
**கம்பை நற்பம்பை மஞ்சனீர் காஞ்சி**

242. குரைபுனல் வேட்டோர்க் குதவியே திரியுங் கூவலம்
பொதுக்குறு முயல்போய்
புரிதரு பொதுவென் னம்மைநோற் றருளும் பொற்பொது
விவைகள் எண்பொதுவே.
**காமாட்சி நோற்றருள் பொற்பொது காஞ்சி**

243. முன்னுறு பிணிகள் மாற்றிடும் பொய்கை முதல்வர்கள்
முடிவுறுங் காலை
பொன்னிறஞ் செல்வம் வசீகரந் தருநாற்பொய்கையோ
டொன்பதாம் பொய்கை.
**ஒன்பதருட் பொய்கைகள்**

244. விடந்தனை யகற்று மொருகல் ஆருயிர்கள் மெய்ப்பிணி மாற்றிடு
மொருகல்
நெடும்படை விரினு மவையிரிந் தோட நிலைபெறீஇ நிற்குமாங்
கொருகல்.
**நிலைபெறீஇ நிற்குமாங்கொருகல்**

245. துஞ்சினர் தம்மை யெழுப்புமாங் கொருகல் தொல்வழக்
கறுத்திடு மொருகல்
தஞ்சம தாக நின்றிடு மொருகல் தக்ககல் லையிரண் டவையே.
**தக்க கற்கள் பத்து**

246. அயன்மனைச் சென்றோர் கணவரைப் பிழைத்தோர் அடிகளை
யிகழ்ந்துளோர் அணுகில்
மயல்புரி கின்ற பொழுதொடு திசையின் மயக்கறத் தெளிக்குமோர்
மன்றம்.
**மயங்கறத் தெளி மன்றம்**

247. நாகரூ ருய்க்கும் பிலத்ததோர் மன்றம் நவமணி யுதவுமோர் மன்றம்
ஆகிய பகலா விருப்பதோர் மன்றம் ஐயிரண் டொன்றுமன்
றவையே.
**வியன்பகல் கங்குல் கங்குல் பகலா எனப் பௌதிக மன்றம்**

248. ஈங்கிவை யன்றிச் சிலைகளுந் தருவு மிடங்களுங் கூவலும் நதியும்
பூங்கம லத்தோன் சுருக்கற விரித்துப் புகலினு முலப்புற வற்றோ.
**கூவலும் நதியும் பழனமும் இன்ன உலப்புற அற்று**

249. தோட்டலர் வனசத் திசைமுகன் முன்னஞ் சொற்றன னவனடி வணங்கிக்
பாட்டினில் அடங்காக் காஞ்சியின் பெருமை பகர்ந்திடத் தமியனுக் கெளிதோ.
**திசைமுகன் சொற்ற காஞ்சியின் பெருமை பகரில்**

**வேறு**

250. சொற்படு மினைய காஞ்சித் தொன்னக ரதற்கு நாப்பண்
எற்படு குமரகோட்டம் என்றொரா லயமுண் டன்றே.
**காமகோட்டம் குமரகோட்டம் அமைந்த காஞ்சி**

251. ஆவதோர் குமர கோட்ட மதனிடை யரன்கண் வந்து
மேவிய குமர மூர்த்தி வியத்தக வுறையும் மாதோ.
**குமரமூர்த்தி உறை**

252. மேவருங் கூடல் மேலை வெற்பினில் அலைவாய் தன்னில்
கோவில்கொண் டருளி வைகுங் குமரகோட்டத்து மேயோன்.
**வெற்பினில் வைகுங் குமரகோட்டத்து மேயோன்**

253. வச்சிர மெடுத்த செம்மல் வைகிய துறக்கந் தன்னில்
கச்சியிற் குமர கோட்டங் காதலித் தமருங் கந்தன்.
**கச்சி குமரகோட்டம் அமர்ந்தருள் கந்தன்**

254. ஈண்டுள தரணி முற்று மெல்லைதீர் வான வைப்பும்
வேண்டினர் வேண்டி யாங்கு வேலவன் புரிந்து மேவும்.
**வேண்டினர் வேண்டியாங்கு வேலவன் மேவும் காஞ்சி**

255. கொண்டலை யளக்கு நொச்சிக் குமரகோட் டத்துச் செவ்வேள்
அண்டர்க ளெவரும் போற்ற வருள்புரிந் தமர்ந்தா னன்றே.
**குமர கோட்டத்துச் செவ்வேள் அண்டர்கள் போற்ற அருள்**

256. ஆயதோர் காஞ்சி மூதூ ரதனிடை யம்பு யத்தின்
நாயகன் றனையர்ச் சித்து நாமக ளுடனாங் குற்றான்.
**அம்புய மேயவன் கமடம் மாயவன் அர்ச்சித்த காஞ்சி மூதூரிடை முக்கண் நாயகன் நாமகள்**

257. உற்றிடு கின்ற நாளி லுலகிலில் லறத்தை யாற்றி
பொற்றிரு வடியைத் தாழ்ந்து போற்றினர் புகல லுற்றார்.
**முனிவர் பிரமனைப் போற்றினர்**

258. அத்தகே ளிந்நாள் காறும் அடியமில் லறத்தை யாற்றி
மெய்த்தவ வனம தொன்றை விளம்பியே விடுத்தி யென்றார்.
**மெய்த்தவவன விருத்தி**

259. என்றலுந் தருப்பை யொன்றை யேமுல களித்தோன் வாங்கி
நின்றிடும் வனத்தி னூடே நிலைப்பட விருத்தி ரென்றான்.
**தருப்பை நின்றிடும் வனம் விருத்தி**

260. திருப்பது மத்து வள்ளல் சேவடிக் கமலந் தாழா
இருப்பிட மெமக்கீ தென்னா இருந்தவ ரிருந்தா ரங்஖ன்.
**தருப்பை நேமி இருப்பிடம்**

261. தாமரை யண்ண லுய்த்த தருப்பையின் நேமி தன்னால்
மாமறை நெறியி னின்று மகமொன்று புரித லுற்றார்.
**மாமறை நெறி மகம்**

262. அகனமர் புலனோர் நான்கு மான்றமை பொருட்டா லாங்கோர்
சுகனென வுணர்வு சான்ற சூதமா முனிவன் போந்தான்.
**அகனமர் புலனோரார் நான்கு சுகஎன உணர்வில் சூதமாமுனி**

263. முழுதுணர் சூதன் தன்னை முனிவரர் கண்டு நேர்போய்த்
தழையொடு தருப்பை வேய்ந்த தம்பெருஞ் சாலை யுய்த்தார்.
**சூதன் தன்னை முனிவர் கண்டு தம்பெருஞ்சாலை உய்த்தார்.**

264. திருக்கிளர் பீட மொன்று திகழ்தர நடுவ ணிட்டு
பொருக்கென யாரும் வைகி யிஃதொன்று புகல லுற்றார்.
**திருக்கிளர் பீடம்தனில் சுருக்கமில் வேள்வி சான்ற சூரன்**

265. முந்தொரு ஞான்று தன்னில் முளரியந் தேவன் சொல்லால்
சிந்தையி னுவகை பூத்தேஞ் சிறந்ததிப் பிறவி யென்றார்.
**முளரியந் தேவன் சிந்தையில் உவகை**

266. அன்னது சூதன் கேளா ஆதியம் பரனை யேத்தி
என்னிக ராயி னோருக் கிம்மையிற் பெறும்பே றென்றான்.
**ஆதியம்பரன் யேத்தல் இம்மையின் பெறும்பேறு**

267. அவ்வழி முனிவர் சொல்வார் அருமறை கண்ட வண்ணல்
இவ்வொரு நசைகொண் டுள்ளே மியம்புதி யெமக்க தென்றார்.
**மாண்கதை இயம்புதி**

268. அம்மொழி சூதன் கேளா அழல்படு மெழுகே யென்ன
பொய்ம்மையில் படிவ முன்னித் தொழுதிவை புகல லுற்றான்.
**சூதன் மெழுகேயென்ன பொய்மையில் படிவமுன்னி**
**தொழுதிவை புகலல்**

269. மன்னவன் மதலை யாசான் மாமகன் றனது மைந்தன்
செந்நெறி யொழுகு வார்க்கே செப்புவன் புராணம் முற்றும்.
**செந்நெறி யொழுகுவார்க்கே செப்பு புராணம் முற்றும்**

270. தனைநிகர் பிறரின் றாய சண்முகற் கன்பு சான்ற
இனிதுகேண் மின்க ளென்னா எடுத்திவை இயம்ப லுற்றான்.
**சண்முகற்கன்பு சான்று இனிது கேண்மின்**

## 07. பாயிரப்படலம்

271. முந்தொரு காலத்தின் மூவுல கந்தன்னில்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்.
**அந்தமில் மழையில் மூவுலகில் மருள்**

272. நெற்றியில் விழிகொண்ட நிமலன தருளாலே
தெற்றென வெவராலுஞ் செப்புவ தரிதாமால்.
**நிமலன் அருள் அற்றமில் மறை செப்பு**

273. ஆனதொர் பொழுதின்க ணமரரும் முனிவோரும்
தீநெறி பலவாற்றிப் பனுவல்கள் சிலசெய்தார்.
**நவின்மறை மாற்றி தீநெறி பனுவல்கள் சில்**

274. அவனியி லறமெல்லா மருவினை யெனநீக்கி
சிவனரு ளாலன்றித் தீர்கில திதுவென்றார்.
**அறநெறி சிவனருள்**

### வேறு

275. இன்ன பான்மையை யெண்ணி யிருவரும்
கன்னி பாகன் கயிலையி லேகினார்.
**கயிலை ஏகினர்**

276. அந்தில் செம்பொ னணிமணிக் கோயிலின்
எந்தை யார்க்கெம் வரவிசைப் பீரென்றார்.
**எந்தையார்க்கு வரவிசைப்பீர்**

277. தேவ தேவன் திருமுன்ன ரேகியே
ஏவ ருஞ்செறிந் தெய்தின ரீண்டென்றான்.
**தேவ தேவன் திருமுன் நந்தி வேண்டினார்**

278. என்ற காலையின் யாரையு மிவ்விடைக்
சென்று மான்முதற் றேவரை யெய்தினான்.
**மான்முதற் றேவரைக் கொணர்க.**

279. செம்மை போகிய சிந்தைய ரைக்கெழீஇ
வம்மி னீரென வல்லையிற் கூவினான்.
**வம்மினீர் என கூவினான் நந்தி**

280. விளித்த காலை விழிவழி போதநீர்
அளித்தி யாலென் றவனுட னேகினார்.
**விழிவழி போதநீர் துளிர்க ஏகினர்**

281. புடைக டந்திடு பூதர்கள் போற்றும்
கடைக டந்துபின் அண்ணலைக் கண்டனர்.
**அண்ணலைக் கண்டனர்**

282. முன்ன ரெய்தித் தொழுது முறைமுறை
உன்னு மன்பின் உததியி னாழ்ந்துளார்.
**தொழுது முறை முறை ஆழ்ந்துளார்**

283. ஈர்க்கும் பாசத் திருவினை யின்றொடே
போர்க்கின் றார்மெய்ப் பொடிப்பெனும் போர்வையே.
**மெய் பொடி போர்வை**

284. நேய முந்த நெடும்பகல் நீங்கிய
வாயின் வந்தன வந்தன போற்றினார்.
**நேயமுடன் வாயின் வந்தன வந்தன போற்றினார்.**

285. அண்ண லீசன் வடிவை யகந்தனில்
ஒண்ணு மோவவர் தஞ்செய லோதவே.
**அண்ணலீசன் காட்சி பேரானந்தம்**

286. மேலை வானவர் வேந்தொடு மெம்பிரான்
பாலு மாகிப் பரவின ரென்பவே.
**எம்பிரான் இருபால் மாலும் பிரம்மனும் துதித்தனர்**

**வேறு**

287. அம்புயா சனமுடை யண்ண லாழியான்
எம்பிரா னருள்புரிந் தினைய கூறுவான்.
**எம்பிரானருள்**

288. ஒன்றொரு குறைகளு முறாத பான்மையால்
நின்றமால் தொழுதிவை நெறியிற் கூறுவான்.
**மால் தொழுது கூறுவான்**

289. ஆதியி லயன்படைப் பல்ல தென்னருண்
நாதநின் னருளினால் நடந்த நன்றரோ.
**நாதநின்னருள் நடந்த நன்று**

290. கருமணி மிடறுடைக் கடவு ளின்னுநீ
பரமென வுணர்கிலர் மாயைப் பான்மையால்.
**மாயைப் பான்மையால் பரம் உணர்கிலர்**

291. நின்றன துரிமையை நிகழ்த்தி மேன்மையா
ஒன்றென வேநினைந் துரைக்கின் றார்சிலர்.
**நின்றனது உரிமை மேன்மை**

292. காலமுங் கருமமுங் கடந்த தோர்பொருள்
பாலுறு முணர்ச்சியே பரமென் பார்சிலர்.
**காலமும் கருமமும் கடந்ததே பரம்**

293. ஆற்றுறு புனல்படிந் தழுக்கு நீக்கலார்
வீற்றொரு குறிகொடு மேவு வார்சிலர்.
**வீற்றொரு குறி அழுக்கு**

294. காமமோ டுவகையுங் களிப்பு நல்கலால்
ஏமமார் பொருளென இயம்பு வார்சிலர்.
**காமம் வாமம் ஏமம் களிப்பு**

295. உரையிசை யாதியா மொலிகள் யாவையும்
பொருள்பிறி திலையெனப் புகல்கின் றார்சிலர்.
**கீதம் பிரமமில் சித்தி பொருளில்**

296. பெருமைகொள் குலந்தொறும் பிறந்து செய்திடும்
பரவுதல் வீடெனப் பகரு வார்சிலர்.
**சரீரம் ஆன்மா நீங்கல் முத்தியன்று**

297. அறிந்தறிந் துயிர்தொறு மதுவ தாகியே
இறந்திடல் முத்தியா மென்கின் றார்சிலர்.
**பிறந்து இறந்திடல் முத்தியன்று**

298. நன்னல மாதரை நண்ணு மின்பமே
துன்னரும் பிறவியுட் டுன்ப நீங்கலார்.
**சிவம் துன்னரும் பிறவியுட்டுன்ப நீக்கும்**

299. இறந்தன வரம்புல கெவரும் வேதநூல்
அறிந்தரு ளையநீ யமைத்த வாயினும்.
**வேதநூல் இறந்தன அறிந்தருள்**

300. அங்கவர் போதமுற் றாசொ ரீஇமனச்
எங்கடம் பொருட்டென இறைவன் கூறுவான்.
**மானுடர் போதம் உற்று ஆசு ஒரீஇ**

301. இனிதொரு திறமதற் கிசைத்து மாருயிர்
மனனுறு மெண்ணினை மறுத்தி மாசிலாய்.
**ஒரு திறம் இசைதத்து வினை அறும்**

302. காதலி னருளுமுன் கலையின் பன்மையில்
போதக முனியெனப் போந்து வைகுதி.
**வியாதன் போதக முனியென திருமால் போந்து வைகுதி**

303. போந்தவ ணிருந்தபின் புகரி லாமறை
ஈந்தனை யவரகத் திருளை நீத்தியால்.
**போந்தவனிருந்து புகரிலாமறை வாய்த்திட ஈந்தனை**

304. அன்னதோர் மறையினை யறிந்து மையமா
இன்னமோர் மறையுள திதுவுங் கேண்மதி.
**அல்லவர் இன்னமோர் மறை**

305. ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனம்
ஆற்றவும் நமதிய லறையும் நீரதே.
**மறை ஆகமம் போல் நமதியலறையும் நீரது**

306. என்பெய ரதற்கெனி லினிது தேர்ந்துளோர்
அன்புடை நந்திமுன் னறியக் கூறினேம்
**தொல்புராணம் அன்புடை நந்தி முன்னறியக் கூறினேம்**

307. ஆதியில் நந்திபா லளித்த தொன்மைசேர்
நீதியொ டவனிடை நிலத்திற் கேட்டியால்.
**நந்தி பாலளித்த காதை சனற்குமார முனிவரிடம் கேட்டி**

308. என்னலும் நன்றென இசைந்து தாழ்ந்தெழீஇ
தன்னுல கத்தின்மால் சார்தல் மேயினான்.
**இசைந்து தாழ்ந்தெழீஇ மால் சார்தல் மேயினான்.**

309. சார்தலு மயன்றனைச் சதம கத்தனை
காா்தரு மெய்யுடைக் கடவுள் வைகினான்.
**கார்தரு மெய்யுடைக் கடவுள் வைகினான்**

310. திருவொடு மருவியோன் செறிவுற் றெங்கணும்
ஒருகலை தன்னுட னுதிக்க வுன்னியே.
**மால் செறிவுற்றெங்கணும் தரணியில் ஒருகலை தன்னுடன் உதிக்கவுன்னியே**

311. பங்கயத் தயன்வழிப் பராச ரப்பெயர்
அங்கவர் தம்மிடை அவத ரித்தனன்.
**பங்கத்தயன் வழி பரராசர முனி அவதரித்தனன்**

312. மற்றவன் வதரிகா வனத்தில் வைகியே
கற்றிடா துணர்ந்தனன் கரையில் வேதமே.
**கற்றிடா துணர்ந்தனன் கரையில் வேதம்**

313. மோனக முற்றிய முனிவர் மேலவன்
தூநெறி கொண்டநாற் றுறைசெய் தானரோ.
**மோனக முற்றிய முனிவர் தூநெறி நாற்றுரை செய்தார்.**

314. கரையறு வேதமாங் கடலை நான்கவாய்
ஒருபெயர் பெற்றனன் உலகம் போற்றவே.
**வேதக்கடல் வியாசர் என உலகம் போற்ற பெயர் பெற்றார்**

315. விரவிய மறைதெரி வியாத னாமவன்
மரபொடு கேட்டவை மனத்துட் கொண்டபின்.
**பதினெண் புராணம் சனற்குமார முனியிடம் கறறனன்**

316. ஏத்திடு சுருதிக ளிசைக்கு மாண்பொருள்
சூத்திர மானவுஞ் சொற்று வைகினான்.
**சூத்திரம் சொற்று**

317. மயலறு பயிலரே வைசம் பாயனர்
உயர்வுறு தவத்தினான் முறையி னோதினான்.
**தவத்தார் நால்வருக்கு தவத்தினான் நான்மறை ஓதினான்.**

318. தோல்வரு மறைகளின் சூத்தி ரத்தையும்
ஆல்வரு கடவுளை யனைய தன்மையான்.
**மறைகளின் சூத்திரத்தில் ஆல்வரு கடவுளை அனைய தன்மையான் நவின்று நல்கினான்**

319. மெய்ம்முனி யனையரை விளித்து நீரினி
செம்மையொ டளித்தனர் சிறந்து ளோர்க்கெலாம்.
**சிறந்துளோர்க்கு செம்மையோடு மறை அளித்தனர்.**

320. அன்னதோர் முனிவர னதற்குப் பின்னரே
இன்னருள் நிலைமையா லெனக்கு நல்கினான்.
**பதினெண் புராணம் பின் நல்கினார் வியாசர்**

321. வேதம துணர்தரு வியாத மாமுனி
ஆதலி னுலகினி லவற்றைக் கூறினேன்.
**வேதமதுணர்தரு வியாத மாமுனி உலகிலவற்றைக் கூறக் கூறினன்**

322. காமரு தண்டுழாய்க் கண்ண னாகிய
நேமிகொ ளுலகெலா நிலவி யுற்றவே.
**கண்ணானால் நேமிகொள் உலகெலாம் நிலவி**

323. நம்பனார்க் கொருபது நார ணற்குநான்
இம்பரி லிசைக்கும்அப் புராணத் தெல்லையே.
**இம்பரில் சிவனுக்குப் பத்து விஸ்ணுவுக்கு நான்கு பிரம்மாவிற்கு இரண்டு சூரியனுக்கு ஒன்று அக்கினி சோதிக்கு ஒன்று என பதினெண் புராணம்**

### வேறு

324. எதிரில் சைவமே பவிடியம் மார்க்கண்ட மிலிங்கம்
பதும மேலவன் புராணமாம் பிரமமே பதுமம்.
**வைவம், பவிடியம் என பத்து சிவபுராணப் பதுமம்,**

## பிரமம் பிரம புராணம்

325. கருது காருடம் நாரதம் விண்டுபா கவதம்
தெரியும் ஒன்பதிற் றிருவகைப் புராணமாந் திறனே.
**காருடம், நாரதம், விண்டு, பாகவதம் என நான்கும் மால்புராணம் மற்றும் அமுல்கதை, இரதிகதை என மொத்தம் பதினெண் புராணம்**

326. இத்தி றத்தவாம் புராணங்கள் ஒன்பதிற் றிரண்டின்
மெய்த்தொ கைப்பட வுரைப்பனென் றேமுனி விளம்பும்.
**சிவபுராணத்தில் அடல் வேற்கைத்தவர்த்தவன் காந்தத்துள் அன்னவன் கதை கந்தபுராணம் சூரமுனி நல்கினார்.**

327. பூமிசை யிருந்த புத்தேள் புரிந்திடு புதல்வர் தம்முள்
மாமக ளாகி நோற்று வைகினாள் வைகு நாளில்.
**பிரமபுத்திரர் புதல்வன் தக்கன மகளாக யமுனையில் வலம்புரிச் சங்காக உமாதேவி**

328. அவுணர்க ளோடு சூர னவனிமேற் றோன்றி நோற்று
தவலரு மகேந்தி ரத்தில் வைகினான் தானை சூழ.
**அவுணர் சிவ அருள்**

329. அனையதோர் காலை வெள்ளி யடுக்கலிற் சனக னாதி
தனிநிலை யதனைக் காட்டித் தற்பர னிருந்தா னன்றே.
**தற்பரன் ஞானபோதம்**

330. வீற்றிருந் தருளு மெல்லை வெய்யசூர் முதலா வுள்ளோர்
மாற்றருந் துயரின் மூழ்கி மறைந்தன ராகி வைகி.
**பொல்லாங்கு மாற்றருந்துயர்**

331. சங்கரன் மோனத் தன்மை சதுர்முகற் குரைப்ப வன்னான்
அங்குறை மோனம் நீங்கி யவர்க்கருள் செய்தா னையன்.
**மோனம் நீங்கி அருள் சங்கரன்**

332. ஓரெழு முனிவர் தம்மை யோங்கலுக் கிறைவன் றன்பால்
காரணி கண்டத் தெந்தை கணங்களோ டிமையம் புக்கான்.
**இறைவன் இமையம் புக்கான்**

333. புடையக லிமையந் தன்னிற் புவனங்கள் முழுது மீண்ட
அடன்மத வேளை நல்கி அனங்கனே யாகச் செய்தான்.
**மதவேளை நல்கி அனங்கனாக அருள்**

334. மன்புனை கயிலை தன்னின மலைமக ளோடு மீண்டு
தன்பெரு நுதற்கட் டீயாற் சரவண பவனைத் தந்தான்.
**நுதற்கட்டீயாற் சரவணபவன் உற்பவம்**

335. அந்தமில் விளையாட் டுள்ள அறுமுகக் கடவு டன்னை
நந்திதன் கணத்தி னோரை நங்கைபா லுதிப்பச் செய்தான்.
இலக்கத் தொன்பால் நந்திதன் கணத்தினோரை
**நங்கை பால் உதிக்க அருள்**

336. அண்ணலங் குமரப் புத்தேள் அலகிலா வாடல் செய்து
விண்ணவர் யாருஞ் சூழ்ந்து வெஞ்சமர் புரிந்து நின்றார்.
**குமரன் அலகிலா ஆடல்செய்து மண்ணுறு கடலும்**
**வெற்பும் வானமும் திரிவு செய்தார்**

337. ஆரமர் செய்து ளாரை யட்டுட னுயிரும் நல்கிப்
ஊர்திய தாகக் கொண்டே ஊர்ந்தன னொப்பி லாதான்.
**அட்டுடன் உயிரும் நல்கி பேருரு காட்சி காட்டி**
**செச்சைதனை ஊர்த்தியாக ஒப்பிலா அருள்**

338. மறைமுதற் குடிலை தன்னின் மாண்பொருள் முறைக டாவி
குறையிரந் திடவே விட்டுக் குறுமுனிக் கதனை யீந்தான்.
**மாண்பொருள் முறையினை குறுமுனிக்கு ஈந்தான்.**

339. ஆவதோர் காலை யீச னறுமுகப் பரனை நோக்கி
தேவர்த மின்னல் நீக்கிச் செல்லுதி குமர வென்றான்.
**ஈசனறுமுக பரனை நோக்கி தேவர் தம் இன்னல் நீக்க செல்லுதி**
**என்றான்**

340. விராவிய விலக்கத் தொன்பான் வீரரை வெய்ய பூதர்
தராதலம் புக்கு வெற்பைத் தாரக னோடு செற்றான்.
**அறுமுகன் தராதலம்புக்கு வெற்பைத் தாரகனோடு செற்றான்**

341. பூவினன் முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்த
மூவிரு முகத்தன் முக்கண் முன்னவன் படையைப் பெற்றான்.
**சேய்ஞல் நண்ணி சிவபடையைப் பெற்றான் நல்லூர்**

342. பரனருள் படையைப் பெற்றுப் பராசரன் சிறார்வந் தேத்த
குரவனை வினவி யன்னான் கூறவே குமரன் தேர்ந்தான்.
**பரனருள் படையுடன் குமரன் திருச்செந்தில் மேவி அருள்**

343. அறத்தினை யுன்னி யைய னாடல்சேர் மொய்ம்பன் றன்னை
புறத்துள தானை யோராற் சூர்கிளை பொன்றச் செற்று.
**அறத்தினை யுன்னி மொய்ம்மன் தன்னை வீரமகேந்திரம்**
**அணுகி சூர்கிளை செற்று**

344. சீயமா முகத்த னென்னுஞ் செருவலான் றனையு மட்டு
ஏயெனு மளவில் வேலா லிருதுணி படுத்து நின்றான்.
**சீயமாமுகத்து செருவலன்றனை அட்டுபின் ஏயெனுமளவில்**
**சூரனை வேலாலிருதுணி படுத்தி அருள்**

345. துணிபடு சூர னோர்பால் சூட்டுவா ரணமா யோர்பால்
மணிசொரி யருவி தூங்கும் வான்பரங் குன்றஞ் சேர்ந்தான்.
**துணிபடு சூரனை மயிலாகவும் சேவலாகவும் மாற்றி**
**வாகனமாகவும் கொடியாகவும் ஏற்றி செந்தில் வந்து**
**அற்றைப்பால் பின் திருப்பரங்குன்றம் சென்றார் நல்லூர்**

346. தெய்வத யானை யென்னுஞ் சீர்கெழு மடந்தை தன்னை
எவ்வமில் மகுடஞ் சூட்டி இந்திரன் றன்னை வைத்தான்.
**தெய்வத யானை சீர்கெழு மடந்தையாக்கி திருப்பரங்குன்றில்**
**வதுவையாக்கி வியன் உலகில் இந்திரனுக்கு மகுடம் சூட்டினார்**

347. சில்பக லங்கண் மேவிச் சேனையோ டணங்குந் தானும்
எல்லையி லருளால் வைகித் தணிகையில் எந்தை வந்தான்.
**சிற்பகலில் கயிலையேகி பரனை வணங்கி கந்தவெற்பு ஏகி**
**சிற்பகலில் தனியே செருத்தணிகையில் எந்தை**

348. சாரலி னோங்கு தெய்வத் தணிகைமால் வரையின்மீது
சீரெழில் நலத்தைக் கூற அவள்வயிற் சிந்தை வைத்தான்.
**தணிகை மால்வரையில் நாரார் கூற நனவதலின் எயினமாதின்**
**சீரெழில் நலம் கூற அவள் வயிற் சிந்தை**

349. வள்ளிமால் வரையிற் போந்து மானிடைப் பிறந்த தெய்வ
தெள்ளுசீர் வேடர் நல்கத் திருமணஞ் செய்து சேர்ந்தான்.
**கேடில் பல் உருவம் காட்டி மானிடை பிறந்த தெய்வம்தனை**
**தெள்ளுசீர் வேடர் நல்கத் திருமணம்**

350. செருத்தணி வரையில் வந்து சிலபகல் வள்ளி தன்னோ
கருத்துற இருவ ரோடுங் கலந்துவீற் றிருந்தான் கந்தன்.
**செருத்தணி வரையில் சிலபகல் வள்ளி தன்னோ சிலபகல்**
**மேவி கந்தவெற்பிற் இருவரோடு வீற்றிருந்தார்.**

351. என்றிவை யனைத்துஞ் சூதன் இயம்பலும் முனிவர் கேளா
நன்றிதன் அகலங் கேட்க நனிபெருங் காதல் கொண்டேம்.
**சுருக்கி இயம்பல் சூரன் நன்றிதன் அகலம் காதல்**

352. என்னவே முனிவ ரானோர் யாவரு மெடுத்துக் கூற
தொன்னெறி வழாதி யானும் வல்லவா தொகுத்துச் சொல்வேன்.
**தொன்னெறி வழாதி யானும் தொகுத்து இயம்பல்**
**பாயிரப்படலம் முற்றிற்று**

## உற்பத்தி காண்டம்

### 01. திருக்கைலாசப் படலம்

353. பாசம் நீக்கித்தன் பாற்படு நல்லருள்
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே.
**வெள்ளியம் குன்றில் மெய்யொளி நல்லருள்**

354. ஆறு சூடிய வாதியம் பண்ணவன்
தேறும் அன்பர்தஞ் சிந்தையும் போன்றதே.
**அன்பர் சிந்தை பண்ணவன்**

355. மோன நன்னிலை முற்றிய பெற்றியர்
தானெ லாஞ்செறிந் தென்னவுஞ் சான்றதே.
**மோன நன்னிலை ஞானமார் பிழம்பன்ன கயிலை**

356. கான மார்ந்த கடுக்கைநற் கூவிளை
ஞான நாயகன் போல நணியதே.
**ஞான நாயககன் போல் நணிய கயிலை**

357. தண்ண றுந்துள வாற்புனை தார்முடி
நண்ணு கின்றது போலும் நலத்ததே.
**பாற்கடலன்ன கயிலை**

358. பொதியு மின்னமு தோடு பொருந்துவ
உதய மானது போன்றதவ் வொண்கிரி.
**ஆயிரம் கோடி மதியம் உதய அன்ன ஒண்கிரி**

359. நெற்றி மேனிமிர் கண்ணும் நிலாவொளிர்
பற்று நந்தி பரிவொடு காப்பது.
**சிவசாரூப்பிய நந்தி பரிவொடு காப்பது**

360. புரந்த ரன்முத லாகிய புங்கவர்
பரிந்து போற்றிப் பயில்வதம் மால்வரை.
**நிரந்தரம் போற்றிபரிந்து பயில்வரை கயிலை**

361. மின்ன ரம்பைய ராடலும் விஞ்சையர்
இன்னி யங்களும் எங்கணு மார்ப்பது.
**ஆடலும் இன்னியங்களும் ஆர்க்கும் கயிலை**

### வேறு

362. கீணி லாவுறு முலகெலாம் நீங்கியே கீழ்போய்
தாணு வாயுல கிறுதியின் நிற்பதச் சயிலம்.
**தாணுவாய் உலகிறுதியில் கயிலை**

363. மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
கேடி லாமலே அமர்வது கயிலையங் கிரியே.
**பரந்துகூடு மண்டங்கள் குலையினும் கேடில் கயிலை**

364. நலம்வ ருங்கலை மதியமு மிரவியும் நாகர்
வலம்வ ரும்படி யிருப்பது கயிலைமால் வரையே.
**வலம்வரும் கயிலை நலம்**

365. ஏற்றம் மேருவே யாதியாம் வரைகள்ஏழ் வகையால்
வீற்றி ருப்பது கயிலையா கியதனி வெற்பு.
**கயிலை தனிவெற்பு**

366. படியெ லாமுண்டும் ஏனமாய்த் தாங்கியும் பண்டோர்
வடிவ மேயெனக் காணுதற் கரியதவ் வரையே.
**உலகுறு எல்லையில் நிமலன் வடிவு கயிலை அஃடு சலப்பிரளயம் ஓரடி மாவலி இருக்கை அகற்ற அடிமுடி**

**வேறு**

367. அன்னதோர் கயிலை நாப்பண் அம்பொனின் சுடர்மேல் கொண்ட
பொன்னெடுங் கோயிலொன்று பொலிவொடும் பொருந்திற் றன்றே.
**கயிலை பொன்னெடுங் கோயில்**

368. திணிகதிர் ஆரந் தன்னிற் சிறந்தவச் சிரத்திற் செக்கர்
அணியினுக் கணியாய் மல்கும் ஆலயச் சூழ லெங்கும்.
**அணியினுக் கணியாய் செக்கர்**

369. என்றுமீ றென்ப தின்றி யிருந்திடுங் கயிலை வெற்பில்
மன்றம ருறையு ளொன்று வனப்பொடு வைகிற் றன்றே.
**கயிலை வனப்பொடுவை கிற்று**

**வேறு**

370. சோதி சேருமத் தூமணி மண்டப
வேத நாயகன் வீற்றிருந் தானரோ.
**கவுரி பாங்குற வேதநாயகன் வீற்றிருந்தார்**

371. பீடு கொண்ட பெருந்தவப் பெற்றியோர்
பாடு கின்றனர் பாணியின் பாற்பட.
**பெருந்தவப் பெற்றியோர் பாணியின் பாற்படபாடுகின்றனர்.**

372. அதிகன் வேணியி லார்தரு கங்கையை
கதியி னோர்கள் கவரிகள் வீசினார்.
**கதியினோர்கள் கவரிகள் வீசினர்**

373. சீல வட்ட முடிப்பிறை தேடுவான்
ஆல வட்ட மசைத்தனர் அன்பினோர்.
**அன்பினோர் ஆலவட்டம் அசைத்தனர்.**

374. ஆதி தன்னரு ளெய்தி அவன்றிரு
பூத ராதியர் போற்றிமுன் ஈண்டினார்.
**பூதராதியர் போற்றி**

## 02. பார்பதிப்படலம்

375. அன்னுழி உமையவ ளகத்து ளோர்செயல்
முன்னுற நின்றிவை மொழிதல் மேயினாள்.
**உமையவளகத்துள் செயல் மொழிநல் மேயினாள்**

376. கற்பனை முதலிய கடந்த கண்ணுதல்
சொற்படு நாமமுஞ் சுமந்து ளேனியான்.
**கண்ணுதல் தற்பரனே மாதென நாமம் சுமந்துளேன்.**

377. ஆங்கதோர் பெயரையு மவன்க ணெய்தியே
நீங்குவ னவ்வகை பணித்தி நீயென்றாள்.
**அவன் கணெய்தியே ஏங்கி நீங்குவ பணித்தீ.**

378. மன்னுயி ராகிய மரபு முற்றவும்
தன்னிக ரில்லதோர் தலைவன் கூறுவான்.
**மன்னுயிராகிய மரபுமுற்ற தலைவன் கூறல்**

379. பத்திமை யெம்வயிற் பழுத்த பண்பினால்
புத்திரர் வீடுறு பொருட்டுப் போலுமால்.
**பத்திமை சக்தியே நிகர் புத்திரர் வீடுறல்**

380. நற்றிற மேயிது நங்கை சிந்தனை
கொற்றவன் புரிவனாற் கொடிய மாதவம்.
**நங்கை சிந்தனை நற்றிறம்**

381. ஏதவன் பெறத்தவ மியற்று மென்றியேன்
ஆதலிற் குழவியாய் அவன்க ணெய்துநீ.
**ஏதவன் தவ குழவியால் எய்துநீ**

382. தளர்ந்துடல் மெலிவுறத் தவஞ்செய் வெற்பினான்
வளர்ந்தனை புரிதிமேல் மாசில் மாதவம்.
**குழவியாய் எய்தி வளர்ந்து ஆண்டு ஐந்தில் மாசில் மாதவம் புரிதி**

383. அணங்குநீ நோற்றுழி யகிலத் துள்ளதோர்
மணம்புரிந் தேகொடு வருது மீண்டெனா.
**தோற்றுழி மனம் புரிந்தே கொடுவரு ஈண்டுஎனா**

384. கடல்விட முண்டிடு கடவு ளித்திறம்
விடையது பெற்றனள் விமலை யேகினாள்.
**நடைமுறை அருள விடையது பெற்றனன் ஏகினாள்**

385. அல்லலு முவகையு மன்பு மெம்பிரான்
வல்லையின் இமையமால் வரையிற் போயினாள்.
**அல்லலில் உவகையில் அன்பில் எல்லையில் அருளில்**
**வல்லையில் வரையில் உமை**

386. வள்ளியன் கடகரி வடிவின் வீழ்தரு
வெள்ளியங் கிரியென விளங்கு கின்றதே.
**வெள்ளியங்கிரியென இமயம்**

387. எண்டகு மிமையமு மிமைய மேலுறு
சுண்டிடு மணிமிடற் றிறையு மொக்குமால்.
**இமயமும் மேலுற கொண்டலும் அன்னது பரம்**

388. நீலுறு மழைமுகில் நிலவ மின்னொடு
பாலுறு பன்னகப் பாயல் போன்றதே.
**அறிதுயில் பன்னகபாயல் அன்ன மின்னொடு இமயம்**

389. கரும்புய லார்த்துறு காட்சித் தாகியே
அரும்பவி ழாதவெண் கமல மன்னதே.
**அரும்பவிழாத வெண்கமல அன்ன இமயம்**

390. நீடிய மண்மகள் நிதியின் குப்பையை
கோடுயர் பனிகொள்பொற் குன்றம் நின்றதே.
**பொற்குன்றம் பணிகொள் நின்றதே**

391. பொன்னெடுங் கிரியென வீண்டும் புங்கவர்
என்னவும் நின்றதால் இமையப் பொன்வரை.
**மேருஅன்ன இமயம்**

392. குடகடல் குணகடல் கூடு றாவகை
நெடுநில வளவையும் நிமிர்ந்து போயதே.
**ஏனம்எய்திய அன்னகுட குணகடல் கூடுறாவகை நெடுநில வளவையும் நிமிர்ந்து போயது இமயம்.**

393. விண்ணவர் ததிக்கடல் கடைந்த வெண்ணெயுள்
உண்ணிறை புனற்றட மொன்று வைகிற்றே.
**வெற்பின்மேல் உண்ணிறை புனற்றடம்**

394. அன்னதோர் தடத்திடை அசல மன்னவன்
முன்னுற வருந்தவம் முயன்று வைகினான்.
**தடத்திடை அசல மன்னவன் அருந்தவம் முயன்று வைகினான்**

395. மெய்த்தவ மியற்றிய வெற்பன் காணிய
எத்திறத் துயிரையு மீன்ற தொன்மையாள்.
**தொன்மையாள் மலரில் குழவியா அருள்.**

**வேறு**

396. ஆங்கவட் கண்டு வெற்பன் அடியனேன் பொருட்டா லம்மை
ஓங்குபே ரருளே யென்னா வுவகையங் கடலுட் பட்டான்.
**ஆங்கவட் கண்டு வெற்பன் ஈசன் பேரருளில் உவகையுற்றான்**

397. கண்ணுறு போத வாரி கான்றிட வுரோம ராசி
துண்ணெனப் பாடி யாடி யமலையைத் தொழுது நின்றான்.
**தக்கன் துண்ணெனப்பாடி ஆடி அமலையைத் தொழுதான்**

398. பங்கயத் தவிசின் வைகும் பராபரை தனைத்த னாது
மங்கல மேனை யென்னு மனைவிகைக் கொடுத்தான் மாதோ.
**பராபரை தனை மங்கல மேனை மனைவிகைக் கொடுத்தான்.**

399. கொடுத்தலுந் தொழுது வாங்கிக் கொற்றவ இவணின் பாங்கர்
வடுத்தவிர் கற்பின் மேனை மனமுற மகிழ்ச்சி கொண்டாள்.
**கற்பின் மேனை மகிழ்ச்சி உற்றாள்**

400. சுரந்தன கொங்கை பாலுந் துண்ணென வொழுகிற் றெங்கும்
கரந்தன விமையத் தண்ணல் காதலி தனக்கு மாதோ.
**பாலம் துண்ணென ஒழுகிற்று**

401. பரிபுரந் தண்டை யம்பொற் பாடகம் பாத சாலம்
வரையுறழ் தனப்பா லார்த்தி வரம்பெறு காப்பு நேர்ந்தாள்.
**வரையுறழ் தனப்பாலார்த்தி வரம்பெறு காப்பு நேர்ந்தாள்.**

402. வனைதரு பவளங் காலா வயிரமே மருங்கிற் கோலா
மனமகிழ் திறனாற் போற்றி மதியென வளர்க்க லுற்றாள்.
**வளர்மதியென வளர்கலற்றாள்.**

403. மன்னுயிர் புவன மேனை மற்றுள பொருளுக் கெல்லாம்
கன்னிதன் னருளின் நீர்மை காட்டினள் போலு மன்றே.
**கன்னி தன்னருளின் நீர்மை காட்டினால்.**

404. இந்தவா றினையர் பாலா யெம்பெரு மாட்டி வைகி
சிந்தியா விமையத் தோங்கற் செம்மலுக் குரைக்க லுற்றாள்.
**ஐந்தியாண்டகன்றபின் சிவதவம் புரிய உரைத்தான்**

405. நாற்பெருந் தடந்தோ ளண்ணல் நலத்தக வரைந்து கொள்வான்
பார்ப்பதி இயம்ப லோடும் பனிவரை யரசன் சொல்வான்.
**பார்வதி நோற்க இயம்ப பனிவரை அரசன் சொல்வான்**

406. அன்னைகே ளெம்மின் நீங்கி யருந்தவ மாற்றற் கொத்த
கன்னிகை நகைத்துக் கேண்மோ இஃதெனக் கழற லுற்றாள்.
**தக்கன் நின்னுடல் பொறாதலென கன்னிகை நகைத்து கழறலுற்றாள்.**

407. ஈசனே காப்ப னல்லால் யாரையும் பிறராற் றம்மால்
நேசமோ டியைந்திட் டன்னை நினைந்தநோன் பியற்று கென்றான்.
**ஈசனே காப்பன் என நோன்பியற்று**

408. மன்னனு மியைந்து பின்னர் மால்வரை யொருசார் தன்னில்
கன்னியர் பலரைக் கூவிக் கௌரிபா லாகச் செய்தான்.
**கன்னியர் பலரைக் கௌரி பாலாகச் செய்தான்**

409. நீலுறு மணிதோய் மேனி நிமலையங் கிமையத் துச்சி
சாலையை யடைந்து மிக்க தவத்தினை யிழைக்க லுற்றாள்.
**நிமலை தவத்தினை இழைக்கலுற்றான்**

410. தங்கிய வைக றோறுந் தாதையுந் தாவில் கற்பின்
வெங்கடம் பெருமான் செய்த பரிசினை இயம்ப லுற்றேன்.
**இஃதே  பார்வதி தவம் செய்ய கையிலையில்**
**வெங்கடம் பெருமான் செயல் இயம்பல்**

## 03. மேருப்படலம்

411. பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன் றன்பால்
இந்நில வரைப்பின் அண்டத் திறைவனே யாகி யுற்றான்.
**கௌரி நோற்றுங்காலை சூரன் அண்டத்தலைவனானான்**

412. மற்றது போழ்திற் றொல்லை மறைப்பொருள் வடத்தின் பாங்கர்ப்
முற்றுணர் நந்தி போற்று முதனிலை வாயில் புக்கார்.
**மறைப்பொருள் வடத்தின் பாங்கர் முற்றுணர்த்தி போற்றுவாயில் புக்கார்**

413. நோன்மையின் முனிவ ரானோர் நுவலருங் காட்சி நந்தி
நான்முகன் முதலோர்க் கெய்தா ஞானநா யகனைக் கண்டார்.
**முனிவரானோர் ஞானநாயகனைக் கண்டார்.**

414. மொழியது தவறல் செல்ல முற்றுடல் பொடிப்புக் கொள்ள
தொழுதன ருவகை பூத்துத் துள்ளினர் துளக்க முற்றார்.
**ஆதி நாயனைத் தொழுது துளக்கமுற்றார்.**

415. மண்ணவ ரமரர் யாரை வணங்கினு மவைக ளெல்லாம்
பண்ணிசை மறைக டம்மால் துதித்திவை பகர்த லுற்றார்.
**பண்ணிசை மறைகள் துதித்தனர்.**

416. இருட்பெருங் கடலுள் யாமத் தெறிமருத் திடைப்பட் டாங்கு
மருட்பெருங் கடலின் நீங்கும் வண்ணமொன் றருடி யென்றார்.
**மருட்பெருங்கடல் நீங்க அருடி.**

417. நவையறு தவங்க ளாற்றி நல்லருள் படைத்த தொல்லோர்
தவலரஞ் சிறப்பின் நன்னூல் சாற்றுது மிருத்தி ரென்றான்.
**நவையறு தவங்கள் நல்லருள் நன்னூல் சாற்றுது.**

418. என்றிவை யருள எந்தை யிணையடி தனாது முன்னர்
கொன்றையந் தொடையல் வேய்ந்த குழகனொன் றியம்பு கின்றான்.
**எந்தை இயம்பல்.**

419. பூங்கணைக் கிழவ னன்றிப் புங்கவர் யார்போந் தாலும்
நீங்கியக் கணத்தின் நந்தி நெறிமுதல் போற்றல் செய்தான்.
**நந்தி நெறிமுதல் போற்றல்**

420. நந்திமுற் கடையைப் போற்ற ஞானநா யகனா மண்ணல்
புந்திய தொடுங்கும் ஞான போதகம் போதி யென்றார்.
**புந்திய தொடுங்கும் ஞான போதகம்.**

421. என்னலும் நகைத்தி யாது மெதிர்மொழி புரிந்தா னல்லன்
உன்னரும் பரத்தின் மேலோ னொருசெயல் புரித லுற்றான்.
**அசபை ஞானபோதம்**

422. இருவரு முணரா அண்ணல் ஏனவெள் ளெயிறி யாமை
ஒருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்.
**ஒரு கணஞ் செயலொன்றின்றி யோகநிலையில் பரம்**

423. இனையதோர் தன்மை காட்டி யெம்பிரா னுணர்த்தக் கண்டு
புனிதன தருளாற் றத்தம் புந்தியி னொடுக்கம் பெற்றார்.
**ஞானபோதம் பனுவலின் அளவன்று புத்தியினொடுக்கம்**

424. தத்தமுள் ளொடுங்கல் பெற்ற தாபத கணத்தர் யாரும்
சித்திரம் புணர்த்த பாவை செயலற இருக்கு மாபோல்.
**சிவனருள் மனோலயம் நிட்டை**

425. தற்பரன் இனைய வாற்றாற் றாபத ருணருந் தன்மை
பற்பல யுகங்கள் சென்ற பிறர்க்கினிப் பகர்வ தென்னோ.
**தற்பரன் ஞானபோதகணம் பிரம தேவர்க்கு பற்பல யுகங்கள்.**

426. இத்திற ஞானபோத மென்றுதொன் முனிவர்க் கெந்தை
அத்தன்மெய் குழைத்த நங்கை அவன்விழி புதைத்த நாட்போல்.
**ஞானபோதகணம் அன்ன காஞ்சி நங்கை விழிபுதைத்த கணம்.**

427. காரண முதல்வன் மோனக் காட்சியால் அமர ரெல்லாம்
பாரிடை உயிருங் காமப் பற்றுவிட் டிருந்த வன்றே.
**முதல்வன்  மோனக் காட்சியால் காமப்பற்றனர்.**

428. ஆரணன் றனது மைந்தர்க் கரும்பெறல் ஞான போதம்
காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றோ.
**ஞானபோதம் காரணன் சிவனே.**

429. பிணைவிழைச் சூழ்தந் துய்ப்பப் பெருமறை விதிவ ழாமல்
புணைவிழச் சலதி யாழ்ந்து புலம்புகொள் மாக்க ளேபோல்.
**பெருமறை விதிவழாமல்.**

430. வன்முலை யணங்கி னோரும் வானவர் யாருங் காமத்
புன்மையொ டிருவர் தாமும் புலம்புறு தன்மை யேபோல்.
**புன்மையொடிருவர் புலம்புறல்.**

431. பொற்புருக் குறைவின் றுற்றும் புவனமேல் மகளிர் மைந்தர்
நற்புன னீழல் பெற்று நணுகருந் தன்மை யேபோல்.
**தற்பரவருகணாணை நற்புனனீழல் பெற்று நணுக்கரும் தன்மை.**

432. மாடக வெழாலை யன்ன பணிமொழி மகளிர் மைந்தர்
பேடியர் குழாமும் வெவ்வே றுற்றிடு பெற்றி யேபோல்.
**இன்பங் கொண்டிலர் பெற்றி அன்ன காமம் கோடா.**

433. இருந்திட விரிஞ்சன் மாயோன் இருவரு மீசன் றன்பால்
அருந்ததி மாதும் போன்றார் ஆடவர் மகளி ரெல்லாம்.
**ஈசன்பால் பொருந்திடும் உணர்ச்சி**

434. ஏமரு புவன மூன்று மினிதருள் கமலக் கண்ணர்
ஆமையி னொடுங்கல் பெற்றார் ஆசையுள் ளோர்க ளெல்லாம்.
**சிந்தை ஆமையினொடுங்கல்.**

435. மண்ணகத் துயிர்கண் முற்று மாதிரத் துயிர்கண் முற்றும்
கண்ணகத் திறைவற் கண்டு கடைநின்ற காட்சி யார்போல்.
**ஞானக்கண்ணில் இறை.**

436. நாகமார் சடிலத் தண்ணல் நாற்பெருந் தவரு முய்ய
ஆகையால் அகில மெல்லா மவனென்கை தெரிந்த தன்றே.
யோகு சேர்நிலை கணத்தில் உயிரின் பொம்மல்
**அகிலமெல்லா மவன் கைஎன்ப.**

437. சிலையொடு பகழி வாடத் திருமதிக் குடைசீர் குன்ற
கலவிய தொழிந்தா னென்னிற் பிறர்செயல் கழறற் பாற்றோ.
**கண சிவஞானநிலை கலவி ஒழி பற்பல்கோடி யுகங்கள்.**

438. சாலிகள் வளரு மெல்லை தடம்புனல் வறுமைத் தாக
ஞாலமன் னுயிர்கள் முற்றும் நாடொறுங் குறைந்த வன்றே.
**ஞான அருளால் போகம்விட்டு கருமல்கின்றி**
**நாடொறும் உயிர்கள் குன்றியதே.**

439. முள்ளரை முளரிப் புத்தேள் முதற்புரி துணையே யன்றி
வெள்ளியங் கயிலை தன்னில் மேவிய மேலை நாட்போல்.
**வெள்ளியங்கயிலை அசபை தன்னில் தலைத்தலை மல்கா.**

440. இம்முறை நிகழ நாதன் ஈரிரு தவத்தி னோர்க்கும்
தம்மொடுந் துறக்கம் விட்டுச் சசியொடுந் தரணி புக்கான்.
**நாதன் நிட்டையில் தெம்முயல்சூரன் தீங்கால்**
**இந்திரன் சசியோடும் தரணி.**

441. மேகமூர் கடவுள் வெள்ளி வெற்பினி லேகி முக்கண்
மாகநா டழித்துச் சேயைச் சிறைசெய்த வண்ணந் தேர்ந்தான்.
**சூரன் நாடழித்து சயந்தனை சிறைசெய்சேதி**
**இந்திரன் கயிலையின்றி அறிந்தான்.**

442. தமனிய மேரு வெற்பிற் றன்னுள மொருப்பா டெய்த
அமரர்கோன் வணங்கிப் போற்ற அனையவ னருளிச் செய்வான்.
**பன்னாள் நெடுந்தவம் உழந்த அமரர்கோனுக்கு அருள்.**

443. நொந்தனை யளப்பில் கால நோற்றனை யாற்றல் தீர்ந்தாய்
வந்தனை புரிந்து போற்றி மகபதி புகல லுற்றான்.
**அந்தமில்லறிவின் மேலோன் போற்றி மகபதி புகலல்.**

444. பன்னரும் பழிசேர் சூரன் பருவரற் படுத்திப் பின்னர்
அன்னவன் றன்னை யட்டே அளித்தியா லெம்மை யென்ன.
**பருவரற்படுத்தி ஊழ்தழல் கொழீஇ சூரன் தனை அட்டே எமக்கருள்.**

445. மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியி னிருந்த பாவம்
இம்மென வும்மைக் காப்ப னெனப்புகன் றிறைவன் போனான்.
**தக்கன் வேள்விப்பாவ உழந்தல் மேனான் நம்சேய் உம்மெனக் காப்பான்.**

446. மறைந்தனன் இறைவ னேக மகபதி யிரக்க மெய்திக்
சிறந்ததன் மனத்தி லுன்னித் தேறினன் உவகை செய்தான்.
**மறைந்தனன் குறைந்தனன் மனத்துள்ளி தேறினன்.**

447. மாசறு காட்சி கொண்ட மாதவர்க் கருளி யெங்கோன்
வாசவ னிருந்து நாடி மனமிசைக் கவலை கூர்ந்தான்.
**ஆசுஅறுகுமரன் அன்னார்க்கு எவ்வெனக் கவலை.**

448. மயர்வொடு துறக்க மன்னன் மனோவதி யென்னு மாண்டை
அயனுறு கடிமாண் கோயி லடைந்தனன் அமர ரோடும்.
**அயன் உறு கோயில்.**

449. இனையதோர் காலை முக்க ணெம்பிரான் ஞானபோதம்
அனையவன் கழன்முன் றாழூஉ அளப்பில வழுத்தி நின்றான்.
**ஞானபோதம் கால் இந்திரன் அனையவன் கழல்.**

450. நிற்றலும் மகவான் றன்னை நீடருள் புரிந்து நோக்கி
சொற்றனன் சூர பன்மன் செய்திடுந் துன்ப மெல்லாம்.
**சூரபன்மன் செய்திடும் துன்பம் செற்றனன்.**

451. வெய்யதோர் சூரன் செய்கை விளம்பியே முனிவர்க் கீசன்
உய்வதோர் பரிச தென்னோ உம்பரும் யானு மென்றான்.
**உம்பரும் யானும் உய்ய பரிசு யாதோ.**

452. என்றலும் மலரோன் கேளா எவர்க்குமே லாகு மீசன்
குன்றிடை யெம்மை யாளுங் குறிப்பின்வீற் றிருந்தா னன்றே.
**மேலாகு ஈசன் ஆளும் குறிப்பின் வீற்றிருந்தார்.**

453. செங்கண்மா றானும் நானுந் தேடுதற் கரிதாய் நின்ற
நங்குறை முழுது மாற்றும் நல்லரு ளாகு மன்றே.
**ஞானபோதம் நங்குறை முழுது மாற்றும் நல்லருள்.**

454. படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பகவனா ருயிர்க ளெல்லாம்
விடலரும் பவப்பே றார்த்தி வீடருள் கருணை யன்றே.
**அலக்கண் விடலரும் பவப்பேறு வீடருள் கருணை.**

455. பெற்றிடுங் குரவ ரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்று
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனு மிவைகள் செய்தான்.
**பரமன் பவங்கள் தீர்ப்பான்.**

456. தெருமரு கின்ற நம்பாற் றீங்கெலாம் நீங்கு மெல்லை
இருவினைப் பௌவ வேலை ஏறினம் போலு மன்றே.
**அருவினைப் பௌவவேலை ஏறினம் பரிசு.**

457. ஆதலின் இறைவ னேமே லருள்செயும் அதற்கி யாமும்
ஏதமில் கமலப் புத்தேள் இருக்கைவிட் டெழுந்தா னன்றே.
**இறைவனே மேலருள் செய்யும்.**

**வேறு**

458. அன்ன காலை யதுநன்று நன்றெனா
சென்னி நான்கினன் செல்லுதல் மேயினான்.
**நன்று நன்றெனச் சொல்லுதல்.**

459. ஞாலம் யாவையும் நல்கிய புங்கவன்
ஆல யத்தின் அகன்கடை யேகினான்.
**பிரமன் வைகுண்டம் ஏகினான்.**

460. அங்க வெல்லை யதுகண்டு நேமியும்
பங்க யத்தன் படர்ந்தது செப்பினான்.
**நேமியும் சங்கும் ஏந்திய காவலன் இந்திரன் தேவர்கள்**
**உட்பட பிரமன் வரவினை மாலிற்கு செப்பினான்.**

461. பணில மேந்திய பண்ணவன் அன்னரைக்
கணமொ டேகினன் காசினி நல்கியோன்.
**பண்ணவன் கொணர்தி என இந்திரன் பிரமா**
**தேவகணத்துடன் ஏகினன்.**

462. பொருவில் மாமுனி புங்கவர் போற்றுதன்
அரியி ருந்த அவைக்களம் நண்ணினான்.
**சாரூப்பியம் பெற்ற விஸ்ணுக்கள் துதிக்க அரி**
**அவைக்களம் நண்ணினான்.**

463. அன்ன மூர்த்தி அமருல காளுறும்
பொன்னின் மாணடி போற்றி வணங்கினான்.
**மாணடி போற்றி**

464. தரைய ளந்திடு தாளினன் அவ்வழி
அருளி யங்கண் அவனை இருத்தினான்.
**பிரமனுக்கு பீடிகை அருள்.**

465. குல்லை மாமுடிக் கொண்டவன் அத்துணை
செல்லு கின்றகொல் என்றலுஞ் செப்புவான்.
**மால் நின்விதி செல்கின்றதா கொல் என செப்பினான் பிரமன்.**

466. கனகன் அச்சுறக் கந்திடை வந்தெழும்
எனக ருத்திடை முற்பக லெய்தினார்
**சனகர் முற்படு தாபதர் நால்வரும் எனக் கருத்திடை எய்தினார்.**

467. அறிவின் மிக்க அனையரை நோக்கியான்
முறுவல் செய்து மொழிந்தனர் இவ்வுரை.
**அறிவின் மிக்க அனையர் முறுவல் செய்து மொழிந்தனர்.**

468. பாச வன்சிறைப் பட்டுப் படைப்பென
மாசில் காட்சியர் வல்விரைந் தேகினார்.
**பாசசிறை படைத்தல் அல் ஈசன்மேல் மாணடி**
**என நால்வர் வல்விரைந்து ஏகினர்.**

469. மாத வத்தினை மைந்தர்க ளாற்றலும்
வேத வுண்மை விளம்புதி யாலென்றார்.
**மைந்தர்கள் மாதவத்தினை ஆற்ற ஆதிநாயகன் அவ்வுழி**
**எது வேண்டியதென்றலும் வேத உண்மை விளம்புதி என்றார்.**

470. என்ற லோடும் இறையவன் வெள்ளியங்
நன்று ணர்த்திட நால்வருந் தேர்ந்தனர்.
**நால்வர்க்கும் இறையவன் மறையெலாம் உணர்த்திடல்.**

471. முந்தை வேத முழுது முணர்த்தியே
நொந்து பின்னரும் நோற்றலை மேயினார்.
**வேதமுணர்ந்து நோற்றலை மேயினார்.**

472. பின்னும் மைந்தர் பெருந்தவ மாற்றியே
மன்னும் வெள்ளி வரையிடை யேகினார்.
**பெருத்தவ மாற்றி வெள்ளி வரையிடை ஏகினார்.**

473. ஏகல் பெற்றிடு மக்கட் கினிதுளம்
ஓகை பற்றி யுணர்வகை கூறியே.
**இனிதுளம் ஆகமத்தின் அரும்பதம்**
**மூன்றையும் உணர்வகை இறை.**

474. கூனன் மாமதிக் கோடு மிலைச்சிய
மோன மேய முதற்குறி காட்டினான்
**ஞானபோதம் மோனமேய முதற்குறி அருள்.**

475. அந்த வெல்லை யரனருள் கண்டுதம்
முந்தி யாப்புறு முத்தளை மூட்டற.
**முத்தளை மூட்டற செயலற்று வைகினார்.**

476. வேத நாயகன் மெய்த்தவர்க் கோர்கணம்
சீத வானதி சேர்ந்ததொன் னாளினே.
**வேதநாயகன் மெய்த்தவர்க்கு ஓர்கணம்**
**போத யோகம் பல்யுகம் கழிந்தன.**

477. அன்னை தன்னை அகன்றரன் யோகிபோல்
மன்னு யிர்த்தொகை மல்கலின் றாயதே.
**அன்னை அகன்றரன் யோகி மன்னுயிர் தொகை மல்கல்.**

478. நவிறல் என்னினி ஞாலம் விசும்புளார்
தவறல் கொண்டது நல்குந் தனிச்செயல்.
**ஞாலம் தவறல் கொண்டது தனிச்செயல்.**

479. நல்கல் பெற்ற தமியனும் நாமகள்
ஒல்கல் பெற்றனன் உண்மையி தாகுமால்.
**நல்கல் ஒல்கல் பெற்றனன்.**

480. நிற்க இங்கிது நித்தன்வ ரத்தினால்
சொற்க நாட்டில் துயரினை நாட்டினான்.
**நித்தன் வரத்தினால் துயிரினை நாட்டினான்.**

481. தேசு நீங்குறு தேவரை ஈண்டுள
கூச லின்றிக்குற் றேவல்கொண் டானரோ.
**கூசலின்றி குற்றேவல் கொண்டான்.**

482. நிறைபு ரிந்த நிலவினை வாளரா
சிறைபு ரிந்தனன் தீத்தொழி லாற்றியே.
**தீத்தொழிலாற்றி சிறை புரிந்தனன்.**

483. நிரந்த பல்லுயிர் தங்கட்கு நித்தலும்
விரைந்து கூறுதி யென்று விளம்பினான்.
**சிவன் அறிகிலன் போல் கூறுதியென விளம்பினான்.**

484. அரிய தத்துவம் ஐயைந்தின் பேதமும்
பிரமன் மாமுகம் நோக்கினன் பேசுவான்.
**அரிய தத்துவம் ஐயைந்தின் பேதமும் பிரமன்**
**மாமுகம் நோக்கிப் பேசுவான்.**

## வேறு

485. ஆவிக ளனைத்து மாகி அருவமா யுருவ மாகி
ஏவர்கள் காமங் கன்றித் தொன்மைபோ லிருக்கும் நீரார்.
**அருவமாயுருவமாகி காமங்கன்றி.**

486. ஊழ்வினை நெறியால் முன்ன மொருபெரு வேள்வி யாற்றி
வாழ்வினை யருள நாதன் மனத்திடை நினைந்தா னன்றே.
**ஊழிவினை நெறியால் வாழ்வினை அருள்.**

487. சூரெனு மவுணற் காற்றல் புரிந்ததுஞ் சுரர்கள் யாரும்
பேரருள் முறையே யன்றிப் பிறிதொரு செயலு மன்றால்.
**அவுணற்காற்றல் பேரருள்.**

488. முனிவருக் குணர்வு காட்டும் மோனத்தை முதல்வன் நீங்கி
துனியுறும் உலக மெல்லாந் தொன்மைபோ லுய்யு மாதோ.
**மோனத்தை முதல்வன் நீங்கி இனியொரு புதல்வன் உலகம் உய்ய.**

489. அத்திற முற்று மாறொன் றறைகுவன் அகிலந் தன்னில்
சத்தியை மணந்து சேயைத் தந்திடு மெந்தை யென்றான்.
**மோனம் நீங்கி சக்தியை மணந்து சேயைத் தந்திடு.**

490. பதுமபீ டிகையோ னன்ன பரிசுதேர்ந் துவகை யெய்தி
மதனனை விளித்து வேண்டி விடுத்திநீ வல்லை யென்றான்.
**அச்சுதன் அமலன் தன்பால் மதனனை விளித்து**
**வல்லை விடுத்தி நீ என்றான்.**

491. என்னலும் மலரோ னுள்ளத் திசைவுகொண் டெழுந்து மாயன்
தன்னக ரடைந்து கஞ்சத் தவிசின்வீற் றிருந்தா னன்றே.
**மலரோன் உள்ளம் இசைவு கொள்ள மாயன் மலரடி வணங்கி விடை.**

## 04. காமதகனப்படலம்

492. இந்திரன் வானவர் ஈட்டமொ டேகி
வந்திடு மாறு மனத்தில் நினைந்தான்.
**பிரமன் ஐந்திறனாகிய ஆசுக வில்வேள் மனதில் நினைத்தான்.**

493. நினைந்திடு கின்றுழி நீனிற மாயோன்
இனந்தரு சூழலொ டிம்மென வந்தான்.
**நினைந்திட மன்மதன் மயோனது வில்வேருடன் வந்தான்.**

494. மாமறை யண்ணல்முன் வந்து பராவி
காமன் வினாவ அயன்கழ றுற்றான்.
**காமன் வினாவ அயன் கழறல்.**

495. கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
எங்கள் பொருட்டினில் ஏகுதி யென்றான்.
**வாளிகள் தூவி மோனம் அகற்ற ஏகுதி எனல்.**

496. வேதனிவ் வாறு விளம்பிய கூற்றால்
ஏதமி லுள்ள மெரித்ததை யன்றே.
**விளம்பியமை ஏதமிலுள்ளம் எரித்தது.**

497. கிட்டி யரன்செயல் கேடுசெ யென்னும்
அட்டிடு கின்றதும் அற்புத மாமோ.
**சிவன் மெய் அட்டிடுகின்றது அற்புதமாமோ.**

498. இத்திற மாமல ரேந்தல் இயம்ப
சித்தச வேளுரை செய்தன னம்மா.
**இயம்ப சிவசிவ உரைசெய்தான் மன்மதன்.**

499. ஈட்டுறு பல்பவ மெய்துவ தோர்சொல்
பூட்டுவில் அண்ணல் புகன்றிடு கின்றான்.
**பல்பவ மெய்துவதோர் சொல் கேட்டி பூட்டுவில் அண்ணல் புகன்றல்.**

## வேறு

500. வன்கண் ணருமா சறுகாட் சியர்பால்
என்கண் ணடிகட் கிலையோ அருளே.
**மாசறு காட்சியர்பால் என்கண் அருள் இலையோ.**

501. வன்னப் புவிமங் கையைமா மலர்மேல்
தென்னத் தனைவென் றிசைகொண் டிலனோ.
**கணைகொண்டமர் இசை கொண்டிலனோ.**

502. வெள்ளைக் கமலத் தியைமெய் யுறவும்
பிள்ளைச் சமர்செய் திசைபெற் றிலனோ.
**பிள்ளைச் சமர் செய் இசை.**

503. சீர்பெற் றிடுசெந் திருவைத் திருமால்
ஏர்பெற் றிடுநா விலிருத் திலனோ.
**திரு திருமால் கலை பிரமன் வைத்திலனோ.**

504. தண்ணின் றகுழற் சசியென் றுரைசெய்
கண்ணென் றிடுபல் குறிகண் டிலனோ.
**பல்குறி கண்டிலனோ.**

505. விசையுற் றிடுசெங் கதிர்மே லவர்கீழ்த்
வசையுற் றிடுபான் மைமயக் கிலனோ.
**விசையுற்ற திசையுற்ற இசையுற்ற வசையுற்ற பான்மை.**

506. கதனத் தொடுவந் துகலந் தவர்பால்
புதனைத் தருபான் மைபுணர்த் திலனோ.
**மாமதி சிகன் மாதை உறா புதனைத் தருபான்மை.**

507. முற்றே தின்மறைத் தொகைமூ தறிவால்
குற்றே வல்செயும் படிகூட் டிலனோ.
**ஏதில்மறை மூதறிவால் தற்றேவல் குற்றேவல்**
**செய்யும் படிகூட்டிலனோ.**

508. மறைதே ரும்வசிட் டன்மரீ சிமிக
துறவோர் தமதாற் றல்தொலைத் திலனோ.
**துறவோர் தமதாற்றல் தொலைந்திலனோ.**

509. மன்னான் மரபுற் றிடுமா னவரைப்
என்னா ணைகடந் தவர்யா ருளரே.
**மரபுற்றிடுமானவரை என்னாணை கடந்தவர் யார்.**

510. அறைபெற் றிடுமித் திறமா னவெலாம்
இறைபெற் றிடுசத் தியியற் றிடுமே.
**திறமான வெலாம் இறைபெற்றிடும் சக்தியியற்றிடும்**

511. மாலே முதலா கியவா னவர்தம்
கோலே வினன்வென் றிடல்கூ டுமதோ.
**வென்றிடல் கூடுமோ.**

512. ஐதா கியசீர் கொடவன் முறைசெய்
எய்தா லுமென்வா ளிகளெய் திடுமோ.
**எய்தாலுமென் வாளிகளெய்திடுமோ.**

513. கையும் நகையுங் கதிரார் விழியும்
உய்யுந் திறமும் உளதோ உரையாய்.
**உயிர்கொண்டு உய்யும் திறம் உளதோ உரையீர்.**

514. பற்றோ டிகலற் றபரம் பொருளை
சற்றோ அவனாற் றல்தவிர்த் திடவே.
**பற்றோடிகலற்ற பரம் ஆற்றல் தவிர்த்திடவே.**

515. சூறா வளிவை கியசூ ழலின்வாய்
வீறாய் வினையேன் பொரமே வுவனே.
**சூறாவளி வைகிய சூழலின் ஏனா ஒரு பூளை எதிர்த்திடாது.**

516. ஆறுற் றிடுசெஞ் சடையண் ணலுடன்
ஈறுற் றனரல் லதிருந் துளர்யார்.
**ஈறுந்றனரல் இல்லர் ஈசன்.**

517. இந்நா ரணனா தியர்யா வர்களும்
ஒன்னார் புரமட் டதுணர்ந் திலையோ.
**ஒன்னார் புரம் அட்டது உணர்.**

518. எந்தாய் அருளென் றொரிளங் குமரன்
அத்தாள் கொடுதைத் ததறிந் திலையோ.
**கூற்றுவனைத்தாள் கொடு உதை தாய் அருள்.**

519. முன்னைப் பகல்நீ யுமுருந் தனுமாய்ப்
சென்னித் தலைகொண் டதுதேர் கிலையோ.
**சென்னித்தலை கொண்டது தேர்கிலையோ.**

520. அடன்மே வுசலந் தரனா தியராய்
கெடுமா றுபுணர்த் ததுகேட் டிலையோ.
**அரண் முரணில் கெடும்.**

521. வீடெய் துறுநின் மகன்வேள் விநில
பாடெய் தியபுன் செயல்பார்த் திலையோ.
**வேள்வி நிலம் பாடெய்திய புன்செயல்.**

522. அண்டா தவகந் தையொடா ழியின்வாய்
கொண்டான் அவன்வன் மைகுறிக் கிலையோ.
**விடம் உண்டான் கங்கை வன்மையை ஓர் அணுவில்**
**கொண்டனர்.**

523. தரியா வுளமால் கொடுதன் னிகழும்
பரியா அரனுற் றதுபார்த் திலையோ.
**புலியை உரியா இசைப் போர்வை உடுக்கை அரண்**

524. ஓரார் தனதுண் மையையுள் ளமிசை
தேராய் கொல்பரஞ் சுடர்செய் கையதே.
**உள்ளமிசை கொல் பரஞ்சுடர்.**

525. இறுகின் றகடைப் பகலீ றிலதோர்
அறிகின் றிலையோ அகிலங் களுமே.
**இறுகின்ற கடைப்பகல் இறைநுதல்**
**பொறி பொடிபடும் அகிலங்கள்**

526. இப்பெற் றியனா கியவீ சனையென்
மெய்ப்பற் றிலரிச் செயல்வேண் டுலரே.
**மெய்ப்பற்றிலர் இச் செயல்.**

527. மேனா ளகிலந் தரமெல் லியலா
நானா மயல்செய் வதுநன் றிதுவே.
**தற்பரனை நானா மயல் செய்வது.**

**வேறு**

528. என்னா மதவேள் இசையா மறுத்திடலும்
உன்னா நெடிதே உயிரா வுரைக்கின்றான்.
**மதவேள் இசையா மறுத்திட பிரமன் உரை.**

529. வெண்மை யறிவால் தமைவியக்கும் விண்ணவர்பால்
எண்மை யதுவோ எவர்க்கு மரிதன்றோ.
**வெண்மை அறிவால் எமை இயக்கும்**
**அண்ணல் எண்மையது பொருதுவது**

530. அன்ன பரிசே யெனினும் அடைந்தோர்தம்
முன்னின் இதற்கு முதற்கா ரணம்நீகாண்.
**இறையருளால் முதற்காரணம் மன்மதன் நீ.**

531. எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே
செல்லாய் உனது செயலுமவன் செய்கையதே.
**எல்லாம் இறைவன் செயல்.**

532. செம்மாந்து தற்புகழுந் தேவர்குழு வும்மருள
நம்மாலும் முற்றுஞ் சிலவென்கை நாணன்றோ.
**நம்மாலும் முற்றும்.**

533. பாடு திகழ்பாவை பல்லுயிரு மல்லனவும்
ஏட இதனிலைமை இந்நாளு மோர்ந்திலையோ.
**ஓர்ந்தி அருவுருவாய் ஆடல்புரி பரன்**

534. கையம்பு பூட்டிக் கருப்புச் சிலைகோட்டி
மெய்யங் கதற்கேது மேனாளே கண்டனம்யாம்.
**கையம்பு மெய்யங்கதற்கு மேனாள்.**

535. ஈங்கிதுவு மன்றி யெவரேனுந் தம்மடங்கா
தாங்கல் உலக நடைதனக்குத் தக்கதுவோ.
**உதவி உலக நடை.**

536. என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினும்
பன்னாள் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.
**யாதொருவன் யார்க்கெனினும் உதவி.**

537. ஏவ ரெனினும் இடருற் றனராகி
பாவம் அலது பழியும் ஒழியாதே.
**ஏவரெனினும் இடரில் உதவி ஆவி விடினும் அறனே.**

538. உய்கை பொருளா வொருவர்க்கு மோருதவி
பொய்கை மலர்ந்தகொட்டி போலும் பொலிந்துளதே.
**உய்கை பொருளா வொருவர்க்கு உதவி.**

539. அந்நா ரணனோ டமர்முற் றியமுனியை
தன்னா ருயிர்விட்ட தன்மைதனைக் கேட்டிலையோ.
**ததீசி தன்னாருயிர் விட்ட ஈகை.**

540. மேலொன் றுளதோ விளம்ப எவரெவர்க்கும்
சீலந் தனைநீ சிறிதுந் தெளிந்திலையோ.
**அமுதளித்த சீலம்.**

541. தேக்குஞ் சலதியிடைத் தீப்போ லெழுந்தவிடம்
காக்கும் படிக்குக் கறுத்தசெயல் கண்டிலையோ.
**காக்கும் படிக்குக் கறுத்த செயல்.**

542. ஆரா யினுமொருவர் அன்பிற் றலைப்பட்டுப்
பாரார் புகழே பயனென்று கொள்வாரே.
**பாரார் புகழை அன்பிற்றலைப்பட்டு உதவி.**

543. சூரந் தனில்வலிசேர் சூரபன்மன் ஏவலின்யாம்
ஓரைம் படைசெலுத்த உன்னையாம் வேண்டினமே.
**யாம் வேண்டினம் ஓரைம் படை.**

544. ஆதலினால் எங்கள் அலக்கணகற் றும்பொருட்டுச்
போதி யினிமாறு புகலே லெனவுரைத்தான்.
**அலக்கண் அகல போதி மாறுபுகலேல்.**

**வேறு**

545. பங்க யப்பொ குட்டி ருந்த பகவன் ஈது புகறலும்
இங்கெ னக்க டுத்த தொன்றி யம்பு செய்வல் என்றனன்.
**அடுத்த தொன்றியம்பு செய்வல் எனன்.**

546. என்னும் வேலை அமர ரோடி ருந்த வேதன் முனிவுறா
துன்னு சாப மிடுதும் யாது துணிவு சொல்லு கென்றனன்.
**துன்று சாபம் யாது துணிவுசொல்.**

547. வெய்ய சாப மிடுது மென்று வெகுளி யால்மொ ழிந்தகேட்டு
வைய கம்ப டைத்த அண்ணல் வதன நோக்கி யுரைசெய்வான்.
**சாப வெகுளியல் பிரமனை நோக்கி மன்மதன் உரை.**

548. கேளி தொன்று ரைப்பல் வேத கேடு சூழும் நினதுவாய்
மாளி னுஞ்சி றந்த தம்ம மற்றும் உய்ய லாகுமே.
**கானகண்டன் முன் மாளின் உத்தமம்.**

549. செற்ற நீர்மை கொள்ளல் ஐய செஞ்ச டைப்பி ரானிடத்து
உற்ற போதன் மகிழ்சி றந்து ளங்க ளித்து மொழிகுவான்.
**பிரானிடத்து அமரிட ஏகமதன் கூற பிரமன் மனக்களிப்பு.**

550. பணிந்த சொல்ல னாகி நாம்ப ணித்த வாபு ரிந்திட
உணர்ந்து கூறி மார வேளை ஓவி லன்பொ டேவினான்.
**உணர்ந்து கூறி மாரவேளை ஏவினான் பிரமன்.**

551. ஏவு காலை மதனை வேள்வி யிறைதெ ரிந்து மைந்தயான்
மேவு மாறு புரிகெ னாவி ரைந்து செல்ல நல்கினான்.
**உமை மடந்ததனையரன் மேவுமாறு புரி.**

552. நல்க லுங்க ரங்கள் கூப்பி நான்மு கத்தன் உலகொரீஇ
பில்கு வாளி யிட்ட தூணி பின்னி யாத்தி றுக்கினான்
**நல்கலும் பில்கு வாளியிட்ட தூணி இறுக்கினான்.**

553. கயக்க ணின்ற பூவின் மிக்க காம காண்டங் கன்னல்வில்
வயக்க டுங்கண் வாள மொன்று மாம ருங்கு வைத்தரோ.
**காம காண்டங் கன்னல்வில் வாளமருங்கு வைத்தார்.**

554. கோகி லங்க ளான வுங்கு ழாங்கொள் வேலை யானவுங்
மாக வும்ப ருலவ வெண்ம திக்கு டைநி ழற்றவே
**குயில்களும் சமுத்திரங்களும் இசைக்க வெண்மதி நிழல்.**

555. பொருவில் கிள்ளை யென்னு மாக்கள் பூண்ட தென்றல் வையமேல்
பரமன் வைகு கயிலை யம்ப ருப்ப தத்தை யணுகினான்.
**வேள் தென்றல் வைய பரமன் வைகும் கயிலை அணுகினான்.**

556. கயிலை கண்டு தொழுது தேரி ழிந்து காம வேள்தனக்கு
துயிலு உணர்த்தும் மான்ள னத்து ணிந்து போதல் மேயினான்.
**கயிலைதொழுத வேள் வல்லியத்தினைத் துயில் உணர்த்தும் மான்.**

557. கூறு லாவு மதிமி லைந்த குழகன் வைகு கயிலைமேல்
ஊறி லாதி ருந்த காம முன்னு வித்தல் முன்னினான்.
**குழகன் வைகு கயிலை ஏறி மாறில் ஏவு பூட்டி ஊறிலாத காம உன்னுவித்தல் முன்னினான்.**

558. பொருவில் காம னின்ன தன்மை புந்தி கொண்டு மற்றவண்
அருளி னோடி ருந்த நந்தி யடிகள் அன்ன கண்டரோ.
**பொருவில் காமனின்ன தன்மை நந்தியடிகள் அன்னகண்டு.**

559. கொம்மெ னச்சி னம்பு ரிந்து கொடிய பூசல் மதனனார்
வெம்மை யிற்செ லாது மாரன் விசிகம் விண்ணின் நின்றவே
**மாரன் விசிகம் வெம்மையில் செலாது விண்ணில் நின்றது.**

560. நிற்ற லோடு மவ்வி யற்கை நின்று நோக்கி நெடியவேள்
உற்று நோக்கி நெடிது யிர்த்து ளந்து ளங்கி விம்மினான்.
**நிற்றலோடு வேள் உற்றுநோக்கி விம்மினான்.**

561. விம்மி நந்தி தேவர் முன்வி ரைந்து சென்று தாழ்ந்தெழூஉச்
மெய்ம்மை யாவு ணர்த்த லும்வி னாவி ஈது ளங்கொள்வான்.
**தாழி தெழூஉ மெய்மை உணர்த்த நந்தி உளங்கொள்வான்.**

562. வேத னாதி யான தேவர் விழும நோய கன்றிடும்
சாத லெய்து வான்வ ரிந்த டேலெ னாவி யம்பினான்.
**வேள் சாதலெய்து வான்வரின் தடேல்.**

563. புன்மை யாம்ப சுத்த டிந்து புரையில் வேள்வி யாற்றியே
பின்மு றைக்கண் நல்க எம்பி ரானி னைந்த னன்கொலாம்.
**முறைக்கண் நல்க எம்பிரான் நினைத்தனன்.**

564. ஆகை யாலி தருள தேயி வன்வ ரத்தும் ஆணையென்
ஏக நாய கன்றன் முன்ன ரேகல் வேண்டு மோவென்றான்.
**அருள் ஆணை ஓகையால் உணர்ந்து நந்தி ஏகநாயகன்
தன்முன் ஏகல் வேண்டுமோ என்றான்.**

565. நந்தி தேவன் இனைய வாறு நவில வேஉ ணர்ந்துவேள்
வந்த னன்ன தற்கி யைந்த வகைமை நல்கு வாயென.
**நந்தி நவில உணர்ந்துவேள் இயைந்த வகைமை நல்கு எனல்.**

566. இகலு மன்பு மிறையு யின்றி யெவ்வு யிர்க்கு முள்ளதோர்
மிகுதி கொண்ட மேலை வாய்தல் மேவி யேகு கென்றனன்.
**கருணைகூர் சயம்பு முன் மேலை வாயிலில் ஏகு.**

567. என்ற லுங்க ரங்கு வித்தி றைஞ்சி மார னேர்புறீஇ
குன்ற மென்ன மோன மோடி ருந்த வெல்லை குறுகினான்.
**நீற்றமுற் குன்ற மென்ன மோன தேவதேவன் எல்லை குறுகினான்.**

### வேறு

568. ஒருதனிச் சிம்புள் வேந்தன் உறைந்தது கண்ட சீய
பருவர லுழந்து கொண்ட படையொடுங் கடிதில் வீழ்ந்தான்.
**அமலன்முன் கடிதில் வீழ்ந்தகள் வேள்வியக்குருளை
முன் சிம்புள் வேந்தன் போல.**

569. எழுதரு மதனா மேகம் இறைவனைக் கண்டே யஞ்சி
தொழின்முறை புதரங் காட்டத் துளங்கிவீழ்ந் திட்ட தன்றே.
**இறைவனைக் கண்டு அஞ்சி விழியிருள்மூட வீழ்ந்திட்டான்.**

570. அஞ்சிவீழ் குற்ற மாரன் அறிவிலா தவச மாக
நெஞ்சமே லுணர்ச்சி கூட வினையவை நினைந்து நைவான்.
**குமாரன் அறிவிலா அவசமாக ஏரிதேவி தேற்ற**
**இளையவை நினைந்து நைவான்.**

571. முறுவலின் எயின்மூன் றட்ட முதல்வனைப் பொருதி யென்றே
இறுதிவந் தணுகிற் றாகும் இதற்குமோ ரைய முண்டோ.
**முதல்வனைப் பொருதி இறுதி அணுகிற்கு ஐயமில்.**

572. எண்டகு குணத்தின் மேலாம் இறையவன் இருந்த வண்ணம்
அண்டரும் அயனும் யாரு மறிகிலர் போலு மன்றே.
**இறைவன் கண்டலும் ஆவி காண்கிலேன் அண்டரும் அயனும்**
**அறிகிலார்.**

573. தாக்கினால் வலிபெற் றுள்ள மருத்தின்முன் தனித்த தீபம்
நோக்கினால் இனிச்சில் போதின் நுண்பொடி யாவன் போலாம்.
**தனித்த தீபம் போல் நோக்கினால் நுண்பொடியாவன்.**

574. ஏமுற வுலக மெல்லா மீறுசெய் முதல்வன் றன்னை
தாமரை முதல்வற் கேனுந் தள்ளருந் தகைய தன்றோ.
**ஏழுறவுலகமெல்லாம் ஈறுசெய் முதல்வன் தள்ளருந் தகையது**

575. ஈங்கிவை யமலன் சூழ்ச்சி யாவதோ முடிவ தோரேன்
பாங்குற நின்று மேலே பட்டவா படுக வென்றான்.
**அமலன் சூழ்ச்சி பட்டுவா படுக.**

576. இனையன பலவு முன்னி யெழுந்துமா மதவே ளிட்ட
புனிதன தொருசார் போகிப் பொருவகை முயன்று நின்றான்.
**வேள் தனுவில் பொருவகை முயன்று**

577. மாரவே ளீண்டு நிற்ப மனோவதி நகரின் மேய
போரிய லுணர்வான் அங்கட் போதரல் வேண்டு மென்றான்.
**போரியல் உணர்வான் போதரல்.**

578. சதமகன் இனைய கூறத் தண்மலர்க் கடவு ணேரா
மதனியல் தெரிந்து முக்கண் வள்ளலை வழுத்தி நின்றார்.
**பிரமன் மதனியல் தெரிந்து முக்கண் வள்ளலை வழுத்தி நின்றான்.**

579. எறிதரு கணிச்சிச் செங்கை யீசன்மே லிலக்க நாடும்
நறுமலர் வாளி ஐந்து நாதன்மேற் செல்ல விட்டான்.
**நறுமலர் வாளி ஐந்து நாதன் மேல் செல்லல்.**

580. விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.
**விட்டது பட்டது கட்டழல் சுட்டது கடிதே காமன்**

581. ஆலையஞ் சிலைவேள் ஆகம் அழல்படக் கயிலை யின்கண்
வேலையின் நடுவு தீய விடமெழுந் தனைய தம்மா.
**வேலைவிடம் அனையவேள் ஆகம் அழல் கயிலை**

582. செறிந்ததீப் புகையின் மாலை செல்லலுங் குணபால் வாய்தல்
அறிந்தரோ உடைந்தார்க் கோதி யொருசெய லறைய லுற்றான்.
**செறிந்த தீப்புகை மதனன் இறந்தமை நந்தி அடைந்தார்க்கு ஓதினான்.**

583. நுண்ணிய வுணர்வின் மிக்கீர் நுமக்கிது புகல்வன் எங்கோன்
துண்ணென ஈண்டு வந்த செயற்கையே சுட்ட போலும்.
**துண்ணென ஈண்டு வந்த செயற்கையே சுட்டது**

584. இன்னினி மகிழ்நன் றுஞ்சு மியற்கையை யிரதி நாடி
முன்னவன் அணுக்கட் காய முறைபுரி யருளா லென்றான்.
**முன்னவன் அணுக்கட் காயமுறை புரிய அருள்**

585. ஐந்தொகை யாற்றின் மாடே யமலனை நினைந்து நோற்ற
புந்திகொ ளருளின் செய்கை போற்றெடுத் தனரா யுற்றார்.
**புந்தி கொளருளீன் செய்கை**

586. வாவலங் கிள்ளை மான்றேர் மதன்புரி வினையா லன்னான்
மூவரை விடுத்துத் தொன்னாள் முப்புரம் பொடித்த முன்னோன்.
**மதன்புரி வினையாலன்னான் தேவியை முடிக்கு மாற்றல் செய்திலன்**

587. கண்ணழல் சுடுத லோடுங் காமவேள் யாக்கை முற்றும்
எண்ணிநின் றியற்றும் எங்கோற் கினையதோ அரிது மாதோ.
**கண்ணழல் சுடுதலோடும் பகவன் தொல்லை அமைதி**

588. பாடுறு கணவன் செய்கை பார்த்தலு மிரதி யுள்ளம்
வீடினள் இவளு மென்ன விரைந்துகீழ்த் தலத்தின் வீழ்ந்தாள்.
**வீடினள் விரைந்து கீழ்த் தலத்தின் வீழ்ந்தாள்**

589. சுரிதரு குடிளை யாற்றிற் சுழித்தலைப் பட்ட மான்போல்
வருதலும் மறித்துச் செங்கை வயிறலைத் திரங்க லுற்றாள்.
**செங்கை வயிற்றலைத் திரங்கலுற்றாள்**

## வேறு

590. செம்பதுமை திருக்குமரா தமியேனுக் காருயிரே திருமால் மைந்தா
உம்பர்கடம் விழியெல்லா முறங்கிற்றோ அயனாரு
முவப்புற் றாரோ.
**சிவன் விழியால் வெந்துடல் விழியெலாம் உறங்கிற்று**

591. முன்னாளிற் புரமூன்று மட்டவன்மேற் பொரப்போதன்
முறையோ வென்று
என்னாவி யாகியநீ யிறந்தபின்னும் யான்றனியே யிருப்ப தேயோ.
**பொரப்போதன் முறையே என்னாவி யாகிநீ**

592. மாறாகப் பரமன்விழி நின்னாற்ற லிலதாக மற்றுன் மெய்யும்
கூறாயோ வறிந்திருந்தாய் என்கணவா யான்செய்த
குறையுண் டோதான்.
**பரமன் விழிமாறு கூறாயே என் கணவா**

593. உம்பர்கடம் பாலேயோ இந்திரனார் பாலேயோ வுன்னை யுய்த்த
வெம்பொடியாய் நீயிறந்த இப்பழிதான் எவர்பாலின்
மேவிற் றையோ.
**வெம்பொடியாய் நீ இறந்த பழிஎவர்**

594. வில்லான்முப் புரமெரித்த பரம்பொருள்யோ கந்தவிர்க்க
வேண்டில் விண்ணோர்
பொல்லாத போர்க்குநன்றி செய்வது தம் முயிர்போகும்
பொருட்டே யன்றோ.
**பொல்லாதபோர்க்கு நன்றிசெய்வது தம் உயிர் போகும்**
**பொருட்டே**

595. என்னபவஞ் செய்தேனோ என்போல்வார் தமக்கென்ன இடர்செய் தேனோ
வன்னிவிழி யாவுடைய பெருமானை நோவதற்கு வழக்கொன் றுண்டோ.
**என்னபவம் நோவதற்கு வழக்குண்டோ**

596. பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகுந் திருமுகத்துப் பொலிவு காணேன்
என்செய்வேன் என்கணவா என்னையொழித் தெவ்விடத்தே யிருக்கின்றாயே.
**என்செய்வேன் என் கணவா**

597. அந்நாளி லழற்கடவுள் கரியாக வானவரோ டயன்மால் காண
மன்னாவோ மன்னாவோ எனைத்தனியே விட்டேகல் வழக்கோ சொல்லாய்.
**எனைத்தனியே விட்டேகல் வழக்கோ**

598. போவென்று வரவிட்ட தேவரெலாம் பொடியாகிப் போனவுன்னை
வேவென்று நின்சிரத்தில் விதித்திருந்தால் அவரையெலாம் வெறுக்க லாமோ.
**போவாவே என்று**

599. நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப் புரந்தரனை நின்னைத் தந்த
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற பதங்கத்தின் செயலி தன்றோ.
**தீயழலின் விளக்கத்திற் படும் பதங்கத்தின் செயல்**

600. தண்பனிநீர்ச் சிவிறிகொண்டு விளையாடி மலர்கொய்து தண்கா நண்ணி
கண்படைகொண் டமர்வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையா யிற்றே.
**வாழ்வும் பொய்கையாகியதே நனவும் கனவும்**

601. மருகென்றே அவமதித்த தக்கனார் வேள்விசெற்ற வள்ள றன்னைப்
வருகின்றேன் வருகின்றேன் என்னுயிரே யெனப்புலம்பி வருந்கின்றாள்.
**ஆறாத பெரும் துயரால் எரிகின்றேன் வருகின்றேன்**

## 05. மோனநீங்குபடலம்

602. இரதி இன்னணம் வருந்திடத் தொன்மைபோல் எங்கோமான்
சுருதி நன்றுணர் திசைமுகன் முதலிய சுரரெல்லாம்.
**தொன்மைபோல் மோனம் இருக்க சுருதி நன்றுணர்**
**சுரமெலாம் கண்டனர் கலங்கினர்**

603. சிதலை மெய்த்தொகை வன்மிகத் தெழுந்தெனச் செலக்கண்ணிர்
மதலை யிற்றுழி நாய்கர்போல் துயர்க்கடல் மறிகின்றார்.
**துயர்கடல் மறி மதலை இற்றுழி நாய்கள் போல்**

604. மையு லாவரு கறைமிடற் றிறையவன் மருங்காக
ஐய கோவினிச் செய்வதென் னோவெனா அயர்கின்றார்.
**ஐயகோ அயர்கின்றார்**

605. பூத்த ருங்கணை மாரனை விழியினாற் பொடிசெய்த
ஏத்தல் செய்வதே கடனென யாவரு மிசைவுற்றார்.
**ஆத்தன் ஏத்தல் செய்வதே கடவுள் இசைவு**

606. எகின மூர்பவன் முதலிய கடவுள ரெல்லோரும்
தொகுதி யோடெம திறைவனை ஒல்லெனத் துதிக்கின்றார்.
**இறைவனை ஒல்லெனத் துதிக்கின்றார்.**

607. நஞ்ச ருந்தியும் நதியினைச் சூடியும் நடுநெற்றித்
தஞ்ச மாருளர் தாதையே யல்லது தனயர்க்கே.
**தஞ்சம் யாருளர் தாதையே**

608. கோளில் அன்பர்கள் இழுக்கிய புரியினுங் குணனாக்கொண்டு
மாளு கின்றதோ சிறிதுமெம் முறுதுயர் மதியாயோ.
**துயர் மதியாயோ**

609. தைய லைப்பிரீஇ யோகியல் காட்டிடு தனிச்செய்கை
உய்வ தெப்படி இன்னுநீ புறக்கணித் துறுவாயேல்.
**யோகி இயல் காட்டிட பல யுகங்கள் கழிந்தன**

610. நோற்று மாயவன் முதலினோர் யாவரும் நுனதாளை
ஆற்று கின்றதோர் தவநிலை எம்பொருட் டளவன்றோ.
**ஆற்றுகின்ற தவநிலை எம்பொருட்டே**

611. எய்த்தி டுஞ்சிறி யேங்களைத் தவறுகூ ரிடர்வாளால்
சித்த மென்னுனக் கன்னவா றொன்றினைச் செய்வாயே.
**உன் சித்தம் செய்வாயே**

612. கங்கை வேணியாய் அம்மையை மணந்தெமைக் கடிகொள்ள
இங்கி யாந்தளர் கின்றதே இனிச்சிறி திரங்காயோ.
**சிறிது இரங்காயோ**

613. ஆர ழற்சின வயப்புலி முதலிய அடன்மாவின்
சூர பன்மனைத் தொலைவுசெய் தெந்துயர் தொலைக்கென்றார்.
**தொலைவு செய்தெந்துயர் தொலை**

614. முரற்கொள் வண்டுசூழ் சததளப் பண்ணவன் முதலோர்கள்
இரக்க மாய்அரு ணந்தியை நினைந்தனன் இறையோனே.
**இறையோன் அருணந்தியை நினைந்தனன்**

615. எந்தை நந்தியை உன்னலு மவனறிந் திறைவன்முன்
தந்திடென்றனன் நன்றென முதற்கடை தனில்வந்தான்.
**நந்தியை உன்னலும் கடிதேம்முன் தந்திடு**

616. கணங்கள் காப்புறு முதற்கடை குறுகலுங் கண்டேத்தி
அணங்கு கொள்ளலீர் வம்மினோ நீவிரென் றருள்செய்தான்.
**அணங்கு கொள்ளலீர் வம்மின் என்று அருள் எம்பிரான்**

617. சீர்த்த நந்திவந் திவ்வகை யுரைத்தசொற் செவிதோறும்
ஆர்த்து நாதனைப் பாடினர் ஆடினர் அலமந்தார்.
**நாதனைப் பாடி ஆட அலமந்தார்**

618. பெரிது நோயுழந் தருள்பவர் இன்றியே பெருங்காலம்
வருதி ரென்றசொற் பங்கயன் முதலிய வானோர்க்கே.
**அருள்பவர் இன்றியே பெருங்காலம் அரன் அருள்வருதி**

619. செய்ய லாவதொன் றின்றியே மகிழ்ச்சியிற் றிளைத்தோராய்
உய்ய வெஞ்சம னுடைதரப் புவியினி லுதிக்கின்றோன்.
**இல்லறம் துறவறம் உய்ய புவியில் அருணந்தி**

**வேறு**

620. வண்டுளர் கமலமேல் மதலை வாசவன்
கண்டனர் வழுத்தினர் கரங்கள் கூப்பினார்.
**பரமனைக் கண்களாற் கண்டனர் வழுத்தினர் கூப்பினர்**

621. விண்மதி படர்சடை வேத கீதனை
கண்மல ரதனொடு கழல்கள் சேரவே.
**அண்மினர் வணங்கினர் கண்மலரதனொடு கழல்கள் சேரவே**

622. வணங்கிய பண்ணவர் வல்ல வல்லவா
அணங்குறு நிலைமையும் அறைமி னென்னவே.
**உணங்கிய சிந்தையீர் உமது வேண்டலும்**
**அணங்குறு நிலைமையும் அறையும்**

623. பேருக மளப்பில பெயர்த லின்றியே
தாருளர் அடியரேம் அலக்கண் நீக்குவார்.
**அளப்பில பேர் உகம் சூரன்துயர் கடவுளே நீக்கு**

624. ஆயவெஞ் சூரன தாவி நீக்கவோர்
மாயையின் முதல்வியை மணத்தல் வேண்டுநீ
**மாயையின் முதல்வியை மணத்தல் வேண்டும்**

625. என்றிவை கூறியே யாரு மெம்பிரான்
நன்றென இசைந்திவை நவிறல் மேயினான்.
**மெம்பிரான் நன்றென இசைந்து நவிறல்**

626. புங்கவர் யாவரும் பொருமல் கொள்ளலீர்
இங்கினி யாவரு மேகு கென்றனன்.
**பொருமல் கொள்ளலீர் வருத்தம் நீக்குவம் ஏகுக**

627. முழுதுணர் பரனிது மொழியப் போதனும்
விழுமிய மேருவின் மிசைக்கண் ஏகினார்.
**பரனிது மொழிய யாவரும் தொழுதனர் விடைகொடு ஏகினர்**

**வேறு**

628. அன்னார் விடைகொண் டேகியபின் அதுகண் டிரதி யெம்பெருமான்
உன்னால் முடிந்தான் அவன்பிழையை உளங்கொ ளாமல்
அருளென்றாள்.
**எம்பெருமான் முன்னால் இரதி இறைஞ்சிப் போற்றி அருள் என்றாள்**

**வேறு**

629. இனைய கூறினள் இரதிவேண் டிடுதலும் இணைதீர்ந்த
உனது கேள்வனை அளிக்குதும் போதியென் றுரைசெய்தான்.
**இணைதீர்ந்த புனிதன் நல்லருள் கேள்வனை அளிக்கும் போதி**

630. தன்னை யேதனக் கொப்பவன் இரதியைத் தளரேலென்
என்ன மாமுகில் வரவுபார்த் துறைதரு மயிலேபோல்.
**தளரேலென் புடையற்றான் இமயம் மயில் அன்ன**

**வேறு**

631. தமியளாய் இரதிபோய்த் தானங் குற்றிட
உமைதனை மணப்பவும் முதல்வன் உன்னினான்.
**உமைதனை மணப்பவும் முதல்வன் உன்னினான்**

632. மனந்தனி லித்திறம் மதித்து வானதி
இனந்தரு முனிவரை இனிது நோக்கினான்.
**இனந்தரு முனிவரை இனிது நோக்கினான்**

633. நன்னல மைந்தர்காள் ஞான போதகம்
உன்னுத லேயென உணர வோதினான்.
**சொன்னடையல் ஞானபோதம் உணர ஓதினான்**

634. கட்படும் இமைத்துணை காட்சி யோகினை
தெட்பம தடைந்தனர் விதியின் சேயினோர்.
**இமைத்துணை காட்சியோகினை தெட்பமடைந்தனர்**

635. அந்தநல் வேலையில் ஆற்றும் நோன்பினோர்
உய்ந்தனம் யாமென உரைத்துப் போற்றினார்.
**நோன்பினோர் உய்ந்தனம்**

636. போற்றலு மத்துணைப் புனிதன் இன்னினி
சாற்றினன் விடுத்தனன் தவத்தி னோர்தமை.
**புனிதன் இன்னினி நிட்டையில் வீடுறீஇ சாற்றி விடுத்தனன்**

## 06. தவங்காண்படலம்

637. தீதறு முனிமைந்தர் செல்லலும் அதுபோழ்தின்
சோதனை புரிவாரின் துண்ணென எழலுற்றான்.
**சோதனை புரிவாரின் துண்ணென எழல்**

638. செறிதுவ ருடையாளன் சிகையினன் அணிநீற்றின்
மறைபயில் முதியோர்போல் வடிவிது கொடுபோனான்.
**மறைபயில் முதியோர் போல் சிவ வடிவு**

639. போயினன் இமையத்திற் புவனமொ டுயிர்நல்கும்
ஆயவர் பலர்வந்தே அடிதொழு துரைசெய்வார்.
**போயினன் அடிதொழுது உரை செய்வார்**

640. தளர்நடை முதியீர்இத் தடவரை யிடைசேறல்
உளமுட னிவண்வந்தேன் உவகையி னுடனென்றான்.
**முதியீர் தடவரை உளமுடன் வந்தேன் உவகையுடன் செப்பல்**

641. என்றலு மினிதென்றே இமையவ ளிடைசில்லோர்
நின்றதொர் பெரியோனை நேரிழை முனமுய்த்தார்.
**பெரியோனை நேரிழை முனம் உய்த்தார்**

642. உய்த்தலும் இவரெந்தைக் குறுபரி வினரென்றே
நித்தனை உறைவித்தாள் நிமலையும் அயனின்றாள்.
**நித்தனை உறைவித்து நிமலை அயனின்றாள்**

643. அப்பொழு துமைதன்னை யாதர வொடுபாரா
எப்பொருள் விழைவுற்றாய் எண்ணிய துரையென்றான்.
**எம்பொருள் விழைவுற்றாய் எண்ணியது உரை**

**வேறு**

644. முடிவி லானிவை யுரைத்தலும் விசயையை முகநோக்கி
அடிய னேற்கிது பணித்தன ளெனஅறிந் தவள்சொல்வாள்.
**முடிவிலான் உரைத்தலும் விசயை சொல்வாள்**

645. மன்னு யிர்க்குயி ராகிய கண்ணுதல் மணஞ்செய்து
முன்ன வர்க்குமுன் னானவன் நகைத்திவை மொழிகின்றான்.
**முன்னவர்க்கு முன்னானவன் நகைத்து மொழி**

646. புவிய ளித்தருள் முதல்வரும் நாடரும் புனிதன்றான்
தவமி யற்றினள் எளியனோ சங்கரன் றனக்கம்மா.
**எளியனோ சங்கரன் தனக்கு அம்மா**

647. அல்லல் பெற்றிட நோற்றிடு பகுதியால் ஆம்பாலொன்று
ஒல்லை இத்தவம் விடுவதே கடனினி உமைக்கென்றான்.
**ஒல்லை இத்தவம் விடுவதே உமைக்குக் கடனினி**

648. இந்த வாசகங் கேட்டலு மெம்பிராற் கிவரன்பர்
நொந்து யிர்த்துநாண் நீக்கியே பொறாதுமை நுவல்கின்றாள்.
**நாண் நீக்கியே பொறாது உமை நுவல்**

649. முடிவிலாதுறை பகவனென் வேட்கையை முடியாது
நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீயென்றாள்.
**பகவனென் வேட்கை முடியாது பித்தனோ நீ எனல்**

650. ஈட்டு மாருயிர்த் தொகையெலா மளித்தவள் இவைகூற
கேட்டி லாய்கொலா முணர்த்துவன் அஃதெனக் கிளக்கின்றான்.
**பிஞ்ஞகன் வளத்தியல் உணர்த்துவன் அஃது**

651. ஆடை தோல்விடை யேறுவ தணிகல மரவென்பு
காட தேநடம் புரியிடங் கண்ணுதற் கடவுட்கே.
**கண்ணுதற் கடவுள் காடதே நடம்**

652. வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர் வியன்கொன்றை
ஏந்து கின்றது பாரிடஞ் சூழ்படை இறையோற்கே.
**வேய்ந்து ஏந்து சாந்தம் வெண்பொடி இறை**

653. அன்னை தாதைகேள் வடிவொடு குணங்களி லனையானு
மன்னன் மாமகட் கியைவதே இத்துணை வழக்கென்றான்.
**இதுணை வழக்கு இயைவதே**

**வேறு**

654. புரங்கண்மூன் றினையு மட்ட புங்கவன் இனைய கூற
இரங்கிவெஞ் சினத்த ளாகி இடருழந் தினைய சொல்வாள்.
**புங்கவன் கூற மடமயில் இனைய சொல்வாள்**

655. கேட்டியால் அந்தணாள கேடிலா வெம்பி ரான்றன்
வேட்டுவன் இயல்போல் மேலோன் வேடநீ கொண்ட தன்மை.
**நீ கொண்ட தன்மை வேட்டுவ வேடம்**

656. நேசமி லாது தக்கன் நிமலனை யிழித்து நின்போற்
ஆசறு மறைக ளேது மாய்ந்திலை போலு மன்றே.
**நிமலனை இழித்தது ஆசறு மறைகளேதும் ஆய்ந்நிலை போலும்**

657. முறைபடு சுருதி யெல்லா மொழியினும் அதுவே சார்வா
மறையவர் பெற்ற சாபம் நின்னையும் மயக்குறாதோ.
**முறைபடு சுருதியெலா மொழி**

658. தாதையாய்த் தம்மை நல்கித் தந்தொழிற் குரிய னாகி
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதென் நின்னை யானே.
**நின்னை வெறுப்பதென்**

659. ஆயினும் மறையோர் தம்மி னருமறை முறையே வேடம்
தீயவ ருனைப்போ லில்லை அவுணர்தந் திறத்து மாதோ.
**அவுணர் தந்திறத்து தீயவர் வேடம்**

660. வேண்டுதல் வேண்டி டாமை யில்லதோர் விமலன் றன்னை
ஆண்டகை யியற்கை யெல்லா மார்கொலோ அறிய கிற்பார்.
**வேண்டுதல் வேண்டாமை யில்லதோர் விமலன்**

661. போதனே முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்த
பேதைநீ யிகழ்ச்சி யேபோற் பேசிய தன்மை யெல்லாம்.
**பேதை இகழ்ச்சி போல் பேசிய தன்மை**

662. இம்முறை மறைக ளாதி இசைத்தன இனைய வெல்லாம்
பொய்ம்மறை வேடத் தோடும் போதிநீ புறத்தி லென்றாள்.
**பொய்மறை போதி நீ**

663. அறத்தினைப் புரிவாள் இவ்வா றறைதலும் அணங்கே ஈங்குன்
மறைச்சடங் கியற்றி நின்னை வரைந்திடற் காகு மென்றான்.
**மறைச்சடங்கியற்றி நின்னை வரைந்திடல்**

664. வஞ்சக முதல்வன் சொற்ற வாசகம் இறைவி கேளா
பஞ்சடி சேப்ப ஆண்டோர் பாங்கரிற் படர்த லுற்றாள்.
**வாசகம் இறைவி கேளா பாங்கரிற் படர்த லுற்றாள்**

665. படர்ந்தனள் போத லோடும் பனிபடு மிமையம் வைகும்
தொடர்ந்துபல் கணங்கள் போற்றத் தோன்றினன்
றொலைவி லாதோன்.
**தொலைவிலா தோன் விடைமேல் தோன்றினான்**

666. தொலைவறு பகவன் வான்மீத் தோன்றலுந் துளங்கி நாணி
புலனிலாச் சிறியேன் நின்னை யிகழ்ந்தவா பொறுத்தி யென்றாள்.
**பகவன் வான்மீத் தோன்றலும் புலனிலாச் சிறியேன் பொறுத்தி என்றாள்**

667. நற்றவ மடந்தை கேண்மோ நம்மிடத் தன்பால் நீமுன்
மற்றினி வருந்தல் நாளை மணஞ்செய வருது மென்றான்.
**நற்றவ மடந்தை கேண்மே நாளை மணஞ்செய வருது**

668. சிறந்தநின் வதுவை முற்றச் செல்லுது மென்று தொல்லோன்
உறைந்தனள் இதனை வேந்தற் குரைத்திடச் சிலவர் போனார்.
**தொல்லோன் வதுவை முற்றச் சொல்லுது**

669. அண்ணல்வந் தருளிச் செய்கை அரசனுக் குரைத்த லோடும்
கண்ணுத லிறைவன் அங்கட் செய்தன கழற லுற்றேன்.
**அண்ணல் அருள் உமை நலங்கொள் தன்னகர்**

## 07. மணம்பேசுபடலம்

670. பொருடரு மலைக்கொடி புரியும் நோன்புகண்
இருடிகள் தங்களை இதயத் துன்னினான்.
**நோன்புகண் இருடிகளை இதயத் துன்னினான்**

671. நினைதலுங் கண்ணுதல் நிமல னேழ்பெரு
அனையனை இறைஞ்சிநின் றறைதல் மேயினார்.
**ஏழ்பெரு முனிவரும் இறைஞ்சி அறைதல் மேயினார்**

672. பங்கயன் மான்முதற் பகரும் பண்ணவர்
அங்கவர் தவத்தினு மதிகம் போலுமால்.
**பங்கயன் மான் முதல் பண்ணவர் தவத்தினும் மேல் யாம்**

673. எந்தையெம் பெருமநீ யெம்மை வம்மென
சிந்தினம் இனியொரு தீதுண் டாகுமோ.
**வம்மென உய்ந்தனம் தீபவம் சிந்தினம்**

674. ஒருதலை யைந்தொழி லுலப்பு றாவகை
அருளுதி யென்றனர் ஆற்றும் நோன்பினோர்.
**செய்பணி அருளுதி**

**வேறு**

675. அமலனம் முனிவர் மாற்றங் கேட்டலு மவரை நோக்கி
நமதுமுன் வம்மி னென்னா நன்றருள் புரிந்தா னன்றே.
**உமைதனை வதுவை அமலனன் நன்றருள்**

676. நாயக னருளக் கேளா நன்றென இறைஞ்சி யேகி
நேயமொ டருச்சித் தேத்தி நின்றிது புகலு கின்றான்.
**முனிவர் இறைஞ்சி ஏக நேயமொ டருச்சித் தேத்தி**
**மலையரசன் புகலுகின்றான்**

677. படியறு நுந்தாள் ஈண்டுப் படுதலால் இமைய மேரு
அடியனேன் றன்பால் வந்த நிமித்தமென் னறையு மென்றான்.
**வந்த நிமித்தம் என்ன அறையும்**

678. அங்கது வினவு மெல்லை அருந்தவ ரகில மீன்ற
இங்கிதெம் வரலா றென்ன இசைவுகொண் டிறைவன் சொல்வான்.
**அகிலம் ஈன்ற மங்கையை வதுவை செய்வான் சங்கரன்**

679. துன்னிய வுயிர்கள் யாவுந் தொல்லுல கனைத்து மீன்ற
மன்னவன் அயலே நின்ற மனைவியீ துரைக்க லுற்றாள்.
**துன்னிய வுயிர்கள் யாவும் தொல்லுலகனைத்து மீன்ற**
**கன்னிகையை ஈகுவன் இறைவர்க்கு**

680. மலரயன் புதல்வன் றன்னோர் மடந்தையை மணத்தின் நல்க
குலமகள் தனைய வற்குக் கொடுத்திட லெவனோ வென்றான்.
**குலமகள் தனையவற்குக் கொடுத்திடல் எவனோ**

681. என்றலு மவளை நோக்கி எழுமுனி வோருஞ் சொல்வார்
அன்றுதன் இகழ்த லாலே அவன்றலை முடிவு செய்தான்.
**தக்கன் இகழ் தலைமுடிவு**

682. அடைந்தவோர்க் கருளுமாறும் அல்லவர் தமக்குத் தண்டம்
திடம்பட வுணர்தி வேறு சிந்தனை செய்யே லென்றார்.
**அடைந்தவோர்க்கு அருள் அல்லவர் தமக்குத் தண்டம்**

### வேறு

683. இயலுறு முனிவோர்கள் இவைமொழி தலுமோரா
செயலிது வுணராதே செப்பினன் இவையென்றே.
**அமலன்றன் செயலிது**

684. உண்ணலி வொடுமேனை உவர்மல ரடிதாழுஉப்
புண்ணிய முனிவீரென் புன்மொழி பொறுமென்றாள்.
**அண்ணறன் அருணீர்மை அணுவது மறிகில் புன்மொழி பொறுதி**

685. பணிவுட னிவைமேனை பகர்தலும் அவடன்பால்
மணமியல் இறையோனை வரமொழி குதிரென்றான்.
**கணிதமிலருள் மணமியல் இறையோனை வரமொழிகுதீர்**

686. பனிபடு வரையண்ணல் பகர்மொழி யதுகேளா
தனைநிகர் பிறிதில்லாத் தண்கயி லையில்வந்தார்.
**எழுவரும் கயிலை வந்தனர்**

687. வந்தெழு முனிவோரும் மாநக ரிடைசாரா
எந்தையை இதுகேளென் றியாவது முரைசெய்தார்.
**முனிவேர் மாநகரிறை நந்திகண் நாதனை**
**நணுகி உரை செய்தனன்**

688. வரைமிசை யரசாள்வோன் மணவினை யிசைவெல்லாம்
அரனடி தொழுதேத்தி அவர்பதம் அணுகுற்றார்.
**அரனடி தொழுதேத்தி பதம் அணுகுற்றார்**

689. எங்குறை தீர்ந்ததென் றெழுத வத்தரும்
அங்கினிச் செய்தவா றறியக் கூறுவாம்.
**எழுதவத்தவர் குறை தீர்ந்தது**

## 08. வரைபுனைபடலம்

690. கண்ணுதல் உமைதவங் கண்டு நின்னையாம்
எண்ணினன் மகிழ்ந்தனன் இமையத் தண்ணலே.
**கண்ணுதல் உமை தவம் மணத்து**

691. கணிதமி லுயிரெலாங் கலந்து மற்றவை
பணிபுரி தச்சனைப் பரிவொ டுன்னினான்.
**கணித மிலுயிரெலாங் கலந்து**

692. உன்னிய போதினி லும்பர் கம்மியன்
அன்னதை மொழிகென அறைதல் மேயினான்.
**உம்பர் கம்மியன் அன்னதை மொழிகென அறைதல்**

693. என்னையாள் கண்ணுத லிறைவற் கியான்பெறும்
பொன்னினா டாமெனப் புனைதி யாலென்றான்.
**இறைவற்று உமைதனை அளிப்ப பொன்னாடு புனைதி**

694. அப்பொழு தத்தினில் அடுக்கன் மேலையோன்
ஒப்பனை செய்திட வுன்னி னானரோ.
**மெய்ப் பெருமகிழ்ச்சிமேவி ஒப்பனை செய்திட உன்னினர்**

695. நீடுறு தருநிரை நிமிருங் கால்களாய்ப்
பீடுறு பந்தர்போற் பிறங்கும் வெற்பின்மேல்.
**நீடுறு தருநிரை பீடுறு பந்தர்**

696. மலையுறழ் கோபுர மன்றஞ் சூளிகை
தொலைவறும் ஆவணந் தோறும் நல்கினான்.
**கோபுரம் மன்றம் சூளிகை நிழற்று மண்டபம்**
**ஆவணந் தோறும் நல்கினான்**

697. நீக்கமில் கதலிகை நெடிய கேதனம்
தூக்கினன் கவரியுஞ் சுடர்கொள் மாலையும்.
**கதலிகை கேதனம் சுடர்கொள் மாலையும் கவரியும் தூக்கினான்**

698. குரகத முகம்புரை குலைகள் தூங்கிய
விரைகெழு தோரணம் விசும்பின் நாற்றினான்.
**தோரணம் விசும்பின் நாற்றி**

699. ஒண்ணிதி இயக்கர்கோ னுறையு ளானதும்
எண்ணருந் திருவுற எழில்ப டுத்தினான்.
**எண்ணருந் திருபுற எழில்படுத்தினான்**

700. ஒருபுறத் தினைஇனி யுமைக்கு நல்குவோன்
திரிபுறத் திரிபுறச் செய்த மைத்தனன்.
**சாலைகள் திரிபுறத்திரிபுறச் செய்த மைத்தனன்**

701. ஆயிரப் பத்தென அறையும் யோசனை
வாயில்கள் நான்கினு மரபின் நல்கினான்.
**கோபுரம் வாயில்கள் நான்கினும் நல்கினான்**

702. அங்கதன் நடுவுற அகன்ப ரப்பினின்
கங்கையஞ் சடையினான் கயிலைக் கோயில்போல்.
**வதுவைச் சாலை கயிலைக் கோயில்**

703. சாலையின் நிலத்திடைச் சந்த மான்மதம்
ஏலுறு பலதவி சிருப்பச் செய்தனன்.
**ஏலுறு பல தவிசு இருப்பச் செய்தனன்**

704. வானவில் மணிமுகில் வனச மாமலர்
ஆனவை புரிந்தனன் அயனும் நாணவே.
**வானவில் நீனிறம் எண்ணில் வேதிகை**

705. கண்ணடி பூந்தொடை கவரி பஃறுகில
விண்ணவர் விழியெலாம் விருந்து கொள்ளவே.
**விழியெலாம் விருந்து கண்ணடி பூந்தொடை கவரி பல்துகில்**

706. தேவரு முனிவருந் திருவ னார்களும்
ஏவலர் தொழின்முறை இயற்ற நல்கினான்.
**பாவையின் உயிநறு பண்பினாக்கியே ஏவலர்**
**தொழில்முறை இயற்ற நல்கினான்**

707. பெண்ணிய லாரெனப் பிறங்கும் பாவைகள்
விண்ணவர் அரம்பையர் யாரும் வெஃகவே.
**பெண் பாவைகள் களிநடம் யாரும் வெஃக**

708. நெருங்கிய கிளிமயில் நேமி தண்புறா
அருங்கடி யிருக்கையுள் அமர நல்கினான்.
**அருங்கடி இருக்கையுள் அமர நல்கினான்**

709. குறைதவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையுள்
இறைவனு மிறைவியும் இனிது மேவவே.
**இந்திரநீல திறல் அரி அணை இறைவனும் மிறைவியும் இனிது**

710. குண்டமும் வேதிகை வகையுங் கோதில்சீர்
எண்டொகை மங்கலம் இருத்தி னானரோ
**எண்டொகை மங்கலம் இருத்தி**

711. கண்டெறு கதிர்மதிக் காந்தங் காஞ்சனம்
மண்டப மெண்ணில மருங்கின் நல்கினான்.
**கண்டெறு கதிர் மதிக்காந்தம் மண்டபம் மெண்ணில நல்கினான்**

712. காவிகண் மலர்தரு கயங்க ளோர்பல
வாவிக ளோர்பல மருங்கில் ஆக்கினான்.
**வாவிகள் பல மருங்கில் ஆக்கினான்**

713. பாசடை மரகதம் பளிங்கு வச்சிரம்
வாசவன் கண்டுள மருளத் தந்தனன்.
**கண்டுள மருளத் தந்தனன்**

714. கற்பகஞ் சந்தகில் கதலி பூகமே
நற்பயன் வழங்கவும் நல்கி னானரோ.
**கற்பகம் சந்து அகில் கதலி பூகம் நற்பயன் வழங்க நல்கி**

715. இன்னவா றளப்பில் இமைய வர்க்கெலாம்
மன்னவன் கண்டவை மகிழ்ச்சி எய்தினான்.
**அளப்பில் இமகிரிபுர மேவிய மகிழ்வு**

716. சீதரன் அயன்முதற் றேவர் மாத்தொகை
தூதரை யெங்கணுந் தூண்டி னானரோ.
**உமை மணங்காண தூதரை தூண்டினாள்**

717. ஒற்றர்தம் முரைதெரிந் தும்பர் யாவரும்
மற்றவன் றன்னொடு வருது மென்றனர்.
**பரமற் போற்றி வருதும் என்றனர்**

718. வெற்றிகொள் வயப்புலி மிசையு யர்த்திடும்
உற்றனர் தொழுதனர் உமைமுன் நண்ணினார்.
**கொற்றவை காளிகள் எழுநதி உமைமுன் நண்ணினார்**

719. செந்திரு நாமகள் சீர்பெ றுஞ்சசி
வந்தனர் அவரவர் மகிழ்நர் ஏவலால்.
**அவரவர் மகிழ்நர் ஏவலால் வந்தனர்**

720. பங்கய மிசைவரு பாவை யேமுதல்
மங்கல வதுவையின் வனப்புச் செய்தனர்.
**பாவையர் மங்கல வதுவையின் வனப்புச் செய்தனர்**

721. நெறிதரு தவத்துரு நீக்கிக் காமருக்கு
இறைவனை வழிபடும் இயல்பி னாரென.
**இறைவனை வழிபடும் இயல்**

722. மேதகு பொலஞ்சுடர் மேரு மந்தரம்
மாதிர யானையும் பிறவும் வந்தவே.
**பொலஞ்சுடர் மேரு மந்தரம் வந்தவே**

**வேறு**

723. ஈங்கிது காலை தன்னில் இமகிரி புரக்கு மன்னன்
பூங்கழல் வணங்கி நின்றாங் கினையன புகல லுற்றான்.
**பூங்கழல் வணங்கி இனையன புகலல்**

724. ஆதிய னுலக மெல்லா மளித்திடு மன்னை தன்னை
ஈதுநன் முகூர்த்தம் எந்தாய் இமையமேல் வருதி யென்றான்.
**அன்னை வதுவை நன்முகூர்த்தம் எந்தாய்**

725. அல்லுறழ் கண்டத் தெந்தை யரசனை நோக்கி யின்னே
வல்லையின் மீண்டு போய்த்தன் வளநகர் இருக்கை புக்கான்.
**அல்உறழ் கண்டத் தெந்தை அரசனை வல்லையில் வளர் நகர்புக்க**

## 09. கணங்கள்செல்படலம்

726. அந்த வேலையிற் கயிலையில் எம்பிரா னருளால்
இந்தி ராதியர் யாரையுந் தருதியென் றிசைத்தான்.
**கயிலையில் தருதி யென்றிசைத்தான்**

727. இன்ன லின்பமின் றாகிய பரமன்ஈ துரைப்ப
உன்னல் செய்தனன் அவரெலா மவ்வகை யுணர்ந்தார்.
**இன்ன லின்பமின் பரமன் உரைப்ப உணர்ந்தனர்**

728. உலக முய்ந்திட வெம்பிரான் மணம்புரி யுண்மை
பலவும் உந்திடக் கயிலையை முன்னியே படர்வார்.
**உலகம் உய்ந்திட எம்பிரான் மணம்**

729. பாலத் தீப்பொழி விழியுடைப் பஞ்சவத் திரனே
காலத் தீப்பெயர் உருத்திரன் வந்தனன் கடிதில்.
**பாலத்தீ மூலத்தீ சூலத்தீ காலத்தீ கடிதில்**

730. சுழல லுற்றிடு சூறையும் வடவையுந் தொலைய
மழுவ லத்தின னாயகூர் மாண்டனும் வந்தான்.
**சூறையும் வடவையும் தொலைய சீவசாருப்பிய கூர் மாண்டன்**

731. நீடு பாதலத் துறைபவர் நெற்றியங் கண்ணர்
ஆட கேசனா முருத்திரன் கயிலையில் அடைந்தான்.
**பாதலத் துறைபவர் கோடி கோடி உருத்திர கணத்தவர் கயிலையில்**

732. கோர மிக்குயர் நூறுபத் தாயிர கோடி
வீர பத்திர வுருத்திரன் வந்தனன் விரைவில்.
**வீரபத்திர வுருத்திரன் வந்தனன்**

733. விண்டு தாங்குறு முலகுயிர் முழுதுமோர் விரலில்
செண்டு தாங்குகைம் மேலையோன் மால்வரை சென்றான்.
**உலகுயிர் முழுதுமோர் விரலில் மேலையோன் மால்வரை**

734. முந்தை நான்முகன் விதிபெறான் மயங்கலும் முக்கண்
ஐந்து மாறுமா முருத்திரர் தாமும்வந் தடைந்தார்.
**பதினொரு உருத்திரர் அடைந்தனர்**

735. இத்தி றத்தரா முருத்திரர் அல்லதை யேனை
புத்தி யட்டக முதல்வரும் வந்தனர் பொருப்பில்.
**சூக்கும புவனங்கள் எட்டின் முதல்வர் பொருப்பில்**

736. தொட்ட தெண்கடல் யாவையுந் துகளினால் தூர்க்கும்
அட்ட மூர்த்திகள் தாங்களும் ஒருங்குடன் அடைந்தார்.
**அட்ட மூர்த்திகள் ஒருங்குடன் அடைந்தார்**

737. ஏறு கொண்டிடு தெழிப்பினர் எம்பிரான் விழிநீர்
வீறு கொண்டகுண் டோதரன் போந்தனன் வெற்பில்.
**கோடிபூதத்தோடு குண்டோதரன் போந்தனன்**

738. அண்டம் யாவையும் உயிர்த்தொகை யனைத்தையும் அழித்துப்
கண்ட கன்னனும் பினாகியும் வந்தனர் கயிலை.
**அண்டம் யாவையும் உயிர்தொகை அழித்து**
**பண்டுபோல் சாரதர்கள் கயிலை**

739. ஆன னங்களோ ராயிரம் இராயிரம் அங்கை
பானு கம்பனாந் தலைவன்ஒண் கயிலையிற் படர்ந்தான்.
**ஆயிரம் முகங்கள் இராயிரம் கைகளை உடைய**
**பூதகணங்கள் கயிலை**

740. தங்கள் சீர்த்தியே மதித்திடு கடவுளர் தலையும்
சங்கு கன்னன்வந் திறுத்தனன் தடவரை தன்னில்.
**சங்கு கன்னன் தடவரையில்**

741. காள கண்டனுந் தண்டியும் நீலனுங் கரனும்
நீளி ருங்கடற் றானையோ டணைந்தனர் நெறியால்.
**அனந்தம் நீளிருகடற்றா னையோ நெறியால் அணைந்தனர்**

742. கூற்றின் மொய்ம்பினைக் கடந்திடு சாரதக் குழுவோர்
ஏற்ற மிக்கஈ சானன்அக் கயிலையில் இறுத்தான்.
**தாளினை வழிபட்டு ஏற்றமடைந்த ஈசனான் கயிலை**

743. எகின மாகிய மால்அயன் வாசவன் இமையோர்
மகிழும் விஞ்சையர் முனிவரர் யாவரும் வந்தார்.
**வேதம் காக்க எகினமாகிய மால் உட்பட யாவரும் வந்தனர்**

744. வாலி தாகிய மறைகள்ஆ கமங்கள்மந் திரங்கள்
கோல மெய்திவந் திறுத்தன கயிலையிற் குறுகி.
**மறைகள் ஆகமங்கள் மந்திரங்கள் ஞாலம்**
**கடவுள் கோலம் கயிலையில் குறுகி**

745. இந்த வாற்றினாற் கயிலையில் யாவரும் யாவும்
முந்தை அன்னவர் யாரையுந் தருகென மொழிந்தான்.
**கயிலையில் யாவரும் யாவும் வந்த தன்மை**

746. புராரி யித்திறம் மொழிதலுஞ் சிலாதனார் புதல்வன்
விராவு நீர்மையிற் சென்றிடக் கோயிலுள் விடுத்தான்.
**புராரி மொழிதலும் விராவும் நீர்மையில் சென்றனர்**

747. விடுத்த காலையில் அரியணை மீமிசை விளங்கி
எடுத்து நீடநின் றேத்தியே அணுகினர் இமைப்பில்.
**அரியனை மீமிசை காணூஉ இறைஞ்சி இமைப்பில் அணுகினர்**

748. நீண்ட சீருருத் திரர்தமை நிறைந்தபல் கணத்தை
காண்டல் செய்துநின் றேத்தினன் வேத்திரக் கரத்தோன்.
**ஆதிநாயகற்குக் காண்டல் செய்து நின்றேத்தினன்**

749. ஆர ழற்பெயர் அண்ணல்கூர் மாண்டன்ஆ டகத்தோன்
சேர லுற்றுநின் றேத்தினர் பணிந்தசிந் தையராய்.
**காலக்கினி உருத்திரரும் வீரபத்திர உருத்திரரும்**
**பாரிடத்தார் யாவரும் சிந்தையராய் பணிந்தேத்தினர்**

750. அன்ன காலையில் நான்முகன் எம்பிரான் அணிவான்
முன்ன ராகவைத் திறைஞ்சியே இத்திறம் மொழிவான்.
**நான்முகன் எம்பிரான் அணிய பொற்பீடிகையுடன் மொழிவான்**

751. ஐய கேளுனக் கில்லையாற் பற்றிகல் அடியேம்
செய்ய பேரணி அணிந்தரு ளென்று செப்பினனே.
**பற்று இகல் இல் ஐய அடியேம் உய்ய அணி**

752. பங்க யாசனன் குறையிரந் தினையன பகர
செங்கை யாலணி கலத்தினைத் தொட்டருள் செய்தான்.
**செங்கை யாலணி கலத்தினைத் தொட்டருள்**

753. பிரமன் அன்புகண் டிவ்வகை யருள்செய்த பின்னர்
அருள்பு ரிந்திடு பராபரற் கிச்செயல் அரிதோ.
**அருள்செய்து மெய்யணி பணிகளே அணிகளாக செக அருள் பராபரன்**

754. கண்டி யாவரு மற்புத மடைந்துகை தொழலும்
பண்டு மாலயற் கரியவன் எழுந்தனன் படர.
**அரியவன் கவுரிபாலேக எழுந்தனன்**

## 10. திருக்கல்யாணப்படலம்

755. நாற்ற டம்புயக் கண்ணுதல் நந்தியம் பெருமான்
பாற்றி யக்கமும் நீழலு மாமெனப் பாட.
**நந்தியெம் பெருமான் போற்றிப் பாட புகழசெல நீழல்**

756. சொன்ம றைத்தொகை ஆகம முதலிய துதிப்ப
சின்ம யத்தனி மால்விடை ஏறினன் சிவனே.
**சின்மயம் மால் விடை ஏறினன் சிவன்**

757. விடையின் மீமிசைத் தோன்றியே யெம்பிரான் விளங்கப்
அடைய வேபணிந் தேத்தினர் அளக்கரின் ஆர்த்தார்.
**விடையில் மீமிசை எம்பிரான் அடையவே பணிந்து ஏத்தினர்**

758. நந்தி மேல்கொண்டு நந்திமே வுறுதலும் நந்தி
வந்து வந்தனை செய்துமுன் போயினன் மாதோ.
**நந்தி மேல் நந்தி மேவுறும் நந்தி வந்தனை தந்தி மாமுகன்**

759. கதிருஞ் சோமனுங் கவிகையுஞ் சீகரங் காலும்
முதிரும் ஆர்வமோ டப்பணி புரிந்தனர் முறையால்.
**கவிகையுஞ் சீகரமும் பணி புரிந்தனர்**

760. பேரி கொக்கரை சல்லிகை கரடிகை பீலி
சீரி யத்தொகை இயம்பினர் பாரிடத் திறலோர்.
**திறலோர் சீரியத் தொகை இயம்பினர்**

761. அத்தன் ஏவலால் உருத்திரர் குழுவுமா லயனும்
தத்த மூர்திமேல் கொண்டனர் செய்பணி தவாதோர்.
**தத்தம் ஊர்திமேல் செய்பணி**

762. தாழ்ந்து தன்பணி புரியுமத் தலைவருந் தவத்தால்
வாழ்ந்தி டும்படி யேகினன் இமையமால் வரைமேல்.
**தவத்தால் காழ்ந்து வாழ்ந்திட இமையமால் வரை இறை**

763. வார்ப்பெ ரும்பணை யாதிய வரம்பில்பல் லியத்தின்
ஆர்ப்பும் வாழ்த்தொலி அரவமும் புணரியுண் டெழுமால்.
**ஆர்ப்பும் வாழ்த்தொலி அரவம்**

## வேறு

764. அனைய தன்மையி லாதியம் பண்ணவன்
புனித மாநக ரிற்கொடு போயினான்.
**பண்ணவன் போயி மாநகர்**

765. போத லோடும் புனிதன் வரத்தினை
வீதி யாவும் விழாவயர்ந் திட்டவே.
**புனிதன் வரத்தினை களித்து விழா**

766. மிண்டி நின்றிடும் வீதியின் மாதரார்
தெண்டி ரைப்படிந் தார்செயல் வேறிலார்.
**மாதரார் அற்புதப் பேரு கண்டு படிந்தார்**

767. நிறைந்த பூண்களும் நேர்ந்தபொன் னாடையும்
மறைத்த தென்று மனந்தளர் வார்சிலர்.
**பிஞ்ஞகன் பேரெழில் மறைத்த பூண்களும் பொன்னாடையும்**

768. உய்யு மாறென் உவர்தமைக் காண்டலும்
ஐய ராகத் தணிந்ததென் பார்சிலர்.
**காண்டலும் உய்யும்**

769. எழாலை யன்னசொல் ஏந்திழை மாதரார்
விழாதி றைஞ்சினர் மெல்லிய லார்சிலர்.
**மெல்லியலார் இறைஞ்சினர்**

770. அல்லி சேர்தரும் அம்புய மீமிசை
இல்லை யோபுனை யென்றுரைப் பார்சிலர்.
**மெல்ல வீழ்தலும் இல்லையே புனை**

771. வாசம் வீழ்தலும் வந்துவந் தில்லிடை
ஊசல் போன்றனர் ஒண்டொடி மார்சிலர்.
**ஊசல் போல் ஒண்டொடி மார் இல்லிடை**

772. மாண்ட சாயன் மடந்தைய ரேதனை
ஆண்ட கைக்கிய லாகுமென் பார்சிலர்.
**மாண்டசாயல் மடந்தயர் ஆண்டகைக்கு இயல் ஆகுமோ**

773. கரும்பு நேர்மொழிக் காரிகை மாதரார்
இரும்பு கொல்லென் றியம்பிடு வார்சிலர்.
**அண்ணலுக்கு உள்ளம் இரும்புகொல்**

774. நெருக்கு பூண்முலை நேரிழை யார்க்குமால்
இருக்கு மிங்கிவர் என்றுரைப் பார்சிலர்.
**உயிர்க்குயிராகியே இருக்கும் இறை**

775. திருகு வார்சடைச் செய்யனை நோக்கிநின்று
பெருகு காதலைப் பேசுகின் றார்சிலர்.
**செய்யனை நோக்கி**

776. வேறு ளார்மெய் விளர்ப்பினை நோக்கியே
சீறி யேயிகல் செய்திடு வார்சிலர்.
**மெய் விளர்ப்பினை நோக்கி இகல் சிலர்**

777. கட்டு செஞ்சடைக் கான்மிசை யூர்தர
கிட்டி நின்று கிளத்திடு வார்சிலர்.
**செஞ்சடைக்கான் கிட்டி நின்று கிளத்திடுவோர்**

778. கஞ்ச மேலய னாதிக் கடவுளர்
துஞ்சு கின்ற துயிலதென் பார்சிலர்.
**நஞ்சின் வெய்ய கொல் துஞ்சு துயில்**

779. பின்ன ருள்ள பொருந்தொழி லாற்றுவான்
இன்னல் செய்வதென் என்றுரைப் பார்சிலர்.
**மின்னாரை இன்னல் செய்வதென்**

780. சாற்றி யிங்கினி யாவதென் தையல்மீர்
நோற்றி லேமென நொந்துயிர்ப் பார்சிலர்.
**தையல்மீர் நோற்றிலேம்**

781. தேவர் உய்யத் திருமணஞ் செய்திட
ஏவர் செய்வ ரெனஉரைப் பார்சிலர்.
**உய்யத் திருமணம் செய்திடும் இறை**

782. மையல் வேழம் வயப்புலி போல்வரும்
செய்யு மோவெனச் செப்புகின் றார்சிலர்.
**துயர் செய்யுமோ**

783. நங்கள் கொற்றவன் நற்றவத் தாற்பெறு
சங்க ரர்க்குத் தகாதிதென் பார்சிலர்.
**சங்கரர்க்கு தகாது கொலோ**

784. பேதை நீரவர் பேரிளம் பெண்மையோர்
மாத ராரினும் மாதர்பெற் றாரரோ.
**பேதை நீரவர் பேரிளம் பெண்மையோர் மாதர் பெற்றார்**

785. பண்டை வேதன் பதத்தினும் பேரெழில்
கண்டு போந்தனன் கண்ணுத லண்ணலே.
**அண்டம் வெஃக கண்ணுதலண்ணல் கண்டு போந்தனன்**

786. செய்ய தான செழுங்கம லாசன
ஐயை கோயில் அணித்தென நண்ணினான்.
**பராபரையாகிய ஐயை கோயில் நண்ணியருள்**

787. வேந்தன் ஏவலின் வேதங்கள் இன்றுகாறு
ஏந்தி வந்தனர் மாதவர் எண்ணிலார்.
**பல் குடம் ஏந்திய மாதவர் எண்ணிலர்**

788. இருவ கைப்படு மெண்வகை மங்கல
அரிய யற்கரி தாகிய அண்ணல்முன்.
**அரியயற்கரிதாகிய அண்ணல்முன் பூவையர்**

789. அறுகு நிம்பம் அடிசில் அரிசனம்
மறுகில் வந்தனர் மங்கையர் எண்ணிலார்.
**அறுகு நிம்பம் அடிசில் அரிசனம் மறுகில் எண்ணில மங்கையர்**

790. நெருக்கு பூண்முலை நேரிழை யாரவர்
தருக்கொ டேநின்று தந்தொழி லாற்றினார்.
**ஆதி இறைவனை ஏத்தியே தம்தொழில் ஆற்றினர்**

791. எங்கள் நாதன் எதிருற எண்ணிலா
அங்கண் மும்முறை அன்பொடு சுற்றினார்.
**நாதன் எதிருற எண்ணிலா மங்கைமார் சுடர்மன்னிய**
**தட்டைகளை மும்முறை அன்பொடு சுற்றினார்**

792. ஆன காலை அருமணச் சாலைமுன்
யான மீதினின் றியாரும் இழிந்திட.
**ஞானநாயகன் விடை இழிந்தருள்**

793. விடையி ழிந்துழி மேனைவிண் ணாட்டவர்
கடிதின் ஆட்டினள் கைதொழு தேகினாள்.
**விண்ணாட்டவர் ஆன்பொழி பால்கொடு கடிதின்**
**கைதொழு தேகினாள்**

794. நாதன் அவ்வழி நந்திக ளுய்த்திடும்
கோதில் மாமணக் கோயிலுள் எய்தினான்.
**நாதன் அவ்வழி நந்திகளுய்த்திடும் மாமணக் கோயிலுள்**
**எய்தினாள்**

**வேறு**

795. பல்லிய மியம்ப வானோர் பரவவிஞ் சையர்கள் பாட
மல்லலங் கோயி லுள்ள வனப்பெலாம் நோக்க லுற்றான்.
**கோயில் வனப்பு நோக்கலுற்றான்**

796. உலாவுறு சுரும்பு மூசா ஒண்மலர்ச் சோலை வாவி
சிலாதனன் மதலை கூறச் சென்றுசென் றிறைவன் கண்டான்.
**சோலை வாவி ஔடதம் நந்தி கூற இறைவன் கண்டான்**

797. கண்டலுந் தம்போல் தங்கள் காமர்விண் ணகரந் தானும்
தண்டலை யாடல் செய்துந் தலைத்தலை திரிதந் துற்றார்.
**தண்டலை ஆடல்செய்து தலைத்தலை திரிதந்துற்றார்**

798. நந்தியந் தேவு காட்ட நல்வனப் பனைத்தும் நோக்கி
வந்துவீற் றிருந்தான் எல்லா மறைகட்கும் மறையாய் நின்றான்.
**மறைகட்கும் மறையாய் வீற்றிருந்தான்**

799. வீற்றிருந் தருளு மெல்லை வீரபத் திரன்தீப் பேரோன்
ஏற்றிடு தவிசு தோறும் இருந்தனர் இறைவற் சூழ.
**வீரபத்திரன் தீப்பேரோன் ஏற்றிடுதவிசு இருந்தனர் இறைவற்சூழ**

800. அமையப்படும் அப்பொழு தத்தினில் ஆதி யண்ணல்
இமையச்சயி லந்துளங் குற்ற திடுக்கண் எய்தி.
**இமையச் சயிலம் இடுக்கண் எய்தி துளங்குற்றது**

801. பொன்பா லிமையந் துளங்குற்றுழிப் போற்று சேடன்
தென்பால தாற்ற உயர்ந்திட்டது தேவர் உட்க.
**இமையந் துளங்குற்றுழி தென்பால் உயர்ந்திட்டது**

802. ஓங்குற் றதுதென் புவியாதலும் உம்ப ரெல்லாம்
பாங்குற் றிடுதொன் முனிவோரும் பரிய லுற்றார்.
**ஓங்குற்றதென் புவியாதலும் பாங்குற்றிடு பரியலுற்றார்**

803. இன்னோ ரெவருஞ் சிவனேயென் றிரங்க லோடும்
தன்னோர் கரத்திற் செறித்தானைத் தருதி யென்றான்.
**சிவனேயென ஆழிதன்னோர் கரத்தில் என்ன**

804. என்றா னதுகாலையில் நந்தி யிறைஞ்சி யேகிக்
மன்றார் கழல்கள் பணிந்தான் மலயத்து வள்ளல்.
**பொதிகைமலை குன்றாவள்ளல் நந்தி இறைஞ்சி**

805. தாழுந் தவத்தோன் றனைக்கண்ணுதற் சாமி நோக்கித்
தாழுஞ் சுவர்க்க நிலனுந் நனிதாழு மன்றே.
**தாழும் தவம் குறி புவி சுவர்க்கம் நோக்கி சாமி**

806. தெருமந் துழலுந் தரைமன்னுயிர் செய்த தொல்லை
அருமந்த மேரு வரையுந்தவ றாகு மம்மா.
**அருமந்த மேருவரை தவறா மன்னுயிர்**

807. ஆனான் முனிகேள் ஒருநீயிவ் வசலம் நீங்கி
மேனா ளெனவே நிகராகி விளங்கு மென்றான்.
**வசலம் நீங்கி தென்னாடு நண்ணி விளங்க அருள்**

808. பிறையொன்று வேணிப் பரனிங்கிது பேச லோடும்
உறையென் றிலைசே ணிடைச்செல்ல வுரைத்தி எந்தாய்.
**பரன் பேசலோடும் தீஞ்சொற்றமிழ் மாமுனி அச்சம்**

809. என்னக் குறிய முனிவன்றனை எந்தை நோக்கி
முன்னிற் றெவையுந் தவறின்றி முடித்தி மன்னோ.
**குறிய முனிவனை எந்தை முன்னின்று முடித்தி**

810. வேறுற்றிடு தொன்முனி வோர்களின் விண்ணு ளோரின்
கூறுற் றிடலும் முனியீது குறித்து ரைப்பான்.
**கூறுற்றிடலும் முனி குறித்து உரைப்பான்**

811. வான்செய்த மேனி நெடுமான் மகவேள்வி மன்னன்
நான்செய் ததுவே தவம்போலும் நலத்த தெந்தாய்.
**நான் செய்தவம் நலத்த எந்தாய்**

812. ஈங்கிப் பணியை யளித்தாயெனில் எந்தை யுன்றன்
ஓங்கற் கயிலைத் தனிநாயகன் ஓத லுற்றான்.
**கயிலை ஓங்கல் நாயகன் ஓதல்**

**வேறு**

813. சிந்தைய தழுங்க லின்றித் தென்மலைச் சேறி அங்கண்
முந்தையி லெமது பாங்கர் வருதியால் முனிவ என்றான்.
**தென்மலைச் சேறி எமது பாங்கர் வருதி**

814. என்றிவை அமலன் செப்ப இசைதரு புலத்தனாகி
தென்றிசை யெல்லை நோக்கிச் சிறுமுனி கடிது போனான்.
**அமலன் செப்ப தென்றிசை எல்லை சிறுமுனி கடிது ஏகி**

815. கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்ச வரையும் விந்த
முற்பகல் படர்ந்த தென்ன முனிவரன் தென்பாற் போனான்.
**முன்போல் முனிவரன் தென்**

816. மறைபகல் வேள்வி யாற்று மாவலி வலிகொள் காட்சி
சிறுமுனி வானம் நீந்திச் சிமையமா மலயம் புக்கான்.
**சிறுமுனி வானம் நீந்தி சிமயமா மலயப் புக்கான்**

817. முண்டகன் வலிகொண் டுற்ற மூவெயில் அழிப்பான் முன்னி
கொண்டதொல் லுருவ முன்னிக் குறுமுனி அங்கண் உற்றான்.
**பண்டு பாதம் பாதலம் இட்ட அண்ணல் தொல்லுருவம்**
**உன்னி குறுமுனி உற்றான்**

818. பொதியம தென்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைக
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்.
**பொதிய வெற்பில் முனிவன் வைகதொல் வதுவை**

819. கதுமென மலயந் தன்னிற் கடமுனி சேற லோடு
பதமுறை வழிபட் டோர்தம் பான்மையும் பரவ லுற்றார்.
**முனிவரும் தேவரும் வழிபட்டு பரவலுற்றனர்**

820. அங்கது பொழுது தன்னில் அரசன திசைவால் எங்கள்
பங்கய மான்கை பற்றிப் பாரதி பரவ வந்தாள்.
**எங்கள் சங்கரி பங்கய மான்கை பற்றி வந்தாள்**

821. வந்திடு முவுலகை ஈன்றாள் வதுவையஞ் சாலை நண்ணி
இந்திரை முதலோர் யாரு மேத்திட இருந்தா ளன்றே.
**உலகை ஈன்றாள் வதுவையஞ் சாலை நண்ணி**

822. இருந்திடு மெல்லை தன்னில் ஏலவார் குழலி யென்னுங்
பெருந்தடம் புனலுஞ் சந்து மலர்களும் பிறவுந் தந்தாள்.
**மேனை புனலும் சந்தும் மலர்களும் தந்தாள்**

823. தருதலு மிமையத் தண்ணல் தாழ்ந்தன னிருந்து தேவி
பொருவரு மகிழ்ச்சி யோடு பூசனை புரிந்தான் மாதோ.
**இமையத் தண்ணல் பூசனை**

824. பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றாடன் கையை
வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி.
**புவனமீன்றாள் கையை பரஞ்சுடர் கரத்துள் மறைமனுக்கள்**
**கூறி வாசநல் உதகம் உய்த்து**

825. எங்குள பொருளுங் கோளு மீதலுந் தானே யாரும்
அங்கவன் அருளின் நீர்மை யாரறிந் துரைக்கற் பாலார்.
**அரனின் நீர்மை அறிந்து உரையாருமில்**

826. ஆனதோ ரமையந் தன்னில் ஆடினர் அமரர் மாதர்
வானவர் முனிவர் யாரும் மறைகளை யறைய லுற்றார்.
**ஆடல் கானம் ஏழிசை மறை அறை**

827. அல்லியங் கமலந் தன்னில் அரிவையும் புண்டரீக
பல்லிய மியம்பிச் சூழ்ந்து பாரிடத் தொகையோர் ஆர்த்தார்.
**மங்கலம் பல் இயம் ஆர்த்தனர்**

828. அதுபொழு திமையத் தண்ணல் ஆபொழிந் திட்ட தீம்பால்
நிதிகொள்பா சனத்தி லிட்டு நிருமலன் முன்ன ருய்த்தான்.
**ஆபொழிந்திட்ட தீம்பால் இன்ன நிருமலன் முன்**

829. மறைநெறி யினைய வெல்லாம் மலைமக னுய்த்து மற்றெம்
குறுபெருங் கருணை செய்தே உவந்தனங் கோடி யென்றான்.
**மறைநெறி இனைய எம்மிறை பெருங்கருணை செய்து உவந்தனங்கோடி**

830. தொன்மைகொ ளருளின் நீரால் துய்த்தன வாகத் தொட்ட
நன்மகிழ் வோடு வேதா நாயகற் குரைக்க லுற்றான்.
**அருளின் நீரால் உய்த்தன**

831. படங்கிளர் சேடன் தாங்கும் பார்விசும் புறையும் நீரார்
சடங்கினி யுளது முற்றத் தண்ணளி புரிதி யென்றான்.
**சடங்கு முற்றத் தண்ணளி**

832. என்னலு முறுவல் செய்தே இறையருள் புரிய வேதன்
தன்னிக ரில்லா மன்றற் சடங்கெலாம் இயற்றல் செய்தான்.
**பிரமன் தன்னிகரில்லா மன்றச் சங்கு இயற்றல்**

833. அந்தணர் கரண மெல்லா மாற்றியே முடிந்த பின்னர்
இந்திரன் முனிவர் வானோர் யாவரும் இறைஞ்ச லுற்றார்.
**யாவரும் இறைஞ்சலுற்றனர்**

834. அரனுடன் உமையா டன்னை யாங்கவர் பணித லோடும்
கிரியுறை யிறைவன் மைந்தன் கேளொடு வணக்கஞ் செய்தான்.
**அரனுடன் உமை பணி**

835. தமதுமுன் பணிகின் றோர்கள் தமக்கெலா மீசன் றானும்
அமலன துணவு மற்றும் அளிப்பனென் றகத்துட் கொண்டான்.
**அமலன் அளித்திட்ட உணவு**

836. ஆய்ந்திடு மறைகள் போற்று மாதிதன் தீர்த்தம் போது
ஈந்திட வவற்றை அன்னோ ரியாவரும் அணிந்துட் கொண்டார்.
**மறைகள் போற்றும் ஆதிதன் தீர்த்தம் யாவரும் உட்கொண்டனர்**

837. ஆலமா மிடற்றோற் கான அமலமாம் பொருளை யேற்று
மேலவர் அன்று பெற்ற வியப்பினை விளம்ப லாமோ.
**வினைமுடிவு வியப்பு**

838. அனையதோர் காலை தன்னில் அமலமாம் பொருள்க டம்மை
வினைவலி யொருவி மேலாம் வீடுபே றடைந்து ளார்போல்.
**வீடுபேறடைந்த இன்பம்**

839. தன்னுறு கணவன் துஞ்சத் தாபத நிலைய ளாகி
பொன்னடி வணங்கித் தீயேன் புன்கணைத் தவிர்த்தி யென்றாள்.
**கணவன் துஞ்சத் தாபதநிலையில் இரதி புன்கணை தவிர்த்தி என்றாள்**

840. சீருறு கணவன் இல்லாள் செப்பிய மாற்றங் கேளா
மாரன்வந் துதிக்கும் வண்ணம் மனத்திடை நினைந்தா னன்றே.
**மாரன் உதிக்கும் வண்ணம் நினைந்தாள்**

841. நினைதரு மெல்லை தன்னில் நெடியமான் முதலா வுள்ள
குனிசிலை கொண்ட மாரன் கொம்மெனத் தோன்றி னானே.
**நினைதருமெல்லை தன்னில் மாரன் தொம்மெனத் தோன்றினான்**

842. முன்பொடு தோன்று மாரன் முதல்வியோ டிருந்த நாதன்
பின்பது தணிவ துள்ளம் பேதுறல் மைந்த என்றான்.
**உள்ளம் பேதுறல் அருள்**

843. எரிபுனை நமது நோக்கால் இறந்தநின் னுடலம் நீறாய்
அருவினை யாகி யுன்றன் அரசியல் புரிதி என்றான்.
**உருவாய் இரதிக்கும் அருவாய் ஏனையோர்க்கும் அரசியல் புரிதி**

844. செய்வினை முறையால் ஈசன் சித்தசற் கினைய கூறி
மெய்விடை யுதவ அன்னோர் விரைந்துடன் தொழுது போனார்.
**ஈசன் இனைய கூறி மெய்விடை யுதவ தொழுது போனார்**

845. இரதியும் மன்மதனு மேக இந்திர நீலத் திட்ட
பரவினர் செல்லப் பூதர் பல்லியந் தெழிப்பச் சென்றான்.
**நாதன் அம்மையோடு பல்லியம் தெழிப்பச் சென்றான்**

846. மன்னுயிர்க் குயிராய் நின்றோன் மால்விடை யேறி மாதைப்
பொன்னிய லிமையந் தீர்ந்து வெள்ளியம் பொருப்பில் வந்தான்.
**உயிர்க்குயிராய் ஈசன் மாதுடன் வெள்ளியம் பொருப்பில்**

847. அன்னதோர் காலை மாலை அயனைவெற் பரசை வேள்வி
முன்னுற விடுத்தா னென்ப மூலமும் முடிவு மில்லோன்.
**மூலமும் முடிவுமில்லோன் முன்னுற விடுத்தான்**

848. அடுகன லவன்கூர் மாண்டன் ஆடகன் ஐயன் சிம்புள்
விடையினை யுதவி ஐயன் வியன்பெருங் கோயில் புக்கான்.
**அடுகனலவன் விடையினை ஐயன்**

849. ஏறெனுங் கடவுள் மீதில் இம்மென இழிந்து தன்னோர்
வீறொடு தொன்மை யேபோல் வீற்றிருந் தருளி னானே.
**தொன்மைபோல் அருள்**

850. அன்பினர்க் கெளிவந் துள்ள ஆதியம் பரமன் மாது
இன்பொடு போக மாற்றி இனிதமர் வுற்ற வன்றே.
**ஆதியன் பரமன் மாது இன்பொடு போகம் ஆற்றி அருள்**

## 11. திருவவதாரப்படலம்

851. பற்பக லினைய வாற்றாற் படர்தலும் பின்னோர் வைகல்
வெற்பினிற் குழுமிச் சூரால் மிகமெலிந் திரங்கிச் சொல்வார்.
**பல்பகல் படர்தலும் சூரால் மிக மெலிந்து இரங்கிச் சொல்வார்**

852. உலகினை அவுணர்க் கீந்தே யோகிபோல் வைகி நம்பால்
தலையளி புரியான் வாளா இருப்பதென் தாணு வானோன்.
**தாணு தலையளி**

853. இவறலு மிகலு மின்றி யார்க்குமோர் பெற்றித் தாகி
தவறுசெய் தனமென் றெம்மை நோவதே தக்க தென்றார்.
**தவறு செய்தனம்**

854. ஆயினு மவன்றாள் போற்றி அடையின்நன் கனைத்து மாகும்
நாயகற் கிதனைக் கூற நாமெலாம் போது மென்றார்.
**அனைத்தும் ஆடும் அவன்தாள் போற்றி**

855. போதர விசைந்த காலைப் பொன்னலர் கமலப் புத்தேள்
ஊதையங் கடவு டன்னை நோக்கியீ துரைக்க லுற்றான்.
**கமலப்புத்தேள் உரைத்தல்**

856. வடவரை யதனில் மூன்று மாண்குவ டெறிந்து வௌவி
கடிவரை நகரத் தெய்திக் கண்டனை மீடி யென்றான்.
**பண்ணவன் செயலை கண்டனை மீடி**

857. பல்லிதழ் வனச மேலோன் இனையன பகர நோன்றாள்
ஒல்லுவ தன்றிச் செய்கை உள்ளமும் வெருவு மென்றான்.
**ஒல்லுவது அன்று உள்ளம் வெருவும்**

858. கூற்றிது நிகழ்ந்த வேலைக் கோகன தத்து மேலோன்
வீற்றொரு தேவ ருண்டோ மேலிது புரிதற் பாலோர்.
**காற்றினுக் கரசு மேலிது புரிதல்**

859. உற்றுழி உதவி செய்வோர் உலப்புறா தெவையும் ஈவோர்
இற்றிட வரினும் எண்ணார் இனிதென மகிழ்வ ரன்றே.
**உற்றுழி உதவி உலப்புறா ஈவேர் இனிதென மகிழ்வு**

860. ஆதலின் எங்கட் கெல்லாம் ஆற்றிடு முதவிக் காக
காதலன் விடைகொண் டேகிக் கயிலைமால் வரையிற் சென்றான்.
**வாயுதேவன் உதவிக்காக கயிலைமால் வரை சென்றான்**

861. குன்றதன் புடையில் வீழுங் குரைபுன லாற்றின் ஆடி
நின்றதோர் நந்தி காணூஉ வுரப்பினன் நெடிது சீறி.
**புனலாற்றின் ஆடி புகுதும் எல்லை நந்தி காணூஉ உரப்பினான்**

862. பொற்பிரம் பொன்று பற்றிப் பொலன்முதற் கடையைப் போற்றி
முற்படர் கின்ற காலோன் மொய்ம்பிலன் வெருவி வீழ்ந்தான்.
**மொய்ம்மிலன் வெருவி வீழ்ந்தான்**

**வேறு**

863. ஒல்லென வீழ்வுறும் உயிர்ப்பின் காவலன்
மல்லலங் கழல்களை வணங்கிக் கூறுவான்.
**உயிர்ப்பின் காவலன் நந்திதன் கழல்களை வணங்கிக் கூறுவான்**

864. மாலயன் மகபதி வானு ளோரெலாம்
மேலுரை செய்தனர் வினையி னேனுடன்.
**வினையினேனுடன் காலையறித்திட மேலுரை செய்தனர்**

865. கறுத்திடு மிடறுடைக் கடவு ளாடலை
ஒறுத்தெனை விடுத்தன ருடைய வன்மையால்.
**கறுத்திடு மிடறுடைக் கடவுளாடலை குறிக்க அரிது அஞ்சவிடுத்தனர்**

866. ஆதலின் அடியனேன் அஞ்சி யஞ்சியே
பேதைமை உணர்வினேன் பிழைபொ றுத்திநீ.
**அஞ்சியஞ்சியே பேதமை பிழை பொறுத்தீர்**

867. தானவர் தொழவரு தகையில் சூரனால்
ஏனைய தேவரு மினைய நீரரே.
**தகையில் சூரனால் அறிவு மாழ்கினேன்**

868. அறைதரு கணத்தரு ளாதி யாகிய
பொறைபுரிந் தருளெனப் போற்றி வேண்டினான்.
**பொறை புரிந்தருள்**

869. ஆண்டகை நந்தியெம் மடிகள் அவ்வழி
மீண்டனை போகென விடைதந் தேவினான்.
**நந்தி நிற்கலை போகென விடை**

870. சீரிய நந்தியந் தேவன் ஏவலும்
மேருவில் விண்ணவர் குழுவை மேவினான்.
**ஏவலும் வல்லையில் மேவினான்**

871. மேவரு காலினான் விரிஞ்சன் மாயவன்
யாவதும் முறைபட இயம்பி னானரோ.
**காவலின் வன்மை இயம்பினான்**

872. காற்றுரை வினவியே கமலக் கண்ணனும்
தேற்றமொ டினையன செப்பல் மேயினார்.
**காற்றுரை வினவி கமலக் கண்ணன் செப்பல்**

873. எந்தைதன் செய்கை தேர்ந் தேகு நீயென
வந்தனன் அச்சுறு மனத்த னாகியே.
**எந்தை தன் செய்கை தேர்ந்திட நந்தி**
**ஆணையால் அச்சுறு மனம்**

874. மன்னிய கயிலைமால் வரையின் யாமெலாம்
பன்னுதல் துணிபெனப் பலருங் கூறினார்.
**கயிலையில் யாமெலாம்  பன்னுதல் துணிபு**

875. இவ்வகை யவரெலாம் இசைந்து செம்பொனின்
அவ்விடை தொழுதிவை அறைதல் மேயினார்.
**பொன்வரை நீங்கி வெள்ளிவரையில் நந்தியை**
**தொழுது அறைதல்**

876. நந்தியந் தேவுகேள் நங்கள்பால் துன்பெலாம்
முந்துறக் காட்டெனா முகமனோ டுரைசெய்தார்.
**எமையவன் முந்துறக் காட்டு**

877. மற்றிவா றுரைசெய்யும் வானவத் தொகையினை
பொற்றடந் தாள்களைத் தொழுதனன் புகலுவான்.
**கண்ணுதற் கடவுளை தொழுதனன் நந்தி**

878. அண்ணலே உனதுபொன் னடிகளைக் காணிய
தண்ணிலா வேணியான் தருதியென் றருள்செய்தான்.
**பொன்னடி காணிய அருள்**

879. அருள்புரிந் திடுதலும் ஆதியம் பண்ணவன்
சுரரெலாம் வம்மெனத் தூயவன் கூவினான்.
**சுரரெலாம் வம்மெனத் தூயவன் கூவல்**

880. கூவியே அருடலுங் கொண்டல்பே ரொலியினால்
தேவதே வன்முனஞ் செல்லுதல் மேயினார்.
**தேவதேவன் முன் சென்றனர்**

881. அம்மையோர் பங்குற அரியணைக் கண்ணுறும்
பொய்ம்மைதீர் அன்பினால் இனையவா போற்றுவார்.
**அம்மையோர் பங்குற பொய்மைதீர் அன்பு**

**வேறு**

882. நோக்கினும் நுழைகிலை நுவலு கின்றதோர்
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ.
**நோக்கினும் நுழைகிலை மாயம்**

883. இருமையு மொருமையும் இரண்டு மொன்றிய
அருமறை யானவும் அறிதற் பாலவோ.
**இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய அல்ல அருமறை**

884. உருவொடு தொழில்பெய ரொன்று மின்றியே
கருணைய தேயலாற் கருமம் யாவதே.
**உருவில் தொழில் இல் பரவி விரவி உயர்க்கு வீடு கருணை**

885. அவ்வுயிர் யாவுநின் னருளி லாவழி
எவ்வகை யோவுல கியற்றுந் தன்மையே.
**உயிர் யாவும் நின் உலகியற்றும் அருள்**

886. முன்னதின் முன்னென மொழிது மேயெனிற்
என்னென நின்னையாம் ஏத்து கின்றதே.
**முன்னதின் முன் பின்னதின் பின் அன்னவை நின்னை ஏத்தல்**

887. புல்லிய புரம்பொடித் ததுவுங் காமனை
நல்லருள் ஆணையே நடாத்து மென்கையால்.
**என்கையால் நடாத்து நல்லருள் ஆணை**

888. எங்களை முன்னரே இயல்பின் ஈந்தனை
எங்களின் அறிவரி தென்று போற்றினார்.
**நின்செயல் அறிவரிது போற்றி**

## வேறு

889. அவ்வகை அமர ரெல்லாம் அன்புசெய் தேத்து மெல்லை
எவ்வர மெனினும் ஈதும் வேண்டிய திசைத்தி ரென்றான்.
**நொவ்வுற சிந்தை நுணங்கிய நுங்கட்கு வரம் அருள்**

890. என்றலும் அமரர் சொல்வார் யாமெலா மிந்நாள் காறும்
ஒன்றொரு வரம்வேண் டுற்றாம் அதனியல் புரைத்து மன்றே.
**தொல்லை ஆக்கம் நண்ணருள்**

891. மும்மையின் உயிர்கள் பெற்ற முகிழ்முலைக் கன்னியாகும்
எம்மையாளு வதற் கேதுக் காட்டிய இயற்கை யல்லால்.
**செம்மலை அளித்து எம்மை யாளுவதற்கு ஏது**

892. ஆதியும் நடுவு மீறும் அருவமு முருவு மொப்பும்
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க வென்றார்.
**ஆதியும் நடுவுமீறும் அருவமுமுருவும் ஒப்பும் நின்னை**
**நிகர்க்கும் குமரன் நீதரல்**

893. வந்திக்கு மலரோ னாதி வானவர் உரைத்தல் கேளாச்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங் கொண்டான்.
**சிந்திக்கும் தனது தொல்லை திருமுகம் ஆறும் கொண்டான்**

894. நிற்புறும் அமரர் யாரும் நெஞ்சுதுண் ணென்ன நீடும்
பொற்புறு நுதற்கண் டோறும் புலிங்கமொன் றொன்று தந்தான்.
**அறுமுக நுதற்கண் மாட்டே மூவிறு பொறிகள் அருள்**

895. ஆவதோர் காலை ஈசன் அறுமுக நுதற்கண் மாட்டே
பூவுல கண்ட முற்றும் பொள்ளெனப் பராய வன்றே.
**பூவுல கண்டம் முற்றும் பொள்ளென பராயபுலிங்கம்**

896. மாதண்டங் குலவு நேமி வால்வளை வயிர வொள்வாள்
மூதண்டங் காறுஞ் சென்ற முதல்வன்கண் ணுதலிற் செந்தீ.
**முதல்வன் கண்ணுதலிற் செந்தீ மூதண்டம் காறும் வேதண்டம்**
**அன்ன**

## வேறு

897. மங்கையோர் பங்குடை வள்ளல் ஏந்திய
எங்குள வுலகமும் ஈண்ட லுற்றவே.
**செங்கனல் ஊழி அன்ன விழிபொழி அனலம் ஈண்டலுற்றது**

898. ஆங்கனந் தழலெழ அகில முற்றுமாய்
தீங்கனல் வடவையுஞ் செருக்கு நீங்கிற்றால்.
**அகில முற்றுமாய் தழல்**

899. பக்கன பாரகம் பதலை முற்றுற
தொக்கன உயிர்த்தொகை துளக்க முற்றவே.
**பாரகம் பக்கன உயிர்த்தொகை துளக்கமுற்றன**

900. காரண மில்லவன் கண்ணிற் கான்றதீ
ஆரையும் எவற்றையும் அச்சஞ் செய்தவே.
**கண்ணிற் கான்றதீ பேரருள் பான்மையால் ஒழிவு செய்தில**
**ஆரையும் எவற்றையும் அச்சம் செய்ததே**

901. அன்னதன் வெம்மைகண் டமலன் பாங்குறை
தன்னதோ ருறையுளைச் சார ஓடினாள்.
**வெம்மை கண்டமலன் பாங்குறை உமைசார ஓடினாள்**

902. முண்டக னாதியா முன்னர் நின்றுள
பண்டெழு விடத்தினாற் பட்ட பான்மைபோல்.
**அழல்கண்ட அஞ்சல் பண்டுவிடம் அன்ன**

903. தீங்கனல் அடர்தலுஞ் செம்பொற் கோயிலின்
பாங்கரில் வந்தனர் பரியும் நெஞ்சினார்.
**தீங்கனல் அடர்தலும் எந்தைதன் பங்கரில் வந்தனர்**

904. வலைத்தலை மானென வன்னி சூழ்ந்துழி
கலத்தலை அகன்றிடாக் காகம் போலவே.
**மானென ஓடி காகம் போல் நாதற் சேர்ந்தனர்**

905. தோற்றிய நுதல்விழிச் சுடரின் சூழ்வினுக்கு
போற்றிசெய் தினையன புகல்வ தாயினார்.
**நாற்றம் புயமுடை ஞான நாயகர் போற்றி**

906. வெந்திற லவுணரை வீட்டு தற்கொரு
எந்தையே எங்ஙனம் யாங்க ளுய்வதே.
**அந்தமில் அழல் அருடல் எங்ஙனம்**

907. பங்குறை உமையவள் பாணி யின்வரு
பொங்கழ லெங்கணும் பொள்ளென் றீண்டிய.
**உமையவள் பாணி கங்கை அன்ன நுதல்விழி பொங்கழல்**

908. கற்றையஞ் சுடர்பொழி கனல்க ளின்றொகை
முற்றுயிர்த் தொகையையும் முடிவு செய்யுமால்.
**சுடர்பொழி கனல் மாற்றி அருள்**

909. விஞ்சிய பேரழல் வெம்மை யாற்றலா
தஞ்சம துளதுகொல் எம்மைத் தாங்கவே.
**விஞ்சிய பேரழல் வெம்மை யாற்றலா தஞ்சம்**

910. மலக்குறு மனத்தினேம் வருத்த முற்றவும்
விலக்குறு நீரினார் வேறி யாவரே.
**விலக்குறு நீரினார் யாரோ**

911. நிறைமுடிப் பணிமிசை நிலனும் வானமும்
குறைமுடித் தருளெனக் கூறி வேண்டினார்.
**குறை முடித்தருள்**

912. அஞ்சலி னவர்புகழ் அண்ண லாதியோர்
அஞ்சலிர் என்றுகை அமைத்துக் கூறினான்.
**அஞ்சலினவர் அஞ்சலி செய்திட அஞ்சலிஞ்சடை**
**அண்ணல் அஞ்சலீர் என்று கை அமைத்து கூறல்**

913. பொன்மலை வில்லினான் புதிதின் வந்திடு
தொன்மையின் இயற்கையாய்த் தோன்றி வைகினான்.
**தொன்மையின் இயற்கையாய் ஒரு முகத்துடன் அருளல்**

914. தன்னருள் நிலைமையாற் சண்மு கத்திடை
முன்னுற வரும்வகை முதல்வன் முன்னினான்.
**சண்முகத்திடை நன்னுதல் விழிநல்கு தீப்பொறி**
**முன்னுற முதல்வன் முன்னினான்**

915. அந்தியம் பெருநிறத் தமலன் அவ்வகை
வந்துமுன் குறுகலும் மகிழ்ந்து நோக்கினான்.
**வெம்பொறி மூவிரண்டும் முன்குறுகல்**

916. ஆதகு காலையில் அமரர் தங்களுள்
மேதகு கருணையால் விமலன் கூறுவான்.
**விமலன் கருணை**

917. நீங்களிச் சுடர்களை நெறியிற் றாங்கியே
ஈங்கிது நும்பணி யென்றி யம்பினான்.
**முன் வாயுதேவனும் பின் அக்கினி தேவனும்**
**சுடர்களை நெறியிற் றாங்கி கங்கையில்**
**விடுத்தின் அன்னவ சரவணம் அமரும்**

918. கூற்றுயி ருண்டதாட் குழகன் இவ்வகை
காற்றொடு கனலிவை கழறல் மேயினார்.
**காற்றொடு கனலிவை கழறல்**

919. ஒருநொடி யளவையின் உலகம் யாவுமாய்
அரிதரி தடியரேம் ஆற்ற லாகுமோ.
**நொடியளவில் அழல் சிறுகிற்று அரிதரிது திருவருள்**

920. ஈற்றினை யுலகினுக் கிழைக்கு நின்கணே
நாற்றிசை முகமுடை நளினத் தேவுமே.
**நின்கணே தோற்றிய கனலினை சுமக்கும் ஆற்றல் அரிது**

921. பண்டெழு விடத்தினிற் பரந்த தீச்சுடர்
கொண்டனம் ஏகுதல் கூடற் பாலதோ.
**தீச்சுடர் கொண்டனம் ஏகுதல் கூடற்பாலதோ**

922. அப்பெருங் கனலினை அடைதற் குன்னினும்
துப்புறழ் படர்சடைப் பகவன் சொல்லுவான்.
**கனலினை எப்பரிசேத்துவம் என பகவன் அருள்**

923. ஒன்றொரு நொடியினின் உலக முற்றுமாய்
என்றலும் நன்றென இசைந்து போற்றினார்.
**திண்மை எய்திட அருள் இசைந்தனர்**

924. மற்றது தெரிதலும் மால யன்முதல்
உற்றனர் உவகையை யுடலம் விம்மினார்.
**உவகை உற்று உடலம் விம்மினார்**

925. ஆங்கனம் அவர்தமை ஆதி நோக்கி
ஈங்கினி யாவரும் ஏகு வீரென்றான்.
**தீங்கனல் சரவணஞ் செறிந்து செம்மல் அருள் ஏகுவீர்**

926. இறையவன் இனையன இயம்ப உய்ந்தனம்
அறைகழ லடிதொழு தங்கண் நீங்கினார்.
**இறைவன் இயம்பா உய்ந்தனம்**

927. முன்னுற மாருதன் முதல்வன் றாள்களை
சென்னியின் மேற்கொடு சேறல் மேயினான்.
**சிவகுண்டலி சக்தியாகிய சுடர்கள் ஆறையும்**
**மாருதன் சென்னியில் சேறல் மேயினான்**

928. அரனுறு கடிநகர் அதனைத் தீர்ந்தொராய்
கருதரு மகிழ்வொடு கண்டு கூறுவார்.
**எரிகெழு சுடர்முடி கருதரு மகிழ்வு**

929. செந்தழல் மேனியன் தீயின் வண்ணம்ஆ
வந்திடும் வீரனாம் மதலை மானவே.
**செந்தழல் மேனியன் தந்தனன் தீயின் வண்ணம் குமரன்**

930. தொன்னிலை யாம்பெறச் சூரன் பாடுற
மன்னுபு குழவியாய் வளர நல்கினான்.
**தொன்னிலை பெற சரவணத்திடை அரன்மகள் குழவியாய் நல்கல்**

931. போற்றலர் புரமடு புனித நாயகன்
சாற்றருங் கருணையிற் றலைமை யானதே.
**புரமடு நாயகன் கருணை**

932. என்றிவை பற்பல இயம்பி இன்னினி
சென்றிடு வாமெனச் செப்பி னாரரோ.
**தடம் சென்றிட செப்பினர்**

933. உருப்பம தாகிய ஒளிறு தீஞ்சுடர்
பருப்பதம் ஒருவியே படர்தல் மேயினார்.
**ஒளிறு தீஞ்சுடர் தரித்து மருத்துவன் சென்றன**

934. இறத்தலுங் கன்னலொன் றெரியின் தீஞ்சுடர்
திறற்படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்.
எரியின் தீஞ்சுடர் வன்னிதன் சென்னி சேர்த்தினான்

935. சேர்த்தலும் ஒருபதந் தீயின் பண்ணவன்
ஆர்த்திடு கங்கையின் அகத்துய்த் தானரோ.
**சேர்த்தலும் ஆர்த்திடு கங்கையின் அகத்துய்த்தானரோ**

936. கூர்சுடர்ப் பண்ணவன் கொடுவந் துய்த்திடும்
வார்சடைக் கரந்தென வறந்த கங்கைநீர்.
**வார்சடை கரந்த என கங்கைநீர் வறந்தது**

937. அரனருள் முறையினை யறிந்து கங்கைதன்
மரையித ழாயிடை மல்குற் றாலென.
**கங்கை அரனருள் சிரமிசை கன்னலில் சரவணம் தடம்**

938. ஆவயின் காறும்வந் தரிய யன்முதல்
காவல்கொள் நிரப்புடைக் காத லோரென.
**விளைவு நாடி காதலோடு காவல்**

939. ஆரணன் விண்ணகம் அச்சு தன்புவி
சீரணி சரவணஞ் சேர்ந்து போற்றினார்.
**சீரணி சரவணம் போற்றி**

## வேறு

940. கங்கையு மொல்கப் புக்க கடுங்கனற் கடவுட் சோதி
புங்கவன் அருளால் தொன்மை போன்றது வறத்த லின்றி.
**கடவுட்சோதி முன் அம்மைவாழ் இமயச் சரவணப் புகலும் புங்கவன் அருளால் தொன்மை**

941. விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலில் தோன்றும்
கண்ணகன் பொய்கை ஈசன் கட்டழல் மிசைக்கொண் டன்றே.
**விண் கால்கனல் ஒண்கமலம் ஈசன் கட்டழல் மிசை**

942. அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.
**உலகம் உய்ய அருஉரு அநாதி ஒருபலவாய் முருகன்**

943. தோன்றல்வந் திடலும் விண்பால் துந்துபி கறங்க லுற்ற
ஏன்றெமை யருளு கென்றே ஏத்திசை யெடுத்துச் சூழ்ந்தார்.
**தோன்றல் வந்திடலும் தொல்மறைகள் ஆர்த்தன.**

944. ஏவர்தம் பாலு மின்றி யெல்லைதீர் அமலற் குள்ள
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகங் கொண்டா னன்றே.
**அறுமுகம் கொண்டான் ஆவிகள் அருள**

945. மல்லலம் புவனத் துள்ள மன்னுயிர்க் கணங்கட் கெல்லாம்
எல்லவர் தமக்கும் மாயும் இருங்குறிப் புற்ற அந்நாள்.
**இரும் குறிப்புற்ற அவுணர்**

946. மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினால் அளக்கொ ணாமல்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே.
**மறைகளின் முடிவால் நிமலமூர்த்தி அறுமுக உருவாய் அருள்**

947. பாங்குறு தருச்சூழ் காலாப் பஃறலைச் சினைமென் கொம்பர்
ஆங்கதன் நடுவட் பொய்கை அணிநிழல் அமர்ந்தான் ஐயன்.
**பொய்கை நடுவண் ஐயன் அமர்ந்தான்**

948\. முடிபொறா தசையும் நாகர் முதியகால் பலகை வையம்
அடைதரு மைந்தன் மென்கால் அசைப்பவீற் றிருந்தா னன்றே.
**மென்கால் அசைப்ப மைந்தன் வீற்றிருந்தான்**

949\. எண்பெரு நாகர் சேடன் ஏந்தெழில் அரிமா னாக
ஒண்பகல் ஆடி காட்ட உமைமகன் அங்கண் உற்றான்.
**உமை மகள் அங்கண் உற்றான்**

950\. தரணியின் நடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில்
எரிசுடர் விளக்கத் துச்சி இருந்திடும் ஈசன் போன்றான்.
**சரவணப் பொய்கையில் செவ்வேள் எரிசுடர் உச்சி ஈசன் போன்றான்**

951\. பெருந்தரை நடுவ ணாகிப் பிறங்கிய சரவ ணத்தில்
புரந்தனில் விரும்பித் தாதை வைகிய இயற்கை போலும்.
**புண்டரீக புரந்தனில் தாதைபோல் சரவணத்தில் குமரவேள்**

952\. பாசிலை பரவித் துள்ளி படுவன உடுவைப் பாக
தேசுடை இரவி யாகச் சிவனெனச் சேய்அங் குற்றான்.
**சிவனெனச் சேய்**

953\. மாலயன் எழிலி மேலோன் வானவ ரேனோர் யாரும்
காலையின் உயிர்கள் நல்கிக் கமலமேல் இருத்தல் போலும்.
**அதிக்காலை உயிர்கள் நல்கி கமலமேல் போல் குமரன்**

954\. சலங்கிளர் தரங்கத் தெய்வச் சரவணக் கமலப் போதில்
இலங்கெழிற் பதும பீடத் தேறிய இயற்கை போலும்.
**தெய்வச் சரவணக் கமலம் பதும பீடம்**

955\. முண்டக மொன்றில் வைகும் முருகனைச் சுற்றிச் செங்கேழ்
கொண்டருள் முறையி னென்று நோற்றிடுங் கொள்கைத் தன்றே.
**முண்டகத்தில் வைகும் முருகன் அருள்**

956\. அணங்குசெய் தோற்றத் துப்பின் அவிர்சுடர்க் குமரற் சூழ
நுணங்கிடை மடவார் பல்லோர் நோற்றவண் நிற்றல் போலும்.
**அவிர்சுடர்க் குமரன் சூழ கமலக்காடு மலர்ந்தன**

957. ஒண்ணகை யுயிர்க்குஞ் சங்க மொருசில கமலம் வைக
எண்ணெயுஞ் சங்குஞ் சூழ இட்டது போலு மன்றே.
**ஒண்ணகை உயிர்க்குஞ் சங்கமொரு சிலகமலம்**
**அறுமுகப்பிள்ளை துய்ப்ப**

958. ஆரமும் வனசத் தோடும் அணிமக ரந்தச் சேறும்
வாரியந் தடாகம் அன்பால் வழிபடும் வண்ணம் போலும்.
**ஆரமும் வனசமும் தடாகம் அன்பால் வழிபடும்**

959. பங்கயச் செம்மற் போது பதனழிந் தவிழ்ந்து பாங்கர்
துங்கநல் விளக்க மாட்டித் திரைக்கையாற் சுலவல் போலும்.
**குமரன் சரவண திரைக்கை சுலவல்**

960. காசுறழ் பதுமப் போது களாசிய தாக மீச்செல்
மாசறு பொய்கை சேய்க்கு வளம்பட ஒழுகிற் றன்றே.
**பொய்கை சேய்க்கு வளப்பட ஒழுகிற்று**

961. அழல்நிவந் தன்ன கஞ்சத் தகல்தடத் திரைகள் நாப்பண்
எழினிகள் புடையே மென்கால் எறிதலின் இரட்டல் போலும்.
**மென்கால் எறிதலில் இரட்டல் போல் குமரன் பொய்கை**

962. கொன்படை சேவ லாகும் எகினமோர் கோடி ஈசன்
என்புடை யிருத்தி யென்றே தமித்தமி இரத்தல் போலும்.
**குமரற் சூலத் தடத்தில் இரத்தல்**

963. வளஞ்செறி இனைய பாலால் வான்சர வணமாம் பொய்கை
இளஞ்சிறு மதலை போல இனிதுவீற் றிருந்தான் மன்னோ.
**வான் சரவணம் சராசரம் யாவும் காப்பான்**

964. தீர்த்திகைக் கங்கை தன்னில் திகழ்சர வணத்தில் வந்த
கார்த்திகைத் தெரிவை மாரை விளித்திவை கழற லுற்றார்.
**சரவணத்தில் முதல் புரியாடல்**

965. சாற்றருஞ் சரவ ணத்தில் சண்முகத் தொருவ னாகி
போற்றுதிர் நாளு மென்ன நன்றெனப் புகன்று வந்தார்.
**சரவணத்தில் சண்முக குழவி போற்றுதீர்**

966. மறுவறும் ஆர லாகும் மாதர்மூ விருவர் தாமும்
அறுமுக வொருவன் வேறாய் அறுசிறார் உருவங் கொண்டான்.
**மாதவர் மூவிருவர் போற்ற அறுசிறார் உருவம் அறுமுகம் கொண்டான்**

967. ஆறுரு வாத லோடும் அறுவரும் மகிழ்ந்து வேறு
மாறிலா அருளால் ஆற்ற வருந்தினன் போல வுண்டான்.
**ஆறுருவாதலோடும் அறுவரும் மகிழ்ந்து மாறிலா அருள்**

968. உண்டபின் அறுவ ராகும் ஒருபெரு முதல்வன் றன்னைக்
கண்டுயில் செய்வித் தேத்தக் கருணையால் இனைய செய்வான்.
**அறுவர் ஆகும் ஒரு பெரு முதல்வன் கருணை**

969. துயிலவோ ருருவம் துஞ்சித் துண்ணென எழுந்து மென்சொற்
இயலவோ ருருவம் வாளா இரங்கவோ ருருவஞ் செய்தான்.
**துயில பயில அயில இயல இரங்க உருவம்**

970. ஒருருத் தவழ மெல்ல ஒருருத் தளர்ந்து செல்ல
ஒருருத் தாய்கண் வைக ஒருவனே புரித லுற்றான்.
**தவழ தளர்ந்து செல்ல நிற்றல் வீழ்தல் வைக ஒருவனே புரிதல்**

971. ஆடவோ ருருவம் செங்கை அறையவோ ருருவம் நின்று
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்.
**யாண்டும் தேடவோ ஆடவோ அறையவே என பல் உருவம் சிவன் மகன்**

972. இத்திறம் இருமூன் றான யாக்கையுங் கணம தொன்றில்
வித்தக விளையாட் டின்ன மாயையால் விரைந்து செய்தான்.
**இரு மூன்றான யாக்கை கணத்தில் பத்து நூறாய பேதப் பரமாய் உயிர்தொறும் ஆடல்**

973. சிற்பர னாகி வந்த செய்யவேள் ஆடற் றன்மை
அற்புத மகிழ்ச்சி கொண்டாங் கின்னவா றறைத லுற்றார்.
**சிற்பரன் செய்யவேள் ஆடல் அற்புத மகிழ்ச்சி**

974. சேயிவன் ஒருவ னேபல் சிறாருருக் கொண்டு நம்முன்
மாயமு மியற்ற வல்லன் வரம்பிலா அறிவன் மாதோ.
**சேயியன் ஆடல் அறிவரிது வரம்பிலா அறிவன்**

975. கைப்பயில் குழவி போலக் காட்டிய கடவுள் செய்யும்
ஒப்பறு பரனே ஆம்என் றுரைசெய்து தொழுது நின்றார்.
**பயில் குழவி ஒப்பறு பரன்**

976. அழலெனும் மீன வர்க்கத் தறுவருங் குமரன் ஆடல்
வழிபடு கடவு ளோரில் போற்றினர் மனங்கொள் அன்பால்.
**அழலெனும் மீனவர்க்கத் தறுவரும் குமரன் ஆடல் போற்றினர்**

977. அம்புயம் உறழுஞ் செங்கேழ் அறுமுகம் படைத்த கோல
தம்பிய ராகி வந்த தன்மையை விளம்ப லுற்றாம்.
**செங்கேழ் அறுமுகம் செவ்வேள் தம்பியர் துணை**

## 01. துணைவர்வரு படலம்

978. நஞ்ச யின்றவன் நெற்றிநாட் டத்தினால் நல்கும்
அஞ்சி யோடினள் இத்திற முணர்ந்தனள் அகத்துள்.
**வெஞ்சுடர்ப் பொறி அஞ்சி உணர்ந்தனன் விமலை**

979. மாய வன்முதல் அமரர்கள் ஈசனை வணங்கி
ஏயி னான்சர வணத்தெனத் தெரிந்தனள் இறைவி.
**ஆயவன் சுடர் மதலையாய் ஏயினன் சரவணம்**

980. அன்ன தற்பினர் உமையவள் எனதுபால் அமலன்
பன்னி யர்க்கெலாம் புதல்வரின் றாகெனப் பகர்ந்தாள்.
**உமையவள் அமலன் அருட்பெறு தடுத்த அன்ன பன்னியர்**

981. இமைய மாமகள் இத்திறம் புகன்று மீண்டேகி
கமல மார்அடி கண்டனள் பணிந்துகண் களித்தாள்.
**கமலமார் அடி கண்டு பணிந்து களித்தாள் உமை**

982. உம்பர் யாவருங் குறையிரந் திடலுநீ யுதவும்
எம்பெ ருந்தகை அவ்வழல் நீக்கலா லென்றாள்.
**அழல் நீக்கலால் மீண்டனன்**

983. கன்னி இங்ஙனம் பகர்தலுங் கருணைசெய் தருளி
என்னை யாளுடை நாயகன் முன்னிலங் கினவால்
**பகர்தலும் நாயகன் கருணை**

984. தளிரின் மெல்லடிப் பரிபுர மாயின தணந்து
தெளிரு முச்சுடர் அகத்திடை யமர்ந்திடுஞ் செயல்போல்.
**தெளிரு முச்சுடர் அகத்திடை அமர்த்திடல்**

985. எண்ணி லாநவ மணிகளின் உமையுரு வெனைத்தும்
நண்ணி னார்நவ சத்திகள் அமரர்நற் றவத்தால்.
**நவமணி உமையுரு கண்ணினால் எரிந்தருள் நவசக்திகள்**

986. பருப்ப தக்கொடி புரைநவ சத்திகள் பரமன்
கருப்ப முற்றனர் யாவதும் உமையவள் கண்டாள்.
**நவசக்திகள் பரமன் சிந்தையில் கருப்பம் கண்டனன் உமை**

987. முனம்பு ரிந்துல களித்தவள் அனையர்பால் முதிரும்
இனம்பு ரிந்தநீர் யாவரு மென்றுசூள் இசைத்தாள்.
**உலகளித்தவள் சூள் இசைத்தாள்**

988. ஆவ தெல்லையில் நடுக்கமுற் றஞ்சியே அங்கண்
ஒவி லாவிறல் வீரர்கள் இலக்கர்வந் துதித்தார்.
**மாதர் மெய் வியர்த்தல் தினகரத்திரள் போல்**
**இலக்க வீரர்கள் உதித்தனர்**

989. வடுத்த னைப்பொருங் கண்ணினர் வியர்ப்பினில் வந்தாங்
எடுத்த வாளினர் பலகைய ராகிஈண் டினரால்.
**கண்ணினர் வியர்ப்பில் இலக்கத்தன் ஈண்டினர்**

990. அனையர் யாவரும் ஈசனை யடைந்தனர் அன்பு
புனித நாயகன் அவர்தமை நோக்கியே புகல்வான்.
**அனையர் யாவரும் ஈசனை அடைந்து ஏத்த**
**புனித நாயகன் புகல்வான்**

991. மைந்தர் கேண்மினோ நீவிர்கள் யாவரும் வயத்தால்
முந்து பேரருள் புரிந்தனன் யாவர்க்கும் முதல்வன்.
**கந்தவேள் படையாகுதிர் பேரருள் முதல்வன்**

992. இன்ப நீருடன் இவையருள் புரிதலும் இலக்கம்
முன்பு நீங்கலா தொழுகினர் செய்பணி முறையால்.
**அருள் புரிதலும் இலக்கம் ஒழுகினர்**

993. மாற்ற ருஞ்சினத் தம்மைமுன் கொடுமொழி வழங்க
ஆற்று தொல்கருப் பத்துடன் பற்பகல் அமர்ந்தார்.
**தொலல்கருப்பத்துடன் பற்பகல்**

994. இகலு மாமணி மகளிர்தங் கருவினுள் இறைவன்
சுகன்எ னும்படி பரமனை முன்னியே தொழுது.
**பரமனை முன்னியே தொழுது**

995. அரத னங்களில் தோன்றிய மங்கையர் அகட்டில்
பரம தாதலும் உமையுடன் பரமனைப் பணிந்தார்.
**மங்கையர் உமையுடன் பரமனைப் பணிந்தார்**

996. இருவர் தம்மையும் பணிந்தவர் இன்றுகா றினைய
பரிவி னால்உமை திருமுகம் நோக்கியே பகர்வான்.
**உமை திருமுகம் பரிவினால் நோக்கிப் பகர்தல்**

997. ஏல வார்குழற் கவுரிநின் செய்யதா ளிடையில்
பால ரைப்பெற இனியருள் புரிகெனப் பணித்தான்.
**கவுரி பாலரைப்பெற இனியருள் புரி**

998. இறைவன் இங்கிது பணித்தலும் நன்றென இசையா
துறையும் யோகுடை வீரர்கள் இத்திறம் உணர்ந்தார்.
**பணித்தலும் நன்று**

999. மறத்த லில்லதோ ருணர்வுடை வீரர்கள் மற்றி
பிறத்த லுன்னியே முயன்றனர் ஆயிடைப் பெயர்வார்.
**வீரர்கள் யோகுவிட்டுப் பிறத்தல் உன்னினர்**

1000. பரிபு ரந்தனின் முன்வரு மங்கையர் பரைதன்
ஒருவி மைந்தரை அளித்தனர் யாவரு மொருசார்.
**மங்கையர் ஒருவி மைந்தரை அளித்தனர்**

1001. நந்தி தன்கண முதல்வர் களாகியே நணியோர்
சுந்த ரன்விடை முகத்தவன் றோன்றிய வாபோல்.
**நந்தி தன் கண முதல்வர்**

1002. பேர ஆகுவை யுடையவன் இளவல்பே ரருளால்
வீர வாகுவந் துதித்தனன் உலகெலாம் வியப்ப.
**செம்மணி பாவை தன்னில் வீரவாகு உதித்தனன்**

1003. விரள வல்லியார் தந்திசூ ரரிவியன் படையாம்
தரள வல்லிபால் தோன்றினன் வீரகே சரியே.
**தரள வல்லி பால் வீரகேசரி தோன்றினன்**

1004. மக்கள் வானவர்க் கருந்துயர் புரியும்வல் லவுணர்
தக்க வீரமா மகேந்திரன் வந்தவ தரித்தான்.
**புட்பராகத்தாற் வீரமா மகேந்திரன் அவதரித்தான்**

1005. ஆத வத்தனிக் கடவுளும் வடவையா ரழலும்
மாத வத்தினால் வீரமா மகேச்சுரன் வந்தான்.
**கோமேதகப் பாவை பால் வீரமா மகேச்சுரன்**

1006. தான மாநிலத் தேவர்கள் மகிழ்வுறத் தகுவ
மான வீரமா புரந்தரன் என்பவன் வந்தான்.
**வயிடூரிய மின்னிடை வீரமாபுரந்தரன்**

1007. சூர ராக்கமுந் துணைவர்தம் மாக்கமுஞ் சூழும்
வீர ராக்கதன் வந்தனன் வயிரமெல் லியல்பால்.
**வயிர மெல்லியல் பால்**

1008. கரக தத்தனி மால்வரை எடுத்தொரு கணத்தில்
மரக தத்திபால் வீரமார்த் தாண்டன் வந்தனனே.
**மரகத்திபால் வீரமார்த்தாண்டன்**

1009. மையல் மாக்கரி வாம்பரி விரவிய மணித்தேர்
தையல் தன்வயின் வலியவீ ராந்தகன் சனித்தான்.
**பவளமா மொழி தையல்பால் வீராந்தகன்**

1010. கந்து தித்திடும் வியன்நர மடங்கலுங் கடலின்
வந்து தித்தனன் வீரதீ ரப்பெயர் வலியோன்.
**நற்கனமணிப் பாவைபால் வீரதீரப் பெயர் வலியோன்**

1011. இந்த வீரரொன் பதினமரும் ஈசன தருளால்
உந்தி யின்வழி நான்முகத் தண்ணல்போல் உதித்தார்.
**வீரரொன் பதினமரும் ஈசனதருளால் மடவார் உந்தியின் வழி உதித்தார்**

**வேறு**

1012. உதிதருமத் திறல்வீரர் அரியணைமேல் அம்மையுட னுறைந்த நாதன்
புதியரலர் நந்திதனிக் கணத்தவரென் றான்சுருதிப் பொருளாய் நின்றான்.
**நந்தி கணத்தவர் சுருதிப் பொருளாய்**

1013. தேவியது கேட்டுமைந்தர்க் கருள்புரிய அவர்க்கெல்லாஞ் சிவன்வெவ் வேறு
ஏவலவன் பணித்தனசெய் தொழுகுதிரென் றான்அவரும் இசைந்து தாழ்ந்தார்.
**தேவி மைந்தர்க்கருள் புரிய இசைந்து தாழ்ந்தார்.**

1014. ஒன்பானாம் இலக்கத்தோர் ஓரிலக்கத் தோர்தம்மோ டொன்றிப் புல்லித்
தன்பாலை யிகவாமல் அவள்பணித்த தொழில்புரிந்து சார்த லுற்றார்.
**ஒன்பானாம் இலக்கத்தோர் விமலக்கன்னி பணித்த தொழில் சார்தல்**

## 02. சரவணப்படலம்

1015. ஏற்ற மானவர் ஒன்றொழி பதின்மரோ டிலக்கர்
போற்ற வைகினோன் கயிலையிற் புகுந்தமை புகல்வாம்.
**சரவணத்தடத்தில் வைகினோன் கயிலை புகல்**

1016. தருப்ப மிக்குளார் காணுறாத் தாவில்சீர் வெள்ளி
பருப்ப தக்கொடிக் கவ்வழி இனையன பகர்வான்.
**கொடிக்கு இனையன பகர்தல்**

1017. பொம்ம லுற்றிடு நான்முக னாதியோர் புந்தி
இம்ம லைக்கணே உய்க்குதும் வருகென இசைத்தான்.
**நின்சேயை இம்மலைக்கணே உய்க்கும்**

**வேறு**

1018. செம்புலி யதளினான் செப்பிற் றோர்தலும்
எம்பெரு முதல்வநீ யெழுதி யாலென்றாள்.
**முதல்வநீ யெழுதி நம்மதலை கொண்டேகு**

1019. கொம்மைவெம் முலையினால் குறிப டுத்திய
இம்மென அவளொடும் ஏற தேறினான்.
**நாயகன் இம்மென அவளொடும் ஏறதேறினான்**

1020. நந்தியின் எருத்தமேல் நங்கை யாளொடு
நந்திதன் கணத்தொடு நண்ணிப் போற்றினார்.
**நந்திற்று நண்ணிப் போற்றி**

1021. அந்தமில் விடத்தினை யடக்கு கையுடை
வந்திரு மருங்குமாய் வழுத்தி ஈண்டினார்.
**அந்தமில் விடத்தினை யடக்கு சுந்தரனார் ஈண்டி**

1022. ஆன்முக நந்தியெம் மடிகள் உய்த்திட
நான்முகன் மகபதி பிறரும் நண்ணினார்.
**நந்தி உய்ந்திட மால் நான்முகன் மகபதி நண்ணினார்**

1023. சல்லரி வயிர்துடி தடாரி சச்சரி
பல்லியம் இயம்பின பாரி டங்களே.
**பல்லியம் பாரிடங்கள் இயம்பின**

## வேறு

1024. வேத நான்குங் குடிலையும் வேறுள
கீதம் யாவும் இசைத்துக் கெழுமினார்.
**வேதம் நான்கு குடிலை பேரிசை நாதமொடு நணுகின**

1025. வள்ளல் வேணியின் மாமதி ஈண்டியே
வெள்ளி வெண்குடை வெய்யவர் ஏந்தினார்.
**வெண்குடை வெய்யவர் ஏந்தினார்.**

1026. சகர ரென்னுந் தலைவர்கள் தம்வழி
புகரில் சாமரம் பூதர்கள் வீசினார்.
**பூதர்கள் சாமரம் வீசினர்**

1027. சீறு மால்கரி சீயம் வயப்புலி
நூறு கோடியர் நொய்தெனச் சுற்றினார்.
**நூறுகோடி சாரதர் நொய்தெனச் சுற்றினார்**

1028. இமிலு டைப்பல ஏற்றிருங் கேதனம்
கமலம் உய்த்திடுங் காட்சியர் போன்றவே.
**கமலம் உய்த்திடு மன்ன ஏற்று கேதனம் புனல் தங்கிச் சிதறும்**

1029. அன்ன காலை அகிலமும் ஈன்றருள்
தன்ன தாலயத் தைத்தணந் தேகினான்.
**அகிலம் ஈன்றருள் கன்னி தன்னொடு**
**வானவன் கயிலை தணந்தேகினான்.**

## வேறு

1030. தன்ன தாலயம் நீங்கியே கயிலையைத் தணந்து
என்னை யாளுடை நாயகன் இறைவியுந் தானும்.
**நாயகனும் இறைவியும் சரவணம் புக்கு**

1031. பிறையு லாஞ்சடைத் தேவனும் அவன்றனைப் பிரியாது
நிறையும் வான்புனற் பொய்கையங் கரையிடை நின்றார்.
**தேவனும் மாதும் அறுஉரு சிறுவன் நீர்மை நோக்கி திருவருள்**

1032. முண்ட கச்சர வணந்தனில் மூவிரு வடிவம்
கண்டு மாமுக மலர்ந்தனன் தனதுளங் களித்தான்.
**முண்டக சரவணம்தனில் மூவிரு வடிவம் குமரன்**
**நாயகன் அகிலமீன்றாளை கண்டு களித்தான்**

1033. அந்த வேலையிற் கவுரியை நோக்கியெம் மையன்
சிந்தை கொண்டபே ராதரந் தன்னொடுஞ் சென்றாள்.
**ஐயன் இயம்ப கவுரி பேர் ஆதாரம் தன்னொடுஞ் சென்றாள்**

1034. சரவ ணந்தனில் தனதுசேய் ஆறுருத் தனையும்
உருவம் ஒன்றெனச் செய்தனள் உலகமீன் றுடையாள்.
**சரவணம் தனில் தன்சேய் ஆறுருத்தனை உருவம்**
**ஒன்றெனச் செய்தாள்**

1035. எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறு மெல்லை
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.
**எந்தை சக்திகள் கவுரிதன் குமரன் கந்தன்**

1036. முன்பு புல்லிய குமரவேள் முடிதொறும் உயிர்த்து
அன்பெ னப்படு கின்றதித் தன்மையே அன்றோ.
**குமரவேள் முடிதொறும் உயிர்த்து அன்பு**

1037. ஆதி நாயகன் கருணையாய் அமலமாய்ப் பரம
காதல் மாமகற் கன்பினால் அருத்தினாள் கவுரி.
**மாமகற்கு போதநீர் அருந்தினாள் கவுரி**

1038. கொங்கை யூறுபால் அருத்தியே குமரனைக் கொடுசென்று
பொங்கு பேரருள் நீர்மையா லிருத்தினன் புடையில்.
**குமரனைப் பேரருள் நீர்மையால் புடையில் இருத்தினன்**

1039. அருத்தி தந்திடு குமரவேள் ஒருபுடை அமர
இருத்தி னான்தன திடந்தனில் எம்மையாள் இறைவன்.
**குமரவேள் புடை அமர எம்மையாள் இடம்தனில் இருத்தினான்**

1040. ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் றனக்கும்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.
**இறைவிக்கும் எம்பிரான்றனக்கும் குமரவேள்**
**நடுவுறும் பான்மை மாலை**

**வேறு**

1041. விடையுற்றிடு பரமற்குமவ் விமலைக்கும் விறற்சேய்
புடையுற்றனர் எதிருற்றனர் புறனுற்றனர் புகழ்வார்.
**பரமற்கும் விமலைக்கும் விறற்சேய் இடையற்றமை புகழ்வார்**

1042. காமாரிதன் விழிதந்திடு கழிகாதல ஒழியா
பூமாரிகள் பொழிந்தார்பணிந் தெழுந்தாசிகள் புகன்றார்.
**காமாரி தன் விழிதந்திடு கழிகாதல் பூமாரி பொழிந்து**
**பணிந்து தொழுது ஆசிகள்**

1043. வாரற்புத முறவீங்கிய வன்னத்தன முருந்தின்
பேரற்பொடு பணிந்தேயெழுப் பெருந்தண்ணளி புரிந்தான்.
**ஆரல் பெயர் மங்கையர் பணிந்து எழு தண்ணளி**

1044. கந்தன்றனை நீர்போற்றிய கடனால்இவன் உங்கள்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவம் என்றான்.
**கந்தன் தனை போற்றிய கடனால் பரம் நல்குவம்**

1045. என்னாவருள் புரிகின்றுழி இமையத்தவள் சேயை
அன்னாள்முலை அமுதுக்கவை யாறொத்தொழு கினவே.
**இமையத்தவள் சேயை அன்னாள் அமுது**

1046. வானார்சுர நதிபோற்சர வணத்தூடவை புகலும்
மீனாயவண் வதிகின்றவர் புகும்பாலினை மிசைந்தார்.
**சுரநதிபோல் சரவணத்தூடு புக மீனாய அறுவர் மிசைந்தார்**

1047. கயிலைக்கிறை யவள்மெய்த்தன கலசத்தினும் உகுபால்
துயிலுற்றுனர் பவரொத்தனர் மயலற்றிடு தொடர்பால்.
**மயலற்றிடு தொடர்பால் கயிலைக்கிறையவள் பால்**

1048. அன்னாரறு வருமாயெழுந் தகன்பொய்கைவிட் டமலன்
சின்னாள்மிசை இவன்வந்தருள் செயுமென் றருள் செய்தான்.
**அறுவரும் பொய்கைவிட்டு அமலன் போற்ற சின்னாள்மிசை**
**சேயருள் செய் அருள்**

1049. நன்றாலெனத் தொழுதன்னவர் நாதன்விடை பெற்றே
பொன்றாழ்சடை யினன்வெள்ளியம் பொருப்பின்றலை புக்கான்.
**நாதன் வெள்ளியம் பொருப்பு புக்கான்**

1050. அடையார்புர மெரிசெய்திடும் அமலன்கயி லையிற்போய்
இடையாரரி யணைமீமிசை இருந்தான் அருள் புரிந்தே.
**அமலன் கயிலையில் விறற்சேயோடும் மடவானெடும்**
**அணைமீமீசை அருள்**

1051. சேயோனெனும் முன்னோன்றனைச் சிலம்பின்வரும் ஒன்பான்
ஆயோர்தம துயிரேயென அவனைக்குறித் தணைந்தார்.
**சேயோன் தமதுயிரே என பணிந்தேத்தி அணைந்தனர்**

## 01. திருவிளையாட்டுப் படலம்

1052. அனந்தரம தாகஉமை யம்மையொடு பெம்மான்
மனங்கொளருள் நீர்மைதனின் ஆடலை மதித்தான்.
**உமையம்மையொடு பெம்மான் அருள் நீர்மை தளின்**
**குமரேசன் ஆடலை மதித்தான்**

1053. தட்டைஞெகி ழங்கழல் சதங்கைகள் சிலம்ப
பட்டிகைமி னக்குமரன் ஆடல்பயில் கின்றான்.
**கழல் சதங்கைகள் சிலம்ப குமரன் ஆடல்**

1054. மன்றுதொறு லாவுமலர் வாவிதொ றுலாவும்
குன்றுதொறு லாவுமுறை யுங்குமர வேளே.
**மன்று வாவி குன்று தொறுலாவும் உறையும் குமரவேள்**

1055. குளத்தினுல வும்நதி குறைந்திடு துருத்தி
உளத்தினுல வும்சிவன் உமைக்கினிய மைந்தன்.
**உளத்தின் உலவும் சிவன் உமை மைந்தன்**

1056. இந்துமுடி முன்னவன் இடந்தொறு முலாவும்
செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துழி யுலாவும்.
**முன்னவன் இடந்தொறும் குமரன் செந்தமிழ்**
**வடாதுகலை சேர்ந்துழியிலாவும்**

1057. மண்ணிடை யுலாவும்நெடு மாதிர முலாவும்
கண்ணிடை யுலாவும்இறை கண்ணில்வரு மண்ணல்.
**இறை கண்ணில் வரும் அண்ணல் மண்ணிடை**
**நெடுமாதிர உலாவுவர்**

1058. கந்தருவர் சித்தர்கரு டத்தொகைய ரேனோர்
உந்துதவர் வைகுமுல கந்தொறு முலாவும்.
**உந்துவர் வைகு உலகம் தொறும் உலா**

1059. அங்கமல நான்முகன் அரும்பத முலாவும்
திங்கள்முடி மேற்புனை சிவன்பத முலாவும்.
**சிவன் பதம் உலா**

1060. இப்புவியில் அண்டநிரை யெங்கணு முலாவும்
செப்பரிய ஒர்பரசி வன்றனது மைந்தன்.
**அண்டநிரை உலா சிவன் மைந்தன்**

**வேறு**

1061. இருமூவகை வதனத்தொடும் இளையோனெனத் திரியும்
தெரிவார்கணை மறவீரரில் திரிதந்திடுஞ் செவ்வேள்.
**இருமூவகை வதனத்தொடும் செவ்வேள்**

1062. காலிற்செலும் பரியிற்செலும் கரியிற்செலும் கடுந்தேர்
மாலிற்செலும் பொருசூரொடு மலையச்செலும் வலியோன்.
**கால் பரிகரி தேர் விமானம் மால் மலைய செலும் வலியோன்**

1063. பாடின்படு மணியார்த்திடும் பணைமென்குழல் இசைக்கும்
நாடும்படி பாடுங்களி நடனஞ்செயும் முருகன்.
**மணி ஆர்த்திடும் பணை மென்குழல் இசை பாடும்**
**களி நடனம் செயும் முருகன்**

1064. இன்னேபல வுருவங்கொடி யாண்டுங்கும ரேசன்
பொன்னேர்கழ லிணைதாழ்ந்தனள் போற்றிப்புகல் கின்றாள்.
**பலவுருவங் கொடியாண்டுங் குமரேசன் வியவா**
**உமை ஈசன் கழல் போற்றி புகல்**

1065. கூடுற்றநங் குமரன்சிறு குழவிப்பரு வத்தே
பீடுற்றிடு நெறிதன்னையெம் பெருமான்மொழிக என்றாள்.
**குமரன் பீடுற்றிடு நெறிதன்னை எம்பெருமான் மொழிகஎன உமை**

1066. அல்லார்குழ லவள் இன்னணம் அறியார்களின் வினவ
நல்லாய்இது கேண்மோவென அருளாலிவை நவில்வான்.
**உமைகடவினை நல்லாய் கேண்மோவென அருளாலிவை**
**நவிலல்**

**வேறு**

1067. ஈங்கனம் நமது கண்ணின் எய்திய குமரன் கங்கை
பாங்கரில் வருத லாலே சரவண பவன்என் றானான்.
**கண்ணின் எய்திய குமரன் கங்கை தாங்கி சரவணத்திடல்**
**காங்கெயன் எனவும் சரவணபவன் எனவும் பெயர்**

1068. தாயென ஆரல் போந்து தனங்கொள்பால் அருத்த லாலே
ஆயத னாலே கந்த னாமெனு நாமம் பெற்றான்.
**ஆரல் கார்த்திகேயன் தொல்பெயர் சேயவன் வடிவம்**
**ஆறும் திரட்டி ஆயதால் கந்தன்**

1069. நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற வன்றே.
**நன்முகம் இருமூன்று நமக்கு கந்தன் மூவிரு எழுத்தும்**
**பிரணவமாய் குமரன்**

1070. ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.
**அறுமுகன் யாவையும் உணர்ந்தான் போற்றினார்க்கு அருள்**

1071. மேலினி யனைய செவ்வேள் விரிஞ்சனைச் சுருதிக் கெல்லாம்
ஞாலமன் னுயிரை யெல்லா நல்கியே நண்ணும் பன்னாள்.
**செவ்வேள் ஞால மன்னுயிரை நல்கல்**

1072. தாரகன் றன்னைச் சீயத் தடம்பெரு முகத்தினானை
பேரருள் புரிவன் நின்சேய் பின்னர்நீ காண்டி யென்றான்.
**பேரருள் புரிவன் நின்சேய் நீ காண்டி**

1073. என்றலும் இளையோன் செய்கை எம்பெரு மாட்டி கேளா
ஒன்றொரு விளையாட் டுள்ளத் துன்னியே புரித லுற்றான்.
**குமரன் விளையாட்டு உள்ளம்**

1074. குலகிரி யனைத்து மோர்பாற் கூட்டிடும் அவற்றைப் பின்னர்
பிலனுற அழுத்துங் கங்கைப் பெருநதி யடைக்கு மன்னோ.
**கிரிகடல் ஒன்றாக்கியும் ஆழிவெற்பை பிலனுற அழுத்தி கங்கை அடைதல்**

1075. இருள்கெழு பிலத்துள் வைகும் எண்டொகைப் பணியும் பற்றி
உருள்கெழு சிறுதே ராக்கொண் டொல்லென உருட்டிச் செல்லும்.
**குமரவள்ளல் மேருவை தேராக உருட்டி விளையாடினார்**

1076. ஆசையங் கரிகள் தம்மை அங்கைகொண் டொன்றோ டொன்று
வாசுகி தன்னைப் பற்றி மாறிகல் விளைக்கு மன்றே.
**கரிகள் பூசல் கங்கை தனி வடவை கலுழனோடு வாசுகி இகல்**

1077. பாதல நிலயத்துள்ள புயங்கரைப் படியிற் சேர்த்தி
சீதள மதியை வெய்யோன் செல்நெறிப் படுத்துச் செல்லும்.
**மதியை வெய்யோன் செல்நெறியில்**

1078. எண்டிசை புரந்த தேவர் இருந்ததொல் பதங்க ளெல்லாம்
வண்டின முறாத செந்தண் மாலைசெய் தணியு மன்றே.
**வண்டினமுறா செந்தண் மாலை அணி**

1079. வெய்யவர் மதிகோள் ஏனோர் விண்படர் விமானந் தேர்கள்
வையகந் திசைமீச் செல்ல வானியில் விடுக்கு மைந்தன்.
**வெய்யவர் மதிகோள் ஏனோர் விண்படர் விமானந் தேர்கள் வையகந்திசை மீச் செல்ல விடுக்கும் குமரன்**

1080. வடுத்தவிர் விசும்பிற் செல்லும் வார்சிலை யிரண்டும் பற்றி
அடற்றனு விஞ்சை காட்டும் ஆறிரு தடந்தோள் அண்ணல்.
**விசிம்பிற் செல்லும் வார்சிலை யிரண்டும் பற்றி ஆறிரு தடந்தோள் அண்ணல் விஞ்சை**

1081. இத்திறம் உலகந் தன்னில் இம்பரோ டும்பர் அஞ்சி
முத்தர்தம் விழியின் அன்றி முன்னுறா நிமல மூர்த்தி.
**முத்தர்தம் விழியில் முன்னுறு நிமலன் குமரன்**

1082. ஆயது காலை ஞாலத் தவுணர்கள் அதனை நோக்கி
தீயவ ராத லாலே கண்டிலர் தியக்க முற்றார்.
**தீயவர் கண்டிலர் குமரன் வடிவு**

1083. சிலபகல் பின்னும் வைகுந் திறத்தியல் ஆயுள் கொண்டே
மலரயன் தெரியா அண்ணல் மாயமே இனைய தென்றார்.
**செவ்வேள் திறத்தியல் அண்ணல் மாயம்**

1084. ஆயதோர் குமரன் செய்கை அவனியின் மாக்கள் காணா
மேயின விம்மி தங்கொல் இதுவென வெருவ லுற்றார்.
**குமரன் செய்கை அவனியில் தீயன மாயமேய**

1085. புவனியின் மாக்க ளின்ன புகலறுந் திசைகாப் பாளர்
எவரிது செய்தார் கொல்லென் றிரங்கினர் யாருங் கூடி.
**மாக்கள் சண்முகன் செய்கை நாடி காணாது எவர்கொல்**

1086. தேருறு மனைய தேவர் தேவர்கோன் சிலவ ரோடு
சூரர்கோன் றனக்கும் அஞ்சித் துயரொடு பெயர்த லுற்றார்.
**சிலவரோடு அஞ்சித்துயர்**

1087. வடவரை யும்பர் தன்னில் வானவ ரானோ ரேகி
இடருறு மனத்தி னோடும் இருந்தஇந் திரனைக் கண்டார்.
**ஆறுமாமுக ஆடல் உருக்காணா இடர் மனம்**

1088. அரிதிரு முன்ன ரெய்தி அடிதொழு தங்கண் வைகி
புரிகலர் அவுணர் போலும் புகுந்தஇப் புணர்ப்பென் னென்றார்.
**தொன்னிலைமை திரிபுற புரிகலர்**

1089. வானவர் இறைவன் அன்னோர் மாற்றமங் கதனைக் கேளா
மேனிகொள் கமலத் தோனை வினவுதும் எழுதி ரென்றான்.
**உணர கமலத் தோனை வினவுதும்**

1090. எழுதிரென் றுரைத்த லோடும் இந்திரன் முதலா வுள்ளோர்
குழவிய தென்ன அன்ன குன்றிடைத் தோன்றி னானால்.
இந்திரன் முதலாவுள்ளோர் மெய்த்தவம் புரிந்தநீரால்
**குழவியதென்ன அன்ன குன்றிடை குமரன்.**

1091. வாட்டமொ டமரர் கொண்ட மயக்கறத் தனாது செய்கை
கோட்டினைப் பறித்து வீசிக் குலவினன் குழவி யேபோல்.
**செம்பொற் கோட்டினை பறித்து குழவிபோல் வீசினான்**

1092. தோன்றிய குமரன் றன்னைச் சுரபதி சுரரா யுள்ளோர்
கான்திரி அரியை நேரும் விலங்கெனக் கலங்கிச் சொல்வார்.
**தோன்றிய குமரன்றன்னைக் கான்திரி அரி அன்ன**

**வேறு**

1093. நொய்தாங் குழவி யெனக்கொள்கிலம் நோன்மை நாடின்
செய்தாடல் கொள்வம் இவணென்று தெரிந்து சூழ்ந்தார்.
**குழவியெனக் கொள்கிலம் எய்தாமாயம் போர் செய்தாடல் கொள்வம்**

1094. சூழுற்ற வெல்லை இமையோர்க்கிறை தொல்லை நாளில்
வேழத்தை உன்ன அதுவந்து மேரு வின்பால்.
**வேழம் உன்ன மேருவின் பால்**

1095. தந்தங்கள் பெற்று வருகின்ற தனிக்க ளிற்றின்
மைந்தன் றனைவா னவரோடும் வளைந்து கொண்டான்.
**குமரக் கடவுளை இந்திரன் வானவரோடு வளைந்து கொண்டான்**

1096. வன்னிச் சுடர்கால் விசையோடு மரீஇய பாங்கில்
இன்னற் படுவா னவரும்மிகல் செய்ய வுற்றார்.
**இன்னற் படுவானவர் இகல்**

1097. தண்ணார் கமலத் துணைமாதரைத் தன்னி ரண்டு
எண்ணாது முன்போல் தனதாடல் இழைத்த வேலை.
**கந்தன் தனதாடல் இழைத்தல்**

1098. எட்டே யொருபான் படைதம்முள் எறிவ வெல்லாம்
விட்டே தெழித்தான் குமரன்மிசை வேள்வி வேந்தன்.
**வேள்வி வேந்தன் குமரன் மிசை விட்டே தெழித்தான்**

1099. வயிரத் தனிவெம் படையெந்தைதன் மார்பு நண்ணி
செயிருற் றியம்பி முருகேசன்முன் சென்ற தன்றே.
**வயிர வெம்படை அயிரிற்றுகளாக வேழம் செயிருற்று முருகேசன் முன்**

1100. செல்லுங் கரிகண் டுமையாள்மகன் சிந்தை யாலோர்
எல்லொன்று கோலொன் றதன்நெற்றியுள் ஏக வுய்த்தான்.
**எல்லொன்று கோலொன்றதன் நெற்றியுள் உய்த்தான்**

1101. அக்கா லையில்வேள் செலுத்துங்கணை அண்டர் தம்மின்
மைக்கார் முகில்அச் சுறவேயது மாண்ட தன்றே.
**வேள்கணை அண்டர் அச்சுறவே**

1102. தன்னோர் களிறு மடிவெய்தலுந் தான வேந்தன்
முன்னோன் மதலை யொருகோலவன் மொய்ம்பி லெய்தான்.
**மதலை ஒரு கோல் எய்தான்**

1103. கோலொன்று விண்ணோர்க் கிறைமேல்கும ரேசன் உய்ப்ப
வேலொன் றதனைக் கடிதேகுகன் மீது விட்டான்.
**வேல் ஒன்று கடிதே குகன் மீது**

1104. குந்தப் படையோர் சிறுபுற்படு கொள்கை யேபோல்
தந்திக் கிறைவன் தடம்பொன்முடி தள்ளி ஆர்த்தான்.
**கந்தக் கடவுள் பொன்முடி தள்ளி ஆர்த்தான்**

1105. துவசந் தனையோர் கணைகொண்டு துணித்து மார்பிற்
சிவசங் கரஎன் றரிபோற்றிய செம்மல் மைந்தன்.
**சிவசங்கரன் அவசம்பட ஏழ்கணை தூண்டினன்**

1106. தீங்கா கியவோ ரெழுவாளியுஞ் செல்ல மார்பின்
பாங்காய் வளைந்து பொருதார்படு கின்ற தோரார்.
**எழுவாளியும் மேலை ஓங்காரம் காலசாமீப்பியம்**

1107. இவ்வா றமரர் பொருமெல்லையில் ஈசன் மைந்தன்
ஐவா ளியினால் சமன்ஆற்றல் அடக்கி னானால்.
**ஈசன் மைந்தன் ஐவாளினால் சமன் ஆற்றல் அடக்கினான்.**

1108. ஓரம் பதனால் மதிதன்னையம் ஒன்றி ரண்டு
வீரம் பகர்ந்த கனலோனையும் வீட்டி நின்றான்.
**மதி கதிர் அனிலம் கனல் வீடினன் குமரன்**

1109. நின்றார் எவருங் குமரேசன் நிலைமை நோக்கி
சென்றா லெனவே இரிந்தோடினர் சிந்தை விம்மி.
**குமரேசன் நிலைமை நோக்கீ இரிந்தோடினர்**

1110. ஓடுஞ் சுரர்கள் திறநோக்கி உதிக்கும் வெய்யோன்
வீடுங் களத்தி னிடையேதனி மேவி நின்றான்.
**குமரன் தனி மேவி**

1111. ஒல்லா தவரிற் பொருதேசில உம்பர் வீழ
எல்லா ரையும்அட் டுலவும்தனி ஈசன் ஒத்தான்.
**விசாகன் மேனாள் அட்டுலவும் தனி ஈசன்**

**வேறு**

1112. சுரர்கள் யாருந் தொலைந்திட வென்றுதான்
குருவை யெய்திப் புகுந்தன கூறினான்.
**உமைமகன் மேவுழி நாரதன் கூறினான்**

1113. நற்ற வம்புரி நாரதன் கூற்றினை
சொற்று வல்லை துயருழந் தேகினான்.
நாரதன் கூற்றில் துயர்

1114. ஆத பன்மதி அண்டர் தமக்கிறை
போதல் மேயினன் பொன்னெனும் பேரினான்.
**போதல் மேயினள்**

1115. ஆவி யின்றி அவர்மறி குற்றது
மேவி யாடும் வியப்பினை நோக்கினான்.
**சண்முகன் வியப்பினை நோக்கினான்**

1116. முழுது ணர்ந்திடு மொய்சுடர்ப் பொன்னவன்
தொழுது நின்று துதித்திது சொல்லுவான்.
**பொன்னவன் குமரனைத் தொழுது துதித்து சொல்லுவான்**

1117. கரியரி முகத்தினன் கடிய சூரனென்
வரையிடை மகபதி மறைந்து வைகினான்.
**மகபதி மறைந்து வைகினான்**

1118. அன்னவன் நின்னடி அடைந்து நிற்கொடே
உன்னினன் பிறிதுவே றொன்றும் உன்னலான்.
**அன்னவன் உன்னினன் நின்னடி**

1119. பற்பகல் அருந்தவம் பயின்று வாடினன்
சொற்படு துயரெலாந் தொலைத்து ளானென.
**சொற்படுதுயர் தொலை பற்பகல் அருந்தவம்**
**உற்பவம் தற்பர சரவணதடம்**

1120. கோடலும் மராத்தொடு குரவுஞ் செச்சையும்
ஆடல்செய் திடுவதை அறிகி லானரோ.
ஆடல் செய்திடுவதை அறிகிலர்

1121. நாரணன் முதலினோர் நாடிக் காணொணா
யாருன தாடலை அறியும் நீரினார்.
**ஆடல் அறியும் நீரினர் யாரோ**

1122. பற்றிய தொடர்பையும் உயிரை யும்பகுத்து
உற்றுன தாடலை உணர வல்லமோ.
**பற்றியதை உணர்கிலம் ஏதம் தீர்கிலம்**
**உற்றுணராடலை உணரவல்லில்**

1123. ஆதலால் வானவர்க் கரசன் ஆற்றவும்
நீதிசேர் தண்டமே நீபு ரிந்தனை.
**ஓதி இன்மையால் தீதென இந்திரன் செருவ**
**நீதிசேர் தண்டப் புரிந்த நீவிர்**

1124. மற்றுள தேவரும் மலைந்து தம்முயிர்
செற்றிடின் எவரருள் செய்யற் பாலினோர்.
**தேவர்கள் அறிவில் அற்றனர் அருள் செய்யற் பாலினோர் எவர்**

1125. சின்மய மாகிய செம்மல் சிம்புளாம்
மின்மினி தனையடல் விசய மாகுமோ.
**சின்மயச் செம்மல் மின்மினி தனை அடல் அல்**

1126. ஒறுத்திடும் அவுணர்க ளொழிய வேரொடும்
பொறுத்தருள் கருணையாற் புணரி போன்றுளாய்.
**கருணையாற் புணரி போல் பொறுத்து அருள்**

1127. பரமுற வணிகரைப் பரித்துப் பல்வளம்
திருவினர் பொருதுனைச் செருவில் துஞ்சினார்.
**பரமுற வணிகர் கலம் கவிழ்தல் அன்ன பொருது துஞ்சினர்**

1128. தொழுதகு நின்னடித் தொண்ட ராற்றிய
எழுவகை யருளென இறைஞ்சிக் கூறினான்.
**அருளென இறைஞ்சி**

1129. பொன்னவன் இன்னன புகன்று வேண்டிட
அந்நிலை எழும்வகை அருள்செய் தானரோ.
**முன்னர் முன்னவர் அருள் செய்தார்**

**வேறு**

1130. அந்தியின் வனப்புடைய மெய்க்குகன் எழுப்புதலும் அன்ன பொழுதே
கந்தனொடு கொல்சமர் புரிந்ததென உன்னினர் கலங்கி யெவரும்.
**கந்தனொடு சமர் புரிந்ததென கலங்கினர்**

1131. கலங்கினர் இரங்கினர் கலுழ்ந்தனர் புலர்ந்தனர் கவன்றனர்உளம்
இலங்கெழில் முகம்பொலி விகந்தனர் பொருந்தமை
யிகழ்ந்த னர்களே.
**பொருந்தமை இகழ்ந்து கலங்கி இரங்கி கலுழ்து
புலர்ந்து கவன்று உளம் மலங்கினர்**

1132. துஞ்சியெழும் அன்னவர்கள் ஏழுலகு முன்னுதவு சுந்த ரிதரும்
கஞ்சமல ரிற்பல நிறங்கொள்அரி யின்தொகை கவைஇய தெனவே.
**பல்நிறஅரிகள் சூழ் கஞ்சமலர் அன்ன அணையாள்**

1133. கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
எந்தைநம என்றுமிளை யோய்நம குமாரநம என்றுதொழுதார்.
**கந்தநம என்றுமிளை யோய் நம குமாரநம**

1134. பொருந்துதலை யன்புடன் எழுந்தவர்கள் இவ்வகை புகழ்ந்து
மனமேல்
பெருந்துயரும் அச்சமு மகன்றுதொழு தேயிணைய பேசினர்களால்.
**குமரன் வருந்தலீர் வருந்தலீர் கருணை**

1135. ஆயவமு தத்தினொடு நஞ்சளவி உண்குநரை அவ்வி டமலால்
நீயெமை முடித்தியலை அன்னதவ றெம்முயிரை நீக்கி யதரோ.
**முடித்தி அன்ன தவறு எம்**

1136. பண்டுபர மன்றனை இகழ்ந்தவன் மகத்திலிடு பாக மதியாம்
தண்டமுறை செய்தவை தொலைத்தனை உளத்துடைய தண்ண
ளியினால்.
**தண்டமுறை செய்து பலம் தொலைந்த குமரேசன் தண்ணளி**

1137. ஆதலின் எமக்கடிகள் செய்தஅரு ளுக்குநிக ராற்று வதுதான்
தாதையர் பெறச்சிறுவர் தங்களை அவர்க்கருள்கை தக்க பரிசோ.
**ஆதிபரம் அருள்**

1138. அன்னதெனி னுந்தெளிவில் பேதையடி யேம்பிழை யனைத்தும்
உளமேல்
இன்னுமுண ரும்படி தெரித்துமென ஓருருவம் எய்தி னனரோ.
**ஓருருவம் இன்னு முணரும்படி குமரவேள் எய்தினன்**

1139. எண்டிசையு மீரெழு திறத்துலகும் எண்கிரியு மேழு கடலும்
விண்டும் அரனுஞ்செறிய ஓருருவு கொண்டனன் விறற்கு மரனே.
**எண்டிசையு ஈரேழு உலகும் அண்டநிரை யானவு அனைத்தும் குமரன் ஓருருவில்**

1140. மண்ணளவு பாதலமே லாஞ்சரணம் மாதிர வரைப்பும் மிகுதோள்
எண்ணளவு சிந்தையுமை ஐந்தொழிலும் நல்கியருள் ஈச னுயிரே.
**சிந்தை உமை ஐந்தொழில் நல்கி அருள் ஈசன் உயிர்**

1141. ஆனதொரு பேருருவு கொண்டுகும ரேசனுற அண்டர் பதியும்
சானுவள வாஅரிது கண்டனர் புகழ்ந்தினைய சாற்றி னர்களால்.
**ஒரு பேருருவு கொண்ட குமரேசன் அரிது கண்டு புகழ் சாற்றினர்**

## வேறு

1142. சேணலம் வந்த சோதிச் சிற்பர முதல்வ எம்முன்
நீணலங் கொண்டு நின்ற நெடுந்தகை அதனைக் கேளா.
**சேணலம் சோதிச் சிற்பர முதல்வன் நீணலம் காட்டி**

1143. கருணைசெய் தொளிகள் மிக்க கண்ணவர்க் கருளிச் செவ்வேள்
இரணிய வரைக்கண் நின்ற இந்திரன் முதலோர் கண்டார்.
**செவ்வேள் கருணை செய் தொளிகள் மிக்க கண் அவர்க்கு அருளி**

1144. அடிமுதன் முடியின் காறும் அறுமுகன் உருவ மெல்லாம்
வடிவினில் இருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச் சொல்வார்.
**யாதும் யாரும் அறுமுகன் உரு அருள் நோக்கி இருத்தல்**

1145. அம்புவி முதலாம் பல்பே ரண்டமும் அங்கங் குள்ள
எம்பெரு மானின் மெய்யோ அகிலமும் இருப்ப தம்மா.
**பல்பேரண்டமும் உயிர்கள் யாவும் உயிரலாப் பொருள்களும் சிவனொடு செறிதல் எம்பெருமான் மெய்**

1146. அறிகிலம் இந்நாள் காறும் அகிலமும் நீயே யாகி
சிறியம்யாம் உனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்.
**அகிலமும் நீயே உனது தோற்றம் தெரிந்திட வல்லமோ**

1147. முண்டகன் ஒருவன் துஞ்ச முராரிபே ருருவாய் நேமி
கொண்டன னென்னுந் தன்மை குமரநின் வடிவிற் கண்டேம்.
**எல்லா அண்டமும் அணிப்பூணார மேனி அன்ன குமரவடிவு**

1148. நாரணன் மலரோன் பன்னாள் நாடவுந் தெரிவின் றாகி
யாரருள் எய்தின் நம்போல் அடிமுடி தெரிந்தி டாரோ.
**அடிமுடி எந்தையர் அருள் பேரழல்**

1149. அரியொடு கமலத் தேவும் ஆடல்செய் தகிலந் தன்னோ
திருவுரு விதனுக் காற்றச் சிறியன போலு மன்றே.
**ஆடல் செய்திருவுரு பேரு**

1150. ஆகையால் எம்பி ரான்நீ அருவுரு வாகி நின்ற
நாகமே லிருத்து மாற்றால் நண்ணினை குமர னேபோல்.
**அருவுருவாகி குமரனே போல் நண்ணினை**

1151. எவ்வுரு வினுக்கும் ஆங்கோ ரிடனதா யுற்ற உன்றன்
வெவ்வுரு வத்திற் செல்லேம் வீடுபே றடைது மன்றே.
**செவ்வுருவம் வீடு பேறு**

1152. இனையன வழுத்திக் கூறி யிலங்கெழிற் குமர மூர்த்தி
மனமிக வெருவக் கண்கள் அலமர மயங்கிச் சொல்வார்.
**குமரமூர்த்தி பேருருவில் அலமர மயக்க அருள்**

1153. எல்லையில் ஒளிபெற் றன்றால் எந்தைநின் னுருவம் இன்னும்
தொல்லையின் உருவங் கொண்டு தோன்றி யேஅளித்தி யென்றார்.
**எல்லையில் ஒளி எந்தை நின்னுருவம் தொல்லை உரு அளி**

1154. என்றிவை புகன்று வேண்ட எம்பிரான் அருளால் வான்போய்
குன்றிருஞ் சிறைகள் ஈர்ந்த கொற்றவன் கூற லுற்றான்.
**எம்பிரான் அருள் பேருருநீத்து அறுமுகம்**

1155. தொன்னிலை தவாது வைகுஞ் சூரனே முதலா வுள்ள
என்னரசியற்றி எந்தாய் இருத்திஎன் குறையீ தென்றான்.
**எந்தாய் குறையீ**

1156. இகமொடு பரமும் வீடும் ஏத்தினர்க் குலப்பு றாமல்
பகவனுக் கொருவன் நல்கப் பராவிய போலு மாதோ.
**இகமொடு பரம் அறுமுக அகன் அமர் அருள்**

1157. வானவர் கோனை நோக்கி வறிதுற நகைத்துச் செவ்வேள்
தானவர் கிளையை யெல்லாம் வீட்டுதும் தளரேல் என்றான்.
**செவ்வேள் தளரேல் என்றான்**

1158. கோடலங் கண்ணி வேய்ந்த குமரவேள் இனைய கூற
சூடின னென்னப் போற்றிச் சுரரொடு மகிழ்ச்சி கொண்டான்.
**குமரவேள் இனையகூற வியன்முடி சூடினான் அன்ன**

1159. அறுமுகத் தேவை நோக்கி அமரர்கோன் இந்த வண்டத்து
நிறுவுதி யென்ன லோடும் நகைத்திவை நிகழத்த லுற்றான்.
**அறுமுகத் தேவர் அண்டத்தை நிறுவ நிகழ்த்தல் உற்றான்**

1160. இன்னதோ ரண்டந் தன்னில் எம்மில்வே றுற்ற வெல்லாம்
அந்நிலை எவரும் நோக்கி அற்புத மடைந்து நின்றார்.
**அண்டந்தன்னில் வேறுற்ற எல்லாம் தொன்னெறியாக**
**குமரன் தூமொழி**

### வேறு

1161. நிற்கு மெல்லையின் நிலத்திடை யாகி
சொற்க நாடுள சுரேசன் உரைப்பான்.
**சிற்குணக் குரிசில் சேவடி தாழுஉ சுரேசன் உரை**

1162. ஆண்ட கைப்பகவ ஆரண மெய்ந்நூல்
ஈண்டு நின்னருளை ஈகுதி யென்றான்.
**ஆரண மெய்ந்நூல் பூண்ட நின்னடி நின்னருள் ஈகுதி**

1163. என்ன லுங்குகன் இசைந்து நடந்தே
மன்னி நின்றதொரு மால்வரை புக்கான்.
**குகன் மால்வரை புக்கான்**

1164. குன்றி ருஞ்சிறை குறைத்தவன் ஏனோர்
பின்றொ டர்ந்தனர் பிறங்கலில் வந்தார்.
**எங்கோன் பின்தொடர்ந்து பிறங்கலில் வந்தார்**

1165. சூரல் பம்புதுறு கல்முழை கொண்ட
சீரி தர்ச்சனை செயற்கு முயன்றார்.
**சண்முகன் கழல் சீர் அர்ச்சனை**

1166. அந்த வேலையம ரர்க்கிறை தங்கண்
நந்த மாநகரின் நல்கிவ ணென்றான்.
**கம்மியன் நம்தம் மாநகர் நல்கு**

1167. அருக்கர் தந்தொகை அனைத்தையு மொன்றா
பொருக்கெ னப்புனைவர் கோன்புரி குற்றான்.
**கோயில் பொருக்கென புனைவர் கோன்புரி**

1168. குடங்கர் போல்மகு டங்கெழு வுற்ற
மடங்கல் கொண்டதொர் மணித்தவி சீந்தான்.
**மணித்தவிசு ஈந்தான்**

1169. ஈந்த வெல்லைதனில் இந்திரன் ஏவ
ஆய்ந்து தந்தனர்கள் அண்டர்கள் பல்லோர்.
**அண்டர்கள் பல்லோர் ஆய்ந்து தந்தனர்**

## வேறு

1170. அன்ன காலையில் அண்டர்கள் மேலையோன்
இந்நி கேதனம் ஏகுதி நீயென்றான்.
**சென்னி ஆறுடை தேவன் இந்நிகேதனம் ஏகுதி**

1171. கூற்ற மன்னதுட் கொண்டுவிண் ணோரெலாம்
வீற்றி ருந்தனன் வேதத்தின் மேலையோன்.
**வேதத்தின் மேலையோன் வீற்றிருந்தனன்**

1172. ஆன காலை அமரர்கள் வாசவன்
வான நீத்தத்து மஞ்சனம் ஆட்டினார்.
**ஞானநாயகனுக்கு மஞ்சனம் ஆட்டினர்**

1173. நொதுமல் பெற்றிடு நுண்டுகில் சூழ்ந்தனர்
மதும லர்த்தொகை மாலிகை சூட்டினார்.
**நுண்டுகில் சூழ்ந்தனர் மதுமலர்த் தொகை மாலிகை சூட்டினார்**

1174. ஐவ கைப்படும் ஆவியும் பாளிதம்
செவ்வி தர்ச்சனை செய்தன ரென்பவே.
**இறைவற்கு நல்கி அர்ச்சனை**

1175. புரந்த ரன்முதற் புங்கவர் தம்முளத்து
கரந்து வள்ளல் கயிலையிற் போயினான்.
**வள்ளல் கயிலை போயினாள்**

1176. வெற்பின் மிக்குயர் வெள்ளியம் பொற்றையில்
அற்பு தத்துடன் அவ்வரை நீங்கினார்.
**வெள்ளியம் பொற்றையில் சிற்பரன்**

1177. ஈசன் மைந்தன் இளையன் இமையவர்
பேச ஆங்கொர் பெயரினைப் பெற்றதே.
**ஈசன் மைந்தன் கந்தவரை பொருந்தல்**

1178. ஆன கந்த வடுக்கலைத் தீர்ந்துபோய்
தான மெய்தனர் தொன்மையில் தங்கினார்.
**வானவர் தொன்மையில் தங்கினர்**

1179. உயவல் ஊர்திகொண் டொய்யென முன்னரே
அயலின் மேவர ஆயிடை வைகினான்.
**உயவல் ஊர்த்தி கந்தவேள் கயிலை ஏகல்**

## 02. தகரேறுபடலம்

1180. சூரன்முத லோருயிர் தொலைக்கவரு செவ்வேள்
நாரதனொர் வேள்வியை நடாத்தியிட லுற்றான்.
**செவ்வேள் வெள்ளியசலத்தில் நாரதர் வேள்வி**

1181. மாமுனி வருஞ்சுரரும் மாநில வரைப்பில்
தீமிசை யெழுந்ததொரு செக்கர்புரை செச்சை.
**மகத்தில் தீமிசை செக்கர் புரை செச்சை எழுந்தது**

1182. அங்கிதனில் வந்ததகர் ஆற்றுமகந் தன்னில்
வெங்கனலை யேந்துபரி மீதெழுதல் போலும்.
**நங்களினமே பலவும் நாளும் அடுகின்றதால்**
**அருவன் வெங்கனலை ஏந்துபரி**

1183. மாருதமும் ஊழிதனில் வன்னியும் விசும்பில்
சேரவெழும் மேடம்அடு செய்கைநினைந் தன்றே.
**மேடம் அடு செய்கை நினைந்து**

1184. கல்லென மணித்தொகை களத்தினிடை தூங்க
எல்லவரும் அச்சமொ டிரிந்தனர்கள் அன்றே.
**வல்லைவரு தகர் எல்லவரும் அச்சமோடு இரிந்தனர்**

1185. இரிந்தவர்கள் யாவரையும் இப்புவியும் வானும்
திரிந்துயிர் வருந்தஅடல் செய்தது செயிர்த்தே.
**உயிர் வருந்த அடல் செய்தது தகர்**

1186. எட்டுள திசைக்கரி இரிந்தலறி யேங்க
முட்டும்அவர் தம்பரியை மொய்ம்பினொடு பாயும்.
**இரிந்து அலறி ஏங்க எதிர் தாக்கும் மொய்ம்பினொடு பாயும்.**

1187. இனையவகை யால்தகரி யாண்டுமுல வுற்றே
அனைவர்களும் ஓடினர் அருங்கயிலை புக்கார்.
**அனைவர்க்கும் அருங்கயிலை புக்கார்**

1188. ஊறுபுக அன்னவர் உலைந்துகயி லைக்கண்
ஆறுமுக வண்ணல்விளை யாடலது கண்டார்.
**அன்னவர் கயிலைக்கண் ஆறுமுக வண்ணல் விளையாடல்**
**கண்டார்**

1189. ஈசனிடை நண்ணுகிலம் ஈண்டுகும ரேசன்
வாசவனை வென்றுயிரை மாற்றியெழு வித்தான்.
**குமரேசன் நேசம்**

1190. எங்குறை முடித்திடல் இவற்கெளிது நாம்
அங்கவன்முன் ஏகினர் அருந்துதிகள் செய்தே.
**குறை முடிந்திட அங்கவன் முன் ஏகி அருந்துதிகள்**

1191. வந்துபுகழ் வானவரும் மாமுனிவர் தாமும்
நொந்தனிர் புகுந்தது நுவன்றிடுதி ரென்றான்.
**கந்தவனர் நுவன்றிடுதி என்றார்**

1192. கேட்டிஇளை யோய்மறை கிளத்தும்ஒரு வேள்வி
ஈட்டமுறும் எம்மையட எண்ணியதை யன்றே.
**மாட்டு கனலூடுதகர் எம்மை அடர்**

1193. ஆடெழு கிளர்ச்சியை அறிந்துமகம் விட்டே
வீடியத ளப்பிலுயிர் விண்ணினொடு மண்மேல்.
**மகம்விட்டு ஆடெழு கிளர்ச்சி வீடிய தளப்பில் உயிர்**

1194. நீலவிட மன்றிது நிறங்குலவு செக்கர்
காலமுடி வெய்துமொரு கன்னல்முடி முன்னம்.
**கள்ளல் முடி முன்னம் காலம் முடிவெய்தும்**

1195. சீற்றமொ டுயிர்க்கிறுதி செய்துலவு மேடத்து
போற்றுதி யெனத்தொழுது போற்றிசெய்யும் வேலை.
**போற்றித் தொழுது போற்றுதி**

1196. எஞ்சுமவர் தம்மைஇளை யோன்பரிவின் நோக்கி
மஞ்சுபெறு மேனிவிறல் வாகுவொடு சொல்வான்.
**இளையோன் பரிவில் அஞ்சல் விடுமின்**

1197. மண்டுகனல் வந்திவர் மகந்தனை அழித்தே
கொண்டணைதி என்றுமை குமாரனுரை செய்தான்.
**கொண்டு அணைதி குமரன் உரை**

## வேறு

1198. குன்றெழு கதிர்போல் மேனிக் குமரவேள் இனைய கூற
சென்றனன் கயிலை நீங்கிச் சினத்தகர் தேட லுற்றான்.
**வீரவாகு கயிலை நீங்கி சினந்தகர் தேடல்**

1199. மண்டல நேமி சூழும் மாநில முற்று நாடி
தண்டளிர்ச் செக்கர் மேனித் தகர்செலுந் தன்மை கண்டான்.
**அயன்பதம் முன்தகர் செலும் தன்மை**

1200. ஆடலந் தொழில்மேல் கொண்டே அனைவரும் இரியச் செல்லும்
ஏடுறு நீபத் தண்டார் இளையவன் முன்னர் உய்த்தான்.
**வீரபாகு கோடவைபற்றி மேடதனை கயிலை நண்ணி இளையவன் முன் உய்த்தான்**

1201. உய்த்தனன் வணங்கி நிற்ப உளமகிழ்ந் தருளித் தேவர்
முத்தழல் கொடுமுன் செய்த வேள்வியை முடித்தி ரென்றான்.
**குமரன் உளமகிழ்ந்து அருளி முத்தழல் வேள்வி முடித்தி**

1202. ஏர்தரு குமரப் புத்தேள் இவ்வகை இசைப்ப அன்னோர்
ஊர்திய தாகக் கொண்டே ஊர்ந்திடல் வேண்டு மென்றார்.
**கார்தரு கண்டமன்ன ஊர்தியாகத் தகர் ஊர்ந்திடல் எந்தை**

1203. என்னலுந் தகரை அற்றே யானமாக் கொள்வம் பார்மேல்
அன்னதோர் குமர னெந்தை அடிபணிந் தருளாற் போந்தார்.
**தகர் யானமாக மகத்தை முடிக்க குமரன் அருளல்**

1204. நவையில்சீர் முனிவர் தேவர் நயப்பநா ரதனென் றுள்ளோன்
உவகையால் அனைய மேடம் ஊர்ந்தனன் ஊர்தி யாக.
**ஊர்த்தியாக மேடம் ஊர்ந்தனன் அமலமூர்த்தி**

## 01. அயனைச்சிறைபுரி படலம்

1205. மேடமூர்தி யாகவுய்த்து விண்ணுமண்ணும் முருகவேள்
நாடியீசன் அடிவணங்க அவ்வரைக்கண் நண்ணினார்.
**மேடமூர்த்தியாக முருகவேள் ஆடல்**

1206. எனாதியா னெனுஞ்செருக் கிகந்துதன் னுணர்ந்துளார்
தனாதுமன்றம் நீங்கிவாயில் சாருகின்ற வேலையில்.
**எனாதியான் செருக்கு இகந்து அனாதி ஈசன் அடிஅருள்**

1207. ஒன்பதோடி லக்கமான அனிகவீரர் உள்மகிழ்ந்து
இன்பொடாடி வைகினான் இராறுதோள் படைத்துளான்.
**இராறுதோள் படைத்துளான் இன்பொடி வைகினன்**

1208. அங்கண்வைகும் முருகன்நம்பன் அடிவணங்கி வந்திடும்
பங்கயாச னத்தினோன் பணிந்திடாது தொழுதலும்.
**முருகன் விளிம்ப பங்கயாசனன் பணிந்திடாது தொழுதல்**

1209. ஆதிதேவன் அருளுமைந்தன் அவனுளத்தை நோக்கியே
நாதனாணை யால்அனைத்தும் நான்படைப்பன் என்றனன்.
**நாதன் ஆணையால் அனைத்தும் நான்முகன் படைப்பன் என்றனர்**

**வேறு**

1210. முருக வேளது கேட்டலும் முறுவல்செய் தருளி
பிரமன் என்பவன் இத்திறம் பேசுதல் உற்றான்.
**முருகவேள் சுருதி மொழிக என பிரமன் பேசுதல் உற்றான்**

1211. ஐய கேள்எனை யாதிகா லந்தனில் அளித்த
உய்யு மாறருள் செய்தனன் அவையுணர்ந் துடையேன்.
**ஐய ஆதிகாலந்தனில் உய்யுமாறருள் செய்தனன்**

1212. என்று நான்முகன் இசைத்தலும் அவற்றினுள் இருக்காம்
நின்ற தோர்தனி மொழியைமுன் ஓதினன் நெறியால்.
**ஒன்று நீ விளம்புதியென முருகவேள் உரைப்ப தனிமொழியை ஓதினள்**

1213. தாம ரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
ஓமெ னப்படும் மொழிப்பொருள் இயம்புகென் றுரைத்தான்.
**ஓமெனப்படும் மொழிப் பொருள் இயம்புதி**

1214. முகத்தி லொன்றதா அவ்வெழுத் துடையதோர் முருகன்
திகைத்தி ருந்தனன் கண்டிலன் அப்பொருட் டிறனே.
**முகத்திலொன்றதா அவ்வெழுத்து முருகன் ஓம் அறுமுகன்**

1215. ஈசன் மேவரும் பீடமாய் ஏனையோர் தோற்றும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன்பயன் ஆய்ந்தான்.
**மாசில் தாரகம் பிரமம்**

1216. தெருள தாகிய குடிலையைச் செப்புதல் அன்றி
மருளு கின்றனன் யாரதன் பொருளினை வகுப்பார்.
**தெருளதாகிய குடிலையை செப்புதல் மருள்**

1217. தூம றைக்கெலாம் ஆதியு மந்தமுஞ் சொல்லும்
நாமி னிச்சில அறிந்தனம் என்பது நகையே.
**தூமறைக்கு ஆதியும் அந்தமும் ஓம்**

1218. எட்டொ ணாதவக் குடிலையிற் பயன்இனைத் தென்றே
குட்டி னான் அயன் நான்குமா முடிகளுங் குலுங்க.
**குடிலையிற் பயன் அயன் கட்டுரைத்திலன் செவ்வேள் குட்டினான்**

1219. மறைபு ரிந்திடுஞ் சிவனருண் மதலைமா மலர்மேல்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்.
**கந்தமாஞ் சிலம்பில் அயன்தனை சிறை புரிந்திடும்**
**மறைபுரி சிவனருள் மைந்தன்**

1220. அல்லி மாமலர்ப் பண்ணவன் றனையருஞ் சிறையில்
பல்லு யிர்த்தொகை படைப்பது நினைந்தனன் பரிவால்.
**அல்லி மாமலர்ப் பண்ணவன் பரிவால் படைப்பது நினைந்தனன்**

1221. ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித் தொருதன்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.
**வரதமோடு அபயம் திருமுகம் சதுர்முகன் விதி பரம்பொருள்**
**மகவு**

1222. உயிரி னுக்குயி ராகியே பரஞ்சுட ரொளியாய்
அயனெ னப்படைக் கின்றதும் அற்புத மாமோ.
**உயிர்க்கு உயிராய் பரஞ்சுடர் வியன்மறை செவ்வேள்**
**அயன்படை அற்புதமில்**

1223. தண்ணென் அம்புயத் தவிசினோன் சிறைபுகத் தானே
உண்ண டுங்கியே தொழுதுதம் பதங்களி லுற்றார்.
**அம்புயத் தவிசினோன் சிறைபுக எண்ணிலா**
**உயிர்த்தொகை அறுமுகன் அளித்தான்.**

## 02. அயனைச் சிறைநீக்கு படலம்

1224. ஆல மாமிடற் றண்ணல்சேய் இத்திறம் அளப்பில்
சீல வானவர் முனிவரைச் சிந்தனை செய்தான்.
**சேய் அளப்பில் காலம் யாவையும் அளித்தனன்**

1225. சீத ரத்தனிப் பண்ணவன் சிந்தனை தேறி
மாதி ரத்தவர் யாவரும் விரைந்துடன் வந்தார்.
**பண்ணவன் சிந்தனை தேறி மாதிரத்தவர் விரைவு**

1226. மதியும் ஏனைய கோள்களுங் கணங்களும் வான்றோய்
அதனை ஏந்திய சேடனும் உரகரும் அடைந்தார்.
**வியன்பார் ஏந்திய சேடனும் மதியும் ஏனையகோ**

1227. இன்ன தன்மையில் அமரரும் முனிவரு மெய்த
தன்னை யேதனக் கொப்பவன் பொற்கழல் தாழ்ந்தான்.
**கயிலையில்  நந்தி முறையில் பொற்கழல் தாழ்ந்தான்**

1228. பொற்றி ருப்பதம் இறைஞ்சியே மறைமுறை போற்றி
உற்ற தென்கொலோ என்றலும் மாலிவை உரைப்பான்.
**மறைமுறை போற்ற உற்ற தென்கொலோ மாலி உரை**

### வேறு

1229. இறைவ நின்மகன் ஈண்டுறு போதனை
சிறைபு ரிந்தனன் சிட்டியுஞ் செய்கின்றான்.
**இறைவ நின்மகன் மறைமுதற் போதனை சிட்டி செய்தனை**

1230. கந்த வேளெனக் கஞ்சனும் ஐயநின்
நொந்து வாடினன் நோவுழந் தானரோ.
**கந்தவேள் கஞ்சன் நின்மைந்தன் வல்வினை ஊழ்**

1231. ஆக்க மற்ற அயன்றன் சிறையினை
நோக்கி யொன்று நுவலுதல் மேயினான்.
**ஆக்கமற்ற அயன்சிறை நீக்க நிமலன் நுவல்தல்**

1232. குடுவைச் செங்கையி னானைக் குமரவேள்
விடுவித் தேயிவண் மீள்கெனச் சாற்றினான்.
**பிரமனை குமரவேள் இடுவித்தன் விடுவிக்க நங்கட்டுரை**

1233. எந்தை யன்ன திசைத்தலும் நன்றெனா
கந்த வெற்பிற் கடிநகர் எய்தினான்.
**எந்தை அன்ன இசைத்தலும் நந்தி கந்த வெற்பு எய்தினான்**

1234. ஏறுமு டைத்தனி ஏற்று முகத்தினான்
முறைத னிற்பணிந் தேத்தி மொழிகுவான்.
**ஏற்று முகத்தினான் அறுமுகத்தனை பணிந்தேத்தி மொழிகுவான்**

1235. கடிகொள் பங்கயன் காப்பினை எம்பிரான்
குடிலை யன்னவன் கூறற் கெளியதோ.
**குடிலை அன்னவன் கூறற்கெளியதோ பங்கயன்**
**காப்பினை விடுதல் கூறி விடுத்தனன் எம்பிரான்**

1236. என்னு முன்னம் இளையவன் சீறியே
உன்னி யேகுதி ஒல்லையி லென்றலும்.
**நிற்றியேல் நின்னையும் சிறை உன்னி ஏகுதி ஒல்லையில்**

1237. வேற தொன்றும் விளம்பிலன் அஞ்சியே
ஏறு போல்முக மெய்திய நந்தியே.
**நந்தி அஞ்சியே கயிலை சென்றான்.**

1238. மைதி கழ்ந்த மணிமிடற் றண்ணல்முன்
செய்தி செப்பச் சிறுநகை யெய்தினான்.
**மைதிகழ்ந்த மணிமிடற்றண்ணல் கந்தன் செய்தி சிறுநகை**

1239. கெழுத கைச்சுடர்க் கேசரிப் பீடமேல்ஞு
மழவி டைத்தனி மால்வரை ஏகினான்.
**விமலன் விடை ஏகினன்**

1240. முன்னர் வந்த முகில்புரை வண்ணனும்
என்ன ருந்தொழு தெந்தைபின் ஏகினார்.
**எந்தை பின் ஏகீனர்**

1241. படைகொள் கையினர் பன்னிறக் காழக
புடையில் ஈண்டினர் போற்றுதல் மேயினார்.
**ஈண்டினர் மேயினர் போற்றுதல்**

1242. இனைய காலை யினையவர் தம்மொடும்
தனது மைந்தன் தடவரை யெய்தினான்.
**வனித பாதியன் மைந்தன் தடவரை எய்தினான்.**

1243. சாற்ற ருந்திறற் சண்முக வெம்பிரான்
போற்ற முக்கட் புனிதனுட் போயினான்.
**சண்முகன் வியன்நகர் எம்பிரான் போயினன்**

1244. அந்தி போலும் அவிர்சடைப் பண்ணவன்
வந்து நேர்கொண் டடிகள் வணங்கியே.
**பண்ணவன் கந்தன் முன் கருணை**

1245. பெருத்த தன்மணிப் பீடிகை மீமிசை
கருத்த நீவந்த காரியம் யாதென்றான்.
**பீடிகை மீமிசை நாதனை இருத்தி வந்த காரியம் யாதென்றான்**

1246. மட்டு லாவு மலர்அய னைச்சிறை
விட்டி டையவென் றெந்தை விளம்பினான்.
**அயனைச் சிறை விட்டிடைய எந்தை விளம்பினான்**

1247. நாட்ட மூன்றுடை நாயகன் இவ்வகை
சூட்டு மௌலி துளக்கினன் சொல்லுவான்.
**மௌலி துளக்கி சொல்லுவான் குமரன்**

1248. உறுதி யாகிய ஓரெழுத் தின்பயன்
மறைகள் வல்லது மற்றது போலுமால்.
**ஓரெழுத்தின் பயன் அறிகிலாதவன் பேதமை**

1249. அழகி தையநின் னாரருள் வேதமுன்
தொழில்பு ரிந்து சுமத்தினை யோர்பரம்.
**நின் அருள் வேதமுன்மொழிய முதலெழுத்து ஓர்சிலான் சுமை**

1250. ஆவி முற்றும் அகிலமும் நல்கியே
ஏவர் தம்மையும் எண்ணலன் யாவதும்.
**ஆவிமுற்றும் அகிலமும் நல்கியே வியன்செயல்**
**கோடல் ஏவர் தம்மையும் எண்ணலன்**

1251. நின்னை வந்தனை செய்யினும் நித்தலும்
என்ன மைந்தன் இயம்பிய வேலையே.
**நின்னை வந்தனை செய்யினும் நித்தலும் தன்னங்கை**
**தவிர்க்கிலன்**

**வேறு**

1252. மைந்தநின் செய்கை யென்னே மலரயன் சிறைவி டென்று
கந்தனை வெகுள்வான் போலக் கழறினன் கருணை வள்ளல்.
**மைந்தன் நின் செய்கை என்னே கந்தனைக்**
**கழறினான் கருணை வள்ளல்.**

1253. அத்தன தியல்பு நோக்கி அறுமுகத் தமலன் ஐய
பத்தியின் இறைஞ்சிக் கூறப் பராபரன் கருணை செய்தான்.
**அத்தன் சித்தம் அறுமுகத்தமலன் எல்லையில் பராபரன் கருணை**

1254. நன்சிறை எகினம் ஏனம் நாடுவான் அருளை நல்க
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி ரென்றான்.
**சண்முகக் கடவுள் வல்லையில் வன்சிறைநீக்கி தந்திடுதி என்றான்.**

1255. என்றலுஞ் சார தர்க்குட் சிலவர்க ளேகி யங்கண்
குன்றுதொ றாடல் செய்யுங் குமரவேள் முன்னர் உய்த்தார்.
**குன்றுதொறாடல் செய்யும் குமரவேள்**

1256. உய்த்தலுங் கமலத் தண்ணல் ஒண்கரம் பற்றிச் செவ்வேள்
எய்த்தனை போலும் பன்னாள் இருஞ்சிறை யெய்தி யென்றான்.
**செவ்வேள் கமலத்தண்ணல் ஒண்கரம் பற்றிஅத்தன்முன் விடுதல்**

1257. நாதனித் தன்மை கூறி நல்லருள் புரித லோடும்
தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனித மென்றான்.
**நாதன் நல்லருள் அகந்தை வீட்டி தீது செய்வினை மாற்றி புனிதம்**

1258. அப்பொழு தயனை முக்கண் ஆதியம் பரமன் காணூஉ
இப்பகல் தொட்டு நீயே ஈந்தனை யிருத்தி யென்றான்.
**ஆதியம்பரமன் அயனை இப்பகல் தொட்டு ஈந்தனை துப்பரவு நன்று தூக்கி**

1259. அருளுரு வாகும் ஈசன் அயற்கிது புகன்ற பின்னர்
திருமணிக் குறங்கின் மீது சிறந்துவீற் றிருப்பச் செய்தான்.
**ஈசன் அருள் திருமணிக்குறங்கீல் முருகவேள்.**

1260. காமரு குமரன் சென்னி கதுமென உயித்துச் செக்கர்
போமெனில் அதனை யின்னே புகலென இறைவன் சொற்றான்.
**குமரா ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் புகல்**

1261. முற்றொருங் குணரும் ஆதி முதல்வகேள் உலக மெல்லாம்
இற்றென வியம்ப லாமோ மறையினால் இசைப்ப தல்லால்.
**ஆதி முதல்வ உலககெல்லாம் பெற்றிடும் உமைக்கு சொற்றமறை இற்றென வியம்பலில்**

1262. என்றலும் நகைத்து மைந்த எமக்கருள் மறையின் என்னா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனாம் அண்ணல்.
**சிவனும் குமரவேளும் ஓம் எனும் மறை**

1263. அன்னதோர் ஐய மாற்றி அகமகிழ் வெய்தி அங்கண்
தொன்னிலை யமைந்து போந்து தொல்பெருங் கயிலை வந்தான்.
**ஐய மாற்றி அகமகிழ் நாதன் தொல்பெருங் கயிலை**

1264. முன்புறும் அயன்மால் தேவர் முனிவரை விடுத்து முன்னோன்
இன்பொடு குமர மூர்த்தி இனிதுவீற் றிருந்தா னன்றே.
**குமரமூர்த்தி இன்பொடு இனிது வீற்றிருந்தார்.**

1265. ஆங்குறு குமரப் புத்தேள் அருமறைக் காதி யாகி
பாங்குறும் இறைவன் நூலும் பரிவினால் உணர்த்தி னானால்.
**குமரப்புத்தேள் அருமறை ஓரெழுத்து உண்மை சிறுமுனிக்கு உதவி இறைநூல் பரிவுணர்த்தி**

## 03. விடைபெறு படலம்

1266. எல்லை அன்னதின் மாலருள் கன்னியர் இருவர்
புல்லும் ஆசையால் சரவணத் தருந்தவம் புரிந்தார்.
**மாலருள் கன்னியர் இருவர் சரவணத்தில் தவம்**

1267. என்னை யாளுடை மூவிரு முகத்தவன் இரண்டு
அன்னை தோன்றிய இமகிரிச் சாரலை யடைந்தான்.
**ஒன்றி நோற்றிடல் கருதி அன்னை தோன்றிய**
**இமகிரிச் சாரல் அடைந்தனன் குமரன்**

1268. பொருவில் சீருடை இமயமால் வரைக்கொரு புடையாம்
வரம ளிப்பதென் கூறுதிர் என்றனன் வள்ளல்.
**வரம் அளிப்பதென் கூறுதீர் வள்ளல்**

1269. மங்கை மார்தொழு தெம்மைநீ வதுவையால் மருவ
துங்க நாயகன் அவர்தமை நோக்கியே சொல்வான்.
**மங்கைமார் தொழுது எம்மை நீ வதுவை என சொல்வான்**

1270. முந்தும் இன்னமு தக்கொடி மூவுல கேத்தும்
அந்தண் மாமுனி புதல்வியாய் வேடர்பால் அமர்தி.
**மூவுலகேத்தும் இந்திரன் மகள் மாமுனி புதல்வி வேடர்பால்**
**அமர்தி**

1271. நன்று நீவிர்கள் வளர்ந்திடு காலையாம் நண்ணி
நின்ற கன்னியர் கைதொழு தேகினர் நெறியால்.
**நன்று நீவிர்கள் நண்ணி கைதொழுது ஏகினர் நெறியால்**

1272. ஏகு மெல்லையில் அமுதமா மென்கொடி யென்பாள்
ஆகை யால்எனைப் போற்றுதி தந்தையென் றடைந்தாள்.
**அமுதமென்கொடி போற்றுதி என குழவியாய்**

1273. பொன்னின் மேருவில் இருந்தவன் புதல்வியை நோக்கி
முன்ன ராகவே விளித்தனன் இத்திறம் மொழிவான்.
**பொன்னின் மேருவில் இருந்தவன் புதல்வியை விழித்தனன்**

1274. இந்த மங்கைநந் திருமக ளாகுமீங் கிவளை
கந்த மேற்கொடு நன்றெனப் போயது களிறு.
**நந்திருமகள் நன்றென கந்தமேற்கொடு களிறு போயது**

1275. கொவ்வை போலிதழ்க் கன்னியை மனோவதி கொடுபோய்
நொவ்வு றாதுவீற் றிருந்தனள் குமரனை நுவன்றே.
**குமரனை நுவன்றே வொல்வுறாது தெய்வயானை வீற்றிருந்தனள்**

1276. பெருமை கொண்டிடு தெண்டிரைப் பாற்கடல் பெற்று
வரிசை தன்னுடன் இருந்தனள் தெய்வத மடந்தை.
**தெய்வ மடந்தை வரிசை தன்னுடன் இருந்தனள்**

1277. முற்று ணர்ந்திடு சுந்தரி யென்பவள் முருகன்
நற்ற வச்சிவ முனிமக ளாகவே நடந்தாள்.
**சுந்தரி முருகன் சொற்ற நற்றவச்சிவ முனிமகள்**

1278. இந்த வண்ணம்இவ் விருவர்க்கும் வரந்தனை ஈந்து
முந்து பற்பகல் உலகெலாம் படைத்ததோர் முதல்வன்.
**வரந்தனை ஈந்து முதல்வன் பற்பகல் உலகெலாம் படைத்து**

**வேறு**

1279. இத்திறஞ் சிலபக லிருந்து பன்னிரு
சித்தம துன்னினன் அருளின் செய்கையால்.
**கயிலை பணிந்து அருள் அத்தன் சித்தம் உன்னி**

1280. எள்ளருந் தவிசினின் றிழிந்து வீரராய்
வள்ளலங் கொருவியே வல்லை யேகினான்.
**வள்ளல் வல்லை ஏகல் கயிலை**

1281. ஏயென வெள்ளிவெற் பெய்தி யாங்ஙனம்
ஆயவர் நடுவுற அருளின் வைகினான்.
**வெள்ளி வெற்பில் ஆயவர் நடுவுற வைகினர் அருளில்**

1282. அண்ணலங் குமரவேள் அங்கண் வைகலும்
கண்ணனை முன்கொடு கயிலை யெய்தினார்.
**குமரவேள் வைகலும் தேவர்கள் மகபதி அயன்மால் கயிலை எய்தினர்**

1283. அடைதரும் அவர்தமை அமலன் ஆலயம்
நெடிதுறு துயரொடு நிற்றல் மேயினார்.
**நந்திநின்மென அமலன் ஆலயம் நெடிதுறு துயரொடு நிற்றல் பற்பகல்**

1284. அளவறு பற்பகல் அங்கண் நின்றுளார்
தளர்வினி விடுமின்என் றிதனைச் சாற்றினான்.
**பற்பகல் அங்கண் தளர்வினி விடுமின்**

1285. தங்குறை நெடும்புனற் சடில மேன்மதி
இங்குறை வீரென இயம்பிப் போயினான்.
**ஆதிமுன் நுங்குறை புகன்று போயினான் நந்தி**

1286. போயினன் நந்தியம் புனிதன் கண்ணுதற்
கோயிலின் முதற்கடை குறுகினா ரென்றான்.
**நந்தியம் புனிதன் போயி வணங்கினான் ஏனோர் முதற்கடைக் கோயில்**

1287. அருளுடை யெம்பிரான் அனையர் யாரையும்
வருகென அருளினன் மாசில் காட்சியான்.
**எம்பிரான் யாரையும் வாசவன் அருளினன்**

1288. விடைமுகன் உரைத்தசொல் வினவி யாவரும்
இடருறு மனத்தினன் இனைய கூறுவான்.
**விடைமுகன் உரைக்க வாசவன் கூறுவான்**

1289. பரிந்துல கருள்புரி பரையொ டொன்றியே
வருந்தின மொடுங்கினம் வன்மை இன்றியே.
**பரையொடொன்றி அருள்புரி வருந்தினம் ஒடுங்கினம்**

1290. அந்தமில் அழகுடை அரம்பை மாதரும்
சிந்துவின் நகரிடைச் சிறைக்கண் வைகினார்.
**அரம்ளா மாதர் சிந்துவின் நகரில் சிறை**

1291. இழிந்திடும் அவுணரா லியாதொர் காலமும்
மொழிந்திடல் வேண்டுமோ உணர்தி முற்றுநீ.
**மொழிந்திடல் இல் உணர்தி முற்றுநீ**

1292. முன்னுற யான்தவம் முயன்று செய்துழி
இன்னலை யகற்றுதும் என்றி எந்தைநீ.
**எந்தை நீ இன்னலை அகற்றும்**

1293. அப்படிக் குமரனும் அவத ரித்துளன்
துப்புறு பவப்பயன் தொலைந்த தில்லையோ.
**குமரன் அவதரித்துளன் துப்புறு பவப்பயன் தொலைந்த தில்லையோ**

1294. சூருடை வன்மையைத் தொலைக்கத் தக்கதோர்
நீருடை முடியினோய் நினது முன்னலால்.
**நீருடை முடியினோய் சூருடை வன்மையை தொலை**

1295. சீகர மறிகடற் சென்று நவ்விசேர்
சோகம தகற்றிடுந் துணைவர் இல்லையே.
**நவ்விசேர் காகம் ஏகவோர் இடமில்லை துணையில்லை**

1296. ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாம்
ஆற்றரி தாற்றரி தலம்இப் புன்மையே.
**வன்னி துஞ்சல் வெவ்விடர் துய்த்தல் மேல்
ஆற்றரிது மாற்றலர் வெந்துயர்**

1297. தீதினை யகற்றவுந் திருவை நல்கவும்
ஓதினன் வணங்கினன் உம்பர் வேந்தனே.
**தீதினை அகற்றவும் திருவை நல்கவும் உம்பர்
வேந்தன் வணங்கினன்.**

1298. அப்பொழு தரியயன் ஐய வெய்யசூர்
இப்பொழு தருள்கென இயம்பி வேண்டினார்.
**அரி அயன் இப்பொழுதருள்க என இயம்பினர்**

1299. இகபரம் உதவுவோன் இவற்றைக் கேட்டலும்
குகன்முகம் நோக்கியே இனைய கூறுவான்.
**இகபரம் உதவுவோன் அருளி ஆங்கமர் குகன்முகம் கூறல்**

**வேறு**

1300. பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும் பருவரல் செய்து விண்ணவர்தம்
பேரர சளித்துச் சுரர்துயர் அகற்றிப் பெயர்தியென் றனன்எந்தை பெருமான்.
**சுருதியின் நெறிநிறீஇ என்றன் எந்தை**

1301. அருத்திகொள் குமரன் இனையசொல் வினவி அப்பணி புரிகுவ னென்ன
இருத்திரென் றவரைப் பலபடை யாக்கி ஈந்தனன் எம்பிரான் கரத்தில்.
**குமரன் அப்பணிபுரி குவனென்ன பலபடையாக்கி ஈந்தனன் எம்பிரான்**

1302. பொன்றிகழ் சடிலத் தண்ணல்தன் பெயரும் பொருவிலா உருவமுந் தொன்னாள்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார் விறல்மிகும் அறுமுகன் கரத்தில்.
**அறுமுகன் கரத்தில் சடிலத் தண்ணல் உருத்திரர் பதினெண்மர்**

1303. ஆயதற் பின்னர் ஏவில்மூ தண்டத் தைம்பெரும் பூதமும் அடுவ
நாயக மாவ தொருதனிச் சுடர்வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்.
**மூதண்டம் ஐம்பூதத்தை அழிக்கும் தனிச்சுடர் வேல் மதலைக்கு நல்கி**

1304. அன்னதற் பின்னர் எம்பிரான் றன்பா லாகிநின் றேவின புரிந்து
துன்னுபல் படையும் உதவியே சேய்க்குத் துணைப்படை
யாகவே கொடுத்தான்.
**எம்பிரான் சேய்க்கு பல்படையும்துணைப்படையும் கொடுத்தான்**

1305. நாயகன் அதற்பின் அண்டவா பரணன் நந்தியுக் கிரனொடு சண்டன்
நீயிரென் றருளி அவர்தமைக் குகற்கு நெடும்படைத் தலைவரா
அளித்தான்.
**நாயகன் அளித்தான் அண்ட ஆபரணன் நந்தி, கிரன், சண்டன்,
ஆயி நெடும்படை தலைவர்கள்**

1306. ஐம்பெரும் பூத வன்மையும் அங்கண் அமர்தரும் பொருள்களின்
வலியும்
எம்பெரு முதல்வன் சிந்தையா லுதவி யேறுவான் மைந்தனுக்
களித்தான்.
**ஐம்பெரும் பூதவன்மையும் எம்பெரு முதல்வன் சிந்தையால்
உதவி மைந்தனுக்கு அளித்தான்.**

1307. இவ்வகை யெல்லாம் விரைவுடன் உதவி யேகுதி நீயெனக் குமரன்
கைவரு கவானுய்த் துச்சிமேல் உயிர்த்துக் கருணைசெய்
தமலைகைக் கொடுத்தான்.
**குமரன் உமையொடு இறைவனை தொழுது பிரான் உச்சிமேல்
உயிர்த்து கருணை**

1308. கொடுத்தலும் வயின்வைத் தருளினாற் புல்லிக் குமரவேள்
சென்னிமோந் துன்பால்
முடித்தனை வருதி என்றருள் புரிந்தாள் மூவிரு சமயத்தின் முதல்வி.
**குமரவேள் சென்னிமோந்து உமை முடித்தனை வருதி என
அருள்**

1309. அம்மையித் திறத்தால் அருள்புரிந் திடலும் அறுமுகன்
தொழுதெழீஇ யனையோர்
செம்மல ரடிகள் மும்முறை இறைஞ்சிச் சேரவே விடைகொடு
சென்றார்.
**அம்மை அருள் அறுமுகன் தொழுதெழீஇ விடை.**

1310. நின்றிடும் அயன்மால் மகபதி எந்தாய் நீயெமை அளித்தனை நெஞ்சத்து
நன்றிசெய் குமரன் தன்னுடன் நீரும் நடமெனா விடையது புரிந்தான்.
**நன்றி செய் குமரன் தன்னுடன் நடமென விடை எந்தாய்**

## 04. படையெழு படலம்

1311. கண்ணுதல் விடைபெற் றரியயன் மகவான் கடவுளர் தம்மொடு கடிதின்
பண்ணொடு முட்கோல் மத்திகை பரித்துப் பாகனாய்த் தூண்டெனப் பணித்தான்.
**கடவுளர் குமரன் பாகனாய் மருத்து**

1312. மன்புரி திருமால் இனையன பணிப்ப மாருதன் இசைந்துவான் செல்லும்
முன்புற வுய்த்துத் தொழுது மற்றிதன்மேல் முருகநீ வருகென மொழிந்தான்.
**மாருதன் மருத்துவர் நாற்பான் ஒன்பது புடைவர முருக நீ வருக**

1313. மாருதன் இனைய புகன்றுகை தொழலும் மற்றவன் செயற் கையை நோக்கி
சூரினி இறந்தான் என்றுவா சவனுஞ் சுரர்களும் ஆர்த்தனர் துள்ளி.
**குமரவேள் அனைய செழுமணி இரதம் ஆர்த்தனர் சுரர்**

### வேறு

1314. ஓங்கு நேர்மிசைக் குமரவேள் மேவலும் உவப்பால்
நீங்க லின்றியே அவர்புடை சூழ்ந்தனர் நெறியால்.
**குமரவேள் மேவலும் உவப்பால் புடை சூழ்ந்தனர்**

1315. இனந்த னோடவர் முருகனை அடைதலும் இருநீர்
வனைந்த வார்கழற் றலைவர்தம் முரைகொடு வந்தார்.
**முருகனை அடைதலும் தலைவர் தம் உரை கொடு வந்தார்.**

1316. எழுவி யன்கதை நேமிவெஞ் சூலம்வாள் எறிவேல்
அழலு குத்திடும் விழியினர் அசனியின் அறைவார்.
**எழுவியன் கதை நேமி வெஞ்சூலம் வாள் எறிவேல்**
**அழலு குத்திடும் விழியனர் அசனியின் அறைவார்**

1317. நெடியர் சிந்தினர் குறியினர் ஐம்பெரு நிறனும்
கொடிய ரென்னினும் அடைந்தவர்க் கருள்புரி குணத்தோர்.
**நெடியர் சிந்தினர் குறியினர் கொடியரென்னினும் அடைந்**
**தவர்க்கு அருள்**

1318. நீறு கண்டிகை புனைதரும் யாக்கையர் நெடுநஞ்சு
வீறு கொண்டதொல் படைதனைப் படுத்திடு மேலோர்.
**தொல் படைதனை படுத்திடு மேலோர்**

1319. அண்டம் யாவையும் ஆண்டுறை உயிர்த்தொகை யனைத்தும்
பண்டு போற்சிவன் அருளினால் வல்லையிற் படைப்போர்.
அண்டம் யாவும் ஆண்டுறை உயிர்த்தொகை அனைத்தும்
உண்டு
**உமிழ்ந்து பண்டுபோற் சிவன் அருளால் வல்லையிற் படைப்போர்**

1320. முன்னை வைகலின் இறந்திடும் இந்திரன் முதலோர்
பொன்னின் மாமணிக் கலனொடும் விரவினர் புனைவார்.
**முன்னை வைகலின் இறந்திடும் இந்திரன் முதலோர் சென்னி**
**மாலைகள் புனை பூதர்கள்**

1321. இந்த வண்ணமாஞ் சாரதப் படையினர் ஈண்டி
அந்த மில்புனல் அண்டம துடைந்தென ஆர்த்தார்.
**அந்தமில் புனல் அண்டமதுடைந்தென ஆர்த்தார்.**

1322. ஆர்த்த சாரதர் எந்தைபா லாயினர் அதுகால்
சீர்த்த காகள முதலிய இயம்பினர் சிலரே.
**எந்தை பாலாயினர்**

1323. ஆன காலையில் அதுதெரிந் தறுமுகத் தொருவன்
சேனை சூழ்தரக் கயிலைநீத் தவனிமேற் சென்றான்.
**அறுமுகத் தொருவன் சேனை சூழ்தர கயிலை நீத்து அவனி**

1324. கொள்ளை வெஞ்சினச் சாரதர் இராயிரங் குணித்த
பொள்ளெ னத்துகள் எழுந்தது வளைந்தது புவியை.
**புவியை வளைந்தது பொள் என சாரதர்**

1325. எழுத ருந்துகள் மாதிர வரைப்பெலாம் ஏகி
மொழிதல் போன்றன விண்ணுளோர் இமைப்பில்கண் மூட.
**மாதிர வரைப்பெலாம் எழுதரும் துகள்**

1326. கழிய டைத்திடு நேமிகள் பலவொடு ககன
மொழிய டைத்தன அடைத்தன கேள்வியின் மூலம்.
**ஒலிவிழி நாசி மொழி கேள்வி அடைந்தன**

1327. பேரி டங்களாந் தனுவுடைப் பூதர்கள் பெயர
ஓரி டங்களும் வெள்ளிடை இலதென வுரைப்ப.
**ஓரிடம் காரிடம் பாரிடம் பேரி டம்**

1328. அவனி வானெலாம் பூழியால் மறைத்தலும் அதனைத்
தவன நாயகன் அதுதடிந் தேகுதன் மையைப் போல்.
**சிவன் மகன் ஒளி அவனிவான்**

## 20. தாரகன் வதைப் படலம்

1329. வெம்மை தீர்ந்திடும் அப்பெரு நெறியிடை விரைந்து
தம்மை வாட்டியே அமர்கிர வுஞ்சமாஞ் சைலம்.
**மபொருநெறியிடை குமரவேள்படை விரைய வாட்டிய
கிரவுஞ்ச சைலம்**

1330. விண்டு லாய்நிமிர் கிரவுஞ்ச கிரியினை விண்ணோர்
புண்ட ரீகநேர் பதந்தொழு தின்னன புகல்வான்.
**நாரதன் புகல்வான் குமரன் அணுகியே**

1331. தூய நான்மறை அந்தணர் முனிவர்இச் சுரத்தில்
ஏய தொல்பெயர்க் கிரவுஞ்ச மால்வரை இதுகாண்.
**அந்தணர் முனிவர் மாய்வுசெய்தொல் கிரவுஞ்சம**

1332. நேரில் இக்கிரிக் கொருபுடை மாயநீள் நகரில்
தார கப்பெயர் வெய்யவன் வைகினன் சயத்தால்.
**மாயள்நீள்நகரில் தாரகப் பெயர் வெய்யவன் வைகினன்**

1333. இன்ன வன்றனை அடுதியேல் எளிதுகாண் இனையோன்
அன்ன வன்றனை முடிக்குதும் இவணென அறைந்தான்.
**மின்னுதண்சுடர் வேலவன் அன்னவன்றனை**
**முடிக்குதும் இவனென அறைந்தான்**

**வேறு**

1334. சிறந்திடு முருகவேள் இனைய செப்பலும்
இறந்தனன் தாரகன் இன்றொ டேயெனா.
**முருகவேள் இணைய செப்பலும் இன்றொடே தாரகன் இறந்தனன்**

1335. ஐயர்கள் பெருமகிழ் வடைய ஆறிரு
துய்யனை நோக்கியே இனைய சொல்லுவான்.
**முருகன் துய்யனை நோக்கி இனைய சொல்லுவான்**

1336. உற்றவக் கிரிகிர வுஞ்ச மாகுமால்
அற்றமில் தாரகன் அமர்தல் மேயினான்.
**மாயநொச்சியில் அற்றம் இல் தாரகன் அமர்தல்**

1337. ஏயநின் துணைவர்கள் இலக்கத் தெண்மர்கள்
நீயவன் பதியினை வளைத்தி நேரிலாய்.
**துணைவர்கள் இலக்கத்தெண்மர்கள் பூதர்கள் பதியினை வளைத்தி**

1338. தடுத்தெதிர் மலைந்திடும் அவுணர் தானையை
முடித்திட வருகுதும் முந்துபோ வென்றான்.
**அவுணர் தானையை முடிந்திட முந்துபோ**

1339. நலமிகு குமரவேள் நவில இன்னணம்
நிலமிசை இறைஞ்சினன் நேர்ந்து நிற்பவே.
**குமரவேள் நவில நிலமிசை இறைஞ்சினன் வீரவாகு**

1340. ஏந்தலந் துணைவராம் இலக்கத் தொண்மரை
போந்திடும் அவுணரைப் பொரவென் றேவினான்.
**அவுணரைப் பொரவென்றேவினான் முருகன்**

1341. ஏவலும் அனையவர் யாரும் எம்பிரான்
தேவர்கள் கம்மியற் கிதனைச் செப்புவான்.
**எம்பிரான் ஆவியுள் ஆவியாம் அமலன் தேவர்கள் கம்மியற்கு செப்புதல்**

1342. மேதகு பெருந்திறல் வீர வாகுவை
ஓதினன் உலகெலாம் உதவுந் தொன்மையோன்.
**உலகெலாம் உதவும் தொன்மையோன் ஓதினன்**

1343. அத்திறங் கேட்டதோர் அமரர் கம்மியன்
இத்திறம் பூண்டபல் லிரதம் நல்கினான்.
**அமரர் கம்மியன் மாத்திரை ஒழுங்கு முன்னரே பல்லிரதம் நல்கினான்**

**வேறு**

1344. அன்ன தேர்த்தொகை அதனை எம்பிரான்
மன்ன ரும்பெற வழங்கி னானரோ.
**தேர்த்தொகை எம்பிரான் வழங்கின்**

1345. பாகர் தூண்டிடப் படருந் தேர்கள்மேல்
தோகை மைந்தனைத் தொழுது போற்றினார்.
**தோகை மைந்தனைத் தொழுது போற்றி**

1346. தொழுது வள்ளலைச் சூழ்ந்து மும்முறை
குழுமிப் பாரிடங் குலவிச் செல்லவே.
**வள்ளலை தொழுது மும்முறை சூழ்ந்து செல்லவே**

1347. பாய பூதர்தம் படைக்கு வேந்தராய்
நாய கம்பெறீஇ நடுவட் போயினான்.
**படைக்கு வேந்தராய் வீரவாகு நாயகம்**

1348. அமர்வி ளைக்கமுந் தவனை யேவியே
குமர வேள்கடைக் கூழை யேகினான்.
**கடைக்கூழை ஏகினான் குமரவேள்**

**வேறு**

1349. பிற்பட எம்பிரான் பெயர ஏவலால்
சிற்பரன் நகையழல் புரத்துச் சென்றபோல்.
**சிற்பரன் நகையழல் அன்ன சொற்படை**

1350. அரிநிரை பூண்டதேர் அலகை பூண்டதேர்
கிரியுறழ் கலங்களுங் கெழுமிச் செல்வபோல்.
**அரி அலகை பரி பூண்டதேர் கெழுமி செல்லும்**

1351. இடையகல் இரதமோ டிரதந் தாக்கிய
அடுசமர் பயின்றிடும் அமைதி போலவே.
**விரிகடலின் தொடுவானம் போல்**

1352. சங்கொடு பணைதுடி தடாரி காகளம்
செங்கம லத்தவன் பதத்தைச் செம்மிற்றே.
**பூமி செங்கமலபதம் செம்மிற்று**

1353. சாற்றுமிவ் வியல்புறத் தானை வீரரும்
போற்றிய மாயமா புரியைச் சேர்ந்தனன்.
**தானை வீரர் மாயமா உடன் வீரவாகுதேவர் புரி சேர்ந்தனன்**

**வேறு**

1354. சேர்ந்திடு மெல்லை பூதர் சேனைபோய் நகரம் புக்கு
சார்ந்திடு திருவில் வைகுந் தாரகற் றொழுது சொல்வார்.
**எல்லை பூதர்சேனை புக்கு தூதர் ஓர்ந்தனர் தாரகனுக்கு இயம்பல்**

1355. எந்தைமற் றிதுகேள் நும்முன் இமையவர் தொகையை யிட்ட
அந்தர நெறிசெல் விண்ணோர் அறைந்திடக் கேட்டு மன்றே.
**கந்தன் வந்தான் அந்தரநெறிசெல் விண்ரோர் அறைத்திடல் கேட்டல்**

1356. என்னிவர் மாற்ற மென்னா யாந்தெரி குற்றே மாக
முன்னுறு தூசி நந்தம் முதுநகர் அலைத்த தென்றார்.
**குமரன் முன்னுறு தூசி நந்தம் அலைத்த முதுநகர்**

1357. என்றலும் வடவைத் தீயில் இழுதெனும் அளக்கர் வீழக்
குன்றுறழ் மகுடம் அண்ட கோளகை தொடவெ ழுந்தான்.
**வடவைத்தீயில் இழுதெனும் அளக்கர் வீழ அன்ன**
**செற்றமுடன் மகுடம் அண்ட கோளகை தொட எழுந்தான்**

1358. எழுந்துதன் மருங்கு நின்ற ஒற்றரை நோக்கி இந்த
உழுந்துருள் கின்ற முன்னர் ஒல்லைதந் திடுதி ரென்றான்.
**உழுந்து உருள்முன் ஒல்லையில் தானை**

**வேறு**

1359. அன்னபணி முறைபுரிவான் ஒற்றுவர்கள் போயிடலும் அவுணன் நின்ற
பின்னர்வரும் அமைச்சர்கள்தந் தொகைபரவ மதர்ப்பினொடு பெயர்த லுற்றான்.
**அவுணன் இரதத்தில் மதர்ப்பினொடு பெயர்த்தல்**

1360. வீடுவான் போலுமினித் தாரகனென் றவன்சீர்த்தி விரைவில்வந்து
பீடுசேர் தவளமதிக் குடைநிழற்ற வலம்புரிகள் பெரிதும்ஆர்ப்ப.
**தவளமதிக் குடைநிழற்ற வலம்புரிகள் ஆர்ப்ப தாரகன்**
**வீடுவான் போல்**

1361. ஈமத்தே நடம்புரியுங் கண்ணுதலோன் எடாதசிலை யென்ன மாலோன்
சேமத்தேர் மிசைப்போத ஏனையபல் படைக்கலமுஞ் செறிந்து நண்ண.
**வைரத்தண்டம் சேமத்தேர் மிசை பல படைக்கலமும்**
**செறிந்து நண்ண**

1362. ஒற்றர்கூ வியவேலை ஏற்றெழுந்த அவுணர்கடல் ஒருங்கு செல்ல
சுற்றுமால் வரையென்னப் படைத்தலைவர் பஃறேரில் துவன்றிச் சூழ.
**படைத்தலைவர் பஃறேரில் அவுணர் ஒழுங்கு செல்ல**

1363. மொய்யமர்செய் கோலமொடு முப்புரமேல் நடந்தருளும் முக்கண் மூர்த்தி
செய்யமுடி அவுணர்பெருங் கடலினிடை யெழும்பூழி

சேட்சென் றோங்க.
**அவுணர் பெருங் கடலினிடை பூழி எழும்**

1364. கார்க்குன்றம் அன்னதிறல் கரிமீதும் பரிமீதுங் கடிதில் தூண்டும்
தூர்க்கின்ற பூழியனைத் துடைக்கின்ற பரிசேபோல் துவன்றித் தோன்ற.
**செறிபதாகைகள் பூமியினை துடைபடும் பரிசேபோல்**

1365. வாகையுள பல்லியமும் இயம்பத்தன் நகர்நீங்கி மன்னர் மன்னன்
சேகுடைய பெருஞ்சீற்றப் பூதர்படை யார்த்தெதிர்ந்து சென்ற தன்றே.
**பூதர் படையார் தெதிர்ந்தது நதி கடல் அன்ன**

1366. எல்லோருந் தொழுதகைய குமரனடி இணைவழுத்தி இகல்வெம்பூதர்
அல்லோடும் புரையுமனத் தவுணர்படை எதிர்சிதறி அமர்செய் திட்டார்.
**குமரனடி இணைவழுத்தி வெம்பூதர் அவுணர்படை எதிர்சிதறி அமர் செய்திட்டார்**

**வேறு**

1367. எண்ணுறு படைகள் இவ்வா றெதிர்தழீஇ அடரும் வேலை
கண்ணுறும் இமையோர் கண்கள் கடிப்புனல் கான்ற அன்றே.
**படைகள் எதிர்தழிஇ இமையோர் கண்கள் கடிப்புனல் கான்ற**

1368. இரிந்திட லின்றி நேர்வந் தேற்றமர் புரித லாலே
பொருந்திறல் வயத்தால் மேலாம் பூதருஞ் சிலவர் பட்டார்.
**பொருந்திறல் வயத்தால் பூதரும் பட்டார்**

1369. தேருடைத் தெறிந்து பாய்மாத் திறத்தினைச் சிதைத்து நீக்கி
காருடைப் பூதர் சில்லோர் கண்ணனே போன்றார் அன்றே.
**கண்ணனே போல் பூதர் சில்லோர்**

1370. தேர்பரித் தெழுந்து மண்ணில் செல்லுறாப் பவளச் செங்கால்
பார்பரித் திடவே செய்தார் படிமகள் இடும்பை தீர்ப்பார்.
**படிமகள் இடும்பை பார்பரிடவே தீர்ப்பார்**

1371. வாலுடைக் களிற்றின் ஈட்டம் வாரியே கரத்தா லெற்றி
வேலுடைத் தடக்கை அண்ணல் விடுத்தருள் வீர வீரர்.
**வேலுடைத் தடைக்கை அண்ணல் அருள்**

1372. வாருறு புரசை பூண்ட வன்களிற் றொருத்தல் யாவும்
காருற வூர்கோள் தோன்றுங் காட்சியை யொத்த தன்றே.
**ஊர்கோள் அன்ன துஞ்சியகாட்சி**

1373. கண்ணெதிர் நின்று போர்செய் கார்கெழும் அவுணர்ப் பற்றி
மண்ணிடை மின்னு வோடும் வருமுகில் போன்ற தன்றே.
**போர்செய் அவுணர் மின்னுவோடும் வருமுகில்**

1374. ஆயிர வெள்ள மாகுங் கணவரும் ஆங்க ணுள்ள
ஏயென வுலகைச் சிந்தும் இறுதிநாள் எழிலி போல்வார்.
**ஆயிரம் வெள்ளம் இறுதிநாள் எழிலி**

1375. நிணங்கவர் ஞமலி யோர்சார் ஞெரேலெனக் குரைப்பப் புள்ளின்
அணங்குறு நிலைய வாகி அடுத்தன நடுவண் அம்மா.
**பேரமர் விலக்கி அணங்குறு நிலையவாகி நடுவண் அடுத்தன**

1376. தரைத்தடஞ் சிலைய தாகத் தறுகண்வெம் பூத ரானோர்
அரைத்தென நடப்ப ஏற்றார் அவுணரும் அடுபோர் செய்வார்.
**வெம்புதரானோர் அவுணரும் அடுபோர்**

1377. தத்துறு புரவித் திண்டேர்த் தானவர் நிகளத் தந்தி
குத்திநின் றுழக்கிப் பாய்ந்து கொன்றனர் பூத வீரர்.
**பூதவீரர் கொன்றனர்**

1378. விழுந்தன படிவம் யாண்டும் விரிந்தன கவந்த மேன்மேல்
கொழுந்தசை மிசைந்து நின்று குரவையாட் டயர்ந்த கூளி.
**படிவம் விழுந்தன கவந்தம் விரிந்தன கூளிகுரவை**

1379. கண்டனன் இனைய தன்மை தாரகன் கடிய சீற்றம்
அண்டமுங் குலுங்க ஆர்த்திட் டடிகளால் உழக்கிச் சென்றான்.
**தாரகன் கடியசீற்றம் அண்டமும் குலுங்க ஆர்த்திட்டடிகள்
உழக்கிச் சென்றான்**

1380. அல்லெனப் பட்டமேனி அவுணர்கட் கரசன் கையில்
புல்லெனப் பட்ட தம்மா பூதர்தஞ் சேனை யெல்லாம்.
**அல்லெனமேனி அவுணர் அரசன் கையில் பூதர்சேனை புல்லென**

1381. பிடித்திடு வயிரத் தண்டம் பெருங்கடற் பூத வெள்ளம்
எடுத்திடுங் காலை கீண்ட தெண்டிசை அண்டச் சூழல்.
**பெருங்கடற் பூத வெள்ளம் முடிந்திட அடித்திட புவிகீண்டது அண்டச்சூழல் கீண்டது**

1382. தாரிடங் கொண்ட மார்பத் தாரகன் வயிரத் தண்டம்
பாரிடந் தன்னை யெல்லாம் பாரிடம் ஆக்கிற் றம்மா.
**பாரிடம் எல்லாம் பாரிடம்**

1383. அன்றரி விடுத்த ஆழி ஆரமா வணிந்த தீயோன்
நின்றிலர் பூதர் வேந்தர் நெஞ்சழிந் துடைந்து போனார்.
**அரிஆழி ஆரமா அணிந்த தீயோன் முன் நின்றிலர் பூதர்**

1384. திண்கண நிரையின் வேந்தர் சிந்துழிச் சீற்றந் தூண்ட
ஒண்கணை மாரி தூவி அவுணனை ஒல்லை சூழ்ந்தார்.
**நிரையின் வேந்தர் ஒண்கணை மாரி தூவி அவுணனை ஒல்லை சூழ்ந்தார்**

1385. சூழ்ந்தனர் துரந்த வாளி தோன்முகத் தவுணன் யாக்கை
வாழ்ந்தவர் தமக்குச் சொல்லுஞ் சொல்லென வறிது மீண்ட.
**வாழ்ந்தவர் தமக்குச் சொல்லும் சொல்**

1386. தரைபடப் புகழ்வைத் துள்ள தாரகன் தடமார் பத்தை
வரைபடச் சிதறுங் கல்லின் மாரிபோல் ஆன வன்றே.
**தாரகன் தடமார்பத்தை வரைபட சிதறுங்கல்லின் மாரிபோல் கணைகள்**

1387. விடுகணை மாரி யாவும் மீண்டிட வெகுண்டு விண்ணோர்
கடவுளர் அதனை நோக்கிக் கரங்குலைத் திரங்க லுற்றார்.
**வீடுகணை மாரி மீண்டிட கரங்குலைத்திரங்கல்**

1388. மற்றது காலை தன்னில் வலியினால் வயிரத் தண்டம்
பொற்றனு வோடும் வீழப் புணரியின் மீது விட்டான்.
**பொற்றனு வீழ புணரியில்**

1389. துளும்பிய அளக்கர் தன்னில் சூழுற நின்ற தெங்கின்
இளம்பிறை புரையும் வில்லோ டெழுந்தொரு புடையிற் போனார்.
**அளக்கர் தன்னில்வீழ் கொற்றவீரர் புடையில் போனார்**

1390. கொற்றவில் உழவன் வீர கோளரி யதனை நோக்கி
பொற்றட மவுலி தள்ளிப் புணரியும் நாண ஆர்த்தான்.
**வீரகோளரி செவ்வேள் சேவடிதொழுது தீயோன் மவுலிதள்ளி**

1391. ஆர்த்திடு மோதை கேளா அண்டர்கள் அனையன மீது
தார்த்தடந் தண்டம் உய்த்துத் தனதுமான் தேரிற் சென்றான்.
**வீரகேசரிமேல் தண்டம் உய்த்தான் தோன்முகன்**

1392. சென்றொர் மாமுடி புனைவுழித் தண்டமத் திறலோன்
குன்றம் அன்னதோள் தாரக னொடுபொரக் குறித்தான்.
**வீரகேசரி தண்டம் படமயங்க வீரவாகு பொரக் குறித்தல்**

**வேறு**

1393. குறித்தேவிறல் புயன்தாரகக் கொடியோன்எதிர் குறுகி
செறித்தேயுற வளைத்தான்ஒரு சிலைதானவர் தலைவன்.
**விறல்புயன்கனல் வாளிகள் பொறிக்க தாரகன் சிலை வளைத்தான்**

1394. பொழிந்தான்சர மழைநம்மவன் புரமேலது பொழுதின்
மொழிந்தான்ஒரு சூலந்தனை மொய்ம்பிற்செல வுய்த்தான்.
**தாரகன் சரமழை எதிர் நம்மவன் சூலம்**

1395. பொருமூவிலை வேலங்கவன் பொன்மார்புறப் பொருமி
வருமூவரும் ஒருநால்வரும் மாறுற்றமர் இழைத்தார்.
**மூவிலை வேலங்கவன் மார்புற மூவரும் நால்வரும் மாறுற்றமர்**

1396. அமர்செய்திடும் எழுவீரரும் அவுணன்றனக் குடைய
சமர்முற்றிட வருதாரகத் தகுவன்முனம் அடைந்தான்.
**குமரன் பதம் தலைக்கொண்டு கோமான் தாரகன் முன்**

1397. ஒருகார்முகம் இருகால்வளை வுறவேகுனித் துகுதேன்
இருகாதையும் நனிபொத்தினர் ஏங்குற்றனர் இரிவார்.
**கார்முகம் இருகாதையும் நனி பொத்தி ஏங்கி இரிவார்**

1398. நாண்கொண்டிடும் ஒலிகேட்டலும் நடுங்காவெரு வுற்றார்
மாண்கொண்டதன் உருமுச்செல மயங்கித்தளர் வதுபோல்.
**மாண் உருமு அன்ன நாண் ஒலி நடுங்கல்**

**வேறு**

1399. மேதா வியர்கள் பரவுந்திறல் வீரவாகு
தீதாம் அழல்போல் வெகுண்டேயிது செப்பு கின்றான்.
**வீரவாகு வெகுண்டு செப்புதல்**

1400. பொன்றா வலிகொண் டமராடிய பூதர் தம்மை
கொன்றாவி உண்பன் எனலுங்கொடி யோன்உ ரைப்பான்.
**பொன்றா வென்றா கொன்றா என கொடியோன் உரை**

1401. மாயன் றனைவென் றவன்நேமியை மாசில் கண்டச்
சீயந் தனையும் நரிவெல்வது திண்ண மாமோ.
**சீயந்தனையும் நரிவெல்வது திண்ணமோ**

1402. சாருங் குறள்வெம் படையாவையுஞ் சாய்ந்த வீரர்
பாரென் வலியால் உனதாவி படுப்ப னென்றான்.
**வலியால் ஆவிபடுப்ப என்றான் தாரகன்**

1403. என்னுந் துணையில் சரமாயிரம் ஏந்தல் உய்ப்பச்
சின்னம் புரிந்து கணைநூறு செலுத்தி னானால்.
**ஏந்தல் ஆயிரம் சரம் உய்ப்ப கடிது ஆயிரம் கணை**
**தாரகன் செலுத்தி நூறுகணை செலுத்தினான்**

1404. எவ்வக் கொடியோன் தொடுவாளியை ஏந்தல் காணா
தெய்வப் படையால் முடிப்பேனெனச் சிந்தை செய்தான்.
**ஏந்தல் தெய்வப் படையால் முடிப்பேன் எனச் சிந்தை**

**வேறு**

1405. வெங்கனற்படை தாரகன்விட வீரவாகு வெகுண்டுபின்
துங்கமுற்றிய வீரனுய்த்தது துண்டமாம்வகை கண்டனன்.
**வீரவாகு வெகுண்டு தாரகன் படைவிட**

1406. இரவிதன்படை அவுணன்விட்டனன் இவனுமப்படை யேவியே
அருள்மிகுந்தனி யடியன்மாற்றினன் அனையதொல்படை
தனைவிடா.
**இரவிதன்படை ஊதை வெம்படை அனைய தனைவிடா**

1407. அனிலவெம்படை வீறழிந்திட அவுணர்கோமகன் அம்புயன்
நினையுமுன்னது தொலைவுசெய்தனன் நிகரில்வானவர் புகழவே.
**படைதூண்டி நினையுமுன் தொலைவு செய்தனன் வீரவாகு**

1408. ஆயதன்மைகள் கண்டுதாரகன் அற்புதத்தின னாகியே
தீயபுந்தியில் இனையவாறு தெரிந்துசிந்தனை செய்துமேல்.
**ஆயதன்மைகள் கண்டு தாரகன் அற்புதத்திற்கி தீயபுந்தியில் சிந்தை**

1409. தொல்லைமாயையின் விஞ்சைதன்னை நவின்றுளங்கொடு
துண்ணென
ஒல்லைவந்து பரந்தபோல்அவன் ஒருவன்நின்றமர் புரியவே.
**தாரகன் விஞ்சை நவின்று எங்குமாகி இருட்குழாம்**

1410. கண்டுமற்றது வானுளோர்கள் கலங்கியேங்கினர் முன்னரே
கொண்டுநின்றனர் முறுவல்செய்தனர் குணலையிட்டனர் அவுணரே.
**வானுளோர் கலங்கி ஏங்க அவுணர் முறுவல் குணலை**

**வேறு**

1411. தாரகப்பெயர் அவுணர்கோன் மாயையின் சமரும்
வீரபத்திரன் நெடும்படை எடுத்தனன் விடுவான்.
**வீரபத்திர படை எழுந்தனன் விடுவான் வீரவாகு**

1412. துங்க வுக்கிரச் சிம்புள்மாப் படையினைத் தூயோன்
பொங்கு பானுமுன் இருளென முடிந்ததப் பொழுதே.
**தூயோன் சிம்புள் மாபடை பானுமுன் இருள்**

1413. தன்பு ணர்ப்புறு மாயைதான் உடைதலுந் தமியாய்
மின்பொ லிந்ததன் தேரைவிட் டோடினன் விரைவில்.
**மாயைப்படுத்தி ஓடினன் தாரகன்**

1414. தார கன்தொலைந் தோடலுந் தனக்கிணை யில்லோன்
சீரி தாகிய தூணியுள் அன்னதைச் செறித்தான்.
**தாரகன் தொலைந்தோடலும் தூணியுள் செறித்தான்**

1415. அற்ற போர்வலித் தாரகன் பின்வரைந் தணுகிப்
மற்ற வன்றனைத் தொடர்ந்தனன் நெடுந்திறல் வாகு.
**தாரகன் பின் தொடர்ந்தான் வாகு**

1416. வேழ மாமுகற் கிளவலை உன்னியே வீரன்
பாழி யொன்றுசென் றொளித்தனன் தாரகப் பதகன்.
**கிரவுஞ்சப் பாழி ஒளித்தனன் தாரகன்**

1417. முன்ன மாங்கவன் போகிய பூழையுள் முடுகிப்
மன்ன னேகுறா இருள்நிலம் போன்றுவை கியதே.
**ஆயிரம் கதிரிமன்ன றேகுறா இருள்நிலம் அன்னது**

1418. நீளு மாலிருள் படர்தலுஞ் சில்லிடை நெறியால்
மீளு கின்றதோர் நெறியையுங் கண்டிலன் வெகுண்டான்.
**மீளுகின்ற நெறிகண்டிலன் வீரவாகு**

1419. செற்ற மிக்கவன் மாயைஇவ் வரையெனச் சிந்தி
மற்ற வன்றன துணர்வினை மையல்செய் ததுவே.
**வரைமோகத் துயில் உணர்வினை மையல்**

1420. இயலி சைத்தமிழ் முனிவரன் இசைத்தசூள் இசைவால்
துயில லுற்றனன் தொல்லையின் உணர்வெலாந் துறந்தே.
**இயலிசைத்தமிழ் இசைவால் தொல்லை உணர்வெலாந் துயந்து துகில்**

1421. அம்ம லைக்கணே முன்னவன் உறங்கலும் அனைய
விம்ம லுற்றனர் சிறையிலாப் பறவையின் மெலிந்தார்.
**முன்னவன் உறங்கலும் சிறையிலாப் பறவையின் மெலிந்தார்**

1422. உடைந்து போயின தாரகன் றன்னைநம் முரவோன்
படர்ந்து நாடுதும் யாமுமென் றெண்ணினர் பலரும்.
**உடைந்து போயின படர்ந்து நாடுதும் யாம்**

1423. எண்ணி யேயிசைந் திளையரோ ரெண்மரும் இலக்கம்
விண்ணு லாவுறு கிரவுஞ்சம் எய்தினர் விரைவில்.
**எண்ணியே இசைந்து கிரவுஞ்சம் எய்தினர்**

1424. ஆய வெற்பினில் வீரவா குப்பெயர் அடலோன்
மாயம் எண்ணில புரிதலும் மயங்கியே வதிந்தார்.
**ஆயவெற்பினில் மாயம் எண்ணில மயங்கியே**

1425. வெற்றி வீரவா குப்பெயர் அண்ணலும் வீரர்
இற்று ளாரென மகிழ்ந்துமால் வரைமிசை எழுந்தான்.
**தாரகன் வரைமிசை எழுந்தான்**

1426. அண்ட மீமிசை நின்றவா னவர்கள்இவ் வனைத்துங்
தண்டம் யாவையும் வெருவின தலைவர்இன் மையினால்.
**அண்டமீமிசை வானவர் கலங்க தலைவர் இன்மையால்**
**யாவையும் வெருவின**

1427. மலையின் மீமிசை யெழுதரு தாரகன் மற்றோர்
சிலைய தொன்றினை வாங்கியே செருநிலஞ் சென்றான்.
**தாரகன் மற்றோர் இரதம் மேல் பொற்சிலையுடன் செருநிலம்**
**சென்றான்**

1428. நீடு தன்சிலை நாணொலி கொண்டுநீள் சரங்கள்
ஓட லுற்றனர் திசையினும் விண்ணினும் உலைந்தே.
**நீள் சரங்கள் கோடிகோடி பொழிதலும் பூதங்கள் ஓடலுற்றனர்**

1429. ஆன காலையின் நாரதன் இனையகண் டழுங்கி
சேனை காவலன் நின்றதோர் கடைக்கூழை சேர்ந்தான்.
**ஆன காலையின் நாரதன் சேனை காவலன் நின்ற**
**கடைக்கூழை சேர்த்தான்**

1430. அரிது மாதவம் புரிதரு நாரதன் அடலின்
சுரர்க ளோடுபோய் இறைஞ்சியே இனையன சொல்வான்.
**சுரர்களோடு நாரதன் இறைஞ்சி அறுமுகத்தனுக்கு நவிலல்**

1431. ஐய நின்படை வீரர்கள் பெருஞ்சம ராடி
பொய்யின் மொய்ம்புடைத் தாரகன் தன்னொடும் பொருதார்.
**நின்படை பெருங்சமராடி தலைவரை அமைச்சரைச் செற்று தாரகன் பொருதார்**

1432. தலைக்க ணாகிய வீரனுந் தம்பியர் பிறரும்
மலைக்கண் உய்த்தனன் அவர்தமைச் சூழ்ச்சியின் வலியால்.
**தாரகன் சூழ்ச்சியின் வலியால் தலைக்கண் வீரன் தம்பியர் பிறரும் மலைக்கண் உய்த்தனன்**

1433. உய்த்த காலையில் அவுணனா கியகிர வுஞ்சம்
இத்தி றந்தனை உணர்ந்தனன் தாரக னென்போன்.
**கிரவுஞ்சம் மயக்க தாரகன் உணர்ந்தான்**

1434. தெரிந்து தாரகன் மகிழ்வொடு பறந்தலை சென்று
இருந்த நாயக அறிதியே யாவையும் என்றான்.
**தாரகன் மகிழ்வு நாயகன் அறிதி**

1435. என்ற காலையில் நாரதன் உள்ளமும் இமையோர்
ஒன்ற நோக்கியே அறுமுகப் பண்ணவன் உரைப்பான்.
**என்ற காலையில் ஒன்றே நோக்கியே அறுமுகப் பண்ணவன் உரை**

**வேறு**

1436. ஆருமிது கேண்மின் அம ராடுகளன் ஏகி
வீரர்தமை யோரிறையின் மீட்டிடுவன் என்றான்.
**கேண்மின் அமராடு களம்ஏகி சிறை மீட்டிடுவான்**

1437. எந்தையிவை கூறுதலும் யாருமவை தேர்ந்து
கந்தனடி வந்தனை புரிந்தனர் களிப்பால்.
**கூறுதலும் கந்தனடி வந்தனை களிப்பால்**

1438. கந்தமுரு கேசனது காலைமுது பாகாய்
உந்துதி விரைந்தென உரைத்தருள லோடும்.
**கந்த முருகேசன் சிந்தைமுந்து தேர் வல்லே உரைத்தருள்**

1439. என்னயினி தென்றுதொழு தேழெழுவ கைத்தாம்
துன்னுபரி மான்நிரைகள் தூண்டிமிக ஆர்த்தான்.
**என்னையினிதென்று தொழுது ஆர்த்தான்**

**வேறு**

1440. ஆன காலைதனில் அண்டமும் வையம்
மான வேழமும் நடுங்கின மன்னோ.
**ஆன காலையில் அண்டமும் வையமும் நடுங்கின**

1441. வாவு கின்றபல மாநிரை தூண்ட
ஏவ ரும்புகழ ஏகிய தன்றே.
**தொல்இரதம் ஏவரும் புகழ ஏகியது**

1442. ஆதி யங்குமரன் அவ்வழி பொற்றேர்
பூத சேனைபுடை போயின அன்றே.
**ஆதியங்குமரன் அவ்வழி பூதசேனைபுடை**

1443. போர ழிந்துபுற கிட்டெதிர் பூதர்
தார கன்திகழ் சமர்க்களம் உற்றான்.
**தாரகன் திகழ் சமர்க்களம் மருகோன் உற்றான்**

1444. கவன மோடுபடர் காலினு முந்தி
அவுணர் தானையை அணிந்தெதிர் சென்றார்.
**சிவன் மகன் சேவை அவுணர் தானையை அணிந்தெதிர்**

1445. சகந்து திக்கவரு சாரதர் தாமும்
வெகுண்டு பேரமர் விளைத்திட லுற்றார்.
**சாரதர் தாமும் பேரமர் விளைத்திடல்**

1446. கரங்கொள் நேமிகள் கணிச்சிகள் தீவாய்
மரங்கள் விட்டனர் மறங்கெழு பூதர்.
**நேமிகள் கணிச்சிகள் தீவாய் மரங்கள் விட்டனர் பூதர்கள்**

1447. முரிந்த தேர்நிரை முடிந்தன மாக்கள்
திரிந்த பாறுகள் செறிந்தன வன்றே.
**முடிந்தன திரிந்த பாறுகள் செறிந்தன**

1448. நிறங்கொள் செங்குருதி நீத்தம தாகிப்
பிறங்கு கின்றன பிணங்கெழு குன்றம்.
**பிணங்கெழு குன்றம்**

1449. அனைய வாறிவர் அருஞ்சம ராற்ற
இனைத லோடுமிரி குற்றனர் அன்றே.
**அருஞ்சமராற்ற திரிகுற்றனர் அவுணர்**

1450. தன்ப டைத்தொலைவு தாரகன் நோக்கி
வன்ப டைக்கணம் வருந்த நடந்தான்.
**தொலைவு தாரகன் நோக்கி நடந்தான்**

1451. நடந்தெ திர்ந்தகண நாதரை யெல்லாம்
மடந்தை தந்ததிரு மைந்தன்முன் உற்றான்.
**தாரகன் குமரன்முன் உற்றான்**

1452. உற்ற காலைதனில் ஒற்றரை நோக்கி
மற்றி வன்கொல்அரன் மாமகன் என்றான்.
**அரன் மாமகன் என தாரகன் ஒற்றரை வினாவினன்**

1453. என்ன லுங்குமரன் இங்கிவ னேயாம்
முன்ன வன்மதலை முன்னுற வந்தான்.
**முன்னவன் மதலை முன்னுற தாரகன் வந்தான்**

**வேறு**

1454. முழுமதி யன்னஆறு முகங்களும் முந்நான் காகும்
செழுமல ரடியுங் கண்டான் அவன்தவஞ் செப்பற் பாற்றோ.
**ஆறுமுகங்கள் பன்னிருவிழிகள் செழுமலரடி காண் தவம் தாரகன்**

1455. தற்பம துடைய சிந்தைத் தாரகன் இனைய வாற்றால்
கற்பனை கடந்த ஆதிக் கடவுளே இவன்கொ லென்றான்.
**சிற்பர மூர்த்தி ஆதிக்கடவுளே**

1456. இந்தவா றுன்னிப் பின்னர் யார்க்குமே லாகும் ஈசன்
கந்தவேள் தன்னை நோக்கி இனையன கழற லுற்றான்.
**ஈசன் வரம் நினைந்து கந்தவேள் நோக்கி கழறல்**

1457. நாரணன் றனக்கு மற்றை நான்முகன் றனக்கும் வெள்ளை
காரண மில்லை மைந்தா வந்ததென் கழறு கென்றான்.
**காரணமில்லை மைந்தா கழறு**

1458. அறவினை புரிந்தே யார்க்கும் அருளொடு தண்டஞ் செய்யும்
விறலொடு வன்மை சிந்த விடுத்தனன் எம்மை யென்றான்.
**அருளொடு தண்டஞ் செயும் ஈசன் நுந்தம் விறலொடு வன்மை சிந்த விடுத்தனன்**

**வேறு**

1459. கூரிய வேற்படைக் குமர நாயகன்
தாரக னென்பவன் சாற்றல் மேயினான்.
**குமரநாயகன் பேரருள் நிலையால் பேசலும் தாரகன் சாற்றல்**

1460. செந்திருத் திகழுமார் புடைய செங்கணான்
கந்தரத் தணிந்தது காண்கி லாய்கொலோ.
**அந்தரக்கதிர் புரை ஆழி காண்கிலாய்**

1461. இன்றுகா றெம்முடன் இகலிப் போர்செய
வென்றுளார் இலையது வினவ லாய்கொலோ.
**இகலிப்போர் செய வென்றுளார் இலையது**

1462. முட்டிவெஞ் சமரினை முயல முன்னம்நீ
அட்டனன் அவற்றினை அறிந்தி லாய்கொலோ.
**பல கணங்களை அட்டனன் அறிந்திலாய்**

1463. ஆகையால் எம்முடன் அமரி யற்றியே
வாகையங் குமரவேள் மரபிற் கூறுவான்.
**ஏகுதி பாலநீ என குமரவேள் மரபிற் கூறுவான்**

1464. தாரணி மறையவன் ததீசி தன்மிசை
நீர்மைய தானது வினவ லாய்கொல்நீ.
**ததீசி தன்மிசை நாரணன் ஆழி கூரின இழந்து நீர்மயமானது**

1465. சூற்புயல் மேனியான் துங்கச் செங்கையின்
வேற்படை நின்னுயிர் விரைவின் உண்ணுமால்.
**மேல் வேற்படை நின்னுயிர் உண்ணும்**

1466. உங்கள்பே ராற்றல்இவ் வுலகை வென்றன
பொங்குபே ரொளிவர விளிந்து போனபோல்.
**பேரொளிவர பேராற்றல் விளிர்ந்தது**

1467. ஈட்டிய மாயைகள் எவையுந் தன்வழி
மீட்டிடு கின்றனன் விரைவி னாலென்றான்.
**வேல்கொடு செற்று சேனை மீட்டு**

1468. என்றலுஞ் சீறியே இகலித் தாரகன்
சென்றிடும் அமரருந் தியக்க மெய்தினார்.
**தாரகன் சீறிய நாணொலி அமரர் தியக்கம்**

1469. எய்திய காலையில் எந்தை கந்தவேள்
ஐதென உலகெலாம் அழுங்கிற் றென்பவே.
**கந்தவேள் கார்முகம் நாண் முழக்கம் கோடல் உலகு அழுங்கிற்று**

1470. நாரியின் பேரொலி நாதன் கோடலும்
தாரக முதல்வனுந் தலைது ளக்கினான்.
**நாரியின் பேரொலி நாதன் கோடலும் தாரகன் தலை துளக்கினான்**

1471. துளக்கிய தாரக சூரன் கைத்தலங்கம்
அளக்கரும் எண்ணில ஆர்த்துத் தூண்டினான்.
**தாரகன் அளக்கரும் கணைகள் தூண்டினான்**

1472. ஆயதோர் காலையில் ஆறு மாமுகன்
ஏயின பகழிக ளியாவுஞ் சிந்தினான்.
**ஆறு மாமுகன் பகழிகள் சிந்தினான்**

1473. சிந்திய காலையில் செயிர்த்துத் தாரகன்
ஐந்திரு பகழிதொட் டவற்றை நீக்கினான்.
**தாரகன் ஆயிரம்கணை கந்தன் வல்லையில் பத்துபகழி**

1474. மீட்டுமத் தாரகன் விசிகம் வெஞ்சிலை
தோட்டுணை வில்லினைத் துண்ட மாக்கினான்.
**தாரகன் தோட்டுணை வில்லினைக் குமரன் துண்டமாக்கினான்**

**வேறு**

1475. அங்கோர் சிலையைக் குனித்தானது காலை தன்னில்
வெங்கோல் நடாத்தி வருதாரக வெய்யன் மீதில்.
**தாரகன் மீதில் செங்கோல் வகை ஆயிரம் உய்த்தான்**

1476. சேரார் பரவுந் திறல்வேலவன் செய்கை நோக்கி
நேராய் விரவுங் கணையாவையும் நீறு செய்தான்.
**வேலவன் செய்கை நோக்கி தாரகன் ஆயிரம் வாளிகள்**
**ஒல்லை உய்த்து கணைகள் நீறு**

1477. வெய்யான் அநந்தங் கணை தூண்ட விமலன் நல்கும்
எய்யாகும் வண்ணஞ் செறித்தானவன் யாக்கை யெங்கும்.
**விமலன் கணைகோடி தாரகமான வேழம் எய்யாகும் வண்ணம்**

1478. ஒருகோடி வாளி உறலோடும் உருத்து நீசன்
பொருகோடும் வீழ விடுத்தான்இரு புங்க வாளி.
**இருபுங்க வாளி பொருகோடும் விழ விடுத்தான்**

1479. வந்தங் கிரண்டு சரமும்பட மாயை மைந்தன்
கந்தன் தடந்தேர்த் துவசந்துகள் கண்டு நின்றான்.
**மாயை மைந்தன் கந்தன் தடத்தோர் துவசம் துகள்**

1480. மல்லற் கொடியிற் றதுகண்டு மறங்கொள் வெய்யோன்
செல்லுற்ற திண்டேர் பரிபாகொடு சிந்தி நின்றான்.
**வெய்யோன் கணை ஆயிரம் தூண்டி திண்தேர் பரிபாகொடு சிந்தி**

1481. வேறங் கொருதேர் மிசையேறியொர் வில்லை வாங்கி
ஏறுந் தடந்தேர் வலவன்புயத் தெய்த உய்த்தான்.
**செவ்வேள் ஏறும் தடந்தேர் வலவன் புயத்தெய்த உய்ந்தான்**
**தாரகன்**

1482. வென்றோர் புகழுங் குமரன்வியன் தேர்க டாவிச்
பொன்றோய் தனது தடந்தேரில் புலம்பி வீழ்ந்தான்.
**குமரன் வியன் தாரகன் வீழ்ந்தான்**

1483. வீழுற் றிடலும் விழுசெம்புனல் வெள்ள மிக்கே
சூழிக் களிற்றின் வதனத்தினுந் தோன்று மென்ன.
**களிற்றின் வதனத்தில் விழுசெம்புனல் வெள்ளம்**

1484. மன்னா கியதா ரகன்அங்கண் மயங்கி வீழ
தொன்னாள் உதவுந் திறல்மைந்தனைச் சூழ்ந்து கொண்டார்.
**தாரகன் மயங்கிவீழ திறல் மைந்தன் சூழ் தாரகன்படை**

1485. சூலந் திகிரிப் படைதோமரந் துய்ய பிண்டி
வேலும் படைகள் பொழிந்தார்த்தனர் எங்கும் ஈண்டி.
**தாரகன் படைகள் பொழிந்தார்த்தனர் அடுபோர்**

1486. கறுத்தான் அவர்தஞ் செயல்கண்டுதன் கார்மு கத்தை
அறுத்தான் விடுதொல்படை யாவையும் ஆடல் வேலோன்.
**ஆடல் வேலோன் விடதொல்படை யாவையும் அறுத்தான்**

1487. வெய்தாகிய தீங்கணை மாரி விசாகன் மீட்டும்
கொய்தான் குருதிக் கடலெங்கணுங் கொண்ட தன்றே.
**விசாகன் தீங்கணை மாரி**

1488. வில்லோர் பரவுந் திறல்வேலவன் வெய்ய கோலால்
சில்லோர் கள்தத்தம் உயிர்கொண்டு சிதைந்து போனார்.
**வேலவன் வெய்யகோல் அல்லோர் சிதைவு**

1489. மைக்கார் சிவந்த தெனுந்தாரகன் மையல் நீங்கி
நக்கான் அவர்தஞ் செயல்கண்டு நவிறல் உற்றான்.
**தாரகன் மையல் நீங்கி நவிறல்**

**வேறு**

1490. செய்ய வார்சடை ஈசன் நல்கிய சிறுவன் இங்கொரு வன்பொர
ஐய வீங்கொரு தமியன் நின்றனன் அழகி தாலென தாண்மையே.
**ஈசன் நல்கிய சிறுவன் வன்பொர ஐயன் தமியன்**

1491. தாவில் வெஞ்சிலை வன்மை கொண்டு சரங்கள் எண்ணில தூண்டியே
ஏவரும் புகழ் தார காசுரன் இனைய செய்கை இயற்றினான்.
**தாரகாசுரன் இனைய செய்கை தேவர்மா படைதனை தொடுவது சிந்தை**

**வேறு**

1492. அடலரி நான்முக னாதி வானவ
புடைதனில் ஒடுங்கியே போற்றி நின்றவே.
**மேலையோன் புடைதனில் ஒடுங்கி போற்றி**

1493. செங்கண்மா லயன்முதற் றேவர் மாப்படை
அங்கது கண்டனன் அவுணர் மன்னவன்.
**தேவர் மாபடை போற்றி நின்றது கண்டனன் தாரகன்**

1494. ஒருவினன் அகந்தையை உள்ள மோரிறை
அரியது போலுமென் றகத்தில் உன்னினான்.
**எரிகலுழ் விழியினன் வெல்லல் அரியது என அகத்தில் உன்னிான்**

1495. பாங்கரின் மாதுடைப் பரமன் தொல்படை
ஓங்கிருஞ் சினமுடன் ஒல்லை யேவினான்.
**பரமன் தொல்படை ஒல்லை ஏவினான்**

1496. சங்கரன் தொல்படை தறுகண் ஆலமும்
வெங்கனல் ஈட்டமும் விதித்துச் சென்றதே.
**சங்கரைன் தொல்படை அளப்பில் சூலமும் வெங்கனல் ஈட்டமும் விதித்தச் சென்றது**

1497. கலைகுலாம் பிறைமுடிக் கடவுள் மாப்படை
இலைகுலாம் அயிலுடை எந்தை நோக்கினான்.
**பிறைமுடிக் கடவுள் மாப்படை அண்டம் யாவையும் உலைகுற இலைகுழாம் அயிலுடை எந்தை நோக்கி**

1498. கந்தவேள் அனையது கண்டு தந்தையை
தந்தவன் வாங்கிய தன்மை யென்னவே.
**கந்தவேள் கண்டு தந்தவன் வாங்கிய தன்மையில்
அருளில் பற்றுதல்**

1499. நெற்றியில் விழியுடை நிமலன் காதலன்
இற்றது நந்திரு இனியென் றேங்கினான்.
**குமரன் படையினை பாணி தாரகன் கண்ணுறீஇ**

1500. தேவர்கள் தேவனார் தெய்வத் தொல்படை
நாவினி லொருவரால் நவிறற் பாலதோ.
**மூவிடு முகமுடை முதல்வன் வன்மை நவிலற் பாலதோ**

1501. ஆயினும் அரன்மகன் அறத்தின் போரலால்
ஏயென இயற்றுவன் அமரென் றெண்ணினான்.
**மாயைகள் ஆற்றி அமர் இயற்ற தாரகன் எண்ணினன்**

1502. கையனும் இவ்வகை கருத்தி லுன்னியே
செய்குதி செய்குதி யென்று செப்பினான்.
**மாயை செய்ய கிரவுஞ்ச வெற்பின்முன் செய்குதி செய்குதி
என செப்பல்**

**வேறு**

1503. செப்பிய இறுவரை கிரவுஞ்சந் திகழ்வுறு மாயையின்
நிகழ்வுன்னி
ஒப்பறு சூரன திளையோனும் உருமென அவையிடை உலவுற்றான்.
**கிரவுஞ்சம் மாயை முப்புரம் தாரகன் அவையிடை**

1504. வேலைக ளுருவினை வரைகொள்ள விசயம துடையதொ
ரசுரேசன்
மால்கரி முகமுள அவுணன்றான் வரையறு பாரிட
நிரையானான்.
**வரைவேலை உரு அசுரேசன் அனலிவரை இருள்சூழ
அசுரேசன் பூதகணம்**

1505. இந்திரன் முதலுள சுரர்வைகும் ஏழுட னொருதிசை வேழம்போல்
முந்திய தந்தம துருமாறி முறைமுறை நின்றதொர் திறனேபோல்.
**கிரவுஞ்சம் வேழம் தாரகன் கிரி என தந்தமது உரு மாறி**

1506. வாயுவின் உருவென மலைசெல்ல மதகரி முகமுள பதகன்றான்
ஆயிர கோடிவெய் யவரேபோல் அலமர லுற்றனன் அறமில்லான்.
**கிரிவாயு கரிதேயு பின் கிரவுஞ்சம் தாரகன் ஆயிரம் கோடி கனல் உகும் ஞெகிலி சூரிய உரு**

1507. அவ்வகை தாரகன் வரையோடும் அளவறு மாயையின் வடிவெய்தி
கைவரு வேற்படை தனைநோக்கி இனையன சிலமொழி கழறுற்றான்.
**அளவறு மாயையின் வடிவு அழிக்க குமரன் வேற்படைக்கு மொழிந்தான்**

1508. தாரகன் என்பதோர் பேரோனைச் சஞ்சல முறுகிர வுஞ்சத்தை
வீரரை மீட்டிவண் வருகென்றே வேற்படை தன்னை விடுத்திட்டான்.
**தாரகன் கிரவுஞ்சம் ஓர் இறை செல்லுமுன் உயிரேகி வீரரை மீட்க வேற்படை**

1509. சேயவன் விட்டிடு தனிவைவேல் செருமுயல் தாரகன் வரையோடும்
தூயவன் விழியழல் சுடுமாபோல் துண்ணென அட்டது சுரர்போற்ற.
**சேயவன் தனிவேல் தூயவன் விழியழல் போல் பிரபஞ்ச மாயையை அட்டது**

**வேறு**

1510. அரண்டரு கழற்கால் ஐயன் அறுமுகத் தெழுந்த சீற்றம்
இரண்டொரு படையாய் வந்த தென்னவும் ஏகிற் றவ்வேல்.
**அறுமுகம் சீற்றம் ஒருமுகம் அன்ன முத்தலைச்சூலம் இரண்டு ஒன்றான அன்ன வேல் ஏகிற்று**

1511. முடித்திடல் அரிய மாய மூரிநீர்க் கடலை வற்ற
ஒடித்திடு கிற்பேன் என்னா ஒல்லென உருத்து வந்தான்.
**மாயமூரிநீர்க் கடலை வற்ற செவ்வேல் ஓடித்திட தாரகன் வந்தான்**

1512. அச்சமொர் சிறிதுமில்லா அவுணர்கோன் உவணன் மேற்செல்
செச்சையந் தெரியல் வீரன் செலுத்தும்வேல் பட்ட தன்றே.
**அவுணர்கோன் மேல் வேல்பட்டது**

1513. தாரகன் மார்ப மென்னுந் தடம்பெரு வரையைக் கீண்டு
சோரியுந் துகளும் ஆடித் துண்ணென மீண்ட தன்றே.
**தாரகன் கிரவுஞ்சம் ஊடுஆடி மீண்டது வேல்**

1514. மீண்டிடு சீற்ற வைவேல் வெற்பினுள் துஞ்சு கின்ற
தூண்டிய கரத்தில் வந்து தொன்மைபோல் இருந்த தம்மா.
**வேல் வெற்பில் துஞ்சும் வீரரை எழுப்பி பின் கங்கை தோய்ந்து ஐயன் தொல்கரத்தில்**

1515. தண்டம தியற்றுங் கூர்வேல் தாரக வவுணன் மார்பும்
அண்டம துடைந்த தென்பா ராயினர் அகிலத் துள்ளோர்.
**கூர்வேல் தண்டம் பறிந்த பேரோசை அண்டம் உடைந்த அன்ன**

1516. வடித்ததை யன்ன கூர்வேல் மார்பையூ டறுத்துச் செல்லப்
படித்தலந் தன்னில் வீழ்ந்து பதைபதைத் தாவி விட்டான்.
**கூர்வேல் மார்பை யூடறுத்துச் செல்ல படித்தலம் தன்னில் வீழ்ந்து ஆவி விட்டான்**

1517. தடவரை யனைய மொய்ம்பில் தாரகன் வேலாற் பட்டு
உடுகணம் உதிர்ந்த தஞ்சி யோடினன் இரவி யென்போன்.
**தாரகன் வேலாற்பட்டு வானில்துள்ளி கடலுடை ஆர்க்கும் உடுகணம் உதிர்ந்த இரவி அஞ்சி ஓடினான்**

1518. தளர்ந்திடல் இல்லா வீரத் தாரகன் பட்டு வானில்
உளந்தடு மாறி யோலிட் டோடின திசையில் யானை.
**தாரகன் பட்டுவானில் கிளர்தனர் பிலமும் பூமியும் பிளந்தன அண்டம் அதிர திக்கு யானைகள் ஓடின**

1519. தண்ணளி சிறிது மில்லாத் தாரகன் கிளர்ந்து வான்போய்
விண்ணிடை யெழுந்து வல்லே வீழ்ந்ததே போலும் அன்றே.
**தாரகன் வான்போய் மண்ணிடை மறித்த தன்மை மேரு சிறகு இழுந்து விண்ணிடை எழுந்த போல்**

1520. வெற்றிய தாகுங் கூர்வேல் வெற்பினை அட்ட காலை
வற்றிய கடல்கள் வானிற் கங்கையும் வறந்த தன்றே.
**கூர்வேல் வெற்பினை அட்ட வற்றிய கடல்கள்**

1521. சிறந்திடு மாய வெற்பைத் திருக்கைவேல் பொடித்த காலை
உறைந்திடு குருதி துள்ளி உகுத்தவா றாகு மன்றே.
**மாய வெற்பை திருக்கைவேல் பொடித்தகாலை பிறந்திடு தீ குருதியே**

1522. யானுற்ற குன்றந் தன்னை யெறிந்தனன் என்று செவ்வேள்
வானுற்ற கங்கை புக்கு வறந்திடு வித்த தன்றே.
**யானுற்ற குன்றம் எறிந்தனன் செவ்வேள் பொறியின் ஈட்டம் வானுற்ற கங்கை புக்கு வறந்திடு**

1523. திறலுடை நெடுவேல் அட்ட சிலம்பினில் சிதறித் தோன்றும்
இறுதியில் உலகங் கொள்ள எழுந்தது போலும் மாதோ.
**சிதறித் தோன்றும் பொறிகளும் துகளும் இறுதியில் உலகம் போலும்**

1524. தந்தியின் வதனங் கொண்ட தாரக வவுணன் மார்பில்
வந்திடு பூழை புக்கு மறிகடல் மடுத்த தன்றே.
**தாரக வவுணன் மார்பில் சிந்துறு குருதி பூழைபுக்கு மறிகடல்**

1525. விட்டவேல் மீண்டு கந்த வேள்கரத் திருப்பத் தீயோன்
முட்டிலா மகத்தின் வேந்தும் முனிவருஞ் சுரரும் ஆர்த்தார்.
**விட்டவேல் மீண்டு கந்தவேள் கரம்திரும்ப தீது அழிந்தது என முனிவரும் சுரரும் ஆர்த்தார்**

1526. ஆடினர் குமரற் போற்றி அங்கைக ளுச்சி மீது
நீடிய வுவகை யென்னும் நெடுங்கடல் ஆழும் நீரார்.
**நீடிய உவகையில் ஆடினர் குமரற் போற்றி**

1527. ஆங்கது காலை தன்னில் அளப்பிலா மாயை வல்ல
பூங்கழல் வணங்கி நின்று போற்றியே புடையின் நின்றார்.
**மாயை வல்ல ஓங்கல திறம்ப உறங்கிய வீரர்கள் மையல் நீங்கி போற்றி**

1528. வாருறு கழற்கால் வீர வாகுவே முதலா வுள்ள
ஆருநொந் தீர்கள் போலும் மாயையூ டழுந்தி யென்றான்.
**வீரர்கள் மாயையில் அழுந்தி ஆருநொந்தீர் போலும் வேலுடைக் கடவுள் என்றான்**

1529. செய்யவன் இனைய வாறு சீரருள் புரிய வீரர்
வெய்யதோர் கிரிமா யத்தால் மெலிந்திலம் இறையு மென்றார்.
**செய்யவன் சீரருள் புரிய கிரிமாயத்தால் மெலிந்திலம்**

1530. என்றலும் வீர மொய்ம்பின் ஏந்தலை விளித்துச் செவ்வேள்
நன்றிது போற்று கென்றே நவின்றுநல் லருள்பு ரிந்தான்.
**செவ்வேள் படையின் வேந்தை நவின்று நல்லருள்**

1531. தாரகன் போரில் துஞ்சுஞ் சாரதர் தம்மை யெல்லாம்
சீரிய வயவர் ஈண்டச் செருநிலம் அகன்றான் செவ்வேள்.
**சாரதர் எழவேசெய்து செருநிலம் அகன்றான்**

## 21. தேவகிரிப் படலம்

1532. மாகவந் தங்கள் கூளி வாய்ப்பறை மிழற்ற ஆடும்
ஏகவந் தங்கண் நின்ற இமகிரி யெல்லை தீர்ந்தான்.
**செங்கதிர் வேல் அண்ணல் இமகிரி எல்லை தீர்ந்தான்**

1533. அரியயன் மகத்தின் தேவன் அமரர்கள் இலக்கத் தொன்பான்
இரவியில் இரவி செல்ல இமையவர் சயிலஞ் சேர்ந்தான்.
**வேலோன் இரவியில் இரவி செல்ல இமையவர் சயிலம் சேர்ந்தார்**

1534. ஒப்பறு சூர்பின் னோனை ஒருவன்வேல் அட்ட தன்மை
செப்புவ னென்பான் போலச் செங்கதிர் மறைந்து போனான்.
**வேல் அட்டதன்மை அப்புற உலகு செப்புவதுபோல் செங்கதிர் மறைந்து போனான்**

1535. பானுவென் றுரைக்குமேலோன் பகற்பொழு தெலாங்கைக்
கொண்டான்
வானவன் போந்த தென்ன வந்தது மாலைச் செக்கர்.
**மாலைச் செக்கர் வந்தது**

1536. வம்பவிழ் குமுத மெல்லா மலர்ந்திடு மாலை தன்னில்
கொம்பென விளங்கிற் றென்ன எழுந்தது குழவித் திங்கள்.
**குமுதம் மலர்ந்திட மதி எழுந்தது**

1537. ஏற்றெதிர் மலைந்து நின்ற இகலுடை யவுணர் தம்மேல்
மேற்றிசை வீழ்ந்த தென்ன இளம்பிறை வழங்கிற் றன்றே.
**இளம்பிறை மேற்கில் விளங்கிற்று**

1538. கானத்தின் ஏனம் ஒத்த கனையிருட் சூழல் மற்றவ்
தானொத்து விளங்கு கின்ற தாரகா கணங்க ளெல்லாம்.
**தாரகாகணங்கள் அன்னது கோன்பூண்ட கூர் எயிறு உகுத்த முத்தம்**

1539. அல்லிது போந்த காலை ஆரமா மாலை யென்ன
பல்லிமை யோருஞ் செவ்வேள் பதமுறை தொழுது சொல்வார்.
**செவ்வேள் பதம் தொழல்**

1540. வன்கணே யுடைய சூர்பின் வருத்திட இந்நாள் காறும்
தன்கணே இறுத்தல் வேண்டுந் தருதியிவ் வரம தென்றார்.
**வெற்பில் இறுத்தல் வரம் அருள்**

1541. பசைந்திடும் ஆர்வங் கொண்ட பண்ணவர் இனைய தன்மை
தசைந்துமெய் பொடிப்பத் துள்ளித் தணப்பில் பேருவகை பூத்தார்.
**எஃகுடை அண்ணல் பண்ணவர் ஆர்வம் இசைய பண்ணவர் பேருவகை**

1542. ஒண்ணில வுமிழும் வேலோன் ஒலிகழற் றானையோடும்
விண்ணவர் புனைவன் றன்னை விளித்திவை புகல லுற்றான்.
**ஒண்ணில வுமிழும் வேலோன் புகலலுற்றான்**

1543. புகலுறுஞ் சூழ்ச்சி மிக்கோய் புங்கவ ராயு ளோருந்
விகலம தின்றி இன்னே விதித்தியால் விரைவின் என்றான்.
**நகரம் விதித்தி விரைவின் என்றான் முருகன்**

**வேறு**

1544. குழங்கல் வேட்டுவக் கோதையர் ஆடலும்
தழங்கு நூபுரத் தாள்பணிந் தேகினான்.
**முருகன் தாள் பணிதல்**

1545. மகர தோரணம் வாரியின் மல்கிய
நகர மொன்றினை யாயிடை நல்கினான்.
**மகர தோரணம் நகரம் நல்கினான் தேவதச்சன்**

1546. அவ்வ ரைக்கண் அகன்பெரு நொச்சியுள்
தெய்வ தக்குல மொன்றுசெய் தானரோ.
**அகன்பெரு நொச்சியுள் தெய்வ குலம் செய்தான்**

1547. மாற்ற ரும்பொன் வரையுள் மணிக்கிரி
ஆற்று கின்ற அரதனப் பீடிகை.
**வரையுள் அரதனப் பீடிகை**

1548. இனைய தன்மையும் ஏனவும் நல்கியே
முனையின் வேற்படை மொய்ம்பன் அங்கேகினான்.
**வேற்படை மொய்ம்பன் ஏகினன்**

1549. அறுமு கத்தவன் அந்நக ரேகியே
நிறுவ லுற்று நிகேதனத் தெய்தினான்.
**அறுமுகத்தவன் நிகேதனம் எய்தினான்**

1550. இரதம் விட்டங் கிழிந்துபொற் பாதுகை
ஒருவன் மற்றவ் வுறையுளின் ஏகினான்.
**துங்கவேல் ஒருவன் உறையுள் ஏகினான்**

1551. ஊறில் வெய்யவர் யாரும் ஒரோவழி
ஏறி வைகினன் யாரினும் மேலையோன்.
**மேலையோன் மாமணி பீடமேல் ஏறி வைகினன்**

1552. பொழுது மற்றதிற் பூவினன் ஆதியாம்
வழிப டத்தம் மனத்திடை உன்னினார்.
**குமரனை வழிபட மனத்திடை உன்னினார்**

1553. புங்க வன்விழி பொத்திய அம்மைதன்
அங்கண் வந்ததை அப்பெரு மாநதி.
**கடவுளர் உன்னலும் கங்கை வந்தது**

1554. சோதி மாண்கலன் தூயன பொற்றுகில்
ஏதும் ஆயிடை எய்துவித் தாரரோ.
**மாண்கலன் பொற்றுகில் அருச்சனைக் கேற்றன எய்துவித்து**

1555. அண்டர் தொல்லை அமுத மிருத்திய
நொண்டு கொண்டனர் வேதம் நுவன்றுளார்.
**வேதம் நுவன்றுளார் தெண்புனல் நொண்டு கொண்டனர்**

1556. அந்த வெல்லை அயன்முதற் றேவரும்
மந்திரங் கொடு மஞ்சன மாட்டினார்.
**சண்முகத்தெந்தைக்கு மந்திரம் மஞ்சன மாட்டினார்**

1557. வெய்ய வேற்படை விண்ணவற் கின்னணம்
நொய்ய பஃறுகில் நூதனஞ் சாத்தினார்.
**வேற்படை விண்ணவற்கு பஃறுகில் நூதனம் சாத்தினார்**

1558. வீற்றொர் சீய வியன்றவி சின்மிசை
தோற்று பூவின் தொடையலுஞ் சூட்டினார்.
**வேளை ஏற்றி பெயர் சாற்றி மலர்சாத்தி தொடையல் சூட்டினர்**

1559. செய்ய சந்தனத் தேய்வைமுன் கொட்டினர்
மெய்யெ லாமணி மேவரச் சாத்தினார்.
**சந்தனம் தேய்வை மெய்யெலாம் அணி**

1560. சந்து காரகில் தண்ணென் கருப்புரம்
தந்து பற்றித் தலைத்தலை சுற்றினார்.
**புகைசுடர் மணி தந்து சுற்றினார்**

1561. இத்தி றத்தவும் ஏனவும் எஃகவேல்
சித்தி சங்கற்பஞ் செய்திடுஞ் செய்கையோர்.
**எஃகவேல் கைத்தலம் நல்கி சித்தி சங்கற்பம்**

1562. தேவு கொண்ட சிலம்பினில் பண்ணவர்
மூவி ரண்டு முகனுடை மொய்ம்பினோன்.
**ஆறுமுக மொய்ப்பினோன் அமர்ந்தனன்**

1563. அமரர் வெற்பில் அயிற்படை யேந்திய
குமரன் உற்றது மற்றதுங் கூறுகேம்.
**வெற்பில் விமலன் தாரகன் குமரன் இனி உற்றது**

## 22. அசுரேந்திரன் மகேந்திரஞ் செல் படலம்

1564. எந்தை குமரன் எறிந்ததனி வேற்படையால்
அந்தமிலாக் கற்பிற் சவுரி அலக்கணுற்றாள்.
**வேற்படையால் தாரகன் பட்டதை தேவி சவுரி அலக்கன்**

1565. வாழ்ந்த துணைவியர்கள் மற்றுள்ளோர் எல்லோரும்
வீழ்ந்து கணவன் மிசையே புலம்புறுவாள்.
**துணைவியர்கள் கணவன்மிசை வீழ்ந்து புலம்பல்**

1566. சங்குற் றிடுசெங்கைத் தண்டுளவோன் தன்பதமாம்
எங்குற் றனைஅவ் விறைவன்அருள் பெற்றாயே.
**இறைவன் அருள் பெற்றாயே எங்குற்றனை**

1567. உந்துதனி யாழி உனக்கணியாத் தந்தோனும்
சிந்தைதனி லுள்ள கவலையெலாந் தீர்ந்தனரே.
**கவலையெலாம் தீர்ந்தனரே**

1568. பொன்னகரோர் யாரும் புலம்புற் றிடஅவுணர்
இன்ன பரிசேயோ காண்பேனால் எம்பெருமான்.
**துயிலும் பரிசேயோ காண்பேன்**

1569. புல்லா திருந்தனையான் புல்லுவது கண்டுமது
சொல்லாய் வறிதே துயின்றாய் துனியுண்டோ.
**யான் புல்லுவது கண்டும் புல்லாது துயின்றாய் சொல்லாய்**

1570. மையோ டுறழும் மணிமிடற்றோன் தந்தவரம்
ஐயோ இதற்கோ அருந்தவமுன் செய்தாயே.
**அருந்தவம் முன் ஐயோ இதற்கோ**

1571. தன்னோ டிணையின்றித் தானே தலையான
அன்னோ விதிவலியை யாரே கடந்தாரே.
**என்னோ எதிர்ந்தாய் இறந்தனையே விதிவலி**

1572. சந்தார் தடம்புயத்துத் தானவர்கள் தற்சூழ
எந்தாய் புகலாய் இதுவுஞ் சிலநாளோ.
**துஞ்சினையால் சில நாளோ**

1573. வென்றிமழு வேந்தும் விமலன் உனக்களித்த
என்று தமியேன் இனியுன்னைக் காண்பதுவே.
**விமலன் வரம் சூழ்ச்சி உயிர் தொலைவு தமியேன்**
**இனி உன்னைக் காண்பதுவே**

1574. வன்னி விழியுடையான் மைந்தன் அமர்புரிய
என்னினியான் செய்கேன் எனவே இரங்குற்றாள்.
**வன்னிவழி மைந்தன் அமர் தோற்று என்னினியான் செய்கேன்**

1575. மற்றைத் துணைவியரும் வந்தீண்டி மன்னவனைக்
கொற்றப் புதல்வன் வினவிக் குறுகினனால்.
**கொற்றப் புதல்வன் வினவி வந்தான்**

1576. தண்டா விறல்சேருந் தன்றாதை வீந்ததனை
உண்டா னெனவீழ்ந் தயர்ந்தான் உணர்ந்தனனே.
**தாதை வீந்ததனை வெய்யகனல் உண்டானென**
**வீழ்ந்து அயந்து உணர்ந்தான்**

1577. என்றுமுறா இன்ன லிடைப்பட் டவன்எழுந்து
நின்று புலம்பி நினைந்தினைய செய்கின்றான்.
**ஓதாய் அன்னே நின்று புலம்பி இனைய செய்கின்றான்**

1578. அன்னைமுத லோரை அகல்வித் தொருசாரில்
மன்னு கருவி பலவும் வருவித்தான்.
**அன்னை முதலோரை அகல்வித்து தழல் இந்தனம்**
**மன்னு கருவி வருவி**

1579. வந்த பொழுதுதனில் வன்களத்தில் துஞ்சுகின்ற
சந்தனப்பூம் பள்ளி மிசையே தருவித்தான்.
**துஞ்சுகின்ற தந்தைதனை சந்தப்பூம் பள்ளிமிசையே தருவித்தான்**

1580. ஈமக் கடன்கள் இயற்றித்தன் றாதைதனைத்
தீமுற் றருதி யெனஅன்னை சென்றுரைத்தாள்.
**ஈமக்கடன்கள் இயற்றி தாதைதனை கனல் தகனம் அன்னை தீ முற்றுதி**

1581. நற்றாய் மொழிந்ததனைக் கேட்டு நடுநடுங்கி
அற்றாக வென்றான் அசுரேந் திரன்என்பான்.
**தாய்மொழி மறுத்துபின் அற்றாக**

1582. ஏனையதோர் தாயர்களும் யாமுங் கணவனுடன்
மானனையார் எல்லோரும் வான்கனலி னுள்புக்கார்.
**ஏனைய தாயர்கள் கணவனுடன் கனலினுள்**

1583. புக்கதொரு காலை புலம்பியே அந்நகரை
மைக்கடலுள் வைகும் மகேந்திரமூ தூர்உற்றான்.
**புக்கதுகாலை அசுரேந்திரன் மகேந்திர மூதூர் உற்றான்**

**வேறு**

1584. உளந்தளர் வெய்தித் தொல்லை ஒளிமுகன் இழந்து மேனி
வளந்திகழ் தொல்லை வீர மகேந்திரத் தவுணர் கண்டார்.
**ஒளிமுகன் இழந்த மைந்தனைன மகேந்திர அவுணர் கண்டனர்**

1585. உரங்கிளர் அவுணர் காணூஉ ஒய்யெனத் துளங்கி யேங்கி
இரங்கியிக் குமர னுற்ற தென்கொலென் றிசைக்க லுற்றார்.
**அவுணர் காணூஉ இரங்கி உற்றதென்கொல்**

1586. வஞ்சமுங் கொலையுஞ் செய்யான் மற்றிவன் இதற்குத் தாதை
அஞ்சியே அவனை நீங்கி அடைந்தனன் கொல்லோ என்பார்.
**வஞ்சம் கொலை செய்யான் அஞ்சியே தாதை நீங்கி அடைந்ததனன்**

1587. சீரொடு துறக்கம் நீத்துத் தேவர்கோன் உருவ மாற்றி
தாரகன் இறந்தான் கொல்லோ தளர்ந்திவன் வந்தான் என்பார்.
**தாரகன் இறந்தான் தனர்தனன் மைந்தன்**

1588. மாண்கிளர் தார கப்பேர் மன்னவன் பகைஞர் ஆற்றும்
காண்கிலம் அவுணர் தம்மைப் பூழியே காண்டும் என்பார்.
**கிரவுஞ்ச வெற்பில் காண்நிலம் பூழியே**

1589. பையர வணையில் துஞ்சும் பகவன தாழி தன்னை
செய்யினும் அவரால் அன்னோன் முடிகிலன் திண்ணம் என்பார்.
**பகவன்தாழி அணி அன்னோன் முடிகிலன்**

1590. அங்கையை ஒருவன் வாளால் அறுத்திடப் புலம்பி நங்கோன்
புங்கவர் தமக்கே இன்னல் புரிகுவன் போலும் என்பார்.
**இன்றும் அற்றே இன்னல் போலும்**

1591. மணிகிளர் எழிலி வண்ணன் மற்றவ னொடுபோர் ஆற்றான்
இணையகல் ஈசன் அன்றி யாவரே வல்லர் என்பார்.
**போர்செயின் ஈசன் அன்றி யாவரேவல்லர்**

1592. இமையவர் கருடர் நாகர் இயக்கர்கந் தருவ ரேனோர்
அமரினி யுளது போலும் ஐயம தில்லை என்பார்.
**அமர் இனி ஐயமதில்லை**

1593. சேயிவன் அலக்கண் எய்திச் செல்லுறு பரிசா லங்கண்
மாயமா புரிகா றேகி அறிந்தனம் வருதும் என்பார்.
**அலக்கண் எய்திச் செல்லும் தீங்குநாடிஏகி வருதும்**

1594. எனைப்பல இனைய வாற்றா லியாவரும் அவுணர் ஈண்டி
வனைப்பெருங் கழற்காற் சூர மன்னவன் கோயில் போந்தான்.
**அவுணர் ஈண்ட அகரேந்திரன் சூரன் இல் அடைந்தான்**

1595. போந்துதா ரகன்றன் மைந்தன் பொள்ளெனப் படர்த லோடும்
வேந்தர்கள் வேந்தன் சூரன் மேவிவீற் றிருந்தான் மாதோ.
**தாரகன் மைந்தன் படர்தலோடும் சூரன் மேவி வீற்றிருந்தார்**

1596. வீற்றிருந் தரசு போற்றும் வேந்தனை யெய்தி யன்னான்
சாற்றுதி புகுந்த தன்மை தளர்ந்தனை புலம்ப லென்றான்.
**தளர்ந்தனை சாற்றுதி**

1597. என்றலும் மைந்தன் சொல்வான் இந்திரன் புணர்ப்பால் ஈசன்
குன்றொடும் வேலாற் செற்றுக் குறுகினன் புவியி லென்றான்.
**குமரன் உன்இளவல்தனை கிரவுஞ்சம்உடன் வேலால் செற்று குறுகினன் பூமியில்**

1598. வெய்யசூர் அதனைக் கேளா விழுமிதென் றுருமின் நக்கு
பொய்யிது வெருவல் மைந்த உண்மையே புகறி என்றான்.
**உண்மையே புகறி பொய்யிது என்றான் வெய்யசூர்**

1599. தாதைகேள் சரதம் ஈது தாரகத் தந்தை தன்னை
மாதுயர் கொண்டு நின்பால் வந்தனன் என்றான் மைந்தன்.
**சரதம் ஈது ஈமக்கடன் ஆற்றி வந்தனன்**

**வேறு**

1600. தோட்டுணைவ னாம்இளவல் துஞ்சினன் எனுஞ்சொல்
ஈட்டுபொறி சிந்துவன யாக்கையுள் உரோமம்.
**இளவல் துஞ்சினன் சினத்தீ ஈட்டுபொறி யாக்கையுள் உரோமம்**

1601. நெறித்தபுரு வத்துணைகள் நெற்றிமிசை சென்ற
குறித்தது மனங்ககன கூடமும் முடிக்க.
**ககன கூடம் முடிக்க மனம் குறித்தது**

1602. இவ்வகை சினத்தெரி யெழுந்துமிசை கொள்ள
தெவ்வர்புகழ் சூரனிடை சேர்ந்ததுயர் ஆழி.
**சினத்தெறி சூரனிடை சேர்ந்த துயர்ஆழி**

1603. துப்புநிகர் கண்புனல் சொரிந்தநதி யேபோல்
செப்புபொரு ளுண்மையது தேற்றியது போலும்.
**துயராழியது கண்புனல் சொரிந்தநதி மெய்வியர்த்தவெள்ளம்**

1604. பருவர லெனும்புணரி யூடுபடி வுற்றே
நரலையொடு பாரகம் நடுங்கியதை யன்றே.
**பருவரல் புணலி அரற்றல் நரலை பாரகம் நடுங்க**

1605. கூற்றுள நடுங்கிய குலைந்தது செழுந்தீ
ஆற்றிய பணிக்கிறையும் அஞ்சிய தலைந்தே.
**கூற்றுள நடுங்கியது இறையும் அஞ்சியது**

1606. பாங்கருறு தானவர்கள் பாசறையின் மூழ்கி
ஓங்குதுயர் கொண்டுகலுழ் ஓசைமலிந் தன்றே.
**நகர் எல்லாம் ஓங்குதுயர் கலுழ்ஓசை**

1607. ஆனபொழு தத்தினில் அழுங்கலுறு சூரன்
தானுடைய ஏவலர் தமக்கிவை உரைப்பான்.
**அழுங்கலுறு சூரன் ஏவலர் தமக்கு உரை**

1608. மன்னிளவல் ஆருயிரை மாற்றிவரு கந்தன்
உன்னுகணம் ஒன்றின்முனம் உய்த்திடுதி ரென்றான்.
**கந்தன் இகல் கடந்து சயம்எய்த யாவும் உன்னுகணம் உய்த்திடுதி**

1609. இறையிவை புகன்றிடலும் ஏவலர்கள் யாரும்
குறைவில்அனி கங்களொடு கொம்மென அணைந்தார்.
**ஏவலர்கள் யாரும் குறைவில் அனிகங்களொடு கொம் என அணைந்தார்**

1610. ஆயசெயல் காண்டலும் அமைச்சரில் அமோகன்
தீயசின மெய்திட லெனாஇனைய செப்பும்.
**அமைச்சரில்அமோகன் தீயசின் – மெய்திடலெனா இணையசெப்பு**

**வேறு**

1611. நஞ்சுறை படைகள் கற்று நவையுறா தொன்ன லாரை
வெஞ்சினத் தினைமேல் கொண்டு விரைந்தமர் இயற்றச் செல்லார்.
**வீரர் சினத்தினை விரைந்து அமர் செல்லார்**

1612. குலத்தினை வினவி உள்ளக் கோளினை வினவி வந்த
வலத்தினை வினவி யல்லால் மற்றொன்று மனங்கொள் வாரோ.
**குலம்உள்ளக்கோன் நிலம் நெரிசலம்தானை வலம்**
**வினவி மனங்கொள்வர்**

1613. வரத்தினில் வலியி னாரோ மாயையில் வலியி னாரோ
சிரத்தினில் வலியி னாரோ என்றிவை தேர்வ ரன்றே.
**வரம் மாயை கரம் கல்வி உரம் சிரம் வலியினாரோ**

1614. ஒற்றரைத் தூண்டி அன்னோர் உறுவலி உணர்வ ரேனும்
பெற்றியும் உளதோ என்னா வேயொரீஇத் தேர்வர் பின்னும்.
**உறுவலி உணர்வரேனும் பெற்றியும் உளதோ தேர்வர்**

1615. வினையது விளைவை யென்றும் மெல்லிய என்கை வெஃகார்
முனையுறு புலத்தி லாற்றும் மும்மையும் முன்னிச் செய்வார்.
**மும்மையும் முன்னி முளையுறு புலத்தில் செய்வார்**

1616. மூவியல் மரபி னாலும் முற்றுறா தொழிந்த காலை
மேவலர் பான்மை யுன்னி வெற்றிகொண் டணைவர் அன்றே.
**முற்றுறா மூவியல்மரபு மேவலர்பான்மை வெற்றி**

1617. நேர்ந்திட வலியி லோரும் ஞாட்பிடை நேர்தி ரென்னா
பேர்ந்திடச் செய்வர் அஃதே பெறலரும் புகழ தன்றே.
**தானை தூண்டிப் பேர்ந்திடல் புகழ்**

1618. ஈதரோ உலகி லுள்ள இறைவர்தம் இயற்கை யாகும்
போதனும் நெடுமா லோனும் வைகலும் புகழ வுற்றாய்.
**இறைவர் தம் இயற்கை புகழ்**

1619. இன்னதோர் மிடல்பெற் றுள்ள இறைவநீ அளிய னாகும்
உன்னினை போதி யென்னின் உனக்கது வசைய தன்றோ.
**ஈசன்பிள்ளை வெல்ல உன்னினை வசை**

1620. மாற்றலர் வன்மை யோராய் மற்றவர் படைஞர் தங்கள்
சீற்றமங் கதுமேல் கொண்டு செல்லலுந் திறலின் பாற்றோ.
**வாளாசீற்றம் திறலில்**

1621. வீரமும் வலியும் மிக்கோ ராயினும் விதிவந் தெய்தில்
தாரகன் மழலை தேறாச் சிறுவனுந் தடியப் பட்டான்.
**விதிவந்தெய்தில் தாரகன் மழலையால் தடியவும் பட்டான்**

1622. கலகல மிழற்றுந் தண்டைக் கழலடிச் சிறுவன் மைம்மாம்
மெலியரும் ஒருகா லத்தில் வீரராய்த் திகழ்வர் அன்றே.
**வலியரும் இழப்பர் மெலியதும் வீரராய்த் திகழ்வர்**

1623. யாருநே ரன்றி வைகும் இறைவநீ சிறுவன் றன்மேற்
வீரரைப் படையொ டேவி வெற்றிகொண் டமர்தி யென்றான்.
**வீரரை ஏவி வெற்றி கொண்டமர்தி**

1624. அறிதரும் அமைச்சர் தம்முள் அமோகன்இத் தன்மை தேற்ற
செறிதரும் உழைஞர் தம்முட் சிலவரை நோக்கிச் சொல்வான்.
**அறிதரும் அமைச்சர் உறுதியொன்று சூரன் உழைஞர் நோக்கிச் சொல்வான்**

1625. பகனொடு மயூரன் சேனன் பரிதியம் புள்ளின் பேரோன்
தகுவர்கள் தலைவர் மற்றச் சாரணர் தம்மை உய்த்தார்.
**பறவையாக சாரணர் உய்த்தார்**

1626. சாரணர் இனையர் போந்து தாள்முறை பணிந்து நிற்ப
சேருறு தொகையும் யாவுந் தேர்ந்திவண் வருதி ரென்றான்.
**கந்தர் பான்மையும் படைதொகையும்தேர்ந்தி**

1627. ஒற்றுவர் உணர்ந்தந் நீர்மை உச்சிமேல் கொண்டு தங்கோன்
வெற்றிகொள் அவுணர் போற்ற வீற்றிருந் தரசு செய்தான்.
**ஒற்றுவர் செல்ல சூரபன்மன் வீற்றிருந்தரசு**

1628. ஏதமில் சூர பன்மன் இளவல்தன் முடிவு நேடி
பூதல மீது வந்த நெறியினைப் புகல லுற்றாம்.
**ஆரியங்கடவுள் மைந்தன் பூதலமீது நெறி**

## 23. வழிநடைப் படலம்

1629. குருமணி மகுடம் ஆறுங் குழைகளுந் திருவில் வீச
பருமணி நீட்டிற் றென்னப் பானுவந் துதயஞ் செய்தான்.
**மணிமகுடம் ஆறும் குழைகளும் திருவில் திருக்கைவேற்**
**பெருமான் கையுறையாக பானு உதயம்**

**வேறு**

1630. மங்குல் வானமேல் வெய்யவன் கதிரென வழங்கும்
பொங்கு தானையும் அமரருஞ் சூழ்தரப் போந்தான்.
**அறுமுகன் கடவுள் வெற்பகன்று தானையும் அமரரும்**
**சூழபோந்தான்**

1631. தன்னை நீக்கியே சூழ்வுறுந் தவமுடைப் பிருங்கி
கன்னி பூசனை செய்தகே தாரமுன் கண்டான்.
**முன்கண்டான் திருக்கேதாரம் கன்னி பூசனை**

1632. பைய ராவின்மேற் கண்டுயில் பண்ணவன் றனக்கு
கைய தேயுரைத் திட்டதோர் காசியைக் கண்டான்.
**பையராவின் பண்ணவன் மானிடர்க்கு மறை முனிவியாசர்**
**கையதே உரைத்திட்டகாசி**

1633. பருப்ப தப்பெயர்ச் சிலாதனற் பாலகன் பரமன்
திருப்ப ருப்பதத் தற்புதம் யாவையுந் தெரிந்தான்.
**திருப்பருப்பதம் அற்புதம் பாலகன் தெரிந்தான்**

1634. அண்டம் மன்னுயிர் ஈன்றவ ளுடன்முனி வாகிப்
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்.
**தான்வருபண்டு வேங்கட கிரி**

1635. சிலந்தி மாசுணம் மும்மதக் கரிசிவ கோசன்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையுங் கண்டான்.
**தென்கயிலை காளாத்திமுத்தி சேர்**

1636. கொடிய வெஞ்சினக் காளியிக் குவலய முழுதும்
கடவுள் ஆடலால் வென்றதோர் வடவனங் கண்டான்.
**காளியை ஆடலால் வென்ற வடவனம் காண்**

1637. அம்பு ராசிகொள் பிரளயத் தினுமழி வின்றி
கம்பை சூழ்தரு காஞ்சியந் திருநகர் கண்டான்.
**பிரளயந்தினுமழிவின்றி காஞ்சி காண்**

1638. ஏல வார்குழல் உமையவள் பூசைகொண் டிருந்த
ஆல யங்களாய் உள்ளவுங் கண்டனன் ஐயன்.
**உமையவள் ஆலயம் ஐயன் கண்டனன்**

**வேறு**

1639. என்னிகர் எவரு மில்லென் றிருவரும் இகலும் எல்லை
தன்னிகர் இன்றி நின்ற தழற்பெருஞ் சயிலங் கண்டான்.
**அடிமுடி தெரியா தழற்பெருஞ்சயிலம் காண்**

1640. மண்ணுல கிறைவன் செய்யும் மணந்தனை விலக்கி எண்டோள்
பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப் பெரும்பதி தனையும்
கண்டான்.
**பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப் பெரும்பதிகாண்**

1641. தூசினால் அம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்
**முதுகுன்றவரை காசியின் விழுமி**

1642. விரிகனல் வேள்வி தன்னில் வியன்றலை அரிந்து வீட்டி
திருநட வியற்கை காட்டுந் தில்லைமூ தூரைக் கண்டான்.
**தில்லைமூதூர் திருநட வியற்கை காண்**

1643. தண்டளிர்ச் சோலைத் தில்லைத் தபனிய மன்றி லென்றும்
கண்டனன் கசிவால் உள்ளங் களிப்புற வணங்கிப் போனான்.
**விராட்புருடன் தில்லைத் தபனிய மன்றில் அற்புதக் தனிக்கூத்து ஆடல் காண்**

1644. குடமுனி கரத்தில் ஏந்துங் குண்டிகை இருந்து நீங்கி
வடகரை மண்ணி யின்பால் வந்தனன் கருணை வள்ளல்.
**காவிரி வடகரைமண்ணி காண்**

## 24. குமாரபுரிப் படலம்

1645. அளவில் பூதவெம் படையொடு மண்ணியா றதன்கண்
வளைநெ டுங்கடல் மூழ்குவான் புக்கென மறைந்தான்.
**மண்ணியாறு தனில் குளகன்**

1646. மறைந்த காலையில் தோன்றின மாலையும் நிசியுந்
துறைந்த ஒன்னலர் யாவருங் கிளர்ந்தவா றொப்ப.
**திங்கள் தாரகை ஒன்னலர் கிளர்ந்தவாறு**

1647. மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பில்
கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே.
**விசும்பில் பேரிருள் தாருகாவனம் இளம் பிறைகைக்கபாலம்**

1648. நிலவு லாவிய ககனமா நீடுபாற் கடலில்
செலவு கொண்டதோர் தோணிபோன் றதுசிறு திங்கள்.
**பாற்கடலில் தோணிபோல் திங்கள்**

1649. ஆன காலையில் அறுமுகப் புங்கவன் அமல
வான நாயகன் கயிலைபோன் றிருந்ததவ் வையம்.
**அறுமுகப்புங்கவன் அமலமேனி சேரொளி கயிலை**

**வேறு**

1650. வீசு பேரொளி விறற்குகன் இவ்வாறு
கேச வன்முதல்வர் இன்ன கிளப்பார்.
**விறற்குகன் பேரொளி மண்ணி நதி**

1651. ஆண்ட இந்நதி யகன்கரை எல்லாம்
ஈண்டி ஈண்டையின் இறுத்துள அன்றே.
**நதியகன் கரை ஈண்டி ஈண்டையின் இறுத்துள**

1652. பிறைபு னைந்திடு பெருந்தகை தானம்
இறைவ இவ்விடை இருந்தருள் என்றார்.
**நதிக்கரை தன்னில் இருந்தருள்**

1653. வனையும் மேனிஅயன் மால்முதல் வானோர்
புனைவ னுக்கிது புகன்றிடு கின்றான்.
**விச்சுவ கன்மம் புனைவனுக்கு புகன்றிடல்**

1654. மெய்வி தித்தொழிலில் வேதன் நிகர்க்கும்
செவ்வி திற்புனைவு செய்குதி யென்றான்.
**மூதூர் செய்குதி**

1655. என்ன லோடும்அவ் விடந்தனில் எங்கோன்
உன்னி நல்கலும் உவந்தனர் யாரும்.
**எங்கோன் மாநகர் நல்கல்**

1656. அப்பு ரத்தையறி வன்கடி தாற்றி
இப்பு ரத்திடை எழுந்தரு ளென்றான்.
**மெய்ப்புரந்தவன் புரக்கிடை எழுந்தருள்**

1657. என்ற லோடும்இர தத்தின் இழிந்தே
மன்றல் மாநகரில் வள்ளல் புகுந்தான்.
**மாநகரில் கருணை வள்ளல் புகுந்தான்**

1658. செல்லு மாமுகில் செறிந்திடு காப்பின்
நல்ல மாநகரி தென்று நவின்றான்.
**மாமுகில் செறிந்திடு காப்பின் நல்லமாநகர் நவிலல்**

1659. வீர வேளிது விளம்புத லோடும்
ஞலூர தென்றுபெயர் ஓதினர் அன்றே.
**சேய் ஞலூர் மண்ணிவடகரை**

1660. ஆய காலையனி கப்படை சூழ
கோயில் செல்லுபு குமாரன் இருந்தான்.
**அணிகம்படைசூழ குமாரன் இருந்தான்**

**வேறு**

1661. பன்னிரு புயத்தொகை படைத்தகும ரேசன்
தொன்னிலை இருக்கைகள் தொறுந்தொறும் அடைந்தார்.
**பன்னிரு புயகுமரேசன் தன்னருள்**

1662. தானைகள் தமக்குரிய சாரதர் இலக்கர்
வானவர் தமக்கிறை செயற்கையை வகுப்பாம்.
**வானவர் தமக்கிறை செயற்கை**

**வேறு**

1663. தாங்கரும் பெருந்திறல் தார காசுரன்
நீங்கினன் உவகையால் நிறைந்த நெஞ்சினான்.
**தாரகாசுரன் பட்டபான்மையால் புரந்நதரன் உவகை**

1664. விருந்தியல் அமிர்தினை விழும மில்வழி
வரந்திகழ் சிரபுர வனத்தில் தெய்வதம்.
**சிரபுரவனத்தில் தெய்வதம்**

1665. முகில்பொதி விண்ணகம் முதல்வன் பூண்களும்
அகில்பொதி காட்டகத் தடிகள் உய்த்ததே.
**பூண்களும் துகில்பொதி கிழியொடு காட்டகத்து அடிகள் உய்த்தது**

1666. முந்துற உய்த்தபின் முதல்வ கேட்டிநீ
தந்தனன் கொள்கெனச் சாற்றி நின்றதே.
**வைத்தபூணிது கொள்க பரமன் காழியில்**

1667. நிற்புறு கின்றுழி நேமி அண்ணற்கு
கற்புடை யாள்விடுந் தூதின் காட்சிபோல்.
**பூண்கிழி கற்புடையாள் விடும்தூது காட்சிபோல்**

1668. எரிமணி அணிகலன் இட்ட பூந்துகில்
வரியளி சூழ்வுற மலர்ந்த தென்னவே.
**அணிகலன் இட்ட பூந்துகில் தாமரைவரியணி சூழ்வுற**

1669. துண்ணெனக் கிழியதன் தொடர்பு நீக்கலும்
எண்ணுதற் கரியதோர் இன்பந் துய்த்துளான்.
**துணைவி பூண் உம்பர் தோன்றலும்**
**எண்ணுதற்கரிய இன்பம் உய்த்துளான்**

1670. பூட்கையின் முலையுடைப் பொன்னங் கொம்பின்மேல்
காட்கொளுங் காமநோய்க் கவலை எய்தினான்.
**காமநோய்க்கவலை காட்கொளல்**

1671. நெய்ம்மலி தழலென நீடிக் காமநோய்
மைம்மலி சிந்தையன் மருட்கை எய்தினான்.
**மைம்மலிசிந்தையன் மருட்கை எய்தினான்**

1672. பசையற வுலர்வுறு பராரைப் பிண்டியின்
அசைவிலன் இருந்தனன் அணங்குற் றென்னவே.
**அணங்குற்றென்ன அசைவிலன் இருந்தனன்**

1673. முருந்துறழ் எயிற்றினாள் முலைத்த டங்களில்
பிரிந்திடின் வருந்துதல் பேசல் வேண்டுமோ.
**முலைத்தடங்களில் பொருந்துற மூழ்கி பிரிந்திடல் வருந்தல்**

1674. மெய்ந்நனி அலசுற விரக மீக்கொள
தன்னுழை யவர்தமை நோக்கிச் சாற்றுவான்.
**விரகம் மீக்கொள நீர்மையோன் சாற்றல்**

1675. இக்கிழி யொன்றினை ஏந்தி முந்துபோற்
அக்கணம் அனையவர் அதனை யாற்றினார்.
**இக்கிழி ஏந்தி முந்து போல்**

1676. அன்னதோர் அளவையில் அடவித் தேவினை
மன்னவ நன்றென வணங்கிப் போயதே.
**அடவித்தேவினை செல்என போயது**

1677. போந்திடு காலையிற் புலோமசைப் பெயர்
ஓய்ந்தனன் தட்பமேல் உளம்வைத் தேகினான்.
**தட்பமேல் உளம் ஓய்ந்தனன்**

1678. ஒளியிழை உழத்தியர் ஒளிமென் கூந்தலின்
புளினமொன் றதன்மிசை புக்கு வைகினான்.
**ஞாங்கர் மிசை புக்கு**

1679. தீந்தழல் வெங்கதிர் திளைத்த வாறென
வேந்தனுக் காற்றவும் வெம்மை செய்ததே.
**நிலவுத்தீப்பட வெம்மை அன்ன இந்திரன்**

1680. சூற்புயல் மாறிய சுரத்தில் தொக்குறு
மேற்பட அசைந்தனன் வினையம் வேறிலான்.
**பனிமதிக் கதிர் மேற்பட அசைந்தனன்**

1681. திங்களும் வெங்கனல் சிதறிக் காய்ந்திட
புங்கவர் மன்னவன் புலம்பல் எய்தினான்.
**புலம்பல் வெங்கனல் சிதறிக் காய்ந்திட**

1682. மட்டமர் புரிகுழல் மடந்தை என்னுடல்
பட்டவர் தன்மையும் படுப்ப ரோவென்பான்.
**படுப்பரோ பட்டவர்தன்மையும்**

1683. எஞ்சலில் அமுதினை யார்க்கும் நல்குநீ
வஞ்சினம் பிடித்தியோ மதிய மேயென்பான்.
**எஞ்சலில் அமுதினை நல்கு மதி வஞ்சினமோ**

1684. நிற்றலும் வருதிநீ நீடு தண்ணளி
கற்றனை இத்திறங் கள்வ நீயென்பான்.
**தண்ணளி கள்வநீ**

1685. பெண்ணிய லாரிடைப் பிறங்கு காமமும்
தண்ணளி மதிக்கிது தகுவ தோவென்பான்.
**தண்ணளிமதி விரக அழல் சொரிதல் தகுமோ**

1686. அரியநற் றவம்பல ஆற்றி இன்றுகாறு
ஒருவனை விடுகென உரைத்து வேண்டுவான்.
**இன்றுகாறு அரியநற்றவம் விடுக சுடுவதில்**

1687. அண்டமேல் நின்றனை அவனி வானகம்
கண்டதுண் டோமதிக் கடவுள் நீயென்பான்.
**மதிக்கடவுள் அண்டமேல் நின்றனை அவனிவானகம் கண்டதோ**

1688. யான்முதல் தோன்றினன் எனது பின்னவன்
மேன்மைய தாகுமோ விளம்பு வாயென்பான்.
**மேன்மையதோ மன்மதன் விளம்பு**

1689. பரேருள உனதுமெய் படுத்த கண்ணுதல்
பொரேலினி மதனநீ போகு போகென்பான்.
**மதனநீ பொரேலினி போகு போ**

1690. வானுழை திரிதரு மதியம் போக்கிய
ஈநுழை கின்றன போலும் என்கின்றான்.
**ஈகோல்மதியம் அன்னநுழை விரகபுண்**

1691. வன்றிறற் கொலைஞர்கள் மானில் கூவிமான்
தென்றலுக் கியான்செய்த தீதுண் டோவென்பான்.
**தென்றலுக்கு தீதுண்டோ**

1692. வாகுலப் பரியதோர் மாதர் மாலெனும்
கோகிலப் பறவையுங் கொல்லு மோவென்பான்.
**கோகிலப் பறவையும் கொல்லுமோ**

1693. நம்முரு வாயினன் நாகர் கோனெனா
எம்முயிர் கொள்வன இருபுளா மென்பான்.
**கூவிக்குயிலும் கூவாது சேவலும் இருபுள் விரகவேதனை**

1694. தண்டுதல் இன்றியே தானு நானுமாய்
உண்டுகொல் கதிரினம் உதிக்கி லானென்பான்.
**அற்றைநாட்சினம் கதிரினம் உதிக்கிலான்**

1695. கோழிலை மடற்பனைக் குடம்பை சேர்தரு
ஊழியும் வீழ்ந்திடா தொலிக்கு மோவென்பான்.
**மகன்றில் ஊழியும் வீழ்ந்திடாஒலி**

1696. துன்னல ராகிய தொகையி னோர்தமை
உன்னிய தோகடல் உறங்க லாதென்பான்.
**துன்னலர் அன்னதும்அன்றி ஆவி உன்னியதோ**

1697. இவ்வகை யாமினி யெல்லை முற்றவும்
செய்வது பிறிதிலன் தெருளில் சிந்தையான்.
**விரகநோய்தெருளில் சிந்தையான் பிறிதல செய்வது**

**வேறு**

1698. ஆக்கம் இத்திறம் அடைவுழிப் பத்துநூ றடுத்த
மாக்கள் பூண்டதேர் வெய்யவன் குணதிசை வந்தான்.
**பத்துநூறு உற்றநோய் நீக்க வெய்யவன் குணதிசை**

1699. வெம்பு தொல்லிருள் அவுணர்தங் குழுவினை வீட்டி
சிம்பு ளாமெனத் தோன்றினன் செங்கதிர்க் கடவுள்.
**சிம்புள் அன்ன செங்கதிர் கடவுள்**

1700. தொடர்ந்த ஞாயிறு விடுத்திடுங் கதிர்களாந் தூசி
துடைந்த மன்னரில் போயினன் உடுபதிக் கடவுள்.
**ஞாயிறு விடுந்திடுங்கதிர்களாம் தூசி போயினன் உடுபதி**

1701. விரிந்த பல்கதிர் அனிகத்தை வெய்யவன் விடுப்ப
இரிந்து ளோரையுந் தொடர்வரோ சூரர்தம் இனத்தோர்.
**சூரர் இனத்தோர் களத்தில் இரிந்துளோரை பின்தொடர்வரோ**

1702. திங்கள் தன்குறை உணர்த்தவாய் திறந்தெனச் செய்ய
அங்கை கூப்பிய திறனென ஒடுங்கிய அன்றே.
**குமுதம் அங்கை கூப்பியதிறன் பங்கயங்கள்போது அவிழ்ந்தன**

1703. வனமெ ழுந்தன வனசமு மெழுந்தன வரியின்
மனமெ ழுந்தன எழுந்தன மக்களின் தொகையே.
**மக்களின் தொகை எழுந்தன மனமெழுந்தன**

1704. ஞாயி றுற்றவவ் வளவையின் நனந்தலை உலகில்
மாயி ருட்டொகை யொடுங்கிய திந்திரன் மனத்துள்.
**இந்திரன் மனத்துள் இருள்**

1705. கையி கந்துபோய்த் தன்னுயிர் அலைத்தகா மத்தீ
ஐய கோவிது வருவதே எனக்கென அறைந்தான்.
**ஐயகோ காமத்தீ**

1706. தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்பும்
காம மன்றியே ஒருபகை உண்டுகொல் கருதில்.
**காமமே ஒரு பகை**

1707. என்ப துன்னியே இந்திரன் ஆண்டைவைப் பிகந்து
முன்பு தாழ்ந்தனன் உரோமமுஞ் செங்கையும் முகிழ்ப்ப.
**அறுமுகன் அடிகள் தாழ்ந்தனன்**

1708. தொழுத கையினன் கோட்டிய மெய்யினன் துகிலத்து
முழுதும் ஊறிய துதியின னாகிமுன் நின்றான்.
**தொழத கையினன் துதியினன்**

1709. கரிய வன்றனைச் செய்யவன் கருணைசெய் தருளி
உரிய வாயபல் கரணமுந் தருதியென் றுரைத்தான்.
**செய்யவன் கருணை அருள்**

1710. உரைத்த வெல்லையில் தொழுதுபோய் உழையரில் பலரை
விரைத்த கந்தங்க ளேனவுந் தந்தனன் விரைவில்.
**தொழுது விரைவில் கந்தங்கள் தந்தனன்**

1711. அவ்வக் காலையில் ஆறுமா முகனுடை யடிகள்
எவ்வெக் காலமும் நிலையதோர் உருவுசெய் திட்டான்.
**ஆறுமாமுகனுடையடிகள் தாதை எக் காலமும் நிலைய உருவு செய்திட்டான்**

1712. தேவு சால்மணிப் பீடத்தில் ஈசனைச் சேர்த்தி
பூவின் மாலிகை செய்யசாந் தத்தொடும் புனைந்தான்.
**பீடத்தில் ஈசனை சேர்த்தி பூவின் மாலிகை சாந்தத் தொடுப்புனைந்தான்**

1713. மருந்தி னாற்றவுஞ் சுவையன வாலுவ நூல்போய்
சொரிந்து பொற்கலத் தருத்தினன் மந்திரத் தொடர்பால்.
**மந்திரத் தொடர்பால் பொற்கலத்தில் அருந்தினன்**

1714. கந்தம் வெள்ளிலை பூகநற் காயிவை கலந்து
முந்து கைதொழூஉப் போற்றினன் மும்முறை வணங்கி.
**கைதொழுது போற்றினன்**

**வேறு**

1715. இருவரும் உணர்கிலா திருந்த தாள்களை
அருள்விடை மீமிசை அண்ணல் தோன்றினான்.
**அருள்விடை மீமிசை அண்ணல்**

1716. கார்த்திகை காதலன் கறைமி டற்றுடை
சேர்த்திய கரத்தொடு சென்று போற்றினான்.
**கார்த்திகை காதலன் கறைமிடற்றுடை நல்லருள் போற்றி**

1717. செயிர்ப்பறு நந்திதன் திறத்தில் வீரரும்
மயிர்ப்புறம் பொடிப்புற வணங்கி ஏத்தினார்.
**நந்திதன் திறத்தில் வீரரும் இலக்கவீரரும் வணங்கி ஏத்தினார்**

1718. முண்டகன் முதல்வரும் முரண்கொள் பூதரும்
எண்டிசை செவிடுற ஏத்தல் மேயினார்.
**முதல்வரும் பூதரும் எண்டிசை செவிடுற ஏத்தல்**

**வேறு**

1719. ஆயது காலை தன்னில் அருவுரு வாகும் அண்ணல்
ஏயென முடிவு செய்யும் படைக்கலத் திறையை ஈந்தான்.
**அருவுருவாகும் அண்ணல் சேயிடம் புவனமுற்றும் ஏயென முடிவு செய்யும் படைக்கலம் ஈந்தான்**

1720. மற்றிது நம்பால் தோன்றும் வான்படை மாயன் வேதா
பற்றுதி மைந்த என்னாப் பராபரன் அருளிப் போனான்.
**வான்படைபெரும்படை பரிக்கும் பற்றுதி பராபரன் அருள்**

1721. கருணைசெய் பரமன் சேணிற் கரந்தனன் போன காலை
சுரர்களும் வழுத்திச் செல்லத் தூயதன் தேரிற் புக்கான்.
**பரமன்சேணிற் கரந்தனன் போன காலை வேலவன் தேரில் புக்கான்**

1722. சில்லியந் தேர்மேற் செவ்வேள் சேர்தலும் உலவை வேந்தன்
ஒல்லென எழுந்த தம்மா உருகெழு பூத வெள்ளம்.
**சில்லியம் தேர் மேல் செவ்வேள்**

1723. சாரத நீத்த மெல்லாந் தரையின்நின் றெழுந்து சூழ்ந்து
தேர்மிசை அவர்க்கு நாப்பட் சென்றனன் குமரச் செம்மல்.
**குமரச் செம்மல் தேர்மிசை**

1724. மண்ணியங் கரையிற் றென்பால் வகுத்தசேய் ஞல்லூர் நீங்கி
கண்ணுதல் இறைவன் தானம் ஏனவுங் கண்டு போனான்.
**சேய்ஞல்லூர் தென்மயிலாடுதுறை புக்கு பின் பறியலூர் அருள்**

1725. எழில்வளஞ் சுரக்குந் தொல்லை இலஞ்சியங் கானம் நோக்கி
விழுமிதின் நோற்றுப் பெற்ற வியன்திரு வாரூர் கண்டான்.
**இலஞ்சியங்கானம் திருவாரூர் காண்**

## 25. சுரம்புகு படலம்

1726. புற்றிடங் கொண்ட புத்தேள் புரந்தரற் கருள்செய் திட்ட
பற்றிய இரும்பு போலும் பாலையங் கானத் துற்றான்.
**கதிர்வேல் அண்ணல் பாலையங்கானத் துற்றான்**

### வேறு

1727. ஏழு நேமியும் பெரும்புறக் கடலுமெண் டிசையும்
ஊழி தன்னினும் இருப்பதவ் வுயர்பெரும் பாலை.
**ஊழிஉயர்பாலை**

1728. அண்டர் நாயகன் உலகடும் மகந்தனக் காகும்
குண்ட மாயது கள்ளிசூழ் கொடியவெம் பாலை.
**உலகடும் மகம் குண்டம் பாலை**

1729. வண்ண ஒண்சுதை மெய்யுடை வரநதி கேள்வன்
பண்ண வற்குல காயது முதுபெரும் பாலை.
**வனத்துறை வன்னி கடல் படிந்து நீர் பருகுமால் வடவையங் கனலே**

1730. உடைய தொல்குலக் கேண்மையால் அவ்வனத் துறையும்
கடல்ப டிந்துநீர் பருகுமால் வடவையங் கனலே.
**வனத்துறை வன்னி கடல் படிந்து நீர் பருகுமால் வடவையங் கனலே**

1731. கற்றை யங்கதிர்ப் பரிதியும் மதியுமக் கானம்
எற்றை வைகலும் அதன்புடை போகவும் இசையா.
**பரிதியும் மதியும் போகவும் இசையா பாலைக்கானம்**

1732. சேனம் வெம்பணி ஒண்புறா விரலைமான் செந்நாய்
மேனி கன்றுவ தன்றியே விளியுமோ அதனால்.
**மேனி கன்றும்பாலை**

1733. எண்ணி னுஞ்சுடும் பாலையங் கானிடை எழுந்த
புண்ணும் மொக்குளுங் கதிர்களும் உடுக்களும் போலாம்.
**பாலையங்காளிடை அன்புகை அழல் கதிர்களும் உருக்கவும் அன்ன**

1734. வேக வெய்யவன் புடையுறா தவ்வன மிசையே
பாகி ழந்தனன் அவன்கதிர் அங்கிபட் டனவே.
**பாகு கால்இழந்தனன் அழல் சுட்டது**

1735. தங்கள் தொல்பவம் அகன்றிலா விண்ணவர் தம்மைக்
கங்கம் நாடியே நீழலுக் கடைவன கலைகள்.
**கங்கம் நீழல்கடைவள கலைகள் அன்ன விண்ணவர் முத்தி**

1736. கோல வெங்கதிர் மதியிவர் வைகலுங் கொடிய
வேலை தன்னிலும் பிறவினும் வேலைநீர் படிவார்.
**அழல்வெம்மை வேலை நீர்படிவார்**

1737. தொடரும் வானவர் யாவரும் ஐயைதாள் தொழுவார்
படியின் மேலென்றுஞ் செல்கிலர் விண்மிசைப் படர்வார்.
**வானவர் ஐயை தாள் பாலையில் தொழுது விண்மிசை**

1738. ஒள்ளி தாகிய தலைமையிற் பிறந்துளோர் உலகம்
கள்ளி தன்புடை நீழலுக் கொதுங்குவ கரிகள்.
**கரிஒதுங்குகள்ளி அன்ன நல்குரவு**

1739. இரவி கம்மியன் சுட்டுறு கோல்கதிர் எரிதீப்
புரித ரும்பணி வெந்திடும் பணிக்குலம் போலும்.
**தீ மருவு செந்தரை**

1740. ஆன்ற வான்புவி நதிப்புனல் பாதலம் அதன்கண்
கான்ற வாறெனக் கிளர்வன அந்நிலக் கானல்.
**வான்புவிநகிப் புனல் பாதலம் அன்ன கானல்**

1741. விஞ்சு கானல்வெண் டேரினை யாறென விரும்பி
நஞ்சு தன்னையும் அருந்துவ ஞமலிநீர் நசையால்.
**ஞமலி நீர்நசையால் அருந்தும் நஞ்சு அன்ன கானல்**

1742. செய்ய மண்மகள் உலப்புறா உந்தியந் தீயாய்
மையு றுங்கொடு நஞ்சொடு கான்றசெம் மணிகள்.
**நஞ்சொடு செம்மணி அன்னது பாலை புகைஅழல்**

1743. முளையின் அஞ்சொரி முத்தமும் முந்துசெம் பரலும்
உளையும் மண்மகள் மொக்குளூற் றிடுதிறன் ஒக்கும்.
**வனமெய்வடித்த அன்னமுத்தமும் செம்பரவலும்**

1744. கள்ளி பட்டன பாலையுந் தீந்தன கரிந்து
புள்ளி பட்டது போன்றது பாலையம் புவியே.
**புள்ளிஅன்ன கள்ளி பாலையம்**

1745. இன்ன தாகிய பாலையஞ் சுரத்திடை இறைவன்
மன்னு கின்றபூங் குறிஞ்சிபோ லாயதவ் வனமே.
**பாலையஞ் சுரத்திடை இறைவன் மன்னு பூங்குறிஞ்சி ஆயது**

1746. ஆற்ற ருந்திறல் அங்கிதன் அரசியல் முறையை
போற்று நீரொடு தண்ணளி பெற்றதப் புவியே.
**அங்கி தன் அரசியல் முறையை வருணற்கு வழங்கிய**
**எம்பிரான் வெம்மை நீங்கி தண்ணளி**

1747. காதல் நீங்கலா தலமரும் ஆருயிர்க் கரணம்
போத லாற்குளிர் கொண்டது நறுமலர்ப் பொழிலாய்.
**வெய்யகான் போதலாற்கு குளிர் ஆதிஈசன்**
**அவனதாகிய ஆருயிர்க் கரணம்**

1748. புறநெ றிக்கணே வீழ்ந்துளோர் சிவனருள் புகுங்கால்
நறிய தண்மலர்ச் சோலையாய் உவகைநல் கியதே.
**வேலவன் வரலால் தண் மலர்ச்சோலையான பாலை அன்னது புறநெறிக்கண் சிவனருள்**

**வேறு**

1749. நீரறு முரம்பின் நன்மை நீங்குமச் சுரத்தின் தன்பால்
ஓரறு வகைமை யோரும் ஓதியால் அதனைக் கண்டார்.
**ஈராறுபுயத்தாள் ஓதியால் காணல்**

1750. தத்தனே அனந்தன் நந்தி சதுர்முகன் பரிதிப் பாணி
உத்தர நடவை யெய்தி ஒய்யெனப் படர்த லுற்றார்.
**அத்தன்அருள் உத்தர நடவை படர்தல்**

1751. ஆர்வல ராகும் மைந்தர் அறுவரும் அளகை நேடி
சூர்வினை முடிப்பான் செல்லுந் தோன்றல்வந் தணிய னானான்.
**பராசரன் மைந்தர் அறுவரும் வினை முடிப்பான் முருகன் அணிந்து**

1752. அணிமையிற் சேயோன் நண்ண ஆறுமா முகமும் பன்னீர்
துணையுமத் துணையிற் கண்டு தொழுதுகண் களிப்புக் கொண்டார்.
**அணிமையிற் சேயோன் பாதத்துணை தொழுது கண்களிப்பு**

1753. மூவிரு திறத்தி னோரும் முற்றொருங் குணர்ந்த வள்ளல்
தேவர்கள் தேவ எம்பால் திருவருள் செய்தி யென்றார்.
**தேவர்கள் தேவ திருவருள்**

1754. என்றிவை இருமூ வோரும் இசைத்துழி உயிர்கட் கெல்லாம்
நின்றுகை தொழுதிட் டன்னோர் நிலைமையை மகவான் கூறும்.
**ஒன்றிய உயிரும் உணர்வுமாயமூர்த்தி முன் நிலைமையை கூறல்**

1755. மறுவறு பராச ரன்றன் மதலைக ளாகு மின்னோர்
முறைமுறை புக்கு மூழ்கி முகேரென அலைக்க லுற்றார்.
**பராசரன் மதலைகள் அறுவர் சரவணம் அலைக்கலுற்றார்**

1756. உலைத்தலை உணர்ச்சி கொள்ள உள்ளுயிர் திரியுமாபோல்
தலைத்தலை யிரிய இன்னோர் தன்மையங் கதனைக் கண்டார்.
**உள்ளுயிர் உலைத்தல் அன்ன அலைத்தல் மீன்கள்**

1757. அங்கது தெரிந்து நின்றோர் ஆண்டுறு மீன்கள் பற்றி
பங்கமில் நோன்மை பூண்ட பராசரன் அங்கண் வந்தான்.
**பங்கமில் நோன்மை அங்கன்**

1758. வள்ளுறை கொண்ட தெய்வ வான்சர வணத்து வந்தோன்
துள்ளுறு மீன மாகிச் சுலவுதி ரென்று சொற்றான்.
**மீனமாகி சுலவுதிதனயர்காள்**

1759. அவ்வுரை இறுக்கு முன்னர் அறுவரும் மேனாள் ஆற்றும்
செவ்விதின் உணர்ந்து மேலைத் திருமுனி புகலல் உற்றான்.
**ஊழின் விதி உணர்ந்து புகலல்**

1760. இத்தடந் தன்னில் மேனாள் இராறுதோ ளுடைய அண்ணல்
துய்த்திடும் எல்லை தன்னில் தொல்லுரு வாதி ரென்றான்.
**இராறுதோளுடைய அண்ணல் அருள் அம்மை தீம்பால் நீவிர் தொல்லுருவாதி**

1761. என்றிவை முனிவன் கூறி இரும்பகற் கடனை யாற்றி
மன்றலஞ் சரவ ணத்து மாண்பெருந் தடாகத் துற்றார்.
**மீனின் திருவுருவில் சரவணத்தில் அளப்பில் காலம்**

1762. ஐயநீ யனைய பொய்கை அமர்தலும் அவ்வை கண்டாம்
மையல்நீங் குற்றுத் தொல்லை வாலிய வடிவம் பெற்றார்.
**ஐயபொய்கை அமர்தலும் அவ்வை தீம்பால் தொல்லை வாலிய வடிவம்**

1763. தொல்லுரு வடைந்த இன்னோர் தூமதி வேணி யண்ணல்
செல்லுவ துணர்ந்து போந்தார் என்றனன் தேவர் செம்மல்.
**தொல்லுருவடைந்த இன்னோர் எந்தை ஈண்டு உணர்ந்து போந்தார்**

1764. தம்மக வுரைக்குங் கூற்றந் தாதையர் வினவு மாபோல்
எம்மொடு செல்வீ ரென்றான் யாவையும் உணர்ந்த பெம்மான்.
**தாதையர் வினவி எம்மொடு செல்வீர் எனல்**

1765. பராசரன் மைந்த ரன்ன பான்மையை வினவிச் செவ்வேல்
இராசர்தந் தன்மை எய்தும் இருஞ்சுரங் கடந்து போனான்.
**செவ்வேல் கராசரண் சராசரம் தந்த சண்முகன் இருஞ்சுரம் கடந்தனன்**

## 26. திருச்செந்திப் படலம்

1766. சுரமது கடந்து நீங்கிச் சோதிவே லுடைய வள்ளல்
திரையெறி யலைவா யாகுஞ் செந்திமா நகரம் புக்கான்.
**வேலுடை வள்ளல் திரையெறியலை வாடும் செந்தி மா நகரம்**

1767. அறுமுகன் அங்க ணேகி அகிலகம் மியனை நோக்கி
உறைதிரு நகரம் வெஃக ஒருதிருக் கோயில் செய்தான்.
**அறுமுகன் அங்கன் திருக்கோயில் புக்கான்**

1768. பொன்னுறும் இரதம் நீங்கிப் புறனெலாந் தானை நண்ண
மின்னுபொற் பீடத் தையன் வீற்றிருந் தருளி னானே.
**இரதம் நீங்கி பொற்பீடத்தையன் வீற்றருள்**

**வேறு**

1769. பானிமிர் மென்குரற் பாற்படு நல்யாழ்
வானமிர் தைச்செவி வாக்குறு மாபோல்.
**மிடற்றோசை நல்யாழ்கானம் செவி வாக்குறுமாறு**

1770. சுருதியெ லாமுணர் தூயவன் வானோர்
இருபுடை தன்னினும் எய்தினர் ஈண்டி.
**தூயவன்வானோர் இருபுடை தன்னில்**

1771. வாலிய தூயொளி வானதி யாவும்
காலினர் சாமரை கைக்கொ டசைத்தார்.
**வானதி காலினர் மருங்கில்**

1772. ஒண்ணிழல் மாமதி யோரிரு வடிவாய்
தண்ணிழல் வெண்குடை தாங்கினர் நின்றார்.
**மாமதி வெங்கணல் வருணன் நின்றனர்**

1773. கட்டழல் கான்றிடு காமரு நாகம்
வட்டம சைத்தனர் வானவர் பல்லோர்.
**ஆலவட்டமசைத்தனர் வானவர்**

1774. வானுயர் தோள்விறல் வாகெனும் அண்ணல்
ஆனவர் போற்றி அகன்கடை நின்றார்.
**வீரவாகு அண்ணல் தம்பியர் எண்மர் இலக்கர் போாற்றி நின்றார்**

**வேறு**

1775. பொருந்தி இன்னவர் புறத்துற அங்கண்
தெரிந்தி டாதவரின் இன்னன செப்பும்.
**மகவான்முகம் இன்னனசெப்பும் ஞானமுதல்**

1776. துறந்து நீதியமர் சூர்முத லானோர்
சிறந்து பின்னரசு செய்திடு மாறும்.
**நீதுதுறந்து அமர்பேணிய நோன்பு இறந்தவரம் சிறந்த அரசு செய்திடுதல் மொழி**

1777. மற்ற வெய்யவர்தம் மாயமும் முற்கொள்
முற்று மொன்றற மொழிந்திடு கென்றான்.
**வெய்யவர் மாயம் முற்றுறும்**

1778. கோக்கு மாரன்இவை கூற இசைந்தே
நோக்கி நீயிவை நுவன்றருள் கென்றான்.
**குமாரன்கூற இந்திரன் வியாழபகவானே நுவன்றருள் என்றான்**

1779. வச்சி ரங்கொள்கரன் மற்றது செப்ப
உச்சி கொண்டுதொழு தின்ன துரைப்பான்.
**குரவன் சேயிரு பொற்றாள் உச்சி கொண்டு தொழுதுஉரை**

1780. அறிதி எப்பொருளும் ஆவிக டோறும்
இறைவ நின்செயலை யாருணர் கிற்பார்.
**எப்பொருளும் ஆவிகடோறும் செறிதி சேயுரு நின்செயல் யார் உணர்வர்**

1781. எல்லை யில்புவனம் யாவையும் யாண்டும்
வல்ல மாயவியல் மற்றெவர் தேர்வார்.
**எல்லையிர் புவனம் ஒல்லுமூவரும் உயிர்த்தொகை யாவும் தொல்லை மேனி வல்லமாய**

1782. வெய்யர் தன்மையை வினாவிய தன்மை
செய்ய இன்புதவு சீரரு ளாமால்.
**வினாவியதன்மை இன்பு உறவு சீர் அருள்**

1783. ஆகையால் அவுணர் தன்மைக ளெல்லாம்
ஓகை யோடரசன் ஓதிடு கின்றான்.
**அவுணர் தன்மை ஓகையோடு ஓதல்**

*உற்பத்தி காண்டம் முற்றுப்பெற்றது.*